# பெரியார் ஒரு சரித்திரம்



ஏ.எஸ்.வேணு

வெளியீடு: பெரியார் பட்டறை

# பெரியார் ஒரு சரித்திரம்

ஏ.எஸ்.வேணு

வெளியீடு

பெரியார் பட்டறை

7/11 அலிவலம் சாலை, சுந்தரவிளாகம்,

திருவாரூர்- 610 001

# ஒரு புதையல்

உலகைத் திருத்த முற்பட்டவர்களின் எண்ணிக்கை ஏராளம். ஆனால் விரும்பிய மாற்றம் ஏற்பட்டதா? நல்லதைக் கூறியவர்களுக்கு மக்கள் தந்த மதிப்பென்ன? நச்சுக்கோப்பை, கல்லடி, சிறைத் தண்டனை, சித்திரவதை, தணலில் சாம்பலாகும் கொடுமை. இத்தனைக்கும் பிறகு, மனிதன் புத்தி உள்ளவன் - சிந்திக்கக் கூடியவன் - பகுத்தறிவு படைத்தவன் என்று வெட்கமின்றிக் கூறிக் கொள்கிறது சமுதாயம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் 19ஆம் நூற்றாண்டு முடியும் வரை, மொழி, இனம், சமயம், நாடு அத்தனைக்கும் அப்பாற்பட்டு மனித சமுதாயம் பகுத்தறிவுச் சமுதாயமாக வாழவேண்டும் என்று எவரும் துணிந்து பாடுபட்டதாக வரலாறு இல்லை.

உலகம் மாயை, வாழ்வு அநித்தியம் பொருள் அழியக் கூடியது என்று வறட்டு வேதாந்தம் பேசியவர்களின் கிடுக்கிப் பிடியில் சிக்கித் தவித்த மக்களை விழிப்புறச் செய்து, தன் வாழ்நாள் முழுவதும் போராட்ட வீரனாக விளங்கி, ஓரளவிற்கு வெற்றியைக் கண்டவர்தான் தந்தை பெரியார் ஈ.வே.ரா. கல்லாமை, இல்லாமை, போதாமை அத்தனைக்கும் அந்நியனே காரணம் என்று, நாட்டின் விடுதலைக்காகக் காரணம் காட்டியவர்கள், இத்தனை ஆண்டுகள் பதவியில் இருந்தும் மக்கள் கண்டதென்ன?

ஆதிக்க வெறி, சுரண்டும் நிலை - தாழ்த்தும் நிலை - புறக்கணிக்கும் நிலை - வஞ்சிக்கும் நிலை - ஒடுக்கும் நிலை - ஏமாற்றும் நிலை - பதவிப்பித்து - தலைமை மோகம் - அதிகார வெறி இப்படிப்பட்ட இழிநிலையிலிருந்து கோடானுகோடி மக்கள் மீள முடியாது இன்னும் தவிப்பதற்கு அந்நியன் காரணமா? ஆண்டவன் காரணமா? இந்தக் கேள்விக்குச் சரியான விடையைக் கண்டு பிடித்து எதையும் விட்டு வைக்காமல் போர் முரசு கொட்டி வெற்றிகளை ஓரளவிற்குக் குவித்தவர்தான் பெரியார்.

20ஆம் நூற்றாண்டின் அறிவு ஆசான் அவர். உலகைத் திருத்த முற்பட்ட பலரது வாழ்க்கையில் காண முடியாத பல அரிய கருத்துகளை அள்ளி அள்ளி வீசிப் பவனி வந்த பகுத்தறிவுப் பகலவன் பெரியார்.



மனிதனுக்கு இலக்கணம் வகுத்துக் காட்டி ஏழைகளுக்கும், ஏமாளிகளுக்கும், தாழ்ந்தவர்களுக்கும், தாய்க் குலத்திற்கும், பின்தள்ளப் பட்டவர்களுக்கும் புத்தி புகட்டிப் பொற்காலம் மலரக் காரணமாக விளங்கியவர் பெரியார்.

அவர் பிறந்தபோது இருந்த உலகத்தை மாற்றி அமைத்துப் புதிய இலக்கில் முன்னேறிய உலகத்தைக் கண்டவர் பெரியார். அதனால் தான் ‘பெரியார் ஒரு சரித்திரம்’ என்று இந்த நூலுக்குத் தயங்காது தலைப்பைத் தேடித் தந்திருக்கிறேன்.

இதைத்தான் எழுத வேண்டும். இதைத்தான் வெளியிட வேண்டும் என்று நானும், பூம்புகார் பிரசுர நிறுவனத்தினரும் துணிந்தது, இந்தத் தலைமுறையினரை மட்டும் கருத்தில் கொண்டு அல்ல. அடுத்த தலைமுறையினருக்கு அவசியமான காரியத்தைச் செய்திட வேண்டும் என்கிற பேரவாவே இதற்கு முக்கிய காரணமாகும்.

தாழ்த்தப்பட்ட தமிழகம் தலை நிமிர்ந்து, வாழ்ந்து கெட்ட மக்கள் மீண்டும் பொலிவுடன் பீடுநடை போட்டு உலக மக்களின் நன்மதிப்பை மீண்டும் பெற, மேற்கொள்ளப்படும் முயற்சியில் இந்த நூல் ஒரு வழிகாட்டியாக அமைய வேண்டும் என்பதே எம் நோக்கம்.

நமக்கென்று உண்மையான வரலாறு இல்லை. அதை எழுத இதுவரை முழுமுயற்சி எவரும் செய்திடவுமில்லை. யாரோ, எதற்காகவோ எழுதிய சில குறிப்புகளின் சிதறல்கள்தான் நமக்குத் தேடினாலும் கிடைக்கின்றன. இத்தகு துர்பாக்கிய நிலையை நம் முன்னோர்கள் நமக்கு அளித்துவிட்டார்கள். அதற்காக நானோ, நீங்களோ வருந்திக் காலத்தை வீணாக்குவதில் பயன் இல்லை. ‘பெரியார் ஒரு சரித்திரம்’ என்ற தலைப்பில் புதைந்து கிடக்கும் பல பகுதிகள் நமது உண்மையான வரலாற்றின் ஒரு பகுதியாகும்.

மறைந்த அறிஞர் அண்ணா அவர்கள் ..........................அளித்த தேவையற்ற தொல்லைகளை ...................... கொண்டிருந்தால் நமக்கு உண்மையான வரலாறு கிடைத்திருக்கும். அந்த வாய்ப்பையும் நாம் இழந்துவிட்டோம்.

அவருடன் நான் நீதிக்கட்சி காலத்திலிருந்து நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த காரணத்தினால் இந்த நூலை உங்களுக்குத் தரமுடிகிறது.

பெரியார் என்று சொன்ன உடனே முகம் சுளுக்கிக் கொண்டு, வெறுப்புணர்வைக் காட்டக் கூடியவர்கள் சிலர் இன்னும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இப்படி ஒரு நூல் அவசியமா என்று கேட்கக்கூடும். அதுவும் உண்மைதான் நானும் இப்படிப்பட்ட ஒரு நூலுக்கு அவசியம் இல்லாத காலம் விரைவில் மலர வேண்டும் என்று தான் விரும்புகிறேன். அந்தக் காலத்தை வா, வா, விரைவாக என்று வரவேற்கவே இந்த நூலை எழுதினேன்.

மத ஆதிக்கம், கடவுள் ஆதிக்கம், சாதிக் கொடுமை, தீண்டாமை, அநீதி, பெண் அடிமை, மூடநம்பிக்கைகள் ஆகிய சமூகக் கொடுமைகள், அவை எங்கிருந்தாலும் அவை இருக்குமிடம் தெரியாமல் அழிக்கப்பட்டு - ஒன்றே உலகம் ஒன்றே குலம் - ஒன்றே நீதி - ஒன்றே நிலை என்று ஏற்படும் போது இப்படிப்பட்டதோர் நூல் தேவைப்படாது என்தே உண்மை.

எனவே 'பெரியார் ஒரு சரித்திரம்', என்ற இந்நூல் எங்கும் எல்லோரும் படித்து அதன் பொருட்டாகப் புதிய சரித்திரத்தைப் படைக்கும் காலகட்டத்திற்கு அழைத்துச் செல்லும் எளிய முயற்சியே இந்தப் படைப்பு - படித்துப் புதையலைத் தேடிப் பயன் பெறுங்கள்.

பல நூல்கள் எழுதிய எனக்கு ஏற்படாத பெருமிதம் 'பெரியார் ஒரு சரித்திரம்' என்ற இந்நூல் எழுதியதில் ஓரளவு பெற்றுள்ளேன். அதற்குக் காரணம், நான் மறைந்த பின்னரும் இந்த நூல் மட்டும் நிச்சயம் திராவிட சமுதாயத்திற்கு ஒரு புதையலாக அமையும் என்பது எனது கருத்து. அந்தப் புதையலை முதலில் உங்கள் கரத்தில் குவிக்கிறேன்.

எனக்கு இந்த வாய்ப்பை அளித்த பூம்புகார் நிறுவனத்தினருக்கு, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

**ஏ. எஸ். வேணு**



## கருவி நூல்கள்

1. நமது குறிக்கோள் - விடுதலை வெளியீடு
2. தீண்டாமையை ஒழித்தது யார்? - பெரியார்
3. வகுப்பு வாரி உரிமை ஏன் - பெரியார்
4. பெரியார் ஒரு சகாப்தம் - அண்ணா
5. இந்திப் போர் முரசு - விடுதலை வெளியீடு
6. நவமணிகள் - பெரியார்
7. வாழ்க்கைத் துணைநலம் - பெரியார்
8. பெண் ஏன் அடிமையானாள்? - பெரியார்
9. தத்துவ விளக்கம் - பெரியார்
10. மெடீரியலிசம் - பெரியார்
11. சமுதாய சீர்திருத்தம் - பெரியார்
12. இனி வரும் உலகம் - பெ.சு.பி.நி. வெளியீடு
13. இளைஞர்களுக்கு அழைப்பு
14. உயர் எண்ணங்கள் - பெரியார்
15. மேல் நாடும் கீழ்நாடும்
16. பேய் பூதம் பிசாசு - இங்கர்சால்
17. கடவுள் தோன்றியது எப்படி? - கிராண்ட் ஆலன்
18. மனுநீதி - பெரியார்
19. கடவுளும் மனிதனும் - பெரியார்
20. வாழ்க்கை நெறி -
21. பெரியாரில் பெரியார் - அழகிரிசாமி
22. சீர்திருத்த மார்க்கம் - இங்கர்சால்
23. எழுத்துச் சீர்திருத்தம் - பெரியார்
24. பொன்மொழிகள் - பெரியார்
25. மலர்கள் - பெரியார்
26. மார்டன் ரேஷனலிஸ்ட்
27. குடிஅரசு-விடுதலை-பகுத்தறிவு-புரட்சி-தொகுப்புகள்
28. நாரதர் தொகுப்பு
29. திராவிட நாடு - தொகுப்புகள்

# பெரியார் ஒரு சரித்திரம்

## நூற்றாண்டுக்கு ஒருவர்

பெரியாரைப் பற்றிப் புகழ்ந்து பேசாதார் இல்லை. பாராட்டி எழுதாதவர் இல்லை. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமக்கே உரிய தனித் திறமையால் பெரியாரைப்பற்றி மிகமிக அழகாக, எவரும் மறுக்க இயலாத வரலாற்று உண்மையைக் கீழ்க்கண்டவாறு வெளிப்படுத்தியிருக்கிறார்.

'எந்த நாட்டிலும் இரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக்கூடிய காரியங்களை இருபதே ஆண்டுகளில் அவர்கள் செய்து முடித்திருக்கிறார்கள். ஐரோப்பா கண்டத்தை எடுத்துக் கொண்டால், நாட்டினுடைய விழிப்பிற்கு 50 ஆண்டுகள் அமைந்த ஆட்சியை மாற்று வதற்கு 50 ஆண்டுகள் என்ற அளவில் ஒரு பகுத்தறிவு மனப்பான்மையைத் தோற்றுவிப்பதற்காக வால்டேர், ஒரு ரூசோ - இப்படி தொடர்ச்சியாகப் பலர் வந்து, இரண்டு மூன்று நூற்றாண்டுகள் பாடுபட்டுதான் பகுத்தறிவுப் பாதையில் அந்த நாடுகள் செல்ல முடிந்தது. இப்படி இரண்டு நூற்றாண்டுகளில் செய்ய வேண்டிய காரியங்களைப் பெரியார் செய்து முடிக்க வேண்டுமெனக் கிளம்பினார்கள். திட்டமிட்டு இந்த திட்டத்தின் அடிப்படையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். சில மருந்துகளை உள்ளடக்கிச் சில மாத்திரைகளில் தருவது போல, பல நூற்றாண்டுகளை இருபது ஆண்டுகளில் அடைத்து (Putting Centuries in a Capsule) என்று சொல்வது போல் அவர்கள் நம்முடைய வாழ்நாளிலேயே சாதித்துத் தீர வேண்டுமென்று, அறிவோடும், உணர்ச்சியோடும், நெஞ்சு ஊக்கத்தோடும், யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பதை கூட, இரண்டாந்தரமாக வைத்துக் கொண்டு, எந்த அளவு முன்னேறுகிறோம் என்பதைக் காண்பதிலேயே அவர்கள் வாழ்க்கை முழுவதும் போராட்டக்களத்தில் நின்றிருக்கிறார்கள்' என்று அண்ணா

குறிப்பிட்டுள்ள கருத்தே அர்த்தப்புஷ்டியுடன் கூடிய உண்மை.

அத்தகு பெரியாரின் வரலாறு ஒரு தனி மனிதனின் வீர பராக் கிரமங்களை வெளிப்படுத்தும் தொகுப்புமன்று. வேறு இனத்தவர் கள் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருந்த காலத்தில் சிறப்பாக வாழ்ந்து பின்னர் தாழ்ந்து போனவர்களின் எழுச்சியைக் கோடிட்டுக் காட்டும் வரலாறு ஆகும். சுருக்கமாகக் கூறவேண்டு மானால் பெரியாரின் வாழ்க்கை வரலாறுதான் இந்த நாட்டின் உண்மையான வரலாறு.

முறையாக எழுதப்பட்ட வரலாறு ஏதும் நமக்கு இல்லாதிருப்பது ஒரு பெரிய குறையாகும். அது நமது முன்னோர்களின் மன்னிக்க முடியாத மிகப்பெரிய குற்றங்களில் முக்கியமானதாகும். இந்தத் தலைமுறையினருக்காவது நல்லதோர் உண்மையான வரலாறு உருவாக்கித்தர வேண்டியது விரும்பத்தக்கது.

தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாறு, நம் நாட்டின் உண்மையான வரலாற்றில் முக்கிய இடம் பெற வேண்டியதாகும். அப் பணியில் வரலாற்று ஆசிரியர்கள் ஆராய்ச்சியாளர், நடுநிலை கொண்ட அறிவாளிகள், ஈடுபடவேண்டியது மிகவும் அவசரமும் அவசியமும் ஆகும்.

## ஊக்கத்தின் நாற்றங்கால்

சில நூற்றாண்டுகளுக்கு முன் கன்னட தேசத்திலிருந்து தமிழ் நாட்டில் குடியேறிய கன்னட பலிஜா நாயுடு வகுப்பினர் 'நாயக்கர்' பட்டப் பெயர் பூண்டு குடியேறிய நாட்டையே தாய் நாடாகக் கருதி வாழ்ந்து வந்தனர். இம்மாதிரி குடும்பத்தில் பிறந்து இளமையிலேயே 12 வயதுக்குள் தாய் தந்தையை இழந்தவர். வேங்கடப்ப நாயக்கர் என்பவர். அவரே தந்தை பெரியாரின் தந்தை. தாயின் பெயர் சின்னத்தாய் அம்மாள். தாயும் தந்தையும் கூலி வேலை செய்து வாழ்க்கையை இன்பமாக நடத்தி வந்தனர். கல் தச்சு வேலையை இரவு பகலாக செய்து சிக்கனமாக வாழ்ந்து வாடகை வண்டி ஓட்டியும், பின்னர் சொந்தமாக வண்டி மாடுகளை வாங்கி, வாடகைக்கு விட்டும், வளமான வாழ்வு கண்டனர். பின்னர் வண்டி மாடுகளை விற்று ஒரு சிறிய மளிகைக் கடை வைத்தனர். பெரியாரின் தாயார், வீட்டில் இருந்தப்படியே,



நெல்குத்தி அரிசி ஆக்கியும், துவரை, உளுந்து பயிறு முதலியவற்றை உடைத்து பருப்பாக்கியும், வியாபாரம் செய்தும், கணவர் கடைக்குக் கொடுத்து வந்தார்கள்.

கணவனும், மனைவியும் பொருள்களை வாரச் சந்தைக்கு எடுத்துச் சென்று லாபத்திற்கு விற்றுக் கடையை அபிவிருத்தி செய்தனர். தட்டுக்கடை, சின்னக்கடை, பெரியக்கடை, மண்டிக் கடையாகி வேங்கடப்ப நாயக்கரின் வியாபாரம் பெருகி, சில்லரை வியா பாரத்தைவிட்டு மொத்த வியாபாரியாகி பெரிய பணக்காரர் பட்டியலில் முதல் இடம் பெற்றனர்.

கடுமையான உழைப்பின் மூலமே வறுமையை ஓட்டிக் காட்டிய குடும்பத்தில் பிறந்தவர் பெரியார்.

வறுமையிலும் ஓயாத உழைப்பிலும் ஈடுபட்டு இருந்த காலத்தில் வேங்கடப்ப நாயக்கருக்கு இரண்டு குழந்தைகள் பிறந்து இறந்து விட்டன.

செல்வச்சீமான் குடும்பமாக மாறியபோது அவர்களுக்கு குழந்தை இல்லையே என்ற ஏக்கம் பிறந்தது. இராமாயணத் தசரத மகாராஜன் போன்று பிள்ளை வரம் கேட்டுப் பாகவதர்களுக்கு விருந்தும், சனிக் கிழமைதோறும் தளிகையும் வைத்துச் சத்கதா காலட்சேபங்களை நடத்தியும் வந்தனர். 1877-ஆம் ஆண்டில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது தான் பெரியாரின் சகோதரன் ஈ.வெ. கிருஷ்ணசாமி.

குழந்தை பிறந்துவிட்ட சந்தோஷத்தில் மேலும் தீவிர வைதீகர்களாக மாறி, அனைத்து ஆசார அனுஷ்டானங்களையும் கடைபிடித்து, பக்தியின் பெயரால் முன்னைவிட பல மடங்கு அதிகமாகப் பணம் செலவு செய்து வந்தனர். 1879-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-இல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தை இராமாயண சத்கதா காலட்சேப முடிவில் பிறந்த காரணத்தினால் அக்குழந்தைக்கு ஈ.வே. இராமசாமி என்று பெயரிட்டனர். 1881-இல் மீண்டும் பொன்னுத்தாய் அம்மாள் என்ற ஒரு பெண் குழந்தையும், 1891-இல் கண்ணம்மாள் என்ற ஒரு பெண் குழந்தையும் பெற்றெடுத்து பெற்றோர்கள் பிள்ளைப் பேரின்பக் குறையை நிறைவு செய்து கொண்டனர்.

பெரியார் மீது தாயாருக்குத் தனிப்பற்று பாசம். அவர் ஏழுமலையான் வேங்கடாசலபதிக்கு உகந்த புரட்டாசித் திங்களில்

பிறந்த காரணத்தினால் பெற்றோர்கள் தாம் தேடிய சொத்தின் பெரும் பகுதியைத் தானதருமம் செய்தனர்.

இவர்களின் வீடு, ஆண்டி முதல் அரசன் வரை தங்குமிடமாயிற்று. வியாபாரிகளுக்கு உதவிகள் புரியுமிடமாக வழிப்போக்கர்கள் இளைப்பாறும் இடமாக, சாமியார்கள் பாகவதர்கள் உண்டு உறங்கும் இடமாக, தேசபக்தர்கள், புலவர்கள், அதிகாரிகள், தலைவர்கள் தங்கிச் செயலாற்றும் இடமாக விளங்கியது.

வேங்கடப்ப நாயக்கர் பெயரால் ஒரு சத்திரம் ஈரோடு புகைவண்டி நிலையம் அருகில் அமைக்கப்பட்டது. இதற்கு பல லட்சம் சொத்து ஒதுக்கப்பட்டது. பிராமணர்களுக்கும், இதர ஏழைகளுக்கும் தினமும் உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சத்திரத்திற்குப் பக்கத்தில் ஒரு பெரிய பிள்ளையார் கோயில் கட்டப்பட்டு அதற்கு மானியமாக ஆறு ஏழு வீடுகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டது.

ஈரோடு கோட்டைப் பகுதியில் உள்ள சிவன் - விஷ்ணு ஆலயங் களுக்குத் திருப்பணி நிறைவேற்றப்பட்டது.

வேங்கடப்ப நாயக்கர் பெயரால் ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவம் செய்ய ஒரு வைத்தியசாலையும் கட்டப்பட்டது.

ஈரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடையும் அளிக்கப் பட்டது.

## அரும்புப் பருவக் குறும்புகள்

பெரியார் குழந்தைப் பருவத்திலேயே தான் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாமலும், அவர்களிடம் அன்பும் பண்பும் செலுத்தாமலும் தன்னிச்சையாக வளர்ந்து வந்தார். இந்த நிலையில் வேங்கடப்ப நாயக்கரின் சிறிய தாயார் பெரியாரைத் தத்து எடுத்துக் கொள்ள விரும்பினார்கள். அதன்படி பெரியார் அந்த விதவைப் பெருமாட்டி யுடன் ஈரோட்டை விட்டுப் போனார். அங்குச் சென்று பல கஷ்டங்களைப் பெரியார் அனுபவித்தார். தாய்ப்பாலுக்குப் பதிலாக ஆட்டுப்பால் குடித்தார். நீராகாரத்துடன் பழைய சோறு சுண்டக் காய்ச்சிய குழம்புதான் அவருக்கு காலை உணவு. பகல் ஒருவேளை 3 மணிக்கு சோறு கிடைப்பதும் கடினம். இரவு உணவுக்கு முன் தூக்கம் முந்திவிடும். தெருவில் நிலக்கடலையோ,



பட்டாணியோ, சிந்திக்கிடந்தால், பாய்ந்து எடுத்து உண்பதும் உண்டு. இப்படி வெறும் கண்காணிப்பு இல்லாத நிலையில், கட்டுப்பாடற்றுத் திரிந்து கொண்டு வளர்ந்தார் பெரியார். ஊர் வம்புகள் வீடு தேடி வந்தன. தொல்லைகளைத் தாங்க இயலாத மூதாட்டி பெரியாரைப் பெற்றோர்களிடம் அனுப்பிவிடத் திட்டமிட்டார்கள். ஆனால் எதையும் பெரியார் மறுத்து விட்டார். அப்போது அவருக்கு வயது எட்டு இருக்கும். பெரியாரின் கொட்டத்தை அடக்க வாவது பள்ளிக் கூடத்தில் சேர்க்க ஆசைப்பட்டாள் அந்த வளர்ப்புத் தாய்.

ஆனால் வீட்டுக்கு அருகில் ஒரு பள்ளிக்கூடமும் இல்லை. கடைசி யில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தனர். அந்தப் பள்ளிக்கூடமும் நல்ல சூழ்நிலையில் இல்லை. குறவர்களும், வாணியர்களும் குடியிருந்தனர். முஸ்லீம் குடும்பங்கள், கிறுஸ்துவக் குடும்பங்கள் தீண்டாதார் குடும்பங்கள் இருந்தன. ஜாதி இந்துக்கள் இங்கு குடியிருப்பவர்களுடன் பழகவோ, தீண்டவோ, பரிமாறிக் கொள்ளவோ இயலாத நிலை அக்காலத்தில் அந்தப் பகுதியில் இருந்தது. வேறு வழியின்றிப் பெரியார் அந்தப் பள்ளியில் சேர்க்கப் பட்டார்.

புத்தபிரான் மக்களோடு நெருங்கிப் பழகி அறிவு ஆசானாகியது போன்று பெரியாரும் வாய்ப்புப் பெற்றார். பெரியாரே அந்த நிலையை விவரித்திருக்கிறார்.

> ‘எனக்கு ஞாபகமாகச் சொல்லி அனுப்பும் முக்கியமான சங்கதி என்னவென்றால், அங்குள்ளவர்கள் புழங்கக் கூடாத ஜாதிக்காரர்கள், அவர்கள் வீட்டில் தண்ணீர் கூட நீ வாங்கிக் குடிக்கக் கூடாது. வேண்டுமானால் வாத்தியார் வீட்டில் வாங்கிக் குடி, என்று சொல்லி அனுப்புவார்கள்’.

அதன்படியே பெரியார் இரண்டு முறை வாத்தியார் வீட்டில் தண்ணீர் குடித்தார். அவர் மாமிசம் சாப்பிடாத சைவர் ஆசிரியர் வீட்டில் ஒரு பெண் தண்ணீர் கொடுப்பாள். கீழே வைக்கப்பட்ட வெங்கலத் தம்பளரில் தண்ணீர் ஊற்றப்படும். அதனைப் பெரியார் எடுத்து உதட்டில் படாமல் குடிக்க வேண்டும். தம்ளரில் மீதி இருந்தால் தூரமாகத் தரையில் வீசிவிட்டுத் தம்ளரைக் கவிழ்த்து கீழே வைக்க வேண்டும். அதற்குப் பிறகு தம்ளரை கழுவித்தான் அந்தப் பெண் தம்ளரை உள்ளே எடுத்துச் செல்வது பழக்கம். தூக்கிக்

குடிக்கவே தெரியாத பெரியார் சங்கடப்படுவதும், மூக்கில் விழும் தண்ணீரால் புரையேறி இருமல் வந்து சங்கடப்படுவதை அந்தப் பெண் பார்த்துச் சிரிப்பதும், சில சமயங்களில் கோபித்துக்கொண்டு வைவதும் உண்டு. அதனால் பெரியார் வாத்தியார் வீட்டிற்குச் செல்வதை நிறுத்திக் கொண்டார்.

வீட்டில் பெரியவர்கள் கூறியப் புத்தி மதியை பெரியார் காற்றில் பறக்கவிட்டு யாருடன் பழகக் கூடாதோ, யாரை தொடக் கூடாதோ, அவர்களிடமே நட்புக் கொண்டு பழகினார். அதைக் கண்ட ஒரு சிலர் ஆச்சரியத்துடன், 'நீ நாயக்கர் வீட்டு பிள்ளை யல்லவா?' என்றும் கேட்டதுண்டு. காலப்போக்கில் இந்தச் செய்தி பெரியாரின் வீட்டுக்கு எட்டியது. பெரியாரின் பெற்றோர்களின் பொருளாதார நிலையும் இதற்குள் உயர்ந்து, குடும்பத்தில் ஆச்சார அனுஷ்டானங்களைக் கடைப்பிடிப்பதிலும் தீவிரமாகி விட்டது. பெரியார் பத்து வயது அடைந்தார். பெற்றோர்கள் பெரியாரை வீட்டுக்கு அழைத்துக் கொண்டனர். சுற்றுச்சார்பு சரி இல்லாத காரணத்தினால் பெரியார் முரடனாக வளர்ந்துவிட்டான் என்று பெற்றோர்கள் கருதினார்கள். அதனால், பெரியாரின் கால்களுக்கு விலங்கு போட்டு அந்த விலங்குடனே பெரியார் பிள்ளைகளுடன் கூடித் திரிய ஆரம்பித்துவிட்டார். பெற்றோர்கள் வருத்தப் பட்டனர்.

பெரியாரை மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்துச் சென்று ஒரு லோயர் செகண்டரி பள்ளிக் கூடத்தில் சேர்த்தனர். பெரியார் படித்து ஒரு வருவாய்த்துறை அரசு உத்தியோகமோ, போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகமோ பெறவேண்டும் என்று ஆசைப் பட்டனர். 1909-ஆம் ஆண்டு வரை பள்ளிகள் ஜனவரியில் திறக்கப் பட்டு டிசம்பரில் மூடப்படும். பெற்றோர்களின் ஆசை நிறைவேற வில்லை. பெரியாரின் பழைய பாணி எதுவும் மாறவில்லை. பள்ளிக்கே ஒழுங்காகச் செல்லவில்லை. சென்றாலும் படிப்பது மில்லை. பள்ளியில் ஒழுங்கற்ற பிள்ளைகளுக்குப் பெரியார்தான் தலைவராக விளங்கினார். 'நான் படித்த காலத்தைவிட, உபாத்தியாயர் என்னை அடித்துத் திருத்த முயன்ற காலம்தான் அதிகம்' என்று பெரியாரே பலமுறை வேடிக்கையாகப் பேசுவதுண்டு.

பெரியார் படிப்பில் உருப்படப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்த வேங்கடப்ப நாயக்கர். பெரியாரைப் பள்ளிக்கு அனுப்பாமல்



வியாபாரத்தில் ஈடுபடுத்தினார். அப்போது பெரியாருக்கு வயது 12. தன் கையெழுத்துப் போடவும், இருந்த புத்தகத்தை சுமாராகப் படிக்கவும், கடைக் கணக்குகளை அனுபவத்தின் மூலம் கற்றிருந்தார். தொடர்ந்து பெரியாரிடம் மண்டியின் முக்கியமான சில அலுவல்கள் ஒப்படைக்கப்பட்டன.

பேச்சில் வல்லவராகிய பெரியார் ஏலத்தில் அதிக லாபம் கிடைக்கும்படித் திறமையைப் பயன்படுத்தித் தந்தையிடம் நற்பெயர் பெற்றார். மண்டியில் வாடிக்கைகாரர்களின் எண்ணிக்கை யும் உயர்ந்தது. நல்ல பெயரும் ஏற்பட்டது. வியாபாரத்திற்கு வருபவர்களிடம் அறிவுத் திறமையைக் காட்டி நாசுக்காக அப்போதே பகுத்தறிவு பிரச்சாரம் பெரியார் செய்வார்.

ஓய்வு நேரங்களில் புராணங்களைப் படிப்பதும் ஆராய்ச்சி செய்வதும், விதண்டாவாதங்கள் புரிவதும் பெரியாருக்கு பொழுது போக்காக அமைந்தது. பெரியார் வீட்டுக்கு எப்பொழுதும் பாகவதர்கள், சாமியார்கள், புரோகிதர்கள், ஓதுவார்கள், பண்டிதர் கள் வந்து வேத, சாஸ்திர, புராணங்களைப் பற்றி பேசி, நல்ல வெகுமதிகளைத் திருப்தியாகப் பெற்றுச் செல்வதும் வழக்கம். பெரியாருக்கு அப்போதே அவர்களைக் கண்டால் பிடிக்காது. அவர்களிடம் பல கேள்விகளை கேட்டுத் திணற வைப்பார். இது குறித்துப் பெரியார் கூறுவதைப் படியுங்கள்.

> 'நாளாவட்டத்தில் இதுவே எனக்கு மெல்ல மெல்ல ஒரு ஒழுக்க நேர வேலையாகவும், இளைப்பாறுவதற்கு ஒரு துணைக்கருவியாகவும், உண்மையிலேயே ஒரு உற்சாக மூட்டும் வேலையாகவும் நேர்ந்துவிட்டது'.
>
> 'சைவம், வைணவம் ஆகிய இரு சமய சம்பந்தமாக உள்ள கதைகளோ, சரித்திரங்களோ, எங்கள் வீட்டில் இரு சமய பக்தர்களாலும், பாகவதர்களாலும் காலட்சேபம் செய்யப் பட்டு வந்ததால், இவற்றைக் கேட்டு கேட்டு எனக்கு வேதாகம புராண சாஸ்திர சம்பந்தமான விஷயங்களைத் தானாகவே தெரியும்படி ஆகிவிட்டது. அவற்றிலிருந்து நான் பல கேள்வி கள் கேட்கவும், அதற்கு அவர்கள் தாறுமாறாகப் பதில் சொல் வதும், ஆளுக்கொருவிதமாக சொல்வதும், ஒருவர் சொன்னதை மற்றவர் மறுத்துச் சொல்வதுமாய் இருந்தது ஒன்றே எனக்கு மேன்மேலும், இதில் அதிக உற்சாகத்தை விளைவித்ததோடு

என்னை ஒரு கெட்டிக்காரப் பேச்சுக்காரன் என்று அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சொல்லவுமான நிலைமை ஏற்பட்டு விட்டது. இந்த சம்பவங்கள்தாம் எனக்கு மேலும் மேலும் ஜாதியிலும், மதத்திலும், கடவுளிடத்திலும், சாஸ்திரங் களிடத்திலும், புராணங்களிடத்திலும் நம்பிக்கை இல்லாமல் போகும்படி செய்திருக்கலாம்'

என்று பெரியாரே விளக்கமாகத் தெளிவுப்படுத்தி இருக்கிறார்.

## நாத்திகக் கனல்

பெரியாருக்கு இருந்த சூழ்நிலையும், குடும்பத்தின் நிலைமையும் நடப்புகளும்தான் அவரை வருங்கால நாத்திகராக்கியது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. பெரியார் கேட்ட கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் தக்க, நியாயமான, உண்மையான அறிவுபூர்வ மான விளக்கங்களை அளித்திருந்தால் பெரியார் பெரிய ஆத்திக ராகவே மாறியிருக்கக்கூடும். தென்னகத்தின் வரலாறு கூட வேறு விதமாக அமைந்திருக்கக்கூடும். பார்ப்பனர்களுக்குப் பொற் காலமே கூட பிறந்திருக்கக்கூடும்.

ஒருமுறை ஒரு பார்ப்பனர் பெரியாருக்குப் பகிரங்கமாகவே சவால் விட்டார். அவர் கள்ளிடக்குறிச்சியைச் சேர்ந்தவர். ஈரோட்டில் கடை வைத்திருந்தார். பெரியார் அந்தக் கடையைத் தாண்டித்தான் மண்டிக்குச் செல்ல வேண்டும். அவர் தினமும் பெரியாரை அழைத்து ஆத்திக வாதம் புரிவது வழக்கம். ஒருநாள் அவர் தலைவிதியை எல்லோரும் நம்ப வேண்டும் என்று வக்காலத்து வாங்கிப் பேசினார்.

'எது நடந்தாலும் அதைத் தலைவிதி என்று ஒப்புக் கொள்வீரா' என்று பெரியார் கேட்டார். 'ஆம்' என்றார் பார்ப்பனர். பெரியார் அதை ஏற்க மறுத்தார். எல்லோரும் பெரியாரைத் தலைவிதி இல்லை என்பதை உறுதிப்படுத்து என்று சவால் விட்டனர். பெரியார் அந்தப் பார்ப்பனர் கடையில் இருந்த தட்டிக்கு மூங்கில் முட்டுக் கொடுத்துக் கிடைப்பதைக் கண்டார். உடனே, இப்போதே இங்கேயே நிரூபிக்கிறேன் என்றார். எல்லோரும் ஆவலுடன் எதிர்ப்பார்த்தனர். பெரியார் அந்தத் தட்டியைத் தாங்கியிருந்த மூங்கிலைத் திடீரென தட்டிவிட்டார். தட்டி அந்தப் பார்ப்பனர் முகத்தை 'பளார்' என்று தாக்கியது. அவர் அணிந்திருந்த மூக்கு



கண்ணாடி சிதறி உடைந்தது. பார்ப்பனருக்கு கோபம் வந்து விட்டது. பெரியாரைப் பிடித்து அடிக்க அந்தப் பார்ப்பனர் துள்ளிக் குதித்து வந்தார். தலைவிதி உம் தலையில் தட்டியைப் போட்டது. அதற்காக என்னை ஏன் அடித்து துரத்துகிறீர் என்று கூறிக் கொண்டே ஓடித் தப்பிவிட்டார் பெரியார்.

இப்படிப் பெரியாரிடம் எவருமே ஆத்திகவாதத்தில் வென்ற தில்லை. பெரியார் பெரிய நாத்திக வீரராகவே வளர்ந்தார். இது போன்ற சம்பவங்கள் பெரியாரைப் பகுத்தறிவுப் பகலவனாக ஆக்கியது. அப்போது அவருக்கு வயது 18 இருக்கும். பெரியார் புரியும் குறும்புத்தனங்கள் தந்தைக்கு மனவருத்தம் அளித்து வந்தது. ஆனால் பெரியாருக்குத் திருமணம் செய்துவிட்டால் பொறுப்பு ஏற்பட்டுத் திருந்திவிடுவார் என்று தாயாருக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

## மனங்கலந்து மணங்கொண்டார்

பெரியாருக்கு 19 வயதாயிற்று. மேஜர் ஆனார்; அத்துடன் மைனர் விளையாட்டுகளும் ஆட ஆரம்பித்து விட்டார்; அந்தக் காலத்தில் பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கு இது ஒரு கலையாக மதிக்கப் பட்டது. பெற்றோர்களுக்குப் பெரியார் கவலையளித்தார். அவர்கள் தங்கள் அந்தஸ்துக்கு ஏற்றபடி பெண் பார்த்துப் பெரியாரின் சம்மதத்தைப் பலமுறை கேட்டனர். ஆனால் பெரியார் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தார். அதற்குக் காரணம் அவர் குடும்ப உறவு கலந்த நாகம்மையாரைக் காதலித்து வந்ததும், நாகம்மை பருவம் அடையாததும்தான். பின்னர் நாகம்மை பருவமடைந்து விட்டார்கள்.

நாகம்மையின் பெற்றோர்கள் பணக்காரர்கள் அல்லர். மேலும் பெரியாரின் போக்கு அவர்களுக்கு பிடிக்கவுமில்லை. அதனால் நல்ல வரனைத் தேடினார்கள். இரு தாரங்களைத் திருமணம் செய்து கொண்ட 50 வயது கிழவனுக்கு மணம் முடிக்க முற்பட்டனர். நாகம்மை தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தார்கள். இதை யறிந்த பெற்றோர்கள் திருமண ஏற்பாட்டைக் கைவிட்டனர். நாகம்மை கோயில்களுக்குத் தனியே சென்று பூஜை செய்ய முற்பட்டாள். ஒருநாள் தம் தோழர்களுடன் பெரியார் அந்தக் கோயிலுக்குச் சென்று ஒரு தூண் நிழலில் தம்மை மறைத்துக் கொண்டார். அவர் இட்ட கட்டளைப்படி அவரது சகாக்கள்

நாகம்மையைப் பலாத்காரம் செய்ய முற்பட்டனர். நாகம்மை பயந்து போய் இருட்டில் இருந்த பெரியாரிடம் அபயம் கேட்டுத் தஞ்ச மடைந்தாள். பெரியாரின் தோழர்கள் ஓடிவிட்டனர். பின்னர் நாகம்மையை அழைத்துக்கொண்டு பெரியார் வெளியே வந்தார். அப்போதுதான் நாகம்மைக்கு விஷயம் புரிந்தது. இருவர் மனமும் ஒத்தது. திருமணத்திற்கு இருவரும் பெற்றோர்களின் சம்மதம் கேட்டு நாடினர். வெற்றியும் கண்டனர். அவர்களின் திருமணம் மிகவும் கோலாகலத்துடன் உற்றார் உறவினர் புடைசூழ மிக விமரிசையாக நடைபெற்றது. திருமணம் நடந்தபோது பெரியாருக்கு வயது 23. நாகம்மைக்கு வயது 15.

## பெண்ணுருமைப் பேராளர்

இருவரும் இல்லற வாழ்க்கையை இன்பமாகத் தொடங்கினர். மாமியாருக்கு ஏற்ற மருமகளாக நாகம்மை வைதீக வழியில் சென்று சபாஷ் பட்டம் பெற்றார். குடும்பத்தில் அனைவரிடமும் நல்ல பெயரைப் பெற்றார் நாகம்மை.

காலம் தாழ்த்திவரும் தம் கணவருக்குக் கண் விழித்துத் தம் கரங்களால் உணவு பரிமாறுவது பழக்கம். ஒரு நாள் மிகவும் காலம் கடந்து நெடுநேரத்திற்குப் பின் பெரியார் வீடு திரும்பினார். மாமியார், நாகம்மையை எழுப்பி உணவு பரிமாறும்படிக் கூறினார். தூக்கக் கலக்கத்தில் இருந்த நாகம்மை பசுவுக்காகக் கலக்கி வைத்திருந்த பருத்திக் கொட்டைப் பிண்ணாக்குக் கலவையில் இரண்டு கரண்டி எடுத்து இலையில் வைத்து, கழிநீரில் ஒரு டம்ளர் எடுத்து வைத்துவிட்டு அசந்து அப்படியே உறங்கிவிட்டார். பெரியாருக்குக் கோபம் பிறக்கவில்லை. வியந்தார். தாயாரை அழைத்து இந்தப்பெண் பகலில் எவ்வளவு கடுமையாக உழைத்தி திருந்தால் இப்படி உடலும் புத்தி சுவாதீனமில்லாமல் இருக்கும் என்று நயமாகப் பேசி, நாகம்மைக்கு அதிக வேலை வைக்க வேண்டாம் என்று வேண்டிக் கொண்டார்.

அந்தக் காலத்திலேயே மனித உடல் அமைப்பு உழைப்பு, அளவு பற்றி பெரியார் புரிந்து கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது. பெரியார் மாமிச உணவுப் பிரியர். ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன இவற்றில் ஏதாகிலும் ஒன்று உணவில் இருக்க வேண்டும். அதற்காக நாகம்மை தம் கணவருக்கு முதலில் தனியாகச் சமைத்துவிட்டு, உடனே குளித்துவிட்டுச் சுத்தமாக மற்றவர்களுக்கு சைவ உணவு



சமைக்க வேண்டும். நாகம்மை சைவ உணவே உண்பார்கள். இதுகூடப் பெரியாருக்குப் பிடிக்கவில்லை. எப்படியாவது தம் மனைவியை அசைவ உணவு உண்ணும் பழக்கத்தை உண்டாக்க வேண்டும் என்று திட்டமிட்டார்.

ஒருநாள் சைவ உணவு உள்ள பாத்திரத்தில் எலும்புத் துண்டு ஒன்றைப் புதைத்து வைத்துவிட்டார். மாமியாரும் மருமகளும் உண்ணும்போது எலும்பு தலை காட்டிவிட்டது. அன்று முதல் நாகம்மையார் கணவர் விருப்பப்படி நடக்க மாமியார் அனுமதி அளித்து விட்டார்கள். இதை ஒரு பெரிய சாதனையாகப் பெரியார் கருதினார். நாகம்மையை மூட நம்பிக்கையிலிருந்து மீட்டச் சில நாள்களில் தம் தோழர்களுடன் விருந்து சாப்பிட ஏற்பாடு செய்து நாகம்மையிடம் விதவிதமான அசைவ உணவு சமைத்துப் பெற்றோர்களுக்கு தெரியாமல் குறிப்பிடுமிடத்திற்கு அனுப்பி வைக்கும்படி கூறிவிடுவார். நாகம்மையார் கணவருக்கு நல்ல பெயர் கிட்டும்படி நல்ல இல்லத்தரசியாக விளங்கினார். திருமணம் நடந்து இரண்டு ஆண்டுகள் கழிந்து நாகம்மை கருவுற்றார். பெரியாரும் பூரித்தார். ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால், எல்லோருக்கும் மனவேதனையை உண்டாக்கி அக்குழந்தை பிறந்த 5-வது மாதத்தில் இறந்துவிட்டது. ‘கல்லிலும் செப்பிலுமா கடவுள் இருப்பார்? வீணாகத் தேங்காய் உடைத்தாயே’ என்று தாயாரிடம் பெரியார் ஆறுதல் கூறினார். நாகம்மையாரிடம் சென்று, ‘வருந்தாதே நமக்குக் குழந்தை இல்லை என்றால் என்ன? ஊரார் பிள்ளைகளுக்காகப் பாடுபடுவோம்’ என்று ஆறுதல் கூறினார்.

பெரியாருக்கு ஏற்பட்ட விரக்தி அவரை வீட்டை விட்டு வெளியேறத் தூண்டியது. மூடநம்பிக்கை இல்லாத இடத்தையும் மக்களையும் காணத் துடித்தார்.

பெரியாரின் இல்லற வாழ்க்கையில் அவர் பெண்களின் அறிவு வளர்ச்சிக்கான வழிகள் தானே ஏற்பட்டன என்பது கண்டு களிக்கத் தக்கது. அவரது வாழ்க்கையில் நேர்ந்த பல சம்பவங்கள் அவரை பழுத்த புடம் போட்ட தங்கமாக்கியது.

## நடுக்கமுறும் துணிவு

பெண்கள் தாலி அணிவதைப் பெரியார் வெறுத்தார். அது அடிமை யின் சின்னம், தேவையற்றது. பெண்களின் சுதந்திரத்தைப் பறிப்பது

என்று பெரியார் உறுதியாக நம்பினார். எப்படியும் நாகம்மை கழுத்தில் உள்ள தாலியைத் தந்திரமாக எடுத்துவிடத் திட்ட மிட்டார். ஒருநாள் இரவு நாகம்மையுடன் தனியே இருக்கும்போது 'நான் அருகில் இருக்கும்போது தாலி எதற்கு? நான் வெளியே செல்லும்போது வேண்டுமானால் நீ தாலியை அணிந்து கொள். இந்த தாலிக் கழுத்தில் இருப்பது நமது இன்ப விளையாட்டிற்கு இடையூறாக உள்ளது' என்று அன்பாகப் பேசித் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். நாகம்மையாரும் கணவன் பேச்சை நம்பித் தாலியைக் கழற்றி அவரிடமே கொடுத்துவிட்டார். இருவரும் தூங்கி விட்டனர். கணவன் எழுமுன் விழித்தெழுந்து வீட்டு வேலைகளைக் கவனித்துப் பழக்கப்பட்ட நாகம்மையார் தாலியை மறந்துவிட்டுச் சென்றார். பின்னர் விழித்தெழுந்த பெரியார் வெளியே வேலைக்குப் புறப்பட்டார். நாகம்மையின் தாலியும் பெரியார் சட்டைப்பையில் கூடவே சென்றுவிட்டது.

நாகம்மையின் கழுத்தில் தாலி இல்லாததைக் கண்டு வீட்டுப் பணியாளர் திடுக்கிட்டு மாமியாரிடம் தகவல் தந்தனர். அம்மையார் திகைத்து ஓடோடி வந்து நாகம்மையின் கழுத்தில் உண்மையிலேயே தாலி இல்லாதிருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தார். ஒரு கணம் கூட தாலி இல்லாமல் இருக்கக் கூடாதே என்று பதறினார்கள். நாகம்மைக்கு அப்போதுதான் முன்னாள் இரவில் நடந்தது நினைவிற்கு வந்தது. உடனே கழுத்தை மூடிக் கொண்டு பள்ளி அறைக்குள் ஓடினாள். இதற்குள் வீடு திரும்பிய பெரியார் யாருக்கும் தெரியாது தாலியைத் தலையணையின் கீழ் ஒளித்து வைத்துவிட்டுப் போய் விட்டார். நாகம்மை கைக்கு நல்ல நேரத்தில் தாலி கிடைத்தது. மறுநாள் இரவு பெரியாரும் நாகம்மை யாரும் நடந்ததைப் பற்றிப் பேசிக்கொண்டு பெண்களிடம் ஊறிப்போன மூடநம்பிக்கைகளை நையாண்டி செய்து பேசிக் கொண்டனர்.

பெரியார் எதைச் செய்தாலும் அதற்கு உற்றத் துணையாக நாகம்மை யார் இருந்தார். அவர் மனம் புண்பட நடந்துகொண்டதும் இல்லை. பெரியாரும் நாகம்மையைத் திருத்தித் தம் வழிக்குக் கொண்டு வருவதில் கையாண்ட முறைகளே மிகவும் பாராட்டுக்குரியன வாகும். நாகம்மையாரின் குணநலன்கள் பிற்காலத்தில் இயக்கத்தை வளர்க்கும் மிகப் பெரிய சாதனங்களாக அமைந்தன.



பெரியார் மிகவும் உயர்ந்த ஒழுக்கச் சீலராக விளங்கினார். அவரி டம் எந்தவிதமான கெட்ட பழக்கமும் காணப்படவில்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர் அவர். பிடிவாதக் காரர். துணிந்து மனத்தில் தோன்றுவதைத் தெளிவாகக் கூறிடும் ஆற்றல் மிக்கவர். நல்லதைச் சொல்லிக் கெட்டதைப் பரிசாகப் பெற்றவர். இன்பதுன்பங்களையும், தண்டனை, அபராதங்களையும் புன்முறுவலுடன் ஏற்று மதித்தவர், சுருட்டு, பீடி, சிகரெட், வெற்றிலைப் பாக்கு, புகையிலை போன்ற எதையும் அவர் பழக்கப் படுத்திக் கொள்ளவில்லை.

## புதிய புத்தர்

பெரியாருக்கு இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டோ, மனைவியிடம் அன்பு குறைந்தோ, பெற்றோர்களிடம் பாசம் குறைந்தோ கவலை ஏற்படவில்லை. தம் சகாக்களுடன் ஆடம்பர வீண்செலவுகளைத் தவிர்க்கவும் அவருக்கு முடியவில்லை. தமக்கென்ன வருமானம் இருந்து, விருப்பப்படி செலவிட முடியாத நிலையில் அவர் கட்டுண்டு கிடந்தார். புத்தரைப்போல வெளி உலகத்தை நேரில் கண்டு தம்முடைய சிந்தனைக்குத் தீனியாகும் உண்மைகளை அறியத் துடித்தார். காசிக்குச் சென்று பல உண்மை களைக் கண்டறிந்து தெளிவு பெற விழைந்தார்.

ஈரோட்டை விட்டுப் போகத் திட்டமிட்டார். ஆனால் அதை, எவரிடமும் கூறவில்லை. இரவோடு இரவாகத் தம் வீட்டில் கைக்குக் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு இரகசியமாகப் புறப்பட்டார். உடன் தம் தங்கை கணவனைச் சென்னை வரை போய் வரலாம் என்று ஆசையைக் காட்டி அழைத்துக் கொண்டார். ஈரோடு ரயில் நிலையத்தில் ஒரு நண்பர் இவர்களைப் பார்த்து 'எங்கே இரவில் புறப்பட்டு விட்டீர்? நானும் வரலாமா' என்று கேட்டுவிட்டார். அவரையும் அழைத்துப் போகாவிட்டால் நாடகம் வெளியாகிவிடும் என்று கருதி அவரையும் அழைத்துக் கொண்டார். மறுநாள் மூவரும் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்து சேர்ந்தனர். மூர்மார்க்கெட்டில் ஒரு சிற்றுண்டிச் சாலையில் சாப்பிட்டுவிட்டு எதிரேயுள்ள ராஜா சர். இராமசாமி முதலியார் சத்திரத்தில் தங்கினர்.

அப்போது பெரியார் கையில் தங்கக் காப்பும் கொலுசும் இருந்தன. காதுகளில் கல் வைத்திழைத்த கடுக்கண்கள் இருந்தன. மைனர்

செயின் ஆறு சவரன் கழுத்தில் கிடந்தது. இரண்டு கைவிரல்களில் தங்க மோதிரங்களும், இடுப்பில் தங்க அரைஞாணும் வேட்டிக்கு வெளியே தலை காட்டிக் கொண்டிருந்தன. அந்தச் சத்திரத்தின் நிர்வாகி பெரியாரின் கோலத்தைக் கண்டு உள்ளே அழைத்துப் பாதுகாப்பான இடத்தை ஒதுக்கினார். இதற்குள் ஈரோட்டிலிருந்து வேறு சிலர் சென்னை வந்து அதே சத்திரத்திற்குள் நுழைந்தனர். இதைக் கண்டு பெரியார் தமக்கு ஆபத்து வந்து விட்டதை உணர்ந்து அவசரமாக வெளியேறிவிட்டார்.

மூவரும் பகல் முழுவதும் சென்னையை வட்டமிட்டு கண்டபடி செலவு செய்து களைத்து விட்டனர். பெரியார் உடன் வந்த கூட்டாளிகளுக்கு வீட்டு நினைவு வந்துவிட்டது. பெரியார், அவர்களுக்கு டிக்கெட் எடுத்து வழிச் செலவிற்குப் பணம் கொடுத்து ஈரோட்டிற்கு அனுப்பிவிட்டார். அவர்கள் மூலம் தனக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்று சந்தேகப்பட்டார். யோசித்தார். கையில் உள்ள காசைக் கணக்கிட்டார். பெஜவாடா வரை டிக்கெட் எடுத்துக் கொண்டு தாமும் சென்னையை விட்டு வெளியேறினார்.

பெஜவாடாவில் ஒரு சத்திரத்தில் தங்கினார். அந்தச் சத்திரத்தில் தங்குவதற்குக் காசு வசூலிப்பதில்லை. ஈரோட்டில் பெரியார் குடும்பத்தின் தருமச் சத்திரம் போன்றது. அந்த சத்திரத்தில் தங்கியிருந்த யாத்திரீகர்கள், பெரியாரைக் கண்டு பலர் பலவிதமாக நினைத்தனர். எப்படியோ பெரியாருக்கு வேளாவேளைக்குச் சாப்பாடு கிடைத்து வந்தது.

## துறவில் உணர்ந்த உண்மை

பெரியாரின் துறவு வாழ்க்கை ஆரம்பமாகி விட்டது. கோவையில் முன்சீப் வேலை பார்த்து வந்த பார்ப்பனர் தளபதி என்பவர் குடும்பத் தொல்லைகளைத் தாங்க முடியாது காசிக்கு போக அங்கு வந்திருந்தார். அவரும் பெரியாரை சந்தித்தார். இதே போன்று தஞ்சை வாரி வேங்கட்ராமண அய்யர் குடும்ப பாரம் தாங்க முடியாமல் காசிக்கு செல்ல அவரும் அங்கு வந்து பெரியாரை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. பெரியாரின் குறிக்கோள் மாறு பட்ட தாயினும் மூவரின் திட்டம் ஒன்றாக அமைந்தது. மூவரும் உணவுக்கும் வழிச் செலவிற்கும் பணம் தேட மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டனர். அவர்களுக்கு பெஜவாடா ஒத்துவர வில்லை. மூவரும் நிஜாம் ராஜாவின் ஹைதராபாத்



நகருக்குச் சென்றனர். இரண்டு பார்ப்பனர்களும் அரிசியைப் பிச்சை எடுத்துக் கொண்டு வருவதும் பெரியார் உண்டியல் குலுக்கி பணம் வசூலிப்பதும், அங்கு ஒரு சாவடியில் பொங்கித்தின்பதும் வழக்கமாகி விட்டது. வயிறு நிறைந்ததும் மூவரும் விவாதங்கள் செய்வதை பலர் நேரில் கண்டு அவர்களும் ரசிக்க ஆரம்பித்து விட்டனர். ஆத்திகத்தை ஆதரித்து அந்த இரண்டு பார்ப்பனர்களும் பேசுவதை, பெரியார் குறுக்கிட்டுக் கேள்விகள் கேட்டு அங்கேயும் நாத்திக வாதம் செய்து மக்களின் கவனத்தையும் பாராட்டையும் பெற்றார்.

இந்நிலையில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த முருகேச முதலியார் என்பவர் பெரியாரின் பேச்சு திறமையைக் கண்டு அவருடன் நெருக்கமாகப் பழகி, அவரைத் தன் வீட்டில் தங்கும்படி அழைத் தார். அதற்குப் பெரியார், தம்முடன் இரண்டு பார்ப்பனர்களையும் வர அனுமதித்தால் வருவதாகக் கூறினார்.

மூவரும் முதலியார் வீட்டுக்குச் சென்றனர். வசதியாக அங்கு தங்கினர். அந்த முதலியார் ஆபீசுக்குப் புறப்பட்டதும் மூவரும் வெளியே சென்று அரிசியும் காசும் பிச்சை எடுத்து வந்து சமைத்துச் சாப்பிட தொடங்கினர். இது எப்படியோ முதலியாருக்குத் தெரிந்துவிட்டது. தம்வீட்டில் இருந்துக் கொண்டு இப்படி ஏற்பது இகழ்ச்சி என்று பெரியாரிடம் கூறினார் முதலியார். தாமே ஆபீசில் எல்லோரிடமும் பணம் வசூலித்துத் தருவதாக வாக்களித்தார். அதைப் பெரியார் ஏற்க மறுத்தார்.

காசிக்குச் செல்பவர்கள் பிச்சை எடுத்துத்தான் போக வேண்டும். மற்றவர்களுக்குப் புண்ணியத்தைத் தேடிக் கொடுத்தால் தான் தமக்குப் பாவம் கழியும் என்று பார்ப்பனர்கள் நம்பிக்கை என்பதை வலியுறுத்திப் பேசினார். வேறு வழியின்றி முதலியார் மௌன மானார். பெரியாருக்குப் பாவம் புண்ணியத்தில் நம்பிக்கை இல்லா விட்டாலும், தன் கூட்டாளிகளின் கருத்துச் சுதந்திரத்தைக் காக்க வும் தன் கருத்தைத் திணிக்காது நடந்து கொண்டதையும் குறிப்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். தொடர்ந்து அம் மூவருக்கும் ஊரில் மதிப்பு உயர்ந்து நிம்மதியாகக் காலம் கடந்து வந்தது. அதே ஊரில் பெரியார் இனத்தை சேர்ந்த ரங்கநாத நாயுடு வின் தொடர்பு ஏற்பட்டது. அவரிடம் தன் சகாக்களைப்பற்றி பெருமையாகப் பெரியார் பேசி அவர் வீட்டில் தினமும் சத்கதா

காலட்சேபம் நடத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். துண்டு அறிக்கைகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன.

## இராமாயணமும், கீமாயணமும்

தளபதி அய்யர் வட மொழியில் உள்ள வால்மீகி ராமாயணத்தைப் படிப்பார். வேங்கடரமண அய்யர் அதை தமிழில் மொழி பெயர்த்துப் பேசுவார். அந்த ஊர் மக்களுக்குத் தெலுங்குதான் தாய் மொழி. எனவே தெலுங்கில் கூறவேண்டும் என்று கேட்டுக் கொண் டனர். அதற்கு ஆள் இல்லை. பெரியாருக்குத் தெலுங்கில் எழுத படிக்க தெரியாது, பேசத்தான் தெரியும். அதுவும் அரைகுறை! நிலைமையைச் சமாளிக்கவும் தன் கூட்டாளிகளுக்கு உதவி புரிய பெரியார் முடிவு செய்து, 'எனக்கு தெலுங்கு சரிவரத் தெரியா விட்டாலும் கூடிய வரை மொழிபெயர்த்து உங்கள் வேண்டுகோளை நிறைவேற்றுகிறேன்' என்று கூறி ஏற்ற பணியைப் பிரமாதமாகச் செய்து எல்லோருடைய பாராட்டையும் பெற்றார் பெரியார். அதிலும் தன் குறும்புத்தனத்தை விடவில்லை. அடிக்கடி தன்னு டைய நாத்திகக் கருத்துகளைப் புகுத்தி, நகைச்சுவை ததும்ப குட்டிக் கதைகளைக் கூறி இராமாயணத்தை முதன்முதலில் தன் கீமா யணமாக மாற்றினார் என்றாலும் தவறாகாது.

சீதா கல்யாணமும், இராமர் பட்டாபிஷேகமும் ஒரே நாளில் ஏற்பாடு செய்து ஏராளமான மக்கள் திரண்டு, காசிக்குப் போகப் பணத்தைச் சேர்க்கும் திட்டத்துடன் பெரியாரும், முதலியாரும் கூட்டாகத் திட்டமிட்டார்கள். இத்திட்டம் வெற்றிகரமாக நிறை வேறியது. பிரமாதமாகத் தெலுங்கில் உபன்யாசம் செய்து கோவிந்த ராம சங்கீர்த்தனத்துடன் முடித்தார் பெரியார்.

முடிவில் காணிக்கை குவிந்தது. பணம், காசு, பொற்காசுகள், வெள்ளி நாணயங்கள், பட்டுப் புடவைகள், சரிகை வேட்டிகள், சோமன் ஜோடிகள், குடைகள், காலணிகள் தண்டு, கமண்டலங்கள் ஏராள மாகக் குவிந்தன. பெரியாரின் காலில் விழுந்து நமஸ்கரித்தனர் வைதீகர்கள்.

## காசியில் மெய்யுணர்வு

பெரியார் ரொக்கமாக ரூபாய் நூறு மட்டும் எடுத்துக்கொண்டு மீதியை அப்படியே இரு பார்ப்பன கூட்டாளிகளுக்குக் கொடுத்து விட்டார். மூவரும் காசிக்குப் புறப்படத் தயாரானார்கள்.



பெரியாரைப் போக வேண்டாம் என்று முதலியார் தடுத்தார். 'பிராமணர்களுடன் போக வேண்டாம். அவர்களுக்கு எங்கும் எது வேண்டுமானாலும் கிடைக்கும். நீங்கள் கஷ்டப்படவேண்டி யிருக்கும்' என்று முதலியார் எச்சரித்தார். அதற்குப் பெரியார், 'நான் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு காரியத்தைச் சாதித்துக் கொள்வேன். உங்களுக்குக் கவலை வேண்டாம்' என்றார்.

உடன் முதலியார், 'உங்களிடம் இவ்வளவு தங்க நகைகள் இருப்பது ஆபத்தானது' என்றார். பின்னர் பெரியார் ஒரு மோதிரத்தை மட்டும் வைத்துக்கொண்டு மீதி நகைகளை பெட்டியில் வைத்துப் பட்டியல் தயாரித்து, முதலியாரிடம் ஒப்படைத்து அவரின் கையொப்பம் பெற்ற நகலை மட்டும் தம்மிடம் வைத்துக் கொண்டார். மூவரும் காசிக்குப் புறப்பட்டனர்.

மூவருக்கும் அமோகமான வழியனுப்பு விழா நடந்தது. மாலை மரியாதையுடன் ரயில் புறப்பட்டு அவுரா ஸ்டேஷன் வந்தடைந்தது. முதலியாரின் முன் ஏற்பாட்டின்படி அங்குப் பெரியாருக்கு நாட்டுக் கோட்டை நகரத்துச் செட்டியார்கள் பெரியாருக்கு நல்ல வரவேற்பை அளித்துச் சகல சௌகரியங்களையும் செய்தனர்.

மூவரும் கல்கத்தாவில் ஒரு மாத காலம் தங்கி ஊரை சுற்றிப் பார்த்து விட்டுக் காசிக்குச் சென்றனர். கங்கை நதியைக் கண்டு படகில் ஏறிக் காசிக்கரையில் உள்ள 64 புனித நீராட்டு இடங்களையும், கோயில் களையும் தரிசித்து, காசி மகாராஜா அரண்மனையைக் கண்டு களித்தனர்.

தமிழ்நாட்டிலிருந்து காசிக்குச் சென்று பட்டு ஜவுளி வியாபாரம் செய்யும் காசி முத்தையா கம்பெனிக் கட்டிடத்தில் மூவரும் தங்கினர். பிறகு திருப்பனந்தாள் ஆதீன மடத்தில் தங்கிக் கையில் கொண்டு வந்த காசையெல்லாம் செலவழித்து வந்தனர். காலப் போக்கில் இலவசமாக அளிக்கப்படும் தருமச் சத்திரத்தில் சாப்பாட்டை நம்பி உயிர் வாழ வேண்டியிருந்தது. ஆனால் அந்த உரிமையும் வாய்ப்பும் மறுக்கப்பட்டு விட்டது. ஏனென்றால், அவர் சூத்திரர். பிராமணாளுக்கு மட்டும் சோறு போடப்படும் என்று பலகைகளில் அறிவிப்புகள் எங்கும் காணப்பட்டன.

பெரியாருக்கு, கிராப்புக்குப் பதில் குடுமியும், மீசையில்லாமலும், தோளில் பூணூல் மட்டும் இருந்திருந்தால் அவரையும் சாப்பாட்

டிற்கு உள்ளே அனுமதித்திருப்பார்கள். இதற்குப் பிறகு பெரியார் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து, பார்ப்பனக் கூட்டாளிகளிடம் நல்ல முறையில் விடை பெற்றுக்கொண்டும், தலையை மொட்டை யடித்துக் கொண்டும், மீசையை எடுத்துவிட்டுக் காசியில் திண்டாட முற்பட்டார். துறவியானார். அந்த நிலையிலும் வேலை தேடி உழைத்து வாழ முற்பட்டார். சிவபூஜை செய்யும் மடத்தில் அவருக்கு வேலை கிடைத்தது. ஆனால் ஊதியம் கிடையாது, கடமைகள் கடுமையானவை.

காலையில் எழுந்து கடன்களை முடித்துக் கொண்டு, கங்கையில் குளித்துத் தேய்த்து உலர்த்தப்பட்ட லங்கோட்டையுடன் பரி வட்டம் கட்டி, விபூதி அணிந்து - வில்வம், பன்னீர்ப்பூ, மல்லிகை முதலிய மலர்களைப் பறித்து வந்து மாலைகளாகக் கட்டிக் கொடுக்க வேண்டும். விளக்குப் போட வேண்டும். அபிசேகநீர் கொண்டு வந்து கொட்ட வேண்டும். இதுதான் பெரியாருக்குக் கிடைத்த வேலை. அதற்காக அவர் அங்கே தங்கிக் கிடைத்ததைச் சாப்பிட்டுக் காலம் தள்ளவேண்டும்.

பெரியார்க்கோ வியர்வை நாற்றம் உண்டானால்தான் குளித்துப் பழக்கம். ஓய்விருந்தால் பல்சுத்தம் செய்வார். உணவுக்குப்பிறகு உறங்குவது வழக்கம். அதனால் அவரால் ஏற்ற பணியை முறை யாகச் செய்திட இயலவில்லை. எழுந்தவுடன் பூக்கூடையை எடுத்துக் கொண்டு நந்தவனத்திற்கு செல்வார். மரங்களை உலுக்கி உதிர்ந்த பூக்களைக் கூடையில் நிரப்புவார். காலைக் கடனை முடிப்பார். குளிக்காமல் பரிவட்டத்தை மட்டும் தண்ணீரில் நனைத்துத் தலையில் கட்டிக் கொண்டு மடாதிபதியிடம் பூக்கூடை யைச் சேர்ப்பார். இப்படி எத்தனை நாள்கள் ஏமாற்றி வாழமுடியும். பெரியார் வெளியே விரட்டப்பட்டார். மடத்திலேயே பெரிய அமளியை உண்டாக்கி விட்டுதான் பெரியார் வெளியே வந்தார்.

காசியில் இறந்தவர்களைக் கங்கைக்கரையில் உள்ள அரிச்சந்திரா கட்டத்தில் இறுதிச் சடங்குகளைச் செய்வது பழக்கம். பிணங்களை ஒரே மூங்கிலில் கட்டி எடுத்துச் செல்வதும், அதனை இருவரோ, நால்வரோ தூக்கிச் செல்வதும் பழக்கம். காசியில் கங்கை நதியின் ஆழம் 100 அடி இருக்கும். பிணங்களைச் சுட்டெரிக்கக் கட்டணம் வசூலித்து அவசர அவசரமாகப் பாதி வெந்தும் வேகாததுமாகச் சடலத்தைத் தண்ணீரில் வீசி எரிவதைப் பெரியார் நேரில் கண்டார்.



அங்கும் இலஞ்சம் தாண்டவமாடுவதையும் கண்டார். ஒரு நாள் வெளியூரிலிருந்து வந்த ஒரு பணக்காரர் தம் தந்தைக்குத் தலைத் திதியை வெகுசிறப்பாக நடத்தினார். பலருக்குத் தானங்களை வழங்கினார். கடைசியாகத் தம் தந்தை சொர்க்கத்திற்குச் செல்ல தானமளிக்க ஆள் கிடைக்காது திண்டாடி, கடைசியாகப் பெரியாரை அழைத்து வேண்டிய தானத்தை வற்புறுத்திக் கொடுத்தார். பெரியாரின் காலில் விழுந்து வணங்கினார். பெரியாருக்கு யோகம் அடித்தது. அங்கு தானங்களைப் பெறும் ஏழைகளுக்குத் தலைவ ரானார். இப்படி இரண்டு மாத காலம் கழித்தார். அப்போது காசியில் உயர்ந்த ஜாதியினர் உள்பட பலர் மது அருந்துவதையும், மாமிசம் சாப்பிடுவதையும், விபசாரம் செய்வதையும் மேலும் பல ஒழுக்கக் கேடான திருடர்களையும் பொய்யர்களையும் அங்கே கண்டார். துறவறத்திலும் கூட பெரியாருக்கு காசி தக்க இடமாகத் தென்பட வில்லை.

## துறவைத் துறந்து உறவு

வீட்டை அடையவேண்டும் என்று முடிவு செய்தார். கங்கையில் கடைசியாக ஒருமுறை குளித்து விட்டு காவி லங்கோட்டையும், கௌபீனத்தையும் தூக்கி எறிந்துவிட்டு, வெள்ளை வேட்டியையும், வெள்ளைத் துண்டையும் உடுத்திக் கொண்டு ஈரோட்டிற்குப் புறப்பட்டார்.

பெரியார் காசிக்குப் போகும்போது முதலியார் கொடுத்தனுப்பிய ஒரு வைரக்கல் மோதிரம் மட்டும் பெரியாரிடம் அதுவரைப் பத்திரமாக இருந்தது. அதற்கு காரணம் பெரியார் அந்த மோதிரத்தை அரைஞாணில் முடி போட்டு மறைத்து வைத்ததே யாகும். அந்த மோதிரத்தை விற்று எல்லாக் கடன்களையும் நேர்மை யாக அடைந்து விட்டு, காசி ரயில் நிலையம் வந்தார். கையில் இருந்த பணம் குறைவு. எனவே, ஈரோட்டிற்கு நேரே டிக்கட் எடுக்க முடியவில்லை. ஆந்திராவிலே உள்ள ஏலூர் வரை டிக்கட் எடுத்துக் கொண்டு ரயில் ஏறினார். பெரியார் ஏலூர் வந்ததும் ஒருவர் பெரியாரை வழி மறைத்து ‘நீங்கள் ஈரோடு வேங்கடப்ப நாயக்கர் பிள்ளை ராமசாமி நாயக்கர் அல்லவா?’ என்று கேட்டு விட்டார். பெரியார் திடுக்கிட்டு, ‘ஆம்’ என்றார். அப்படி கேள்வி கேட்டவர் ஈரோட்டில் வேலை பார்த்து ஏலூருக்கு மாற்றப் பெற்ற டி.எம். சுப்பிரமணியம் பிள்ளைதான். பெரியார் என்ன செய்வதென்று

புரியாமல் டி.எம்.எஸ். வீட்டில் விருந்தினராகத் தங்கினார். அவரிடமும் உண்மையைக் கூறவில்லை. வியாபார விஷயமாகத் தான் ஏலூர் வந்ததாகக் கூறி தப்பித்துக் கொண்டார்.

பலநாள்கள் ஓடின. பிறகு டி.எம்.எஸ். சந்தேகப்படாதவாறு அவரிடம் ஏதாவது நல்ல எள்ளு மண்டிக்கு தன்னை அழைத்துச் செல்லுமாறு கேட்டார். இருவரும் ஸ்ரீராமுலு என்பவரின் எள்ளு மண்டிக்குச் சென்றனர். அவருடைய கடையிலிருந்து பல ஆண்டு களாகச் சரக்கு, பெரியாரின் மண்டிக்குச் செல்வதுண்டு. ஸ்ரீராமுலு விதவிதமான சரக்குகளைக் காட்டி விலைகளைக் கூறினார். பெரியார் அனைத்தும் கேட்டுக்கொண்டு மீண்டும் வந்து ஆர்டர் தருவதாகக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். பின்னர், அந்தப் பக்கமே அவர் திரும்பவில்லை. ஸ்ரீராமுலு வியப்படைந்து பெரியார் வேறு கடையில் சரக்கு எடுத்து ஈரோடு சென்றிருக்க வேண்டும் என்று கருதி வருத்தத்துடன் ஈரோடு மண்டிக்குக் கடிதம் எழுதினார். ஒரு தந்தியும் கொடுத்தார்.

## பிரிந்தவர் கூடினர்

பெரியார் உடல் நலமுடன் ஏலூரில் இருக்கும் செய்தி ஈரோடு முழுவதும் பரவியது. வேங்கடப்ப நாயக்கர் உடனே ஏலூருக்குப் புறப்பட்டார். தம் வரவை முன்கூட்டி தெரிவித்தால் பெரியார் எங்காவது ஓடி விடப்போகிறார் என்று பயந்தார். ஸ்ரீராமுலு நாயுடு மண்டிக்கு நேராகச் சென்றார். கடிதம் எழுதி இருந்தால் உங்களுக்கு தேவைப்படும் சரக்கு அனுப்பியிருப்பேன். நீங்கள் ஏன் சிரமப்பட்டு நேரில் வந்தீர்கள் என்று மரியாதையுடன் ஸ்ரீராமுலு கேட்டார். வேங்கடப்ப நாயக்கர் ஒரு வாகன் எள்ளு அனுப்பும்படி ஆர்டர் கொடுத்துவிட்டு பையன் இராமசாமியை உடனே சந்தித்து அழைத்துப் போகவேண்டும் என்றார்.

டி.எம்.எஸ். வீட்டிற்குத் தந்தையார் வந்து சேர்ந்தார். அந்த இரவு நேரத்தில் சந்தடியில்லாமல் வேங்கடப்ப நாயக்கர் கதவைத் தட்டினார். முன் அறையில் படுத்திருந்த பெரியார் கதவைத் திறந்தார். தந்தையைக் கண்டார். ‘ நீ என்ன தவறு செய்தாய் மகனே? நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? உன் தாயார் நீ சென்றதிலிருந்து உடல் நலமற்று இருக்கிறாள். உன் மனைவியும் கவலையோடு இருக்கிறாள். புறப்படு. நீயே வியாபாரத்தையும் குடித்தனத்தையும் கவனித்துக் கொள்’ என்று பெரியாரை ஈரோட்டிற்கு அழைத்து



வந்தார். ஊரே கோலாகலமாகக் காட்சியளித்தது.

முருகேச முதலியாரும் தம்மிடம் ஒப்படைத்த நகைகளை மீண்டும் நாணயத்துடன் பெரியாரிடம் ஒப்படைத்தார். மண்டியின் பொறுப்பு பெரியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஈ.வெ. ராமசாமி நாயக்கர் மண்டி என்று புதிய பெயர்ப்பலகை தொங்கவிடப் பட்டது. அப்போது பெரியாருக்கு வயது 27.

## தமிழ்ப்படைத் தளபதி

1915-ஆம் ஆண்டில் ‘ஹோம்ரூல் இயக்கம்’ மும்முரமாக இருந்தது. அதன் தலைவர் அன்னபெசன்ட் அம்மையார். இவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். அம்மையாருக்குத் துணையாக வாடியா, அருண்டேல் இருந்தனர். ஈரோட்டில் தேசியக் கொடியேற்றிப் புரட்சிகரமாகப் பேசிய குற்றத்திற்காகக் காவல்துறையினர் அம்மை யார் மீது வழக்குத் தொடர்ந்து மூன்று மாதம் சிறைத் தண்டனை விதித்தனர்.

ஹோம்ரூல் இயக்கத்தை டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.க., வ.உ.சி.போன்ற தமிழர்கள் ஆதரித்தனர். ஆனால் பெரியார் ஆதரிக்கவில்லை. அப்போது காங்கிரசை ஆதரித்து வந்த ‘பிரேசிடென்சி அசோஸியேஷன்’ என்ற சங்கத்தில் பெரியார் ஈடுபட சென்றார்.

அந்தச் சங்கத்தின் தலைவர் திவான் பகதூர் கேசவ பிள்ளை. அந்தக் காலத்திலேயே பிராமணரல்லாத காங்கிரஸ் மாநாடு ஒன்று ஈரோட்டில் நடைபெற்றது. பெரியார்தான் அதன் வரவேற்புக் குழுத் தலைவர். ‘தமிழ் மக்கள் பாதுகாப்பு சைன்யம்’ என்ற பெயரில் ஒரு தொண்டர் படை அமைக்கப்பட்டது. அதற்குச் சிதம்பரம் என். தண்டபாணி பிள்ளை தலைவரானார். இவர் ‘தேசபக்தன்’ என்ற பத்திரிக்கையை ஒரு தம்பிடி விலையில் நடத்தியவர் - ‘நியூ இந்தியா’ பத்திரிக்கையின் நிர்வாகியாகவும் பணியாற்றியவர். 144வது பிரிவின் கீழ் வெள்ளையரால் கைது செய்யப்பட்ட முதல் இந்தியரும் அவரே.

பெரியார் ஈரோடு சேர்மன் பதவியைத் துறந்து வியாபாரத்தைக் குறைத்துக்கொண்டு, காங்கிரசில் சேர்ந்து தீவிர ஈடுபாடு கொண்டார். 1919-ஆம் ஆண்டு டிசம்பரில் அமிருதசரசில் அகில இந்திய காங்கிரசு மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டிற்குப்

பெரியார் சென்றார். சென்னையில் இருந்து 300 பேர் சென்றனர். வ.உ.சிதம்பரம் பிள்ளை அம்மாநாட்டிற்கு வர வேண்டும் என்று வற்புறுத்தி பெரியாரே அவருக்கு ரயில் டிக்கெட் எடுத்து அழைத்துச் சென்றார். அந்த மாநாட்டிலேயே தமிழகத்திற்கு உரிய பிரதிநிதத்துவதற்காகப் போராடி 10 பேர் விஷயாலோசனைக் கமிட்டியில் இடம் பெறச் செய்தார் பெரியார்.

பெரியார் கட்டிச் சென்ற வேட்டியும், அணிந்த சட்டையையும் சென்று திரும்பும் வரை மாற்றவுமில்லை. அந்த 20 நாள்களும் அவர் குளிக்கவும் இல்லை. உடல் நடுங்கும் குளிரில் தினசரி ஏன் குளிக்க வேண்டும் என்று விளக்கம் தந்தார் பெரியார். பெரியார் ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்ய முற்பட்டார்.

காங்கிரசுக்காக வாதாடிப் பெயர் பெற்ற சேலம் வக்கீல் ராஜாஜி சென்னைக்கு வந்து குடியேறினார். டாக்டர் வரதராஜுலு சேலத்தில் தொழில் புரிந்தார். பெரியார் எங்கும் போகவில்லை. ஈரோட்டிலேயே இருந்து கொண்டு காங்கிரசை வளர்த்தார்.

அவர் காங்கிரசில் பணியாற்ற முற்பட்டபோது உச்சிக் குடுமியும், அடர்ந்த மீசையும், பூசணிப்பழம் போன்ற தேகமும், நெற்றியில் சாந்துக் கோடும், பெரிய பொட்டும்கொண்டு பழுத்த மகா வைதீகராகவே இருந்தார். மேடைகளில் தீவிரமாக அப்போதே பேசி மக்கள் மனத்தைக் கவர்ந்திருந்தார். தமிழ்நாடு காங்கிரசுக்கு அவர் இரண்டு ஆண்டுகள் தலைவராக இருந்தார்.

## பேராயக் கட்சியிலிருந்து பெயர்ந்தார்

1925-ஆம் ஆண்டு காங்கிரசுக்கு முழுக்குப் போட்டுத் தன்மான இயக்கத்தைத்(சுயமரியாதை இயக்கம்-கவி) தொடங்கினார். கடவுள் இல்லை. வேதம் பொய், வர்ணாஸ்ரமப் புரட்டு, ஜாதிகள் ஒழிக்கப்பட வேண்டும். காங்கிரஸ் பார்ப்பனர் கோட்டை என்று எழுதவும் பேசவும் முற்பட்டார். 1929-ல் பிப்ரவரி மாதம், 17, 18 தேதிகளில் ‘சுயமரியாதை மாநாடு’ செங்கல்பட்டில் கூடியது. நீதிக்கட்சி பிரமுகர்கள் எல்லோரும் ஒத்துழைத்துப் பங்கு கொண்டனர். காங்கிரஸ் கட்சி பார்ப்பனரல்லாதாரும் பலர் வந்திருந்தனர். இதற்குப்பிறகு பெரியாரைப் பலர் பழிக்கத் தொடங்கினர். தேசத் துரோகி - நாத்தீகர் - மதத்துரோகி - கம்யூனிஸ்டு என்று தூற்றினர். பெரியாரை ஒழிக்கவே காங்கிரசு



நிதியிலிருந்து ‘தேச பந்து’ என்ற ஏடும் தொடங்கப்பட்டது.

பெரியாரும் மனந்தளரவில்லை. வேகம்தான் அதிகரித்தது. கடவுள் மறுப்புக் கூட்டங்களைத் தீவிரமாக நடத்தினார். மனுதர்ம நீதியைக் கொளுத்த முற்பட்டார். பெரியாரைப் பற்றி எங்குமே பேசப் பட்டது.

## உண்மையின் வேட்கை

தஞ்சையில் தாசிப் பெண்கள் மாநாடு ஒன்று நடக்க ஏற்பாடு செய்தார். முழுவதும் பெண்களால் நடத்தப்பட்டது. அம் மாநாட்டில் ஆண்கள் பார்வையாளர்களாகத் தனி இடத்தில் கலந்து கொண்டனர். இப்போது பெண்களுக்கு எதிலும், தனி இடம் ஒதுக்கப்படுகிறது. அப்போதே பெண்களுக்குத் தனி இடம் ஒதுக்கப் பட்டு விளம்பரம் செய்யக் காரணமாக இருந்தவர் பெரியார்.

பெரியார் எதைச் செய்தாலும் அதற்கு அவர் அனுபவ முத்திரை பொறிக்கச் செய்தார் பெரியார். எதையும் வெளிப்படையாகக் கூறுவதற்குமுன் தாமே அதைத் தத்ரூபமாக உணர்ந்துதான் செய்வார். கண்மூடித்தனமாக எதையும் செய்யவில்லை. எதிரிகள் என்ன சொன்ன போதிலும் அதில் உண்மை இருக்கிறதா என்பதைக் கண்டறிய முற்பட்டு ஏமாற்றமடையும் போது அதனை வெளி படுத்தி வந்தார். சிந்திக்காமல் எதையும் நம்பமாட்டார். சிந்தித்துச் சொல்வதைத் தாமே செயல்படுத்தியும் வந்தார்.

நிம்மதியைத் தேடி, அமைதியைத் தேடி அவர் அலைந்திருக்க வேண்டியதில்லை. ஆனாலும், எதையும் எந்த அளவிற்கு உண்மை என்பதை கண்டறியும் மனோபாவம் பெரியாரிடம் இருந்தது. காசியில் அவர் பெற்ற அனுபவம் அவருக்குப் பயன்பட்டது. துஷ்டர்களின் சிநேகிதத்தை நாடித் துன்பம் அனுபவித்த பின்னரே அவர் நல்ல உறவைப் பற்றி புரிந்துக் கொண்டார். எதிலும் அவருக்கு அளவுகோல் பகுத்தறிவாகவே இருந்தது.

மக்களின் அறியாமையை, மூடநம்பிக்கைகளை அவர் கண்டறிந்து அவர்கள் பாதையிலேயே சென்று பரீட்சித்து மக்களைத் திருந்த முயன்றார். ஆத்திகர்களின் மனம் புண்படாத வகையில் நாத்திகத்தின் சிறப்பை நிலை நாட்டினார். தாமே அனுபவ பூர்வமாகப் பெற்ற உண்மைகளை அவர் எளிதில் விட்டுக் கொடுக்க மறுத்ததும் நியாயம் தானே.

ஈரோட்டில் தம் பெயருக்கு மாற்றப்பட்ட மண்டி வெகு விரைவாக முன்னேறியது. தந்தையார் நிர்வகித்ததைவிட பல மடங்கு திறமையைக் காட்டி இலாபத்தை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கினார். இல்லறச் சிறப்பைத் துறவுக்கோலம் பூண்ட பின்னரே உணர்ந்தார். சில மேதாவிகளைப் போல் வெறும் கற்ற பாடத்தைக் கிளிப்பிள்ளைப் போல பேசும் வழியை பெரியார் பின்பற்றவில்லை. எதையும் உள்ளத் தூய்மையுடன் ஏற்று அணுகிப் புரட்சிப் புதையல்களை அவர் தேடினார்.

## தலைமைக்குரிய தனிப்பண்புகள்

வியாபாரத்தில் கெட்டிக்காரராகப் பெரியார் விளங்கினார். சுமார் 12 ஆண்டு காலம் அவர் பிரபல வியாபாரியாக ஈரோட்டில் விளங்கினார். வியாபார த்தில் வாடிக்கையாளர்களிடம் அன்பாகப் பேசுவதிலும், தம் சுயமரியாதைக் கருத்துகளைப் பரப்புவதிலும், ஏழைகளுக்கு உதவி புரிவதிலும், உண்மையை நாடுவதிலும் நேர்மையாக நடப்பதிலும் தலைசிறந்து விளங்கினார். செல்வம் தானாகக் குவிந்த வண்ணம் இருந்தது.

நகர சபையின் தலைவரானார்.

இந்து தேவஸ்தான டிரஸ்டியானார்.

அறநிலையப் பாதுகாப்பாளரானார்.

தமக்குத் தனிப்பட்ட முறையில் நேர்மாறான கருத்துகள் இருப் பினும் அவர் வைதீகர்களைப் பகைத்துக் கொள்ளாமல் குடும்பத் தின் கடமையை உணர்ந்து தகப்பனார். தாயார், அண்ணன் ஆகியோருக்கு நல்ல மதிப்பையும் செல்வாக்கையும் தேடிக் கொடுப்பதுடன் தம் இனத்தவர்களைப் படிப்படியாகப் பக்குவமாகத் திருத்தும் ஆக்கப் பணியில் யாதர்த்தமாக ஈடுபட்டார்.

அந்தக் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப ஒரு ‘டிரஸ்ட்-டீட்’ எழுதி, பதிவு செய்து நற்காரியங்களைச் செய்தார். இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அது தம் தந்தையாரின் உடல்நிலையில் பெரியாருக்கு ஏற்பட்ட நம்பிக்கை இன்மையும் ஆகும். பெரியாருக்கு வாரிகள் ஏதும் இல்லாதிருந்தது கருத்தில் கொள்ளத் தக்கது. ஆண்டுக்கு அந்தக் காலத்திலேயே அனைத்துச் செலவுகள் போக நிகர வருமானம் 20,000 ரூபாய்க்குக் குறையாமல், தொடர்ந்து ஆண்டுதோறும், படிப்படியாக உயர்ந்து கொண்டே வந்தது.



பெரியார் நினைத்தபடியே தந்தை வேங்கடப்ப நாயக்கர் 1911-இல் இயற்கை எய்தினார்.

முன்னோர்கள் முறைப்படி உடலை எரிக்க வேண்டும் என்றார் அண்ணன். சன்யாசம் பெறாமல் குடும்பத்துடன் இருந்த வைணவர் களை எரிக்கத்தான் வேண்டும் என்று அனைவரும் கருத்துத் தெரிவித்தனர். இதிலும் பெரியார் தம் விதண்டாவாதத்தைக் கையாண்டு தந்தையார் சொத்து முழுவதும், தமக்கில்லாது தானம் செய்து முறையாகப் பிறர் அனுபவிக்கச் செய்த காரணத்தினால் அவர் துறவிதான். அவரையும் புதைக்கத்தான் வேண்டுமென்று வாதாடினார். அதனை எவராலும் மறுக்க முடியவில்லை. இறுதி யில் பெரியாரின் கருத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டபின் வேங்கடப்ப நாயக்கரின் உடல் புதைக்கப்பட்டு சமாதி எழுப்பப் பட்டது. பக்கத்தில் ஒரு பிள்ளையார் கோயில் கட்டி கும்பா பிஷேகம் நடத்தப்பட்டு, அதற்காகப் பன்னிரண்டு வீடுகள் வேறு வருமானத்திற்காக ஒதுக்கப் பட்டது.

பெரியார் ஒரு முரட்டுச் சுபாவம் படைத்தவர் என்பதும், பயன்களைப் பற்றிக் கவலைப்படுவதை விட, வைதீகர்களைச் சங்கடத்தில் ஆழ்த்தி அதனால் ஏற்படும் தெளிவையே மதிப்பிடுவார் என்பதையும் இதன் மூலம் அறியலாம்.

## பட்டறிவுப் பட்டறை

பெரியார் ஏதோ நிலையான கொள்கையற்றவர், உறுதி இல்லாதவர், தீவிரமாக வாய்ப்பந்தல்தான் போடுவார் என்பவர்கள், ஆழ்ந்து ஆராய்ந்தால், அவர் செய்த காரியங்கள் அனைத்தும் காலத்திற் கேற்ற வரம்புக்குள் நிகழ்ந்தனவென்பதை அறியலாம். பெரியார் தமக்குள்ள தீவிர முற்போக்குக் கொள்கைகளை உறுதியாகக் கடைப்பிடித்திருந்தால் சமூகத்தின் வெறுப்பைத்தான் தேடிக் கொண்டிருப்பார். பலரின் பழிக்கு ஆளாகியிருப்பார். அதனால் வைதீகப் பிராமணர்களே ஆதாயம் பெற்றிருப்பார்கள். நம் இனத்தின் நலன் தேக்கமடைந்திருக்கும். சுயமரியாதை இயக்கம் வெகுஜன வெறுப்பிற்கு இலக்காகியிருக்கும். அவர் எதிலும் பொது நலனையும், குறிப்பாக இனநலனையும் கருத்தில் கொண்டே செயல் பட்டார் எனலாம்.

பிற்காலத்தில் தமக்குப் பிடிக்காத காங்கிரசை அவர் ஆதரித்ததும் இதே அடிப்படையில்தான். அதில் முரண்பாடு காண்பவர்கள்

தெளிவான கருத்துக் கண்ணோட்டம் அற்றவர்கள் என்றே கூற வேண்டும். ஜனநாயக நாட்டில் எதை எப்படிச் செய்ய வேண்டுமோ, உள்ள சட்டங்களின் சக்தியை மனத்தில் கொண்டு, சரியான அளவு கோலுடன் பெரியார் பல நற்காரியங் களைச் செய்தார்.

பணம் சேரச்சேரச் பலர் தலைகால் தெரியாமல் ஆடிப் பாழாகி வருந்துவது கண்கூடு. ஆனால், பெரியார் தனக்கென்று ஏதும் இல்லாதவராகவே வாழ்ந்தார். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதில் அவருக்கு எவருமே ஈடாக மாட்டார்கள். குடும்பம், கழகம், பொது வாழ்வில் அனைத்திலும் அவர் மிகவும் சிக்கனமாகவே இருந்தார்.

சென்னைச் சட்டமன்றத் தலைவர் ஒருமுறை ஈரோட்டுக்கு வந்தபோது, இரயில் நிலையத்தில் கிடைக்கும் சாதாரண உணவையே வழங்கியவர் பெரியார். விளக்கம் கேட்டவர்களுக்கு, அப்போதுதான் மக்கள் நிலை பெரியவர்களுக்குப் புரியும் என்று கூறியவர் பெரியார்.

செல்வச் சீமான் ஊத்துகுளி ஜமீன்தார், ஈரோடு வந்தபோது மாலை கூடப் போடாமல் வெறும் கைகளைக் கூப்பி வரவேற்று, அவரைக் குதிரை வண்டியில் அழைத்துச் சென்று வீட்டில் அன்றாடம் சமைக்கும் உணவையே வழங்கியவர் பெரியார். நண்பர்கள் வீட்டில் காணப்படும் பொருள்களின் விலை கேட்டு மூக்கின்மேல் விரல்வைத்துக் கொண்டு ரசிப்பார். சத்தான பழங்கள் மலிவான விலையில் கிடைக்கும்போது மட்டும் ஆசைத் தீர வாங்கித் தின்பார். 4 முழம் வேட்டி உடுத்திக் கொள்வதே பழக்கம். 3,4 பைகளுடன் தைக்கப்பட்ட அரைக்கால் சட்டையில் பிரயாண சாமான்களே அடங்கிவிடும். குளிர்காலத்தில் ஒரு சிறு போர் வைக்கு அவருடன் போகும் பாக்கியம் ஏற்படும். நீண்ட பிரயாணத் தின் போது யானைக்கால் போன்ற பையில் அனைத்தும் திணிக்கப் பட்டு ஒரு சிறு பெட்டியை எடுத்துச் செல்வார். இரயில் நிலையங் களில் போர்டரை எதிர்பார்க்க மாட்டார். தாமே பையை அனைத்துக் கொண்டு, பெட்டியுடன் விரைவாகப் புறப்படுவார். அவருடன் வருபவர்கள்தாம் தாங்களாகவே அவருக்குப் போர்டராக வேண்டும். வண்டியைக் கூட ஏற்பாடு செய்ய மாட்டார். விரைவாக நடப்பார்.

## தன்னாண்மையும் சீர்மையும்

இரயிலில் 4-ஆம் வகுப்பு இல்லாததால் 3-ஆம் வகுப்பில்



பிரயாணம் செய்வார். உட்கார இடம் கிடைக்காவிட்டால் சர்வ சாதாரணமாகக் கீழே உட்கார்ந்து கொள்வார். சீட்டுக் கீழே ஒரு துண்டை விரித்துக் கொண்டு, பையைத் தலையணையாக்கிக் குறட்டைவிட்டுக் கொண்டு நிம்மதியாகத் தூங்குவார். குளிப்பதிலும் சிக்கனம். தாம் மேற்கொண்ட பணியின் காரணமாய் மறந்து சில சமயம் சாப்பிட்டு பிறகு பல் தேய்த்ததுண்டு.

எவ்வளவு பசியிருந்தாலும் திண்பண்டங்கள், பழங்கள், சோடா, பால் முதலியவற்றின் விலையைக் கேட்டு விட்டு சும்மா இருப்பார். உடைகளை வண்ணானுக்குப் போட வேண்டுமே என்று கவலைப் பட மாட்டார். அழுக்கு உடைகளில் அசிங்கம் காணாதவர். தாடி, மீசை, தலைமயிர் வளர்வதைச் சீர்படுத்தி அலங்கரித்துக் கொள்வது வேண்டாத வேலை. வீணான வேலை என்பார். 1929-ஆம் ஆண்டு மலேயா செல்லும்போது கப்பலில் மயிர் வினைஞுன் கால தாமதமாக வந்ததால் அன்று முதல் முகத்தைச் சீர்செய்து கொள்ளாமல் தாடியை வளர்த்துக் கொண்டார். தம் இறுதிக்காலம் வரை மயிரைப் பற்றிக் கவலைப்படாமல் **வெண்தாடி வேந்தர்** என்று பட்டமும் பெற்றார். ஆடம்பரத்துக்காக ஒரு காசுகூட செலவிட்டவரல்லர். பல பட்டங்கள் அவரை நாடி வந்தும் ஏற்க மறுத்தார். காரணம் கேட்டவர்களுக்கு அதனால் பணத்தை வீண் செலவு செய்து போலிக் கௌரவம் தேடிக்கொள்ள நேரிடும் என்பார். இப்படி அவர் செய்யாதிருந்தால் ராவ்சாகிப், ராவ்பகதூர், திவான் பகதூர், பட்டதாரியாக மறைந்திருப்பார். தம்மைப் பெரியதாக எண்ணிக்கொள்ளவே இல்லை. எளிய சிக்கன வாழ்க்கையை விரும்பினார். பீடி, சிகரெட், பொடி, வெற்றிலை பாக்கு, சோப்பு, ஸ்னோ, பவுடர் வாசனை எண்ணெய், சென்ட் எதுமே அவரைத் தீண்டியது இல்லை. இயற்கையோடு இயைந்து வாழ்ந்தார். வாழ்வோடு இயக்கத்தை இணைத்தவர் பெரியார். ஒழுக்கக் கேடுகளை அவரால் தீவிரமாகக் கண்டிக்க முடிந்ததற்கு அவரது அடிப்படை ஒழுக்க வாழ்க்கைதான் காரணம்.

## சிக்கனத்தில் அக்கறை

நான் திராவிட மாணவர் கழகத்தின் செயலாளராக இருந்தபோது மதியழகன் தலைவராக இருந்தார். நாங்கள் எவ்வளவு பணம் வசூலித்துக் கொடுத்தாலும், நோடீசு போஸ்டர்களை விடுதலை அச்சகத்திலேயே அச்சிட்டுத் தருவார். நல்ல முறையில் பல

வண்ணங்களில் அச்சடித்தால் மாணவர்களைக் கவரும் என்றால் ஏற்றுக் கொள்ளமாட்டார். சிந்தாதரிப்பேட்டையிலிருந்து வெளி வந்த விடுதலை அலுவலகத்தைப் பார்த்தாலே அவருடைய சிக்கனம் தெளிவுபடும். ரீம்கள் வரும் பலகைகளையே பெஞ்சு களாக, நாற்காலிகளாக, மேஜைகளாகச் செய்யப் பயன்படுத்துவார். ரீல் பேப்பரைக் காசு கொடுத்து ஷீட்களாக மாற்ற மாட்டார். யாரை யாவது விட்டு 10, 15 ஷீட்டுகளாக அறுக்கும்படிச் செய்வார். பழைய பிளாக் கட்டைகள், தேய்த்த போஸ்டர், மர எழுத்துக்கள் தான் பேப்பர் வெயிட்டர்கள். சுண்ணாம்பு அடிக்க அதிகமாகப் பணம் கேட்கிறார்கள் என்று வெளியூரிலிருந்து வேலையற்று இருப்பவர்களை வேனில் ஏற்றிவந்து கட்டடத்திற்கு வெள்ளை யடிப்பார். சுண்ணாம்பும் கழகத் தோழர்களிடம் இலவசமாகப் பெற்றிடுவார்.

நான் பலமுறை அவருடன் வேனில் செல்லும் வாய்ப்பைப் பெற்றேன். அந்த வேனிலேயே சகலமும் இருக்கும். அதனை அவருடைய நடமாடும் வீடு என்றே கூறலாம். குடியரசு பதிப்பக நூல்களைக் கோணியில் அடைத்து வேன் மேலே ஏற்றிச் செல்வார். பார்சல் செலவை மிச்சப்படுத்துவார். யாரையாவது விட்டு விற்பனை செய்வார். கணக்கை ஒருமுறைக்குப் பலமுறை பார்ப்பார். பையன்களை விட்டு ஆபீசுக்கு வரும் கவர்களைக் கிழிக்காமல் பிரித்து ஒட்டச் சொல்லிப் பயன்படுத்துவார்.

வேளாவேளைக்குச் சாப்பிடுபவர்கள். சுவையாகச் சாப்பிடுபவர்கள் அவருடன் செல்ல முடியாது. வழியில் கழகத்தினர் நடத்தும் கடைகளில் நிறுத்திக் காய்ந்துபோன ரொட்டி, பன், நாள்பட்ட வடை, பகோடா, தூசி படிந்த தோசை, இட்டிலி போன்றவைகளை வாங்கித் தருவார். பசி என்று யாரும் துணிந்து கூறவே முடியாது. போராட்டங்களில் கலந்துக் கொள்ள வெளியூரில் இருந்து ஆர்வத்துடன் வருபவர்களிடமும் கண்டிப்பாகப் பேசுவார். இப்படி முன்கூட்டித் தெரிவிக்காமல் அனுமதி பெறாமல் வருவது தவறு என்பார். அத்தனைத் தொண்டர்களுக்கும் தங்க வசதி, சாப்பாடு வசதி செய்ய முடியுமா என்று சலித்துக்கொள்வார். அது மட்டுமன்று போராட்டக் களம் நோக்கிச் செல்பவர்கள் திரும்பி வந்த பிறகுதான் எத்தனை பேருக்குச் சமைக்க வேண்டும் என்று உத்தரவு போடுவார். ஒருமுறை அண்ணா தொண்டர்களின் குறையை எடுத்துக் கூறிய போது, ‘என்ன அண்ணாதுரை



உங்களுக்குக் கூடவா புரியவில்லை? தொண்டர்கள் கைது செய்யப்பட்டால் சமைத்தது வீணாகிவிடாதா?’ என்று பதிலளித்தார்கள். இலைகளுக்குப் பணம் செலவாகிவிடுமே என்று சாப்பாட்டுத் தட்டுகளில் உணவு பரிமாறச் சொல்வார்கள்.

நண்பர் மதியழகன் நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். எவ்வளவு பணமிருந்தாலும் தாராளமாக எல்லோருக்கும் செலவு செய்து பழக்கப்பட்டவர். மாணவர் கழகத்தின் செலவுகளைப் பெரியாரிடம் கொடுக்கும்போது மிகவும் சிரமப்பட்டுக் கற்பனை செய்து மிகக் குறைவாகவே கணக்குக் காட்டுவார். அதைவிடப் பத்து மடங்கு அதிகம் செலவாகி இருக்கும். இருந்தும் அவர் தரும் கணக்கைப் பலமுறை படித்துக் கூட்டி, ஏதாவது குறை சொல்லிதான் முடிப்பார்.

## இன்றைய தலைமுறை அறிக

அந்தக் காலத்தில் சென்னையில் டிராம் வண்டிகளில் பிரயாணம் செய்தால் கட்டணம் மிகக் குறைவு. டிராம் இல்லாத இடங் களுக்குப் பஸ்ஸில் சென்றதாகக் கணக்குக் காட்டினால்கூட முனுமுனுப்பார். போகும் வரை டிராமில் சென்று நடந்து போக வேண்டும் என்பது அவரின் விருப்பம். கழகக் காரியங்களைப் பொறுப்பு ஏற்று அவரிடம் நல்ல பெயர் எடுப்பது மிகவும் கடினம். அவசியத்தை முன்னிட்டோ, அவசரத்தை முன்னிட்டோ கூட எதையும் துணிந்து செய்ய முடியாது என்றால் கௌரவத்திற் காகவோ, மதிப்புக்காகவோ பணம் செலவிட அவரிடம் துணிபவர் களே இருந்ததில்லை.

மெருகு குலையாத, மடிப்புக் கலையாத உடை, பகட்டான வீடு, தொலைபேசி, வேலையாள்கள், பெரிய ஓட்டலில் சாப்பாடு, ஏ.சி. வசதி, உயர்ந்த பானங்கள், மான்கறி, முயல்கறி அத்தனையும் பெற்றும், இந்தக் காலத்தில் தொண்டர்களாலோ, தலைவர்களாலோ, செய்திட முடியாத பெரிய காரியங்களைத் தந்தை பெரியார் அந்தக் காலத்திலேயே செய்து காட்டினார் என்பதைச் சிந்தித்துப் பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் பெற வேண்டிய படிப்பினையைப் பெறுவது எதிர்கால இன நலனுக்குப் பயனுள்ளதாகும்.

மாலைகளை ஆள் உயரத்திற்குப் போட்டு காக்காய் பிடிக்கும்

இந்தக் காலத்தினர், தந்தை பெரியார் மாலைக்கு பதில் கைத்தறித் துண்டு, காசு பெற்றதில் பயனுள்ள பொருளாதாரக் கொள்கை மறைந்திருப்பது புலப்படும்.

எடைக்கு எடை அவர் பெறாத பொருள் இல்லை. அவை அத்தனையும் இனத்தின் மேன்மைக்காக அவர் திருச்சிக்கு அனுப்பி வைத்ததும் கருத்தில் கொள்ளத்தக்கது. தனக்களிக்கப்படும் கருப்புத் துணியை தன்னிடம் பணிபுரிபவர்களுக்கு உண்மையான கழகத் தொண்டர்களுக்கும், வேறுபல காரியங்களுக்கும் பயன்படுத்தினாரே தவிர இக்காலத்தில் அளிக்கப்படும் காணிக்கைகளை காசாக்கிக் குடும்பத்திற்குப் பயன்படுத்துவது போல பெரியார் செய்ததில்லை. பெரியார் மிகச் சிறந்த பொருளாதாரப் பேராசிரியர் என்பதற்கு அவருடைய வாழ்க்கையில் பல நல்ல ஆதாரங்கள் உண்டு.

## தலைவராக்கிய தாய்

கணவரின் குணங்களை மிக நன்றாக உணர்ந்து எதை எப்படிச் செய்ய வேண்டுமோ, அதனை முறையாகச் செய்து எல்லோருடைய நல் மதிப்பைப் பெற்றுத் தாயாக விளங்கினார் நாகம்மை. பெரியாரையும் அம்மையார், தாய் போல கவனித்தார். பெரியாரின் உடல் நலத்தில் நாகம்மை மிகவும் அக்கறைக் கொண்டு இருந்த காரணத்தினால்தான் பெரியார் 94 ஆண்டுகள் உடல் நலத்துடன் வாழ்ந்து, அரும்பணியாற்றி இருக்க முடிந்தது. நாகம்மையார் இன்னும் சில ஆண்டுகள் உயிருடன் இருந்திருந்தால் பெரியார் 100 ஆண்டுகளுக்கு அதிகமாகவே வாழ்ந்திருக்கலாம் என்றே நினைக்க வேண்டிருக்கிறது. எண்ணெய் தேய்த்துக் கொண்டு குளிப்பதற்காக எத்தனை முறை அழைத்தாலும் பெரியார் இணங்க மாட்டார். பெரியார் குளிக்காமலே வேலையில் சுறுசுறுப்புடன் தெம்பாக இருப்பார். நாகம்மை மிகவும் கவலை கொண்டு வேறு வழியில்லாமல் பெரியார் என்ன செய்து கொண்டிருந்தாலும் கேட்காமல், திடீரென்று தலையில் எண்ணையை ஊற்றிப் பெரியாரை வேறு வழியற்றுக் குளிக்கச் செய்வார்.

எதையும் ருசியாக இல்லை. நன்றாக இல்லை என்று பெரியார் ஒதுக்கி வீணாக்காமல் உண்டு செரித்து விடுவார். மாமிச உணவு என்றால் கேட்க வேண்டியதில்லை. சுவைத்துச் சாப்பிடக்கூட நேரத்தை ஒதுக்க மாட்டார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட



போது டாக்டர்கள் அனுமதித்த உணவு மீது வெறுப்புக் கொண்டு யாருக்கும் தெரியாமல் பிரியாணி வரவழைத்துச் சாப்பிட்டு முடிந்த பின்னர்தான் டாக்டர்களிடம் தெரிவித்தார். இப்படி அவருடைய வாழ்க்கை எத்தனையோ சுவையான சம்பவங்களின் மணற்கேணியாகும்.

## பகுத்தறிவுப் பரிதி

ஆண்களுக்குச் சமமாக பெண்கள் இருக்க வேண்டும். தோற்றத்தில் அதிக வித்தியாசம் இருக்கக் கூடாது என்பதற்காகத் தம்மைப் போலவே தம் மனைவி நாகம்மையாரும் கொஞ்ச காலம் பின் பற்றினார்கள்.

காமவெறியைத் தடுத்து, பால் உணர்ச்சிக்கு எல்லைக்கோடு அமைக்க மேல்நாடுகளில் நிலவும் நிர்வாண இயக்கத்தையும் நம் நாட்டில் புகுத்த நினைத்துப் பெரியார் ஒரு சில நாட்கள் தாமே நிர்வாண இயக்கத்தைக் கடைபிடித்துப் பின்னர் பழையபடி தம்மை மாற்றிக் கொண்டார் என்பதும் வியப்புக்குரியதாகும். பெரியார் பிறர் கூறுவதைச் சுலபத்தில் ஏற்பவர் அல்லர். முரட்டுத்தனமும், பிடிவாதமும் கொண்ட பெரியார் தம் மனைவியின் பேச்சைத் தட்டாமல் கேட்டுத் திருந்தி நிர்வாண இயக்கப் பற்றைத் துறந்தார்.

பெரியார் பகுத்தறிவுவாதியாகவே அன்றாடம் வாழ்ந்தவர். எதை யார் கூறினாலும், அதன் நல்லது கெட்டதுகளைத் தாமே கண்டறிந்து, நல்லனவற்றை வரவேற்றும், தீதானவற்றைக் கை விட்டும் பகுத்தறிவு மேதையாக வாழந்து காட்டி, பகுத்தறிவு இயக்கத்தின் மிகப் பெரிய ஆசானாக விளங்கி, 20-ஆம் நூற்றாண்டின் வரலாற்றுச் சிறப்புமிக்கவராக மறைந்தார். பெரியாரின் வரலாறு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தகுதியை மட்டும் பெறவில்லை. அவருடைய வரலாறு அனைவருமே படித்துப் பயன்பெற வேண்டிய அரிய வரலாறு.

## தன்னேரில்லாத தகையும் தலைமையும்

பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் பயின்றோர் ஏராளம். அவருக்கு அரசியலில் நேரடியாக ஈடுபாடும் நம்பிக்கையுமில்லை என்றாலும்கூட அவரிடம் பயிற்சி பெற்றவர்கள், அவரை விட்டு ஓடியதால் அனாதைகளாகவோ, கேலிக்குரியவர்களாகவோ, ஆகிவிடவில்லை. இந்தியத் துணைக் கண்டத்தில் தோன்றிய

அனைத்துக் கட்சிகளிலும் அவரிடம் பழகிப்பயிற்சி பெற்று, பக்குவ மடைந்தவர்களைக் காணமுடியும். சிலர் பெரிய தலைவர்களாகி, பெரிய பதவிகளை வகித்து ஓரளவுக்குப் பொதுப்பணியில் பங்கைச் செலுத்தியிருக்கின்றனர் என்பதுதான் நம் நாட்டின் வரலாறு. இவன் உன்னிடமிருந்தான் - இவன் என்னுடன் சுற்றி வந்தான் - இவன் என்னிடம் பயின்றான் என்று பெருமையோடு கூறிக்கொள்ளக் கூடிய தகுதியைப் பெற்ற ஒரே தலைவர் பெரியார் ஒருவர்தான்! அவரை விட்டுப் பிரிந்தவர்கள் கூட அவர்தாம் தலைவர் என்றே பிரகடனப்படுத்தி வந்தனர்.

'நானும் அவரும் பிரிகிறபோது, நான் கூட அவரையேதான் தலைவ ராகக் கொண்டேன். வேறு எவரையும் தலைவராக பெறவில்லை. அந்த அவசியமும் வரவில்லை' என்று அறிஞர் அண்ணா பெரியாரைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமன்று. அவரையே கூடத் தலைவராக ஆக்கிக் கொள்கிற வாய்ப்பு இருந்தும் தலைவராகவில்லை. தகுதியில்லாத நிலையில் தலைவர்களாகி அதனைக் காப்பாற்றிக் கொள்ள உடும்பு பிடியுடன் அலைபவர் பலரைக் காண்கிறோம். இத்தனைக்கும் காரணம் தந்தை பெரியாரின் சிறப்புமிக்க சாதனைகளே. அவர் சாதனைகளை விடுத்துக் கொண்டே போனார்.

அவரைத் தேடித் தலைவர் பட்டமும் தானாகவே வந்தது. அந்தத் தலைவர் பட்டத்திலும் அவர் பற்றுகாட்டி வாழவில்லை. கடமை, கடமை என்று கடைசிவரை கடன்களை முடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். பெரியார் உருட்டல், மிரட்டலுக்கு அஞ்சாது. வாதத்திறமையால் மக்களைத் திருத்தினார் என்று சொன்னால் போதாது, ஒரு பெரிய திருப்பத்தையே உண்டாக்கினார் என்றுதான் கூற வேண்டும். அந்த மாற்றத்தை அவர் சுலபமாகச் செய்திடவில்லை.

திடுக்கிட வைக்கிறாரே, திகைக்க வைக்கிறாரே, எரிச்சலூட்டுகிறாரே, யாரும் பேசிடாததை ஏதோதோ பேசுகிறாரே என்பவர்களின் மத்தியில், விட்டேனா பார், ஒழித்துக் கட்டுகிறேன், தீர்த்து முடிக்கிறேன் என்பவர்கள் புடை சூழப் பெரியதோர் மாற்றத்தை **20** ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்திய தீரர்-வீரர்-தானைத் தலைவர் பெரியார்தான்.

கொதித்தவர்கள் அவரின் கொள்கையில் மயங்கினர். மிரட்டி



யவர்கள் அவரது எழுத்துக்களைப் படித்து மாறினர். அலட்சியப் படுத்தியவர்கள் அவரது பேச்சில் அக்கறை காட்டினர். புல்லேந்தி யவர் சார்பாகக் கல்லேந்தி வந்தவர்கள் அவரது கருத்து மழையில் நனைந்து அவரது இயக்கத்தின் மீது மோகம் கொண்டனர். பெரியாரின் படைப்பு மக்களுக்குப் பெரிய, புதிய விருந்தாயிற்று, இப்படிப்பட்ட மாற்றம் வேறு எங்கும் ஏற்படாத காரணத்தினால் தான் அவர் மறைவுக்குப் பிறகு ஆயிரமாயிரம் பெரியார்கள் தோன்ற வேண்டும். அவரது இயக்கம்போல் எல்லா இடங்களிலும் ஏற்பட வேண்டும் என்று இன்று பலர் பேச நேரிட்டிருக்கிறது. எத்தனைக் கேள்விகள், எப்படிப்பட்டவர்கள் கேட்டாலும், சளைக் காது நகைச்சுவையுடன் மடக்கிய கத்தி சடக்கென்று எழுவது போலப் பதிலளிக்கும் ஒப்பற்ற தலைவராக விளங்கினார். பெரியார்.

## பகுத்தறிவுப் பகலவன்

அவர் ஒருவர்தான் பழைமைகளை அக்கு வேறு ஆணிவேறாக்கிச் சந்தடியில்லாத பகுத்தறிவுப் புரட்சியை உண்டாக்கியவர். அக்கிர மங்கள் கொடுமைகள் யார் செய்தாலும் அதற்கெல்லாம் யார் யார் பக்க பலமாக இருந்தாலும், அவற்றைக் கண்டும் காணாது சிலர் ஓடி ஒளிந்து கொண்டாலும், தாம் மட்டும் தயக்கமின்றிப் போர் முரசு கொட்ட; களம் பல அமைத்து, வெற்றிகள் பல குவித்தார். தமக்காக இல்லை. பணம், தமக்காக இல்லை. பதவி, தமக்காக இல்லை. கழகம், தமக்காக இல்லை. அறிவு, எல்லாம் மக்களுக்காக என்று அபூர்வப்பிறவியாகத் தலைவர்களுக்கு வழிகாட்டிய உத்தமர் பெரியார்.

பெரியாரால் ஏற்படுத்தப்பட்ட அறிவு ஒளி என்றும் இருளை விரட்டிய படியே இருக்கும். பகுத்தறிவியக்கச் சூரியனாக அழிவில்லாது புகழோடு நிலைத்து நிற்கக்கூடிய ஒரே தலைவர் பெரியார்தாம். பெரியாரின் புகழ் மங்க வேண்டுமானால் அது பார்ப்பனர்கள். போலித் தமிழர் கையில்தான் உள்ளது. இந்த நாட்டில் இருக்கும் மனிதராக மாறாது மேலானவராக இருக்கும் காலம் வரை பெரியாரின் கொள்கை, அவர் தோற்றுவித்த புரட்சி நிச்சயம் எல்லோரையும் மனிதர்களாக்கி, பகுத்தறிவு மணம் எங்கும் பரவிடும் காலம் மலர்ந்தே தீரும்.

பகுத்தறிவு வாதம் என்பது உண்மைகளை, நெறிகளை மறுப்பதன்று, எதையும் காரணம் கேட்டு ஆராய்ந்து உண்மையைக் காண்ப தாகும்.

போலித்தனமான எண்ணங்கள் மனத்தில் குடிகொண்டிருப் பதை அகற்றும் அறிவாயுதமே பகுத்தறிவு. நம்நாட்டு மக்கள் நெடுங் காலமாக ஆரியத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்தனர். இதே காலத் தில் உலகத்தின் மேலைநாடுகள் சுதந்திரமாக உண்மைகளை நாடி இடைவிடாத ஆராய்ச்சியின் மூலம் பல புதிய கண்டுபிடிப்புகளின் உதவியோடு முன்னேறி வருகின்றன. தந்தை பெரியார் மக்களின் முதல் பேராசிரியராக நமக்குக் கிடைத்தார். ஆனால் அவருக்குதான் மக்கள் பெரிய கவலையைப் பரிசாகத் தந்தனர். அவர் நாடு முன்னேற, மக்கள் பெரிய கவலையைப் பரிசாகத் தந்தனர். அவர் நாடு முன்னேற, மக்கள் முன்னேற எவ்வளவு கடுமையாக உழைத் தும், அவர் விரும்பிய அளவிற்கும் எதிர்பார்த்த அளவிற்கும் மக்கள் தெளிவு பெற்று அறிவாளிகளாக முன்னேற வில்லையே என்பது தான் பெரியாருக்கு மக்கள் அளித்த பரிசும் கவலையும்.

## தொண்டுக்குத் தோள் கொடுத்தார்

பெரியார் எடுத்துக் கொண்ட பணி சமுதாயத்தை மாற்றி அமைக்கும் பணியாகும். அதனை அரசு மட்டுமே சட்டத்தின் மூலம் செய்திட முடியாது. அதுவும் ஜனநாயக அடிப்படையில் இயங்கிடும் அளவுக்கு மிகவும் கடினம். எனவே, மக்கள் தான் மக்களைத் திருத்திச் சமுதாயத்தை மாற்றி அமைக்கும் நற்பணியில் தீவிரமாக ஈடுபாடு கொண்டு, நமது நாட்டையும் மேலை நாடுகளுக்கு ஈடு இணையாகச் செய்திட வேண்டும். பெரியாருக்கு அடுத்து அவரது இயக்கத்திற்கு கான்கிரிட் தூண் போன்று விளங்கிய பலர் இன்று இல்லை.

சிலர் பெரியாரின் கருத்துக்களுக்கே திரிபுவாதம் செய்ய தலைப் பட்டு விட்டனர். அரசும் படிப்படியாகப் பிற்போக்குச் சக்திகளிடம் மாறிக்கொண்டு வருகிறது. அரசியல் கட்சிகளும் அதன் தலைவர் களும், இல்லாத ஊருக்குப் போகாத பாதையில் நடைபோடும் நிலையிலேயே இருக்கின்றனர்.

இந்த நிலையில் நம்மிடையே தந்தை பெரியார் ஒருவர் மட்டுமாவது இல்லாது போனது மிகவும் வேதனைக்குரியதாகும். எண்ணிப் பார்த்தால் கவலை ஏற்படுகிறது. என்ன ஆகுமோ, எது நடக்குமோ என்று அஞ்ச வேண்டிருக்கிறது. அவர் விட்டுச் சென்ற கொள்கைகள் தாம் பெரியாரின் உண்மையான வாரிசுகளாக, நமக்கெல்லாம் ஆறுதலளித்து, அழியாச் செல்வங்களாக உள்ளன.



சமுதாயத்தில் சடங்குகள் குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறையவே இல்லை. பெயர் சூட்டுவது. காது குத்துவது, பூணூல் அணுவிப்பது, மொட்டை அடிப்பது, ருதுசாந்தி, நிச்சயதாம்பூலம், விவாகம், வளை காப்பு, திதி, பேய் ஓட்டுதல், பிசாசு ஓட்டுதல், ராகு காலம், எமகண்டம், ஜாதகம் என்று மூடநம்பிக்கைகளில் மூழ்கியுள்ள மக்களின் நிலையை மாற்றிட வேண்டும். சமுதாயத்தை முன்னேற விடாதபடி கோயில்கள், பூசைகள், பண்டிகைகள், புராணங்கள், சாதிகள், தீண்டாமைக் கொடுமை, புரோகிதம், மாந்தரீகம் போன்ற கெட்ட சூழல்களை அழித்தொழிக்க வேண்டும்.

## இன மேம்பாடே மக்களுயர்வு

மக்களின் மனத்தைக் கவர்ந்து இனத்தின் ஒற்றுமையைப் பேணிக் காக்கக் கூடிய மக்கள் தலைவர் யாரும் தென்படவில்லை. அதுவும் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் பிரச்சினைகள் நாடக் கூடியவர் களைத் தேடிக் கண்டுபிடிப்பதே கடினமாகிவிட்டது. குட்டித் தலைவர்கள், விளக்கெண்ணெய்த் தலைவர்கள் தான் புதிது புதிதாகத் தோன்றி வருகின்றனர். இந்தி ஆதிக்கம், உயர்ந்த சாதியினர் சுரண்டலை வேடிக்கை பார்க்கும் நிலையில்தான் சமுதாயம் அழைத்துச் செல்ல பட்டு வருகிறது. மக்களால், மக்களுக் காக நடத்தப்பட்டு வந்த சுதந்திர ஆட்சியில் கோடிக்கணக்கானவர் களுக்குக் கல்வியில்லாமலும், வேலையில்லாமலும், வருமானம் இல்லாமலும் உண்ண உணவு உடுக்க உடை, படுக்க இடமில்லா மலும், அவதியுறும் நிலையே நீடித்திருக்கிறது.

கோயில்கள் பெருகி வருகின்றன. குடும்பங்கள் நிம்மதி பெற வில்லை. சாமிகளுக்கு ஆறுகால பூஜைகள் தவறுவதில்லை. பாடு படும் மக்களுக்கு ஒருவேளை சோறில்லை. ஆலயங்களில் பாலா பிஷேகம் குறையவில்லை. பச்சிளம் குழந்தைகளுக்குப் பால் இல்லை. கோபுரங்கள் புதுப்பிக்கப்பட்டுக் கும்பாபிசேகங்கள் நடத்துவது குறையவில்லை. ஏழையின் குடிசைகள் புதுப்பிக்க நாதியில்லை. சாமிகளின் வாகனங்கள் வெள்ளியாலும், தங்கத் தாலும் புதிது புதிதாகச் செய்து வைக்கப்படுகின்றன. வெள்ளையன் காலத்தில் 15 ரூபாய்க்கு விற்ற தங்கம் இன்று 1000 ரூபாய்க்கு உயர்ந்து விட்டது. பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகி வருகின்றனர். நாட்டை காக்க வேண்டிய ஆட்சியாளர்கள் இலஞ்சம் போன்ற தவறுகள் செய்து புதுப் பணக்காரர்களாகி வருகின்றனர். நிலையான நல்ல அரசு

இனி எங்கே ஏற்படப் போகிறது என்று நல்லவர்கள் எல்லாம் ஏக்கம் கொண்டுள்ளனர்.

தனக்குத் தனிப்பட்ட பதவி ஆசை இல்லை என்றாலும், இப்படிப் பட்ட அரசியல் விபத்துக்கள் ஏற்பட்ட போதெல்லாம், பெரியார் அவதார புருடனாகப் பாதுகாத்து ஜனநாயகம் தழைக்கவும், நிலையான அரசு ஏற்படவும் பெரியார் சுதந்திர இந்தியாவில் பாடு பட்டார் என்பது தென்னக வரலாறு அறிந்த அரசியல் முதியவர்கள் அறிவார்கள்.

அந்தப் பெரியாரை இழந்து தவிக்கிறது தென்னகம். பெரியார், தமிழர் தலைவர், திராவிடத் தலைவர், தென்னாட்டுத் தலைவர், சுயமரியாதைத் தலைவர் என்றெல்லாம் அழைக்கப்பட்டார். குருடர்கள் யானையை வருணித்த கதை போன்றதே இந்தப் பெயர்கள்.

உண்மையில் ஓர் நூற்றாண்டின் ஒப்பற்ற பகுத்தறிவு ஆசான். தன்மான வீரன், அறிவுப்புரட்சியாளன், பொதுவுடைமைக் காவலன், சோசலிச சீராளன், சமுதாயத்தில் அடிமைப்படுத்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, பின் தள்ளப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கீழ்சாதி மக்களின் ஒரே தலைவன் ஒருவன் உண்டென்றால் அவர் பெரியார்தான்.



## சிந்தனைப் புரட்சியின் செம்மல்

கருத்துப் புரட்சி, எண்ணப் புரட்சி, சிந்தனைப் புரட்சியைத் தம் வாழ்நாளிலேயே ஊக்குவித்து விரும்பிய நல்ல மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் உண்டாக்கித்தான் அயராத முயற்சிகளுக்கு வெற்றியைக் கண்டு. பெருவாரியான மக்கள் ஆதரவைப் பெற்று, அரசைத் தம்முடைய சீடர்கள் கைப்பற்றி தொடர்ந்து பகுத்தறிவுப் பாதையைச் செப்பனிட்டு மகிழ்ந்த ஒரே தலைவர் தந்தை பெரியார் தான்.

பிரான்சு நாட்டில் வோல்டேலர் பகுத்தறிவு பிரச்சாரம் செய்தார். ஆனால் பகுத்தறிவாளர் ஆட்சியை கைப்பற்ற முடியவில்லை.

சார்லஸ் பிராட்லா, இங்கிலாந்து நாட்டில் பகுத்தறிவு புரட்சிக்கு வித்திட்டார்; அறிவாளிகளின் ஆதரவை மட்டுமே அவரால் பெற முடிந்தது.

ஜெரிமிபென்தாம் எனும் நாத்திகவாதி இங்கிலாந்து நாட்டில் பல சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பினார். இருப்பினும் ஆட்சியைக் கைப்பற்றிட முடியவில்லை.

புகழ்பெற்ற பகுத்தறிவாளர் பெட்ரண்ட் ரசல் இங்கிலாந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார்.

அமெரிக்க நாட்டில் பகுத்தறிவு புரட்சிக்கு வழிகோலிய ராபர்ட் இங்கர்சால், லேனாஸ் மாநிலத்தின் ஆளுநர் தேர்தலில் போட்டி யிட்டுத் தோல்வி கண்டார்.

ஆனால், அவர்களுக்கு மாறுபட்டவர் தந்தை பெரியார். தம் வாழ்நாளில் அவர் விரும்பியிருந்தால் எந்தப் பதவியையும் அடைந் திருக்க முடியும். அவருக்கோ பதவிமீது ஆசை ஏற்பட வில்லை. தாம் விரும்பியவர்கள் பதவியை எளிதில் பெற்றனர்.

அரசியல்வாதிகள் ஊழலுக்கு அடிமை என்பது அவரது கருத்து. வாக்குகளைக் கணிசமாகப் பெற்று வெற்றி வாகை சூடுபவர்கள் கொள்கைகளை ஆணித்தரமாக எடுத்துப் பேச இயலாது என்று பெரியார் தெளிவாகக் கூறிவந்தார். ஜனநாயக வழிமுறையில் நாத்திகவாதிகள் ஆட்சிக்கு வந்த அதிசயம் தமிழ்நாட்டில் மட்டுமே நிகழ்ந்தது. பொதுவாக அரசியல்வாதிகளைப் பற்றிப் பெரியார்

மிகக் கடுமையாக விமர்சித்து வந்திருக்கிறார். சுயநல வாதிகள் - ஊழல் பேர்வழிகள் - எதையும் செய்யத் துணிபவர்கள் - காலிப்பயல்கள் - சுரண்டல்காரர்கள் - பொறுக்கித் தின்பவர்கள் - தஞ்சாவூர் பொம்மைகள் - தன்மானமிழக்கத் தயாரானவர்கள் - சுகபோகத்தை நாடுபவர்கள் - ஏமாற்றுப் பேர்வழிகள் - ஒழுக்க மற்றவர்கள் - அயோக்கியர்கள் - ஊரை அடித்து உலையில் போடு பவர்கள் இப்படி எத்தனையோ அர்ச்சனைகளைச் செய்தார். பெரியார் கூறியவை உண்மை என்பதால் எவரும் சீறிப் பாய வில்லை. அரசியல்வாதிகள் வாய்மூடி மௌனமாக மட்டும் இருக்கவில்லை. எப்படியும் பெரியாரின் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று துடித்தனர். பெரியாரின் ஆதரவு இல்லாமல் நாட்டில் அரசியல் நடத்த முடியாது என்பதை மனதார அனைத்துக் கட்சிகளும் தமிழ் நாட்டில் உணர்ந்து செயல்பட்டன.

இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் வரலாறு தெளிவாகப் புலப்படுத்துவது, அவரது ஆதரவைப் பெறாத கட்சிகள் தமிழகத்தி லேதும் நிலைத்ததில்லை என்பதே நாட்டின் உண்மையான வரலாறு. சாதாரண காலத்தில் தந்தை பெரியாரின் கொள்கைகளை ஏற்காதவர்கள் எதிர்த்தவர்கள், புறக்கணித்தவர்கள், அலட்சியப் படுத்தியவர்கள் இப்படிப்பட்டவர்கள் கூடத் தேர்தல் சமயத்தில் பெரியாரின் ஆதரவை நாடவும், அவரை அழைத்துக் கூட்டம் போடவும் அவருக்குத் தற்காலிக மதிப்பளிக்கவும் செய்தனர் என்பது தமிழ்நாட்டின் வரலாறு அறிந்தோர் உணர்வார்கள்.

## தமிழினத் தந்தை

பெற்ற பிள்ளையேகூட, ‘உன்னை அப்பா என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுகிறான்’ என்று கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். பெற்று வளர்த்த மகள் கூட, ‘சரியாக சீர்வரிசை செய்யவில்லை என்றால், யார் எனக்கு அப்பா? அப்பாவாக இருந்தால் இப்படியா செய்வார்?’ என்று விரோதம் பாராட்டிப் பேசும் நிலையை நாம் கண்டு இருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட அண்ணல் காந்தியாரைக்கூட தேசப்பிதா என்று ஏற்காதவர்கள் உண்டு. காந்தியை எதிர்த்தவர்கள் விரோதம் பாராட்டியவர்கள், வெறுத்தவர்கள், எதிரியாக நினைத்தவர் களையும் நாம் கண்டு இருக்கிறோம். வெள்ளையன் நாடாண்ட



காலம் முழுவதும் காந்தியாரின் உயிர்க்குப் பாதுகாப்பிருந்தது. ஆனால் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் ஓராண்டு காலத்தில் காந்தி யார் கொல்லப்பட்டார். அதுவும் ஒரு இந்தியனால் துப்பாக்கியால் சுடப்பட்டுச் சாக நேர்ந்தது. இந்தியா ஒரே நாடு, எல்லோரும் இந்தியர்கள், எல்லோரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று போதனை செய்த காந்தியார் அதே இந்தியாவில் ஒரு இந்தியனால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது வரலாறு. இன்னும் மறைந்த பின்னரும் அவர் வளர்த்தவர்களே கூட அவரை மறந்து விட்டனர். காந்திதான் தேசப்பிதா என்று பாடநூல்களில் அச்சடிக்கப்பட்டு, பரீட்சையில் அதிக மதிப்பெண் பெற்றுத் தேர்வுபெற நினைக்கும் மாணவர்களுக்கு மட்டுமே அவர் தேசத்தின் தந்தை என்பது படித்து தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனால், பெரியாரின் நிலை அப்படி இல்லை! அவர் காந்தி யாரைப் போல பல இனம், பல மொழி; பல வகுப்புகள் கொண்ட இந்தியத் துணைக்கண்டத்திற்குப் பாடுபடவில்லை. தம் இனம் திராவிட இனம், தம் நாடு திராவிடம், தம் மக்கள் திராவிடர் என்பதைத் தெளிவாக உணர்ந்து தம்முடைய பிற்காலத்தில் வாழ்ந்து தொண்டாற்றியதன் காரணமாக அவர் திராவிடத்தந்தை என்றும் பெரியார் என்றும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டார். கடைசி மூச்சு உள்ளவரை நாட்டு மக்களுக்காகப் பாடுபட்டுத் தொண்டாற்றும் நிலையிலேயே அவர் உயிர் பிரிந்தது. அவரது நூற்றாண்டு விழா நினைவாக டில்லி அரசாங்கமே நினைவு அஞ்சல் தலை வெளியிட்டது. தமிழக அரசாங்கம் வெகு விமரிசையாக அவரது நூற்றாண்டு விழாவினை மாவட்டம் தோறும் ஓராண்டு காலம் நடத்தியது. பல இடங்களில் தந்தை பெரியாருக்கு சிலை வைக்கப்பட்டது. பார்ப்பன ஏடுகள் கூட நல்ல முறையில் விளம்பரம் செய்து அவர்களுக்குப் பிடித்தமான கருத்துகளை வெளியிட்டுள்ளன.

## இமாலயப் பெருமை

தந்தை பெரியாரின் மகத்தான சாதனைகளை நினைவு கூர்ந்து ஆந்திரம், கர்நாடகம், பம்பாய், டில்லி, இலங்கை, மலேசியா, துபாய் போன்று பல்வேறு இடங்களில் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. ஆசிரியர்கள், பிரபல டாக்டர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், தொழிலாளர்த் தலைவர்கள், பொறியாளர்,

நீதிபதிகள், அனைத்துக் கட்சித் தலைவர்கள் தந்தை பெரியாரின் சிறப்புகளையும், தொண்டையும் உரிய முறையில் புகழ்ந்துள்ளனர்.

யார் பெரியார் - யார் தந்தை ஒன்று எவரும் கேட்டாரில்லை. இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த தலைவருக்கும் இப்படிப் பட்ட மதிப்பும், மரியாதையும் காட்டப்பட்டதில்லை என்றே கூறலாம். இது தமிழகத்திற்கு வாய்ந்த பெரிய இமாலயப் பெருமையல்லவா? இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று ஆராய்வது அறிவு டைமையாகும். தந்தை பெரியார் மேற்கொண்ட பணியும் பொறுப்பும் வேறு எவரும் ஏற்கத் துணியாதது. அதனை அவரே வெளிப்படுத்தியிருக்கிறார்.

> 'ஈ.வே. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். அந்த தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ, இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணிசெய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்'.

> 'இதைத் தவிர வேறு பற்று எனக்கு இல்லாததாலும், பகுத்தறிவையே, அடிப்படையாகக் கொண்டு, கொள்கை களையும், திட்டங்களையும், வகுப்பதாலும், நான் அத் தொண்டுக்குத் தகுதியுடையவன் என்றே கருதுகிறேன். சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன்'.

மேற்கூறிய வாசகங்கள் தந்தை பெரியாரின் தனித்தன்மையையும் துணிவையும், தயாள உணர்வையும் எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

மக்களை மானத்தோடு வாழ வைக்கவும், மக்களை அறிவுப் பாதையில் அழைத்துச் செல்லவும், பிறர் பின்தங்கியதாலும், துணியாத காரணத்தினாலும், அந்தப் பொறுப்பைத் தானே ஏற்றார் என்பதை அவருடைய வாசகத்திலிருந்து தெளிவாகப் புரிந்துக் கொள்ளலாம்.



## சமுதாயக் கட்டுமானத்தின் புத்தமைப்பு

பெரியாரின் தொண்டு வியப்புக்குரியதாகும். சுமார் 50 ஆண்டு காலமாகவே பார்ப்பன மேல் ஜாதி மக்கள் என்பவர்கள் - சட்டப் படி-சாஸ்த்திரத்தின்படி, மதத்தின்படி என்று தாங்கள் அடைந் திருக்கும் வசதியையும், உயர்நிலையையும் பார்ப்பனரல்லாத, கீழ் மக்கள் நலனுக்கு கேடாகப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பயன் படுத்தும் கொடுமையை ஒழிக்க வேண்டுமென்று முனைவது, அதில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பல துறைகளில் அவரது வாழ் நாளிலேயே கண்டவர் தந்தை பெரியார். இறுதிக் காலத்தில் அதுவே அவரது பிரதானமான ஒரே தொண்டாகவும் அமைந்தது. எங்கும் எதிலும் அவாள் ஆதிக்கம் என்று இருந்த நிலையில் அவரது பணி வாங்கி, எங்கும் எதிலும், எல்லோருக்கும் சம அந்தஸ்து சமநிலை, சமநீதி நிலவும் முற்போக்கு பாதையை அமைத்தவர் பெரியார்.

பார்ப்பனர்தாம் ஆளத்தகுதியுடையவர்கள். பார்ப்பனர்தாம் அதிகாரம் செலுத்த வேண்டியவர்கள். பார்ப்பனர்களுக்குத்தான் நிர்வாகத் திறமை உண்டு - என்று கருதப்பட்ட காலம் மாறி விட்டது. பார்ப்பனரல்லாதார் 100க்கு 97 பேர்களாக இருந்தும், பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதவரின் வாக்குகளை எப்படியோ பெற்றுப் பெரிய பதவிகளில் தொடர்ந்து அட்டைகளைப் போல ஒட்டிக் கொண்டிருக்க இன்றியலாது. பெரியாரின் நெருங்கிய நண்பராக விளங்கிய இராஜகோபாலாச்சாரியாருக்குப் பிறகு இனியும் ஒரு பார்ப்பனர் தமிழ்நாட்டை ஆளமுடியும் என்கிற நம்பிக்கை கொள்வது முட்டாள்தனமாகும். கடந்த பல்வேறு அமைச்சர் அவைகளில் ஏதாவது ஒரு பார்ப்பனர் இடம் பெற்றே தீர வேண்டிய நிலையும் முதல்வர் பக்தவச்சலத்திற்குப் பிறகு தமிழகத்தில் மாறிவிட்டது. இன்று நேரடியாகப் போட்டியிட்டு மக்களின் ஆதரவைப்பெற்று சட்டமன்றத்தில் நுழைவது கூட மிகவும் கடினமான காரியமாகும்.

திராவிட இயக்கத்தில் விரும்பத்தகாத பல பிளவுகள் ஏற்பட்டி ருப்பினும், மேலும் பல பிளவுகள் ஏற்பட்டிருப்பினும், அது பார்ப்பனர்களுக்குச் சாதகமாக அமையவில்லை என்பது சமீப காலத்திய தமிழக அரசியல் புலப்படுத்துகிறது. இனி அவர்கள் கூற்றுப்படியே ஆட்சிகள் மாறினாலும், ஆட்கள் மாறினாலும், செங்கோல் மட்டும் வெள்ளை இனத்தவரிடமே இருந்துவரும்

என்பது உறுதி. சூத்திரர்கள்தான் இனி ஆளபிறந்தவர்கள் என்கிற புதிய அந்தஸ்தை உருவாக்கிய பெருமை தந்தை பெரியாரை நிச்சயம் சேரும். பார்ப்பன ஆட்சி நடந்து முடிந்து விட்ட கதை - தமிழகத்தைப் பொருத்தவரை பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்திய நேரத்தில் பார்ப்பனரல்லாதவருக்கு இழைத்ததுபோல, இன்று பார்ப்பனரல்லாதவர் ஆட்சிக் காலத்தில் பார்ப்பனர்களுக்குக் கேடோ அநீதியோ, இழைக்கப்பட்டதுமில்லை. இழைக்கப்படவும் மாட்டாது. நீதிக்கட்சி வழிவந்தவர்களின் காலத்தில் அநீதிக்கே இடமில்லை. அறிஞர் அண்ணாவின் கடைசி தம்பி இருக்கும்வரை சமநீதி தழைத்தோங்கும். பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் பெரும்படை முட்டாள்தனமாக எதையும் செய்து எவரையும் வஞ்சிக்கவோ, பழிதீர்க்கவோ முற்படாது.

இதில் கவனிக்க வேண்டிய மற்றொரு உண்மை என்னவென்றால் மறைந்த காந்தியார் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுபட்ட சமூகமாக வாழவேண்டும் என்று எவ்வளவோ பாடுபட்டார். ஆனால் ஏற்பட்ட கிளர்ச்சிகளில் பலர் ரத்தம் சிந்தவும், உயிரை இழக்கவும், வாழ்வைப் பறிகொடுக்கவுமே நேர்ந்துவிட்டது. ஆனால், தென்னாட்டில் 100க்கு 3 பேராக உள்ள பார்ப்பனர்களுக்கு இன்று வரை எந்தவிதமான தொல்லையும், சங்கடமும், நஷ்டமும் ஏற்பட்டதில்லை. பெரியாரின் பல்வேறு சிறப்புகளில் குறிப்பிட தக்கது இதுவும் ஒன்றாகும். தென்னாட்டில் கருத்து மோதல்கள் தான் காணப்பட்டு வருகின்றன. கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு என்ற ரத்தம் சிந்தாதச் சந்தடியில்லாத அறிவுப் புரட்சியைத் தலைவர்கள் உருவாக்கி வந்துள்ளனர். சாக்ரெட்டீசுக்கு அடுத்த ஓர் அறிவுப்படை தமிழ் நாட்டில்தான் உண்டாயிற்று.

தந்தை பெரியாரின் சீடர்கள் எதையும் பக்குவமாகச் செய்திடப் பழக்கப்பட்டவர்கள். படித்துப் பட்டம் பெற்றும், கொள்கை பரப்ப நாடகம் தீட்டி, நாடகமும் ஆடிய பேரறிஞர் அண்ணாவிலிருந்து, பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்காகவே நாடகங்களை நடத்திய நடிகவேள் எம்.ஆர்.இராதா வரை மக்களைக் கப்பிக் கொண்ட ஆரியமாயையை அகற்றுவதில் கையாண்ட கலைத்தொண்டின் சிறப்பு நாடறிந்தது. ஒரு பார்ப்பனருக்குக்கூடத் தமிழகத்தில் தீங்கு நேரிட இயக்கம் காரணமாக இருந்ததில்லை. அதனால்தான் நல்ல பார்ப்பனர்கள், படித்த அறிவாளிகள் கூட நியாயத்தை ஒப்புக் கொண்டு, சில நேரங்களில் மனம் திறந்து பெரியாரைப் பாராட்டவு



மான நிலை தமிழகத்தில் ஏற்பட்டது.

> இந்த இயக்கம் எந்தத் தனிப்பட்ட மனிதனும் வீரனாவதற்கு ஏற்பட்டதல்ல; அப்படிப்பட்ட புகழை விரும்பவில்லை. எனக்கு புகழ்வேண்டியதில்லை. புகழ் பெறுவதற்கு எவ்வளவு அயோக்கிய தனம் செய்ய வேண்டும் என்பதும் நான் நன்றாகவே அறிவேன். (குடிஅரசு 29.3.36)

## ஆத்திகத்தின் வன்முறையும், நாத்திகத்தின் இன்முறையும்

தந்தை பெரியாரின் நோக்கம் நிறைவேற அவர் வன்முறையைச் சிறிதும் விரும்பியதில்லை என்பது இதிலிருந்து நன்றாகப் புலப்படும். தம்முடைய கொள்கைகளைத் தீவரமாகப் பரப்புவதற்குத் திராவிடர் கழகத்தின் காலத்தில் தந்தை பெரியார் கறுப்புச் சட்டை படையை நிறுவினார். அதன் மாநாடு மதுரையில் நடைபெற்றது. அப்போது காந்தியாரின் வாரிசாக மதிக்கப்பட்ட திருவாளர் வைத்தியநாத (அய்யர்) திட்டமிட்டுக் காலித்தனமும், கறுப்புஉடை அணிந்தவர் களை இழிவுபடுத்தும் பணியிலும் ஈடுபட்டுப் பல அடாத செயல் களைத் தூண்டிவிட்டார்.

கறுப்புசட்டை மாநாட்டிற்காக அமைக்கப்பட்ட பெரிய பந்தலுக்குக் காலிகள் தீயிட முற்பட்டு வெற்றிக் கண்டனர். அரசின் ஆதரவு இருந்தால் எதையும் காந்தி சீடர்கள் செய்யத் துணிவார்கள் என்பதற்கு இந்த மாநாடு ஒரு எடுத்துக்காட்டு. இலட்சக்கணக்கில் கூடியிருந்த கருப்புச்சட்டை வீரர்களை அமைதிப்படுத்தி, எதிரி களில் ஒரு சிறுபையனுக்கும் எந்தவித தொல்லையும் தராது மாநாட்டினைப் பாதியிலேயே முடித்து ஒரே இனத்தவர்கள் தங்களுக்குள் மோதிக் கொள்ளும் சூழலைத் தடுத்து உருப்படியான நல்ல பாதையில் இயக்கத்தை நடத்திச் சென்றவர் தந்தை பெரியார்.

1949-ல் தி.க.விலிருந்து பிரிந்துவந்த தி.மு.க. வினருக்கு எதையும் தாங்கும் இதயம் வேண்டும் தம்பி என்றுதான் அண்ணா அவர்கள் அறிவுறுத்தினார்கள். அடிக்கு அடி; இரத்தத்திற்கு ரத்தம் என்ற சித்தாந்தம் அறியாதவர்கள் பெரியாரின் தொண்டர்கள். ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தைக் காட்டு என்று போதனை செய்வது எளிது. ஆனால் அதனை நடைமுறையில் கடை பிடிப்பது மிகமிகக் கடினம். ஆரம்ப காலத்தில் பெரியாருக்கு ஆத்திகர்களும், செல்வந்தர்களும், அரசியல்வாதிகளும், சிற்றரசர் களும் அளித்த தொல்லைகள் ஏராளம். அழுகியமுட்டை, சாணம்,

சோடா புட்டிகள், செருப்புகள் மேடையை நோக்கி வீசப்பட்டன. 'இதுதானா, இன்னும் என்ன செய்யப் போகிறீர்கள். உங்கள் கைவரிசை முழுவதும் காட்டிவிடுங்கள்' என்று வன்முறையற்ற அறவழியில் இயக்கத்தை வளர்த்தபெருமை பெரியாருக்கு உண்டு.

வெள்ளையரை எதிர்த்துக் காந்தியார் தலைமையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன; தாபாலாபீசுகள் கொளுத்தபட்டன. தண்டவாளங்கள் பெயர்த் தெறியப்பட்டன. திராவகம் வீசப்பட்டதும் உண்டு. இந்த வன் முறையை காந்தியார் கண்டித்த போதிலும், காந்தியச் சீடர்கள் திருந்த வில்லை என்பதால் நாடு விடுதலை பெற்று 30 ஆண்டுகள் கடந்தும் கதர் அணிந்தவர்கள் கலாட்டா பேர்வழிகளாகி, காலி தனத்தில் கைதேர்ந்தவர்களாகி விதவிதமான நாசவேலைகளைப் புரிவதை நாடு கண்டு வருகிறது. வாதங்களை அடுக்கடுக்காக வைத்து, 'கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை, கடவுளை நம்புகிறவன் முட்டாள்' என்று பெரியார் பேசினாரே தவிர எந்தக் கோயிலையும் இடிக்கவில்லை. எந்தக் கடவுளுக்கும் தொல்லை தரவில்லை எந்த ஆத்திகவாதிக்கும் சிறுகாயத்தைக் கூட உண்டாக்கத் தந்தை பெரியார் காரணமாக இருக்கவில்லை. காந்தியார் நல்லதையே பேசினாலும், நாட்டு மக்களைப் பக்குவப்படுத்தவில்லை. தந்தை பெரியாரோ எதைப் பேசினாலும், எதை எழுதினாலும் மூட நம்பிக்கையில் ஊறிப்போன சமுதாயத்தைப் படிப்படியாகப் பக்குவப்படுத்தி, முறையாகத் திருத்தி, நல்லதோர் சமுதாயத்தைப் படைக்க காரணமாக இருந்தார்.

எதையும் துணிந்து பேசுவதிலும், தீவிரமாகப் பேசுவதிலும் தந்தைப் பெரியாருக்கு நிகர் அவரேயாவார்.

> 'நாம் யாரையும் வையவில்லை. இழிவுப் படுத்த வில்லை. நம்ம முட்டாள்தனங்களையும், ஏமாளித்தனங்களையும் நினைப் பூட்டுகிறோம். எப்படி எப்படி நாம் ஏமாறுகிறோம், என்றும் எதெதில் நமக்குப் பகுத்தறிவைப் பயன்படுத்துவ தில்லை என்றும் எடுத்துக் காட்டுகிறோம். இதனால் ஏமாற்று கிறவர்களுக்குச் சங்கட மேற்படலாம். அது பரிதாபப் படத்தக்க நிலை'. (குடிஅரசு 27.11.43)

மேற்கண்ட பெரியாரின் எழுத்துகளை நன்கு ஆராய்ந்தால் அவர் தம் இன மக்களைத் தட்டி எழுப்புவதில்தான் பிரதான நோக்கமாகக்



கொண்டார் என்பதும் எதிரிகளைக் கடுகளவும் தாக்கிக் குறைக்கூற வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பதும் தெளிவாகப் புலப்படும்.

தந்தை பெரியார் தாமாக நாத்திகர் ஆகவில்லை. அவரைப் பிறர்தாம் நாத்திகர் ஆக்கினார்கள். அவர் ஆரம்ப காலத்தில் ஆத்திகர்களுக்கு ஆதரவாகவே விளங்கினார் அதையும் அவரே எழுதியிருக்கிறார்.

> 'நாங்கள் நாத்திகக் குடும்பக்காரர்கள் அல்லர். எங்கள் குடும்பம் மிகமிக வைதீகக் குடும்பம். இந்த ஊர்க் கோவில்கள் மிகவும் சிதைந்து இருக்கிறது என்றும், 15 நாளில் இடித்துவிட வேண்டும் என்றும் என்ஜீனியர் ரிப்போர்ட்டின் மீது, தாசில் தார், கோயில் கமிட்டி மெம்பர்களுக்கும், தர்மகர்த்தாக் களுக்கும் நோட்டீசு அனுப்பியவுடன் அவர்கள் அதைக் கொண்டு வந்து, என் தகப்பனாருக்குக் காட்டிய உடன், அவர் பதறி அந்தத் திருப்பணியைச் செய்து கும்பாபிசேகம் செய்தவர். அதை இன்றும் அந்தக் கோயில் கல்வெட்டுகளில் காணலாம்'.
>
> 'நான் சுமார் 25 வருஷ காலம், அந்தக் கமிட்டி மெம்பராகவும், காரியதரிசியாகவும், கமிட்டித் தலைவராகவும், இருந்து இந்தத் தாலுக்காவில் உள்ள கோயில்களில் சுமார் 20, 25 கோயில்களைக் கமிட்டிப் பொருளைக் கொண்டும், வசூலைக் கொண்டும், புதுப்பித்துச் சீர்மை செய்திருக்கிறேன். கடைசி யாக நான் ராஜினாமா செய்ததற்குக் காரணம், கோயிலுக்குள் ஆதித்திராவிடரை விடத் தீர்மானம் செய்து அந்தப்படி சில ஆதித்திராவிடர்கள் உள்நுழைந்ததைச் சர்க்கார் கேசு எடுத்து அவர்களைத் தண்டித்ததால் என் தீர்மானத்திற்கு மதிப்பில்லா மல் போய்விட்டதே என்று ராஜினாமா செய்தேன். நான் ராஜினாமா செய்யும்போது சுமார் 50,000 ரூபாய் கமிட்டியில் மீதி வைத்துவிட்டு வந்தேன்'.
>
> 'ஆகவே, நாங்கள் கோயில்களை இடித்துக் கொண்டி ருந்தவர்கள் இல்லை'.
>
> 'மற்றும் ஈரோட்டிற்குப், பாகவதரோ, பரதேசியோ, கவிராயரோ, புராணப் பிரசங்கியோ யார் வந்தாலும் எங்கள் வீடு அவர்களுக்குச் சொந்தவீடாக இருந்தது. எங்கள் சத்திரச் சாப்பாடு அவர்களுக்கு எத்தனை நாளைக்கு இருந்தாலும்

கிடைக்கும். இதை சர்க்காரே பாராட்டி 1912-ஆம் வருடம் சக்கரவர்த்தி பட்டாபிஷேகத்தின் போது ஒரு சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். அதில் நாங்கள் செய்த பொது தர்மத்திற்காகக் கொடுக்கப்பட்டது'

என்று எழுதியிருக்கிறார்கள்.

மிகமிக வைதீகக் குடும்பத்தில் பிறந்தவர் தந்தை பெரியார்.

20, 25 கோயில்களைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்தவர்.

கோயில் திருப்பணிக்காக நிதி வசூலித்து முறையாகச் செலவு செய்து, ரூபாய் 50,000 இருப்பு வைத்துவிட்டு வைதீகத்தை வெறுத்து, பக்தி மார்க்கத்தைக் கைவிட்டு, நாத்திகப் பாதையில் துரத்தப்பட்டவர் பெரியார்.

## தன்மான உணர்ச்சியின் தருக்கம்

எல்லோரையும் படைத்தவன் ஆண்டவன், அனைவரையும் காப்பவன் ஆண்டவன் - கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க லாகாது - என்றெல்லாம் உபதேசம் செய்திடும் ஆத்திகர்கள் பக்திமான்கள் ஆதித் திராவிடர்களை உள்ளே வரக்கூடாது என்று தடுத்ததாலும், அன்றைய வெள்ளையர்களிடம் பார்ப்பனர் கொண்டிருந்த செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு வழக்குகளைத் தொடர்ந்து, ஆதித்திராவிடர்களை அச்சுறுத்தும் வகையில் தண்டனைகள் வழங்கியதாலும் ஏற்பட்ட விளைவே தந்தை பெரியார் நாத்திகராக நேர்ந்தது.

பணம் வசூலிப்பவர் பார்ப்பனரல்லாதார்; பணம் தருபவர் பார்ப்பனரல்லாதார்; கோயில் கட்டுபவர் பார்ப்பனரல்லாதார். ஆனால் கோயிலுக்குள் இருக்கும் ஆண்டவனை ஆட்டிப் படைப்பவர்கள் மட்டும் பார்ப்பனர். இது என்ன நீதி?

குட்டிச் சுவராய்க் கிடந்த கோயில்களைப் புதுப்பித்தவர்கள், அதன் உள்ளே நுழையக்கூடாது என்றால் அது என்ன தருமம்?

மாடு நுழைய அனுமதி உண்டு - ஆனால், மனிதன் நுழையக் கூடாது என்பது கொடுமை அல்லவா?

ஆதித்திராவிடர்கள் ஆண்டவனின் படைப்பல்லவா? அவர்களைத் தீண்டத்தகாதவர்கள் என்றால் ஒரு சிலரின் திமிர்த் தனம் தானே.



பிரம்மாவின் நாக்கில் பிறந்ததாகக் கூறுவதாலேயே அவர்கள் பிரம்மாவின் காலில் பிறந்தவர்களைக் கேவலப்படுத்துவது முறையா?

இதை எல்லாம் எண்ணிப் பார்த்து, கோயில் வேண்டாம், கடவுள் இல்லை - இல்லவே இல்லை என்று பெரியாரை முழக்கமிட வைத்தவர்கள் ஆத்திகர்கள்தான். இன்று நாட்டில் நாத்திகவாதம் வெற்றி முழக்கமிட பெரியார் பாடுபட்டதில் என்ன தவறு? ஆத்திகப் பெரியார், நாத்திகத் தலைவராகத் திகழச் செய்தது யார் செயல்?

## சரிநிகர் சமான வாழ்வின் வேட்கை

பெரியாரைப் பார்ப்பனர்களின் எதிரி என்பது தவறு. அவர் பார்ப்பனர்களுக்கு எதிரியல்லர்; பார்ப்பனருக்குப் புத்தி புகட்டியவர், எல்லோரும் திருந்தி, எல்லோரும் இன்புற்றுச் சமமாக வாழ வேண்டும் என்ற பரந்த மனப்பான்மை கொண்டவர் பெரியார். திராவிடர்களுக்காகப் பாடுபடவில்லை. அப்படிச் செய்திருந்தால் அவரைச் சுயநலவாதி என்றும் கூறலாம். ஆனால், அவர் பகுத்தறிவு வாதியாக நல்ல மனிதராக வாழ்ந்ததினால்தான் எல்லோராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய நிலையில் 20ஆம் நூற்றாண்டின் ஒப்பற்ற உலகத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

பார்ப்பனர்களுக்கு அவர் கூறிய அறிவுரைகள் வியப்புக்குறியவை, உண்மையானவை.

> நாம் இப்போது பார்ப்பனர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், எங்களையும் சமமாகப் பாவியுங்கள். எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொல்லி இழிவுப்படுத்தி எங்களைச் சொல்லாதீர்கள் என்பதேயன்றி வேறில்லை! (31.7.26)

என்று பார்ப்பனர் கோட்டமான திருவல்லிக்கேணியில் தெளிவாக உரையாற்றினார்.

## பெரியாருக்கு முன்னும் பின்னும்

தந்தை பெரியாரின் அணுகுமுறை எவ்வளவு அறிவுபூர்வமானது என்பதற்கே இச் சான்றுகளைக் குறிப்பிட்டேன். அதே நேரத்தில் பார்ப்பனர்கள் பெரியாரை எந்த கண்ணோட்டத்தில் அணுகுகிறார்கள், என்பதற்கும் சில சான்றுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தாங்கள் உயர் சாதியினர் என்பதை நிலைநாட்டிக் கொள்வதில் தவறுவதில்லை. பிரம்மாவின் நாக்கில் பிறந்தவர்கள் என்பதற்குச் சான்றுகளைப் புராண சாஸ்திரங்களை உறுதிப்படுத்தவும் தவறுவதில்லை. எல்லோரும் எப்படிப் பிறக்கிறார் என்பதை விஞ்ஞான சாஸ்திரம் படித்த பார்ப்பனர் கூட பழைய மனுதர்ம சாஸ்திரத்தில் உள்ள பிடிப்பைத் தளர்த்திக்கொள்ள முன்வரவில்லை. கோவில்களில் எல்லோரும் அர்ச்சகராகலாம் என்று திராவிட அரசு கொண்டு வந்த சட்டத்தை எதிர்த்து நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, வாதத் திறமை பெற்ற பார்ப்பன வக்கீல்களை வாதாடச் செய்து, ஆகமங்களால் அதிகாரம் வழங்கப்படாதவர் கை பட்டால் கடவுள் உருவம் தீட்டுப்பட்டுவிடும் என்று தங்களுக்குச் சாதகமானத் தீர்ப்பைப் பெற்றனர். இவர்கள் சூரத்திற்கும், மற்றவர் சூரத்திற்கு எங்கே, எப்போது, எப்படி ஆகமங்கள் அதிகாரம் வழங்குகிறது என்பது புரியாத விந்தை. கடவுளின் உருவம் எப்படித் தீட்டுப் பட்டுவிடும் என்பதும் அவர்கள்தான் அறியவேண்டும்.

மதுரையைத் திருமலை நாயக்கர் ஆண்ட காலத்தில் ஒரு தமிழ்ப் புலவன் 'ஸகஸ்ரசீரிஷ புருஷ' என்பதற்கு விளக்கம் கேட்டார். பார்ப்பனர்களின் குரு எப்படி விளக்கமளித்தார் என்பதற்கு வரலாறு உள்ளது. அரசனிடம் மூன்றே முக்கால் நாழிகைக்கு ஆட்சி அதிகாரம் பெற்று சந்தேகத்திற்கு விளக்கம் கேட்ட தமிழ்ப் புலவரைக் கழுவில் ஏற்றி உயிரைப் பறித்ததாகக் குறிப்பு உள்ளது. சூத்திரர்களை ஆரியர்கள் எப்படி மதித்தனர் என்பதற்கு இது போதிய சான்றாகும்.

இன்றும், நீதிக்கட்சி ஆண்ட காலத்தில் கொண்டு வரப்பட்ட வகுப்பு உரிமை நீதியை எதிர்த்து, வேறு வழியின்றி மறைமுகமாகத் திரைமறைவுச் செயல் புரிவது எதனைக் காட்டுகிறது?

தந்தை பெரியாரை 'ஸ்ரீமான் நாயக்கர்' என்றே விடாப்பிடியாக எழுதியும் பேசியும் வருகின்றனர் பார்ப்பன அறிவாளிகள், எழுத்தாளர்கள், தாளாளர்கள்.

கோயில்களில் வடமொழியில்தான் வழிபாடு செய்ய வேண்டும் என்று படிவாதம் காட்டி எல்லோருக்கும் புரியும் படியாகத் தமிழ்நாட்டில், தமிழ் கோயில்களில், தமிழ்மொழியில் அர்ச்சனை செய்யக் கூடாது என்று சண்டித்தனம் செய்து வருவதில் இருந்து, இந்த நாட்டில் சரிநிகர் சமநிலை, சமதர்மம் எங்கே எப்போது



மலரப் போகிறது என்றே வருந்த வேண்டியிருக்கிறது.

இசைத்துறையிலும் தமிழிசை வளர்ச்சிக்கு எவ்வளவு எதிர்ப்புகளை உண்டாக்கினர். இன்று உண்டாக்கி வருகின்றனர்.

சூத்திரன் வேதம் படிக்கக்கூடாது, படித்தால் நாவை அறுக்க வேண்டும் என்றனர். தந்தை பெரியார் 1925 ஆம் ஆண்டு திருப்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் மனு தர்மத்தைக் கொளுத்த வேண்டும் என்றார். அதில் என்ன தவறு? ராஜாஜி ஆண்ட காலத்தில் மனுதர்ம அடிப்படையில் சூத்திரர்களின் நாக்கை அறுக்க முடியாத காரணத்தினால் 2500 ஆரம்பப்பள்ளிக் கூடங்களை மூடி, மனுதர்மத்தைக் கடைப் பிடித்தார்.

## உண்மையின் உள்ளொளி

1954-ஆம் ஆண்டு மீண்டும் ஆச்சாரியார் குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து, திராவிடர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக இருந்தார். அதனையும் பெரியார் எதிர்த்து வெற்றிக் கண்டார். 'தகுதி, திறமை' என்கிற புதிய முழக்கத்தையும் பார்ப்பனர்கள் எழுப்பினார்கள். அதனையும் தந்தை பெரியார் கண்டித்தார். இன்னும் நாட்டில் அக்ரகாரங்களும் சேரிகளும் உள்ளன; தீண்டாமைக் கொடுமையும் உள்ளது. வெள்ளையன் ஆண்ட காலத்திலிருந்து இன்று வரை எவராலும் பார்ப்பனர்களைத் திருத்தி, மனிதர்களாக்க முடியவில்லை. பார்ப்பனர்களுக்குத் தனியாக உணவு விடுதிகள், குடிதண்ணீர், இருப்பிடம் அரசாங்கமே அமைத்துக் கொடுத்த காலம் இருந்தது. இன்றும் பார்ப்பனர்கள் குடியிருக்கும் வீடுகள் காலியானால் அதில் பார்ப்பனர்கள்தாம் குடிபுக முடிகிறது. மற்றவர்களுடன் சரிசமமாக வாழும் நிலைக்குப் பார்ப்பனர்கள் அணியமாக இல்லை என்பதே யதார்த்த உண்மை. அதனால்தான் தந்தை பெரியார் பலமுறை -

> 'யோக்கியனாக இருந்தால் பார்ப்பான் வந்து சொல்லட்டுமே.
> நமக்குள்ளே சாதிபேதமில்லை. நாமெல்லாம் ஒன்றுதான்,
> உன்னைத் தொட மாட்டேன் என்று சொன்னது தவறு,
> பூணூலை அறுத்து எறிந்து விட்டு வரட்டுமே'

என்று அறைகூவல் விடுத்தார்.

ஆட்சிப் பீடத்தில் அவர்கள் எப்படியோ தொடர்ந்து இருந்து வந்து விட்ட காரணத்தினால் இந்தியாவில் சோசலிசம் வளர்ச்சி பெற

முடியாது திண்டாடுகிறது. இதனைத்தான் அண்ணா அவர்கள், ‘நயமாகக் காகிதப்பூ மணக்காது காங்கிரஸ் சோசலிசம் இனிக்காது’ என்று அடுக்கு மொழியில் யதார்த்த உண்மையை வெளிப் படுத்தினார். தந்தை பெரியாரின் வழியினர் சிலர் அரசியலில் இலாபம் தேட முற்பட்டதன் விளைவாகப் பார்ப்பன எதிர்ப்பு பெருமளவு நீறுபூத்த நெருப்பாகிவிட்டது.

திராவிடன் உழைத்துச் சம்பாதித்த பணத்தில் பார்ப்பனைக் கொண்டு கொள்கையற்ற, ஆபாச ஏடுகள் நடத்தவும் திராவிடன் எழுதிய வசனங்களைப் பார்ப்பனக் கதாநாயகன்தான் பேச முடியும் என்று தவறான கருத்தை உருவாக்கவும், தந்தை பெரியார், அறிஞர் அண்ணாவின் பெயரைக் கூறிக்கொண்டு தேர்தலில் போட்டியிடும் பார்ப்பனனுக்கு ஓட்டு கேட்கவுமான கேவல நிலையும் போக்கும் இன உணர்வற்ற பாதையும் இன்று காணப்படுகிறது.

பாடுபடும் திராவிடப் பெருங்குடி மக்கள் அளிக்கும் நிதிஉதவி இலட்சக்கணக்கில் பார்ப்பன வக்கீல்களுக்குக் கொட்டி அழும் நிலை இன்று ஏற்பட்டிருப்பதை நினைக்கும்போது இதற்காகவா பெரியாரும் அண்ணாவும் அயராது பாடுபட்டுத் திராவிட இயக்கத்தை வளர்த்தனர் என்று எண்ணி ஏக்கமடைய வேண்டி ருக்கிறது. பெரியாரைப் புகழ்ந்து, பாராட்டிப் பேசுவோர் அத்தனை பேரும் அவர் வழிநின்று திராவிடப் பெருங்குடி மக்களுக்குப் பணியாற்றுகின்றனர் என்று கண்ணை மூடிக்கொண்டு நம்பும் நிலை தொடர்ந்து நீடிக்குமேயானால், மீண்டும் ஆரியமாயை, திராவிடத்தைக் கப்பிக் கொள்ளும் என்றுதான் உறுதியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

தந்தை பெரியாரின் சிறப்புகளை ஒரு சில சந்தர்ப்பவாதிகள் தன்னலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்வதனால் பெரியாருக்குக் கடுகளவு இழப்புமில்லை. ஆனால், எதிர்காலச் சந்ததியாளருக்குப் பெரியாரின் பாதையில் நம்பிக்கையும் நற்பயனும் உண்டாகும் வகையில் திட்டமிட்டு இன்றைய தலைமுறையினர் செயல்பட வேண்டியது மிகமிக அவசியமாகும். பெரியாருக்கு எதிரிகள் துரோகமிழைப்பது எதிர் பாராததில்லை; நம்மவர்களே பெரியாருக்குப் பக்குவமாகத் தெரிந்தே தீங்கிழைப்பது மன்னிக்கக் கூடியது மன்று. பொறுத்துக் கொள்ளக் கூடியதுமன்று.

தந்தை பெரியார் - உலகப் பெரியாராக மறைந்து விட்டார்.



தந்தை பெரியார் 20-ஆம் நூற்றாண்டின் தலைச் சிறந்த சீர்திருத்தச் செம்மலாக மறைந்துவிட்டார்.

தமக்குப் பிறகு தம் கொள்கைகள்தாம் தம் வாரிகள் என்று உயிரோடு இருக்கும்போதே தெளிவாகக் கூறி மறைந்து விட்டார். அந்தக் கொள்கைகளை நம்பியே உண்மையான திராவிடர் செயல் பட வேண்டும்.

தந்தை பெரியார் 20-ஆம் நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவராக மறைந்துவிட்டார். நாம் என்ன செய்தோம், செய்து வருகிறோம். செய்யப்போகிறோம்? தென்னக வரலாற்றின் நாயகனாக அவர் புகழ் பெற்றுவிட்டார்.

இன்றைக்குப் பொதுவுடமையை ஏற்றுக் கொண்ட மக்கள் 100 கோடிக்கு மேல் உலகில் வாழ்கிறார்கள். சோவியத்துப் பொது வுடமை நாடு. அங்கே 25 கோடி மக்கள் இன்பமாக வாழ்கிறார்கள். 75 கோடி மக்கள் வாழும் சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சிதான் நடை பெறுகிறது. மேலும் பிலிப்பென்ஸ, அங்கேரி, போலந்து, செக்கோஸ்லோவியா, ஆஸ்டிரியா, கிழக்கு ஜெர்மனி போன்ற பல நாடுகள் பொதுவுடமைக்கு வழி கோலி வருகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தின் நிலை என்ன? திராவிடத் திருநாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில் மட்டுமே பொதுவுடமைக்கு ஏற்றம் காணப்படுகிறது; இதற்கு அடிப்படைக் காரணம் பெரியாரும் திராவிட இயக்கமும் தான் என்றால் தவறாகாது.

பொதுவுடமை என்ற பெயரால் இயங்கும் சில சக்திகள் பாதை தவறிச் செயல்பட்டு வருவதால் பல தடைகள் ஏற்பட்டு வந்திருக் கின்றன. இன்றும் யாருடன் கூட்டு சேர்ந்தால் அதிக இடங்களைக் கைப்பற்றிப் பதவிக்கு வரமுடியும் என்ற கண்ணோட்டமே நிலவுகிறது. பூணூல் இல்லாத கூட்டமாகச் சில சக்திகள் இயங்கு வதால் லாபமில்லாவிட்டால் கூட, பொதுவுடமை இலட்சியங்கள் வெற்றி முழக்கமிடுவதில் ஆமை வேகம்தான் காணப்படுகிறது. ஏதோ சில தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு பெற்றுத் தருவது தான் பொதுவுடமையின் குறிக்கோள் என்று கருதுவது தவறான தாகும். சமுதாயத்துறையில் உள்ள கேடுகளை நீக்குவதில் தயக்கம் காட்டுவது தொடர்ந்து மக்களைப் பிற்போக்காளர்களாக வாழச் செய்வதாகும்.

கடவுளைப்பற்றி பேசத் தயக்கம், புராணங்களை பற்றிப் பேசத் தயக்கம், சாஸ்திர-இதிகாசங்கள், புராணங்களைப் பற்றிப் பேசத் தயக்கம், சாதிக் கொடுமை, தீண்டாமை கொடுமை பற்றிப் பேச தயக்கம், இப்படி எத்தனையோ குறைபாடுகளை வைத்துக் கொண்டு நாட்டில் முழுமையான சமதர்மம் ஏற்படுத்த முடியும் என்று நினைப்பது அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பதற்குச் சமமாகும். பார்ப்பனர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேச அஞ்சிடும் நிலை நீடிக்கும்வரை பொதுவுடைமைச் சக்திகள் உருப்படியான காரியம் செய்திடப் போவதில்லை.

தொழிலாள வர்க்கத்திற்குக் கூலி உயர்வோ, ஈட்டுதியமோ கிடைத் தால் அது ஆண்டவன் அருளிய பிச்சை என்று கருதி, கடவுளுக்குத் தேங்காய் உடைத்துச் சூடம் ஏற்றும் நிலை பாட்டாளி மக்களிடம் இருக்கும் வரை உண்மையான பொதுவுடைமை மலரப் போவது மில்லை.

பெரியார் பொதுவுடைமைப் பூங்காவாகத் திகழும் சோவியத் ரஷ்ய நாட்டிற்கு **1932**-இல் நேரில் சென்று திரும்பிய பின்னர் வீசிய பேனா குண்டுகள்தாம் பழமை கூடாரங்களைச் சிதைத்து நொறுக்கின. சுரண்டல் அமைப்புகள் தகர்ந்து தவிடு பொடியாயின. பொய்யும், பித்தலாட்டமும் நடுங்க நேர்ந்தது.

**1933**-ஆம் ஆண்டில் தந்தை பெரியாரின் வாழ்க்கைத் துணைவி நாகம்மையார் மறைந்தார்கள். குடும்ப, வணிகப் பொறுப்புகளைத் துறந்தார் பெரியார். பிறகு தீவிரமாக இலட்சியத் தலைவராக, அதிக சுதந்திரம் பெற்றவராக, குடும்ப வணிகத் தொல்லை அற்றவராக முழு நேரம் தொண்டாற்றும் வாய்ப்பு ஏற்பட்டது. இரவு பகலாக, ஊர் ஊராகச் சுற்றி மக்களுக்கு உருப்படியாகப் பாடுபட முடிந்தது. அதனால் அவரின் வாரிசுகள் செங்கோல் செலுத்தும் அரிய வாய்ப்பும் உண்டானது. தாம் **94** வயதில் இயற்கை எய்தும் காலம் வரை அயராது பாடுபட முடிந்தது.

ஆனால், இன்று கலப்படமில்லாத பொதுவுடைமைவாதிகள் நாங்கள் தான் என்பவரின் நிலை என்ன? சிலர் சொத்தினைச் சேர்க்கிறார்கள் மற்றும் சிலர் குடும்பத்திற்குக் கார் வேண்டும், பங்களா வேண்டும், நகைகள் வேண்டும், டி.வி. வேண்டும், உயர்தரமான சத்துள்ள உணவு வேண்டும், தம் பிள்ளைகட்கு மட்டும் சோவியத்து நாட்டுப் பல்கலைக் கழகப் படிப்பு, தங்கள் உடல் நலந்தேற மாஸ்கோ



மருத்துவமனை, பாங்கில் இருப்புப் பெருக வேண்டும் என்றல்லவா உழைக்காமல் வசதிகளைத் தேடுகிறார்கள்.

## அறிந்ததினின்றும் விடுதலை

**35** ஆண்டுகாலம் தம்முடன் வாழ்ந்த நாகம்மையார் மறைந்ததும் தந்தை பெரியாரின் சிந்தனை எப்படி இருந்தது என்பதை அவர் 'குடிஅரசு' ஏட்டில் எழுதினார்.

> '**11.5.1933**-ம் தேதி மாலை **5.45** மணிக்கு நாகம்மை உயிர் நீத்தார், இதற்காக நான் துக்கப்படுவதா மகிழ்ச்சியடைவதா? நாகம்மாள் நலிந்து மறைந்தது லாபமா நஷ்டமா என்று இது சமயம் முடிவுகட்ட முடியாத நிலை இருக்கிறது... ஆகவே நாகம்மாள் மறைந்தது எனக்கு ஓர் அடிமை போயிற்று என்று சொல்லட்டுமா? ஆதரவு போய்விட்டது என்று சொல் லட்டுமா? எல்லாம் போயிற்று என்று சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே'.

வேறு எதற்கும் லாயக்கில்லை என்ற நிலையில் அரசியலைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஊரையடித்து உலையில் போட்டுக்கொண்டும் ஏதுமறியாத இளைஞர்களைச் சமத்துவம் சகோதரத்துவம் புதுச் சமூகம் என்று ஏமாற்றிக்கொண்டும், விலைமாதர்களைப் போல் மானம், மரியாதையை விலை பேசிக்கொண்டும் பல்வேறு இஸங் களைப் பேசுகிற சுயநலவாதிகளாகச் சந்தர்ப்பவாதிகளாக பிறநாடு களின் கைக்கூலியாகிக் கொழுத்த கோடீசுவரர்களாக மலர்ந்து விட்டு குடும்பத்திற்காகவே அரசியலைக் கொண்டவர்களுக்குப் பெரியார்- நாகம்மை உறவு நல்லதோர் பாடமாக அமைகிறது.

அதே தந்தை பெரியார் **1940**-ஆம் ஆண்டு நீதிக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான சர். ஏ.டி. பன்னீர்செல்வம் மறைந்தபோது அதே 'குடிஅரசு' ஏட்டில் இப்படி எழுதி யிருக்கிறார்,

> 'மனம் பதைக்கிறது!
> நெஞ்சம், திக்கு திக்கென்றது!
> மேனி நடுங்குகிறது!
> எழுதக் கை ஓடவில்லை!
> கண் கலங்கி மறைக்கின்றது!
> என் மனைவி முடிவு எய்திய பொழுது நான் சிறிதும்

*மனங்கலங்கவில்லை! பன்னீர் செல்வத்தின் மறைவு மனத்தை வாட்டுகிறது'.*

*இப்படிப் பலவரிகளை எழுதியிருக்கிறார் தந்தை பெரியார். உற்றார் உறவினர் என்ற பற்று பாசத்தைத் துறந்து பொது நலத்திற்காகப் பாடு பட்ட சர் ஏ.டி. பன்னீர்செல்வம் மறைந்தது சமுதாயத்திற்கு எவ்வளவு பெரிய இழப்பு என்பதைக் கணித்து, தந்தை பெரியார் எப்படி எல்லாம் மனம் நொந்திருக்கிறார் என்பதை இன்றைய தலைவர்கள் மிகவும் சிந்தித்துத் தக்கப் படிப்பினையைப் பெற வேண்டியது அவசியமாகும். இனநலமே நமது பொதுநலம் என்ற உணர்வு எல்லோருக்கும் இருக்க வேண்டும். தலைவர்களாக இருப்பவர்கள் பெரியாரைப் போல் தன்னலத்தை துறக்க வேண்டும்.*

## உலகம் காணாத ஒருவர்

*இருபதாம் நூற்றாண்டில் மக்களை, மனத்தைக் கவர்ந்த தலைவர் களில் குறிப்பிடத்தக்கவர்கள், பெட்ரண்ட் ரசல், இலெனின், மாவோ, ஐன்ஸ்டீன், பெர்னாட்ஷா, அம்பேத்கார், அண்ணா, காந்தியார் ஆகியோர் ஆவார்கள். இவர்கள் அனைவரிடத்திலும் காணப்படாத அதிசயக் குணங்கள் பெரியாரிடம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. அது மட்டுமல்ல, இவர்களில் பலர் சாதனைகளைப் பெரியார் ஒருவரே சாதித்திருக்கிறார்.*

## ஐன்ஸ்டையனும் பெரியாரும்

*தந்தை பெரியாரும் ஐன்ஸ்டையனும் சிறந்த விஞ்ஞானிகள். தாங்கள் இம் மண்ணில் தோன்றுவதற்கு முன்னர் நிலவிய தவறுடைய பல அடிப்படை நம்பிக்கைகளைத் தகர்த்த பெருமை இரு வருக்கும் உண்டு. எளிய வாழ்க்கை வாழந்து எதையும் பகுத்தறிவு கண்கொண்டு உண்மைகளைக் கண்டறிய முடியு மென்பதை இருவருமே நிரூபித்தனர். இருவருமே 1879-இல் பிறந்தனர். உலகிற் சிறந்த அறிவியல் வல்லுநர்- புரட்சியாளர்- இவ்விருவரையுமே ஆரியர்கள் வெறுத்தது துல்லிய உண்மையாகும்.*

## இலெனினும் பெரியாரும்

*சோவியத் நாட்டில் லெனின், மார்க்சின் கனவினைச் செயல்பட வைத்தார். எல்லாருக்கும் எல்லாம் என்ற பொதுவுடைமையின் மூலத்தைக் கொண்டு வந்தார். அரச குடும்பம், நிலப்பெரு முதலை கள், ஆட்சியதிகார வர்க்கத்தினரின் கொடுமைகள் அனைத்தி லிருந்தும் பல்வேறுபட்ட இனமொழி நாகரிக மக்களைத் தலை நிமிரச் செய்தார் லெனின். புரட்சிப்படையின் தலைவனாக விளங்கிப் பொதுமைப் பொன்னாட்டைச் சமைத்து மனிதனுக்கு மனிதன் தோழன், சகோதரன் என்ற மொழியினை மெய்ப்பித்தார். உலகின் ஆறில் ஒரு பாகத்தைப் புதிய நாகரிகத்தில் இல்லாமை யையும் கல்லாமையையும் அறவே ஒழித்து உலகம் வியக்கச் செய்யும் சோவியத்தின் பொதுவுடமை என ஒன்றைச் சிறப்புறச் செய்தார். பெரியாரே மார்க்ஸாய், லெனினாய் மாறித் தென்னகத்தில் எவ்வளவு சீர்திருத்தம் செய்த போதும், சிங்காரவேலர், ஜீவா போன்றவர்கள் இல்லாமையினாலேயே இங்கே ஒரு பொதுவுடமைத் தென்னாடு தோன்றாது போய் விட்டது. இந்தியப் பொதுவுடமை ஒரு சில குடும்ப வாழ்வுக்கு இரையாகிவிட்டது. பெரியாரின் பின்னவர்கள் இதனை எண்ணிச் செயல்பட்டால் கேரள-வங்கத்திலும் மேலான ஒரு பொது வுடமைக்களமாக இங்கே பண்படுத்தப்பட்டிருக்கும்.*

## மாவோவும் பெரியாரும்

*அடுத்து, பெரியாரையும் - மாவோவையும் ஒப்பிட்டால் இவர்கள், இருவருமே புரட்சி என்ற மகத்தான பொருள் கொழித்து ஓர் அரசியல் பொருளாதார சமுதாய தத்துவத்தைக் கையாண்டு வெற்றி கண்டவர்களாவார்கள். புதிய சீனாவைக் கண்டவர் மாவோ. புதிய திராவிடத்தைப் படைத்தவர் தந்தை பெரியார். ஆங்கில ஏகாதி பத்தியத்தையும் அதைவிடக் கொடுமையான பார்ப்பன ஏகாதி பத்தியத்தையும் அதன் பின்னணியாய் அமைந்திருக்கும் சாதி, வேத சாஸ்திரம், மூட நம்பிக்கைகளையும் எதிர்த்துப் போராடிய பெருமை பெரியார் ஒருவருக்கே உண்டு. அபினி மயக்கத்திலிருந்த சீன மக்களைத் தட்டி எழுப்பியவர் மாவோ. ஆரியமாயையிலிருந்து மக்களைத் தட்டி எழுப்பியவர் பெரியார். மதம் மக்களுக்கு அபினி என்றார் மார்க்சு.*

*பெண்கள் ஆண்களுக்குச் சமஉரிமை வேண்டும் என்றார் மாவோ. மூளை உழைப்பிற்கு உடல் உழைப்பிற்கு இடையே உள்ள வேறுபாடு அகல வேண்டும் என்றார். சமுதாய சீர்திருத்தம் எனும் பெயரால் திராவிடத்தில் மாவோவின் கலாசார புரட்சிக்கு ஈடுபட தந்தை பெரியார் வெற்றிகளை குவித்தார். எதனை எவர் கூறினும் எத்தனை பெரிய தலைவர் கூறினும் உண்மையா அல்லவா? சரியா தவறா?*

என்று கண்டு உண்மையானதையும், நியாயமானதையும் ஏற்க வேண்டும் அல்லாததை எதிர்த்துப் போரிடத் துணிய வேண்டும். அத்தகைய தன்மை கொண்டவனே ஒரு பொது உடமைவாதி என்று மாவோ பிரகடனப்படுத்தினார். தந்தை பெரியார், 'நான் சொல் கிறேன் என்று மட்டும் கேட்காதே, நீயே சிந்தித்துப் பார்த்தவுடன் உன் அறிவுக்குப்பட்டத்தை மட்டும் எடுத்துக்கொள் மற்றதைத் தள்ளிவிடு' என்று அடிக்கடி கூறிவந்தார்.

மாவோ பலாத்காரத்தை, வன்முறையைத் துணைகொண்டு ஆட்சியைக் கைப்பற்றினார். அறவழியில் போராட்டங்களை நடத்தில் அதே வெற்றிப் பாதையில் தந்தை பெரியார் ரத்தம் சிந்தாத புதுமைப் புரட்சியை மலரச் செய்தார். மாவோவின் வாரிசுகள் என்று பிரகடனம் படுத்திக்கொண்டு அரசியலை நடத்தும். எவர் தயவையும் நம்பி தந்தை பெரியார் செயல் படவில்லை. திராவிடர் கழகம் ஒரு அரசியல் கட்சியில்லை. இது ஒரு சமுதாய சீர்திருத்த இயக்கம் என்றே தெளிவாகக் கொள்கை வகுத்து அதனை இறுதிவரை கடைபிடித்து, தம்முடைய வாரிசுகள் ஆட்சியைக் கைப்பற்றி பகுத்தறிவாளர் ஆட்சியை மலரச் செய்தவர் தந்தை பெரியார். அந்தத் திராவிட அரசுக்கு எதிராக மட்டும் இந்திய ஜனாதிபதியிடம் புகார் கொடுத்து தகாத செயல் புரிந்தவர்களும் பொதுவுடமைவாதிகள்தாம். பின்னர் அதே பொதுவுடமைவாதிகளுக்குப் புதுக் காதல் பிறந்தது. அரசியலில் கேலிப் பொருள்களாய் விளங்குபவர்களும் அதே பொதுவுடமை வாதிகள்தாம் என்பதை நாடு மறக்காது. பார்ப்பனர்களின் ஓட்டுகளைப் பெற்று வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத் திராவிட இயக்கத்தினரை அவ்வப்போது வகுப்புவாதிகள் என்று கூறி வந்தவர்களும் அதே பொதுவுடமைவாதிகள்தாம்.

## ரஸ்ஸலும் பெரியாரும்

அடுத்து, தந்தை பெரியார்-பெட்ரண்டு ரஸ்ஸல் வாழ்க்கையை ஆராய முற்பட்டால் இவர்கள் இருவருக்கும் உள்ளே ஒற்றுமையை அறியலாம்.

வளர்ச்சி பெற்று முன்னேற்றப் பாதையில் சமுதாயத்தைச் செலுத்த வழிகாட்டிகளாக இருவரும் பாடுபட்டனர் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மை. பகுத்தறிவுக் கொள்கைகளை அள்ளி அள்ளி வீசியவர்கள் இருவரும். ரஸ்ஸலின் தொண்டு, படித்த அறிவாளி



களுக்கு மட்டுமே பயன் அளித்தது. பெரியாரின் தொண்டு படிக்காத ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாகப் பல ஆண்டுகள் சுரண்டப்பட்டு, ஏய்க்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, புறக்கணிக்கப் பட்டு, தாழ்த்தப்பட்டு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட அப்பாவி மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது. ரஸ்ஸலுக்கு உலகப் புகழ் கிட்டச் செய்திப் பத்திரிகைகள் எளிதில் தாராளமாகத் துணையாக இருந்தன. இங்குப் பத்திரிகைகள் பெரும்பாலும் பெரியாருக்கு எதிராகவே இயங்கின.

கடவுள், மதம், மூடநம்பிக்கை, பெண்ணுரிமை கல்வி, கலை, இலக்கியம், தொழிலாளர் நலன், மக்களாட்சி, சமதர்மம் போன்று பலபல பிரச்சினைகளில் இருவருக்கும் ஒத்த கருத்து இருந்த போதிலும் ரஸ்ஸலுக்குக் கிட்டிய உலகப்புகழ் அளவிற்கு ஈடாகப் பெரியாருக்குக் கிட்டவில்லை. இதனை ஏன் என்று சிந்திக்கும் போது, மேலை நாட்டில் வருணாஸ்ரம தருமத்தின் அடிப்படை யில், இங்கு இருப்பது போல சாதிமுறை இல்லாதது முக்கிய காரணம். உயர் சாதியினர் ஆதிக்கம் இங்கு இருப்பது போல அங்கு இல்லாததும் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். எனவே, பெரியாரின் சாதனை வியப்புக் குரியது. மிக அரியது, என்றே குறிப்பிட வேண்டி யிருக்கிறது.

கடவுளைப் பற்றி ரஸ்ஸல், 'ஒவ்வொரு தோற்றத்திற்கும் ஒரு காரண காரியம் இருக்க வேண்டும். கடவுள் அதற்கு விதிவிலக்கில்லை' என்றார். தந்தை பெரியார், 'கடவுள் இல்லை, இல்லவே இல்லை' என்றார்.

'எல்லா மதங்களும் பொய்யானதும்; துன்பத்தை தரக்கூடியதும் ஆகும்' என்றார் ரஸ்ஸல் - 'மதம் என்பது மனிதனுக்கு தேவை இல்லை' என்றார் பெரியார்.

பகுத்தறிவுக்குப் புறம்பானது மதம் என்பதே இருவரின் கருத்து. இருவருமே மனிதாபிமானிகளாக வாழ்ந்தனர். பெண்களுக்குச் சம உரிமை அளிக்கப்பாடுபட்டனர். ஆணும், பெண்ணும் உடலாலும், உள்ளத்தாலும், ஒருமித்து திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று இருவரும் கருத்து கொண்டனர். குழந்தைகளின் நல் வாழ்வைக் கருதி, பாலுணர்விற்கு அதிக முக்கியத்துவம் தராது கட்டுப் பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இருவருமே கூறினர். பெண்களை அடிமைகளாகவோ, படுக்கை அறைப்

பொருளாகவோ, அலங்காரப் பொருளாகவோ, கருதலாகாது என்று இருவரும் கண்டிப்பாக வலியுறுத்தினர். கேள்வி ஞானத்தை அடிப் படையாகக் கொண்டதாகக் கல்வி அமைய வேண்டும் என்றார் ரஸ்ஸல். கல்வியால் பகுத்தறிவு வளர வேண்டும் என்றார் பெரியார்.

பொதுவுடமை, தனிச் சொத்துடைமை இவைகளின் நியாயமான தீமைகளிலிருந்து விடுபட்ட ஒரு அரசியல் அமைப்பே ஒரு நாட்டிற்குத் தேவை என்பது ரஸ்ஸலின் கருத்து. அரசியல் என்பது தனியானதில்லை. மக்கள் வாழ்வில் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங் களும் சேர்த்துக் கூறுவதுதான் அரசியல் என்றார் பெரியார்.

அறியாமையிலிருந்து மக்களை விடுவித்தனர் இருவரும். தன்மானத் துடன் வாழச் செய்தனர் இருவரும்.

தந்தை பெரியாரும் ரஸ்ஸலும் அவர்கள் வாழ்ந்த காலத்திய சமுதாயத்திற்கும், வருங்காலச் சமுதாயத்திற்கும் உயர்ந்த களஞ் சியங்களாக விளங்கினர்.

## பெர்னாட்ஷாவும் பெரியாரும்

தொடர்ந்து பெர்னாட்ஷாவை கவனிப்போம். அவர் கடவுளைப் பற்றிக் கவலைப்படாதவர். பொருள் முதல்வாதி. ஷா சர்ச்சுக்குச் சென்றதில்லை. ஷா முதலில் நோபெல் பரிசை ஏற்க மறுத்தார். பெரியார் பதவிகளைத் துறந்தார். வெறுத்தார். ஷா பிறர் புகழ்ச்சிக் கும் மசியவில்லை. பெரியாரும் ‘என்னைப் புகழ்கிறவனைப் பற்றி நான் சந்தேகப்படுவேன்’ என்றார். ஷா அயர்லாந்து விடுதலையை ஊக்குவித்துப் பேசியும் எழுதியும் வந்தார். வெள்ளையரை வணிகர் கள், வஞ்சகர்கள் என்று குற்றம் சாட்டினர். தந்தை பெரியார் பிரிவினைப் பிரகடனம் செய்து வடவரை எதிர்த்துப் போராட்டம் நடத்தினர். இருவருமே முதலாளித்துவத்தை சாடியுள்ளனர். குழந்தை வளர்ப்பு அரசின் பாதுகாப்பில் இருக்க வேண்டும் என்பது இருவரின் கருத்து. சீனத்துப் பெண்களும். ஆண்களும் ஒரே மாதிரியான உடையணிய வேண்டும் என்ற கருத்தைப் பெரியார் கொண்டிருந்தார். பெண்களின் திருமண வயதை உயர்த்த வேண்டும் என்றும் கூறினார். இப்படி பல்வேறு விஷயங்களில் ஷாவிற்கும் பெரியாருக்கும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

அடுத்துப் பெரியாருடன் இந்தியத் துணைக் கண்டத்தில் எவரை ஈடாகக் காணமுடிகிறது என்ற சிந்தனை எவருக்கும் எழக்கூடும்.



ஆனால் பெரியாரின் சாதனைப் பட்டியல்களை வரிசைப்படுத்தி முறையாக்கி நோக்கும்போது அத்தனைச் சாதனைகளையும் பெரியாருக்கீடாகா என்று நிச்சயமாக முடிவு செய்யலாம். சிலர் அவருக்கு ஈடாகச் சில காரியங்களை மட்டுமே செய்துள்ளனர் என்பதுதான் உண்மையாகும். அதுவும் அவர்களின் சாதனைகள் அவர்களது வாழ்நாளிலேயே சரிவதைக் கண்டுதான் அவர்கள் மனம் நொந்து மறைந்தனர்.

அண்ணல் காந்தியாருக்குத் தனிப்பட்ட முறையில் செல்வாக்குப் பெருகி நிலைத்த போதிலும், அவர் அரும்பாடுபட்டு வளர்த்த காங்கிரஸ் அவருக்குப் பிறகு சின்னாபின்னமாகிச் சுக்கு நூறாகி விட்டது. காந்தியார் உயிருடன் இருக்கும்போதே காங்கிரசைக் கலைத்து விடுங்கள், அதன் வேலை முடிந்து விட்டது என்று ‘அரிஜன்’ ஏட்டில் எழுதினார். இன்று யார் யாரோ ஏதேதோ காங்கிரஸ் என்று கூறிக்கொள்கின்றனர். எந்த தேசத்தின் சுதந்திரத் திற்காகப் பாடுபட்டாரோ அதே தேசம் விடுதலை பெற்ற பின்னர் அவருக்கு இருந்த மதிப்பு போயிற்று. அவரால் வாழ முடியவில்லை. அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் கண்ட கனவு வெறும் கனவாகவே முடிந்துவிட்டது. இன்று அவரது பெயரைத் தேவைப் படும் போது பயன்படுத்திக் கொள்ள யார் யாரோ முயலுகிறார்கள்.

அதே போன்று டாக்டர் அம்பேத்கார் இந்தியாவில் உள்ள அனைத்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரும்பாடுபட்டார். கொள்கை ரீதியில் பெரியாருக்கு ஈடானவர். ஆனால், அவருடைய இறுதிக்காலம் வேதனைப்படக் கூடியதாக முடிவுற்றது. அவருக்குப் பின்னர் தாழ்த்தப்பட்ட மக்கள் பல்வேறு அரசியல் தலைவர்களின் மாயவலையில் சிக்கிப் பகடை காய்களாகத் தடுமாறும் நிலைதான் ஏற்பட்டது. பெரியார் தாழ்த்தப்பட்ட மக்களை ஆதித்திராவிடர் களாகவே கருதினார். ஒருமுறை சென்னை சினிமா சென்ட்ரல் (இப்போது முருகன் டாக்கீஸ்) அரங்கில் நடைபெற்ற திராவிடர்க் கழக மாநாட்டில் தந்தை பெரியாரை ஒரு கேள்விக் கேட்டனர். ஆதித்திராவிடர் உங்கள் கழகத்தில் சேருவதால் என்ன லாபம்? என்பதே அந்தக் கேள்வி. பெரியார் உடனே, ‘நஷ்டந்தான், என்ன நஷ்டமென்றால் முன்னாடி உள்ள இரண்டு எழுத்துக்களை இடிக்க வேண்டும் ஆதித்திராவிடர்கள் திராவிடர்களாகிவிட சம்மத மிருந்தால் திராவிடர் கழகத்தில் சேரலாம்’ என்று விடுக்கென்று பதிலளித்தார்.

அந்தப் பதிலில் எத்தனையோ உண்மைகள் அடங்கி இருக்கின்றன. பல துறையில் பெரியார் அப்பேத்காருடன் ஒத்த கருத்துக் கொண்டிருந்தாலும் பெரியார் தம் வாழ்நாளில் எப்போதும் சபலம் கொண்டு பதவிக்காகவோ புகழுக்காகவோ தன்னலத்திற்காகவோ பலியானதில்லை. நாளுக்கு நாள் இயக்கத்தை வளர்த்து தமக்குப் பிறகும் அயல் நாடுகளிலிருந்து இயக்கம் சீராக இயங்கவும் தம் முடைய வாரிசுகள் தம்முடைய கொள்கைகளைப் பரப்பிப் பயணத்தை தொடரும் நிலையைக் காண்கிறோம். இன்று மலேசியாவில் மட்டும் 90 கிளைகள் இயங்குகின்றன என்பதை நினைக்கும் போதும், இலங்கை, பம்பாய், ஆந்திரா, டில்லி, குவாய்த் பகுதிகளில் எல்லாம் பெரியாரின் படை வெற்றி நடை போடுவதை நினைக்கும் போதும் பெரியார் உண்மையில் 20-ஆம் நூற்றாண்டின் உண்மையான உலகத் தலைவர் என்பது புலப்படும்.

## பெரியாரும் பொதுவுடமையும்

விடுதலைபெற்ற இந்தியத் துணைக்கண்டத்தை ஆட்சி செய்யும் பொறுப்பை ஏற்ற காங்கிரஸ் பேரவை பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஒருமாதிரி சோஷலிசம் என்ற தெளிவற்ற பாதையில் செல்ல தொடங்கியது. அதற்கு அடிப்படைக் காரணம் சுதந்திரம் பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே சோஷலிஸத்தில் உண்மையான பற்று கொண்டவர்கள் பேரவையிலிருந்து வெளியேறி விட்டதுதான்.

அப்படி வெளியேறியவர்களால்தாம் சோஷலிஸ்ட் தீவிர சோஷ லிஸ்ட், ராடிகிள் டெமொகிராட் பொதுவுடமை கட்சிகளை உருவாக்கி இயங்கிட நேர்ந்தது. பெரியார் காங்கிரசைவிட்டு 1925-இல் வெளியேறினார். அப்போதே அவர் ஆங்கிலேயர் ஆட்சி அகன்றால் அதனைத் தொடர்ந்து ஆரியரின் ஆட்சிதான் நிலவும் என்பதைப் பிரகடனப் படுத்தினார். அது முற்றிலும் உண்மை யாயிற்று. சுதந்திர இந்தியாவில் முதல் தலைவராக ஒரு தாழ்த்தப் பட்ட குடிமகன் வரவேண்டும் என்று விரும்பினார் காந்தியார். முதல் குடியரசு தலைவராக ஒரு பார்ப்பனரே வர முடிந்தது. தொடர்ந்து 32 ஆண்டு காலமாக ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன் தலைவராக வர முடியவில்லை. நாட்டின் பிரதமர் பதவியும், அதே போன்று தொடர்ந்து பார்ப்பனர்களின் ஏகபோக எஸ்டேட்டாக இருந்து வருகிறது. இன்றைய அரசியல் நிலைகள் பெரியார் கூறிய கருத்துக்கு வலியை ஊட்டுகிறது.



# இருபதாம் நூற்றாண்டு சாக்ரடீஸ்

மனித நலத்தையே பிரதானமாகக் கருதியவர் தந்தை பெரியார். மனித உரிமைகளை எது பாதித்தாலும் அதனை அழிக்க வேண்டும் என்பதில் உறுதி படைத்தவர் பெரியார். மனித சிந்தனையைத் தூண்டும் கருத்துகளை அவர் துணிவுடன் வெளிப்படுத்தினார்.

வருணமுறை மூன்றாம் சங்க காலத்தில் (கி.மு. 2000) புகுத்தப் பட்டது. ஆனால், அது செல்வாக்குப் பெறவில்லை. வள்ளுவர் அரணாக இருந்தார். ஆனால் வந்தேறிகள் அரசியல் செல்வாக்கைத் தீய வழிகளில் படிப்படியாகப் பெற்றனர். மதத்தைப் புகுத்தினர்; அதன்வழி வருண தருமம் அடிப்படையில் 1000 சாதிக் கூறுகளாக வளர்ந்து விட்டது. வேத காலத்தில் கூட சமயச் சடங்குகள் மட்டுமே இருந்ததாக குறிப்புகள் காணப்படுகின்றன. தீண்டாமை என்பது பழந் தமிழகத்தில் இடம் பெற்றதாகக் கருத இடமில்லை. இராசராசன் ஆண்ட காலத்தின் கல்வெட்டு ஒன்றில் பறையன், புலையன் என்னும் தீண்டப்படாதோர் என்போர் அவரினும் இழிந்தவர் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. எனவே கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே தீண்டாமைக் கொடுமை வடிவம் பெற்றிருக்க வேண்டும்.

ஆரியர், ஆரியர் அல்லாதார் என்கிற பாகுபாட்டை மனுதர்மம் தான் புகுத்தியதாகும். மனுவின் காலத்தில் கடவுள் பார்ப்பனரின் ஆதிக்கப் பொருளாகப் படைக்கப்பட்டது. மதமும் வடமொழிச் செல்வாக்கும் படிப்படியாக பல்லவர் காலத்தில் சாதிச் செல்வாக்கினை வளர்த்து அடிமையாக்கின.சோழர் காலத்தில் வலுப்பெற்றது. இதற்கடிப்படைக் காரணம் அப்போது தமிழகத்தை ஆண்டவர்கள் தமிழர் அல்லர் என்பது முக்கியமாகும்.

பல்லவர் காலத்தில் செங்கழுநீர், மருதாணி ஆகியவற்றை பார்ப்பன ரல்லாதோர் பயிர்செய்தால் வரி செலுத்த வேண்டி இருந்தது. அறிவு சமயங்களான சமணம், பௌத்தம் கி.பி.7-ம் நூற்றாண்டில் நடை பெற்ற சமயப்போரில் அழிந்தன என்பதற்குத் '***தமிழகத்தில் சாதி முறை***' என்னும் நூலில் டாக்டர் கே.கே. பிள்ளை தெளிவாக ஆதாரங்களோடு கூறியிருக்கிறார். மேலும் பல சான்றுகள் டாக்டர்

இராசமாணிக்கம் எழுதியுள்ள பல்லவர் வரலாற்றில் காணப் படுகின்றன.

*19*-ஆம் நூற்றாண்டில் ஓரளவு சமய உண்மைகளை உணர்ந்து போற்றுகிற சீர்த்திருத்தங்களை இராமலிங்கர் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மக்களிடையே சீர்த்திருத்தக் கருத்துகளை சிவவாக்கியர், இராமலிங்கர் பரப்பி என்ன முடிவு கண்டார்கள் என்பதும் நாடறிந்ததே. தமிழகத்தில் பெரியார் கண்ட தன்மான இயக்கம்தான் 20-ஆம் நூற்றாண்டில் வேரூன்றி ஆல்போல் வளர்ந்து வியக்கத்தக்க சாதகைள் புரிந்ததாகும்.

## பெரியாரின் பெருந்தொண்டு

பெரியாரின் ***குடியரசு*** ஏடு 20-ஆம் நூற்றாண்டின் சீர்திருத்தப் புரட்சி ஏடாகும். சமய உணர்விலிருந்து விடுபட்டால்தான் மனித சமுதாயம் சமநிலை, சமதர்மம் பெற்றிட இயலும் என்பது தந்தை பெரியாரின் உறுதிமொழியாகும். இங்கு மனுதர்மம் ஒழிந்து, மனிதத் தன்மை மலரப் பாடுபட்ட ஒரே நிறுவனம் திராவிடர் கழகம்தான்.

‘எவன் தன் தேவைக்கு மேல் சொத்து வைத்திருக்கின்றானோ அவனைக் குற்றவாளியாக்கித் திருடனுக்கு உண்டான தண்டனையைத் தரவேண்டும் என்றும், அப்படிப்பட்ட ஆட்சியை ஏற்படுத்த வேண்டும்’ என்று கூறியவர் பெரியார்தான்.

‘கைத்தொழில் பைத்தியத்தை விட்டொழித்து இயந்திரத் தொழில் முறையைக் கையாண்டு அனைவரையும் வாழ்விக்க வேண்டும்’ என்று துணிந்து கூறியவர் பெரியார்.

‘ஒரு தகப்பன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படி சம அந்தஸ்து, சமஉரிமை உண்டோ அதுபோலவே ஒரு நாட்டில் பிறந்த அனைவருக்கும் சம அஸ்தஸ்தும், சம உரிமையும் இருக்க வேண்டும்’ என்று துணிந்து கூறியவர் பெரியார்.

மேலைநாடுகளில் சமயம் மட்டுமே உண்டு. மக்களில் சாதி வேறு பாடுகள் இல்லை. எனவே, பொருளாதாரச் சமத்துவம் மேலை நாடுகளுக்குப் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால், நமது நாட்டில் முதலில் ஏற்பட வேண்டியது சாதிகளின் ஒழிப்பு, சாதிச் சண்டை ஒழிந்தால்தான் நாட்டில் சமதருமம் ஏற்படும். முதலாளித் துவம் மாயும்-பொதுவுடமை ஓங்கும்.



இருண்டு கிடந்த ஐரோப்பாவில் ஒளிப்பணி ஏற்படச் செய்தவர்கள் வால்டேர், இங்கர்சால், பிராட்லா போன்ற பகுத்தறிவுவாதிகள். அவர்களின் சேவையைக் குறைத்து மதிப்பிட இயலாது. இருப் பினும், அவர்கள் கூடப் பாரம்பரியமான பிறவி காரணமான இழிவுகளைப் பற்றி நினைத்துப் பார்த்ததாகச் சான்று ஏதும் இல்லை. ஆயிரம் ஆண்டுகளாகப் புரையோடிவிட்ட புண்ணுக்குத் தக்க மருந்து கண்டவர் பெரியார் ஒருவர்தான்.

## வையம் தெரிந்த வைக்கம் வீரர்

காங்கிரஸ்தான் தீண்டாமையை ஒழித்தது என்று பலர் தவறாக நினைக்கிறார்கள். அப்படி நினைப்பது பெரிய இமாலயப்புரட்டு ஆகும். உண்மையில் காந்தியார் தீண்டாமையை ஒழிக்க முயற்சி செய்யவில்லை. அவர் செய்ததெல்லாம் தீண்டப்படாதவர்களுக்கு ஒரு புதிய பெயரைச் சூட்டியதுதான். அதுதான் ‘அரிஜன்’ என்பது. பார்ப்பனன் பிராமணன் ஆனதுபோல, பழந்தமிழன் அரிஜன் ஆக்கப்பட்டான்.

*1921-22*-இல் குஜராத்தி மொழியில் காந்தியார் எழுதியக் கருத்துகள் ‘நவஜீவனி’ல் காணப்படுகின்றன.

> ‘இந்து சமூகமானது பலகாலம் நீடித்திருப்பதற்குக் காரணம், அது சாதி அடிப்படையில் அமைந்து இருப்பதே என நம்புகிறேன்’.
>
> ‘சுயராஜ்யத்தின் வித்தானது சாதிமுறையில் காணப்படுதல் வேண்டும். பலவிதமான சாதிமுறைகள், பல பிரிவுகள் ராணுவமுறைக்கு ஒப்பாகும். ஒவ்வொரு பிரிவும் எல்லா வற்றின் நல்லனவற்றிருக்காகவே வேலை செய்கிறது’.

வருண தர்மத்தைக் காந்தியார் எப்படிப் பாதுகாக்கிறார் என்பதை இதிலிருந்து அறியலாம். சாதி அடிப்படை இல்லாத நாடுகளில் நல்ல சமூகம் நீடித்து முன்னேறவில்லையா என்பதை வாசகர்களே, சிந்தித்து காந்தியாரின் உண்மை உருவத்தைக் கண்டறியலாம். சாதிமுறையை ராணுவ முறைக்கு ஒப்பிடுவது எவ்வளவு கேலிக் கூத்து.

அடுத்து, அவரின் எழுத்துக்களைக் கவனிப்போம். ‘சாதிமுறையை உண்டாக்கக் கூடிய ஒரு சமூகம் மகத்தான அமைப்புச் சக்தியைப் பெற்றிருக்கிறது’ என்றும் எழுதுகிறார். மேல் ஜாதிகாரர்களுக்கு

எவ்வளவு தாசனாக காந்தியார் அஞ்சிக் காலம் கடத்தினார் என்பதற்கு இது போதுமானதாகும். மேலும்,

‘சமபந்தி போஜனம், கலப்பு மணமும் சமூகத்தின் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்குத் தேவை இல்லை என நான் நம்புகிறேன். மேற்கூறியவைகளே என்னுடைய கருத்துகளாக இருக் கின்றமையால் சாதியை ஒழிக்க வேண்டும் என்பவர்களை நான் எதிர்க்கிறவனாக இருக்கிறேன்’.

காந்தியின் கருத்துகளில் முக்கிய பகுதிகளையே நான் குறிப்பிட்டி ருக்கிறேன். தீண்டாத மக்களுக்குக் காந்தியார் செய்த கொடுமை களைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் டாக்டர் அம்பேத்கார் எழுதிய ***தீண்டாதார்க்கு காங்கிரசும் காந்தியும் செய்தது என்ன?*** என்ற ஆங்கில நூலைப் படித்தால் விளக்கமாகப் புரிந்து கொள்ளலாம்.

## தீண்டாமையைத் தாண்டினார்

தீண்டாமையை ஒழிக்க உண்மையில் பாடுபட்டவர்கள் யார்? தென்னாட்டைப் பொருத்தவரைத் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டவர்கள் நீதிக் கட்சித் தலைவர்கள்தான். எம்.சி. இராஜா, சிவராஜ் போன்ற தலைவர்கள் மிக்க விவேகத்துடன் வேகத்துடன் அந்தக் காலத்தில் பாடுபட்டனர். டாக்டர் நாயர் போன்ற தலைவர் களின் இல்லத்தில் பல தீண்டப்படாதவர்கள் என்று உயர்சாதி யினரால் கருதப்பட்டவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டனர். டாக்டர் நடேசனார் நடத்திய ‘திராவிடர் இல்லத்’திலும் பலர் தங்கிக் கல்வி பயின்றனர். திரு. வீரையன் என்பவர் ஆட்சி மன்றத்தில் உறுப்பினராக இருந்தது திருவாளர் சத்தியமூர்த்தி போன்ற பார்ப்பனர்களுக்குப் பெரிய தலைவலியாக இருந்ததும் குறிப்பிடத் தக்கது.

நீதிக்கட்சி காலத்தில்தான் கம்யூனல் ஜி.ஓ. அமுல்படுத்தப்பட்டு அனைத்துச் சமூகத்தினருக்கும் சமநீதி வழங்கப்பட்டது. அரசியல் சீர்திருத்தமும் நடைமுறைப்பட்டு, வெற்றி பெறவேண்டுமானால் முதலில் சமுதாயச் சீர்திருத்தம் வெற்றி பெற வேண்டும் என்பதை உணர்ந்து நீதிக்கட்சியினர், சுயமரியாதை இயக்கத்தைப் போற்றிப் பல மாநாடுகளை நடத்தினர். தந்தை பெரியார் நீதிக்கட்சித் தலைவரான பிறகு சமுதாய சீர்திருத்தம் மேலும் பீடுநடைபோடத்



தொடங்கியது. தந்தை பெரியார் காங்கிரஸ் மகாசபையில் இருந்த காலத்திலேயே மேல்சாதியினர் ஆதிக்கத்தையும் சுரண்டலையும் எதிர்த்து வந்தார். ஜஸ்டிஸ் கட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி எல்லாச் சாலைகளிலும் யார் வேண்டுமானாலும் நடக்கலாமென்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டது. பார்ப்பனர் தண்ணீர் மொண்டு உபயோகப்படுத்துகிற குளத்திலேயும் கிணற்றிலேயும் தாழ்ந்த சாதியினரைத் தண்ணீர் எடுக்கலாம் என்று 1919-20-இலேயே ஜஸ்டிஸ் கட்சியினர் சட்டம் செய்தார்கள். இதெல்லாம் காந்தி யாருக்கு முன்பே நடந்த காரியங்களாகும்.

பெரியாரே இந்த உண்மைகளைக் கூறியிருக்கிறார்.

நான் தமிழ்நாடு காங்கிரசு கமிட்டி காரியதரிசியாக, தலைவனாக இருந்தபோதுதான் ரூ.48,000 தமிழ்நாடு காங்கிரசு கமிட்டிக்கு கிராண்ட் அனுப்பினார்கள். எதற்கு? பறையன், சக்கிலி, பள்ளனுக்கு வேறு பள்ளிக்கூடம், பறையனுக்கு வேற கோயில் கட்டிக்கொடு. மற்ற சாதி யானுக்கு மேல்சாதிக்காரனுக்கு என்று இருப்பதில் போய் ரகளை செய்யக் கூடாது என்று.

ஆனால், அந்தக் காலத்திலேயே ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் சட்டம் செய்து விட்டார்கள். ஒன்றாகப் படிக்கணும், படிக்கிறதிலே சாதி வித்தியாசம் காட்டக் கூடாது என்று. இன்றுங்கூட அந்த சட்டப்படி எல்லாம் பள்ளிக்கூடத்திலும் அமுல்நடத்துகிறது. பறையன், பஞ்சமன் எனப்படும் சாதி களிலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ள சில மாணவர் களைச் சேர்த்துக் கொண்டே ஆக வேண்டும். இல்லா விட்டால் அவர்களுக்குச் சர்க்கார் கிராண்ட் கிடைக்காது என்று திட்டம் செய்துவிட்டார்கள். கல்வி இன்ஸ்பெக்டர் வரும்போது கீழ்ச்சாதிப் பையன்கள் இல்லையா? என்பார். இல்லை யாரும் வரவில்லை என்றால், ‘இல்லாவிட்டால் போய்ச் சேர்த்துக் கொண்டு வா’ என்பார்.

வைக்கம் வீரர் பெரியார் காங்கிரஸில் இருந்த காலத்திலேயே ஜஸ்டிஸ் கட்சி ஆற்றிய அரும்பணி எத்தகையது என்பது எவரும் எளிதில் அறியலாம். அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலுக்குப் போட்டியிட்டபோது, தாழ்ந்தவர்கள் இல்லங்களில் சிற்றுண்டி, காபி, தேநீர், தண்ணீர்

அருந்தித் தம்மைப்போல ஓட்டுக் கேட்க வரும் காங்கிரசுத் தலைவர்களைச் சங்கடத்திற்கு ஆளாக்கினார்கள். கதர் அணிந்தவர் கள் ஓட்டு மட்டுமே கேட்டார்கள்.

வைக்கத்தில் போராட்டம் நடத்தத் தந்தை பெரியார் முக்கியக் காரணமானவர், இந்தப் போராட்டம் ஆரம்பமானதே ஒரு சிறு நிகழ்ச்சியினால் தான்.

மாதவன் என்ற பி.ஏ.,பி.எல்., படித்த ஒரு வக்கீல் ஒரு வழக்குக்காக ஆஜராக கோர்ட்டுக்குச் செல்வதை தடுத்தனர். அந்த கோர்ட்டு ராஜாவின் அரண்மனையில் இருந்தது. அப்போது ராஜாவின் பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கே பார்ப்பனர்கள் ஜெபம் முறை நடந்து கொண்டிருந்ததால், அந்த வக்கீல் ஈழவ (நாடார்) சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதால் தடுத்துவிட்டனர். அதனால் பெரியார் முன்னின்று வைக்கம் போராட்டத்தை நடத்தினார். வைக்கத்தில் ஊர் நடுவில் கோவிலும் அதன் வாசலுக்கு எதிரிலும் 4 நேர் வீதிகளும் இருந்ததால் போராட் டத்தை அங்கே நடத்தினார். கீழ்ச்சாதிகாரர்கள் யாரும் அந்த நான்கு புறத்திலும் கோயில வாசலுக்கு முன் நடக்கக்கூடாது. ஈழவர்கள், ஆசாரிகள், வாணியர்கள், நெசவாளிகள் யாரும் அந்தச் சாலை களில் நடந்து போகக்கூடாது. இதேநிலைதான் சுசீந்தரம் கோயில் பகுதிகளிலும் இருந்து வந்தது. பேராட்டம் தொடங்கியதும் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பெரியார் தடையை மீறினார். அவர், கைது செய்யப்பட்டு ஒரு மாதம் சிறைத்தண்டனையை அருவிக்குத்தி சிறையில் அனுபவித் தார். ஆனால், பிரச்சாரம் தடைபடவில்லை. ஈரோட்டிலிருந்து பெரியாரின் மனைவி நாகம்மையாரும், தங்கை கண்ணம்மாளும் மற்றும் சிலரும் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தனர். போராட்டத் திற்கு மக்கள் ஆதரவு பெருகிக் கொண்டே இருந்தது. போராட்ட வீரர்களுக்கு நிதியும் குவிந்தது. தேங்காய், காய்கறிகள் கூட அன்பளிப்பாகக் குவிந்து, போராட்ட முகாம் ஒரு கல்யாண வீடு போலக் காட்சியளித்தது. பெரியாரும் சிறையிலிருந்து வெளியே வந்தார். போராட்டத்தைத் தீவிரமாக வகுத்தார். அந்த நேரம் அவருக்குத் தமிழ் நாட்டிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், ‘நீ ஏன் நம் நாட்டை விட்டுவிட்டு இன்னொரு நாட்டில்போய் ரகளை செய்கிறாய்? அது சரியில்லை. அதை விட்டுவிட்டு இங்கு வந்து



வேலைகளை கவனி’ என்று எழுதப்பட்டு இருந்தது. அதை யார் எழுதினார்கள்? ஏன் அப்படி எழுதியிருப்பார்? தீண்டாமை ஒழிப்பில் உண்மையான பற்று அப்படி கடிதம் எழுதியவருக்கோ, அவருடைய கட்சிக்கோ இருந்திருக்க நியாயம் உண்டா என்பதைச் சிந்திக்க வேண்டும். அந்தக் கடிதம் எழுதியவர் வேறு யாருமல்ல. அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த ராஜாஜி அவர்களேதான். எப்படியும் பெரியாரின் வைக்கம் போராட்டத்தைத் தடுக்க வேண்டும் என்று மற்றுமொரு சூழ்ச்சி செய்யப்பட்டது. காந்தியாரிடம் முறையிட்டு அவர் இந்தப் போராட்டத்தில் முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள், சீக்கியர்கள் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்று பிரகடனப்படுத்தி விட்டார்.

சத்தியாக்கிரக முகாமில் இருந்த 1000-க்கு மேற்பட்ட தொண்டர்கள் பெரியாருக்கு ஆதரவு அளித்துப் போராட்டத்தை நீடிக்க உறுதிப் பூண்டனர். காந்தியார் சூழ்ச்சி பலிக்கவில்லை. போராட்டம் தொடர்ந்தது. மீண்டும் பெரியார் 6 மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து நம்பூதிரி பார்ப்பனர்கள் ‘சத்ரு சங்கார’ யாகம் நடத்தினர். ஆனால் அது விரோதிகளை அழிக்கவில்லை. மகாராஜா தான் திடீரென காலமானார். போராட்டத்திற்கு மேலும் தனிமதிப்பு ஏற்பட்டு விட்டது. ராஜாவின் கருமாதியை முன்னிட்டுச் சிறையில் இருந்த அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். ராணியும் பெரியாரிடம் ஒரு உடன் பாட்டிற்கு வர விருப்பம் தெரிவித்தார்கள். அப்போதும் ராஜாஜி தலையிட்டுக் காந்தியார்தான் ராணியுடன் பேசி உடன்பாடு காண வேண்டும் என்று காந்தியாரை வரவழைத்து ராணியோடு பேசவைத்தார்.

நாங்கள் சாலைகளைத் திறந்து விடுகிறோம். ஆனால் நாயக்கர் கோயிலுக்குள் போக வேண்டும் என்று ரகளை செய்தால் என்ன செய்வது? என்று ராணி தெரிவித்தார்கள். பின்னர் காந்தியார் பெரியாரைச் சந்தித்துப் பேசினார். பெரியார் கோவில்களை திறந்து விடும்படி கேட்கமாட்டோம் என்று எப்படி உறுதியளிக்க முடியும். அது காங்கிரசு இலட்சியமாக இல்லாவிட்டாலும் என்னுடைய இலட்சியம் அதுதான். வேண்டுமானால் இப்போது அப்படி கிளர்ச்சி இருக்காது என்று ராணியிடம் கூறுங்கள் என்று பதிலளித்தார். அதற்குப் பிறகு சாலையில் யார் வேண்டுமானாலும் நடந்து செல்லலாம் என்று ராணி உத்தரவு பிறப்பித்தார். வைக்கம்

போராட்டம் வெற்றி பெற்றது. பெரியார் வைக்கம் வீரர் ஆனார். ஈரோடு திரும்பினார்.

வைக்கம் போராட்ட வரலாற்றிலிருந்து பெரியார்தான் தனிப்பட்ட முறையில் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டவர் என்பதும் காந்திக்கோ, காங்கிரசு மகாசபைக்கோ அதில் உண்மையான பற்றோ, பங்கோ இல்லை என்பது புலப்படும்.

அடுத்து பெரியார் ஆலயப் பிரவேசக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். தம் அலுவலகத்தில் வேலை செய்யும் இரு ஆதித்திராவிடர்களுக்கு விபூதி பூசி கோயிலுக்குள் பிரவேசிக்கச் செய்தார். உடனே பார்ப்பனர்கள் அவர்களை உள்ளேவிட்டு வெளிக்கதவுகளைப் பூட்டி வழக்கு போடச் செய்தார்கள். சாமி தீட்டுப்பட்டு விட்டது என்று வாதாடித் தண்டிக்கச் செய்தனர். பிறகு உயர்நீதி மன்றத்தில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அது வெள்ளையர் ஆட்சிக் காலம்.

கோட்டயத்தில் ஒரு மாநாடு நடத்தி, கோயில் நுழைவு சம்பந்தமாகத் தீர்மானங்கள் போடப்பட்டன. அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் பெரியார்.

அடுத்து எர்ணாகுளத்தில் நடைபெற்ற மாநாட்டில் சாதி ஒழிப்புக் காகச் சாதியில்லாத மதமாகிய இஸ்லாம் மதத்தில் சேருவது என்று தீர்மானத்தை நிறைவேற்றினார் பெரியார். அதைத் தொடர்ந்து பலர் இஸ்லாம் மதத்தில் சேர்ந்தனர். கோயிலில் நுழையும் கிளர்ச்சியும் வெற்றி பெற்றது. அப்போது சமஸ்தான திவானாக இருந்த பார்ப்பனர் சர்.சி.பி. இராமசாமி அய்யர் இந்து மதத்தை காப்பாற்ற வேறு வழியின்றி எல்லாக் கோயில்களிலும் எல்லா இந்துக்களும் செல்லலாம் என்ற உத்தரவை இராஜாவின் அனுமதி யுடன் பிறப்பித்தார். கோயில்நுழைவு உரிமைக்காகப் பாடுபட்ட வரும் பெரியார் தான்.

## குருகுலத்தில் ஒரு நெருப்பு

அடுத்துப் பெரியார் நடத்திய குருகுலப் போராட்டத்தை கவனிப் போம். பெரியார் காங்கிரசுக் கமிட்டிச் செயலாளராக இருந்த போது நெல்லை மாவட்டத்தில் காங்கிரசு மகாசபை சேர்மாதேவி யில் ஒரு குருகுலம் ஆரம்பிக்கப்பட்டது. 10,000 ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டது. அதன் பொறுப்பாளராக திரு. வி.வி.எஸ். அய்யர்



நியமிக்கப்பட்டார். அந்த குருகுலத்தில் பார்ப்பனப் பிள்ளை களுக்கு உப்புமா சிற்றுண்டியும், மற்றவர்களுக்குப் பழையசோறும், கஞ்சி யும்தான் தரப்பட்டது. அதையும் பார்ப்பனப் பிள்ளைகள் மட்டும் உள்ளே தனியாக அமர்ந்து சாப்பிடவும், பார்ப்பன ரல்லாதவர்கள் வெளியே சாப்பிட வேண்டியும் வந்தது. ஓமந்தூர் இராமசாமி யாரின் மகனும் அந்தக்கொடுமையை அனுபவித்தவர் களில் ஒருவன். இது பெரியாருக்குத் தெரியவந்ததும் வி.வி.எஸ். அய்யரிடம் கேட்டார். அது உண்மைதான். அப்படிதான் அது இருக்கும் என்றும்; அவர் பதில் கூறினார். உடன் பெரியார் நிதி உதவியைத் தர மறுத்து விட்டார். இதுதான் தேச சேவையா என்று வி.வி.எஸ். அய்யர் ஆணவத்துடன் கேட்க, நீர் செய்வதுதான் தேசீயமா என்று கோபமாகக் கேட்டு, அன்று முதல் காங்கிரசு மகாசபையில் பார்ப்பனர் தமிழர் என்ற உணர்ச்சிக்கு வித்திட்டார்.

எனவே, நாட்டில் ஏற்பட்ட சமுதாயச் சீர்த்திருத்தங்களுக்கும் காந்தியாருக்கும், பார்ப்பனருக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையவே கிடையாது என்பதை பெரியாரின் சாதனைகளிலிருந்து அறியலாம். ஆனால், கிட்டிய வெற்றிகளை எல்லாம் காந்தியாரின் பெருமைக்குப் பயன்படுத்திக் கொள்வதில் பார்ப்பனர்கள் தவறியதில்லை.

காங்கிரசு மகாசபை கூடும்போது பார்ப்பனர் மட்டுமே சமைக்க ஏற்பாடு செய்யப்பட்டனர் என்பதும் பார்ப்பனரல்லாத மாநாடு களில், நீதிக்கட்சி காலத்திலிருந்து இன்றுவரை தமிழர்களே ஏற்பாடு செய்யப்பட்டனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

> ‘எதற்காகச் சோம்பேறி மேல்சாதியாக இருக்க வேண்டும். நாம் எதற்குக் கீழ்சாதிச் சூத்திரனாக இருக்க வேண்டும். இப்படி நம்மை சூத்திரனாக்கும் கடவுள் நமக்கு எதற்காக இருக்க வேண்டும்’

என்று துணிந்து குரல் கொடுக்கும் ஆற்றலைப் படைத்தவர் தந்தை பெரியார் ஒருவர்தான். நரிதந்திர முறைகளைக் கையாண்டு தமிழர் ஓட்டுகளைப் பெற்றுப் பதவியைக் கைப்பற்ற நினைத்தவரல்லர் பெரியார். காந்தி மகான் வழி என்று பித்தலாட்டம் பேசித் தமிழ் மக்களுக்குத் துரோகம் விளைவித்தவரல்லர் பெரியார். பொது வாழ்வை வைத்து அதன் மூலம் வயிறு கழுவ வேண்டும். வளம் தேடிக் கொள்ள வேண்டும் என்று நினைக்காத தன்னலமற்ற தியாகி பெரியார்.

அரசியல்வாதிகள் சாதி ஒழிப்பிற்கு முன்வர மாட்டார்கள் என்பதைப் பகிரங்மாக மக்களுக்கு எடுத்துக் காட்டியவர் பெரியார்.

‘நாம் 3000 வருஷமாக தேவடியா மக்கள் ‘இந்து லா’ படியேயும் நாம் சூத்திரர்கள். இந்த சாதி நோய் என்பது நீண்ட நாளாக நம்மைவிடாத ஒரு நோயாகும். கிராணிக் டிசீஸ் என்பார்களே அதுபோல! சிரங்கிற்குப் போடும் மருந்தையே புற்று நோய்க்கும் போட முடியுமா? தேவை யானால் அது பிடித்திருக்கும் பாகத்தையே அறுத்தல்லவா எறிய வேண்டும். அதன் வேரில் நெருப்புப் புனலோ எனும்படிச் செய்து வெந்நீரை ஊற்ற வேண்டும்’.

‘ஓட்டு வேண்டாத எங்களைத் தவிர வேறு எவனும் இவ்வளவு தைரியமாக எடுத்துச்சொல்ல முடியாது. ஓட்டு வாங்கிப் பிழைக்க எண்ணும் எவனும் எதற்காக சாதி, கடவுள், மதம் இந்த அரசாங்கம் தான் என்று கேட்க துணிய மாட்டான்’.

‘இந்த நாட்டை மூன்று பேய்கள் ஐந்து நோய்களும் அழுத்த மாகப் பிடித்திருக்கின்றன. ஒன்று கடவுள், இரண்டு ஜாதி, மூன்று ஜனநாயகம். இவை பேய்கள். நோய்கள் 1. பார்ப்பான் 2. பத்திரிகை 3. அரசியல் கட்சிகள் 4. சட்டசபை 5. சினிமா. மனித சமுதாயம் உருப்பட வேண்டுமானால் இவை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்’.

இப்படிப் புரட்சிகரமான கருத்துகளைப் பயமின்றி விளைவுகளைப் பற்றி யோசிக்காமல், எதிர்ப்புகளை ஏற்றுத் தீவிரப்பிரச்சாரம் செய்ததாக இந்திய வரலாற்றில் பெரியாருக்கு ஈடாகக் குறிப்பிட யார் இருக்கிறார். உருப்படியான சமுதாய மறுமலர்ச்சிக்குப் பெரியார் தந்தையாவார்.

இந்தியா குடியரசு நாடாகி விட்டது என்று அறிவித்தவுடன் தந்தை பெரியார் ஒருவர்தான், ‘ஜனவரி 26 ம் தேதி முதற்கொண்டு பார்ப்பான் இருக்கக் கூடாது. இருந்தால் 6 மாதம் கடுங்காவல் என்று சட்டம் எழுத வேண்டாமா? இனிமேல் சாதியைக் குறிக்கும் சின்னத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறவேண்டாமா? இன்னும் ஏன் பூணூல் இருக்கிறது? சமத்துவம், சுயராஜ்யம் ஏற்பட்ட பிறகு இந்த நிலை இருக்கலாமா’ என்று கேட்ட ஒரே குரல் தந்தை பெரியாரின் குரல் தான்.



## சுயமரியாதை இயக்கம் கண்ட பெரியார்

இன்று அரசியலில் ஈடுபடுபவர்கள் 100-க்கு 90 பேர் பதவிக் காகவோ, பிழைப்புக்காகவோ, சொத்து சேர்க்கவோ, தங்களின் தவறுகளுக்குப் பாதுகாப்பு தேடிக்கொள்ளவோ, மனைவி மக்களின் சுக வாழ்க்கைக்காகவோ, உழைக்காமல் அனைத்துச் சுகங்களையும் பெற்றிடவோ சேருகிறார்கள். யார் வேண்டுமானாலும் ஏதோ ஒரு பெயரில் புதிய கட்சிகளைத் தொடங்கலாம் என்றாகிவிட்டது. இந்திய ஜனநாயகத்திற்கே இந்தக் கூடாத போக்கு சவாலாக அமைந்து விட்டது. இலட்சியங்கள் காற்றில் பறந்து திக்குத் தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றன.

ஆனால், லட்சங்கள் கணக்கிட முடியாத அளவிற்கு அரசியல்வாதி களிடம் சிக்கிக்கொண்டு தப்பு தாளங்கள் போட்டுக்கொண்டு பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்க முடியாது திண்டாடுகின்றன. பெரியாரின் சரித்திரம் அப்படியில்லை.

பெரியார் காங்கிரசு மகாசபையில் சேருவதற்கு முன்னரே நல்ல மதிப்பும், மரியாதையும் பெற்றுத் திகழ்ந்தவராவார்.

பெரிய பணக்காரக் குடும்பத்திலே பிறந்தவர். செல்வாக்குப் பெற்ற பெரியவர்கள் குடும்பத்தில் பிறந்தவர். பிரபல செல்வச் சீமான் வீட்டுப் பிள்ளையாகப் பிறந்தார். ஈரோட்டில் வைதீகம், வளர, ஊக்கமளித்த குடும்பத்தில் தோன்றினார். ஈரோடு நகரசபைத் தலைவராக இருந்து நாணயம், நேர்மை, தொண்டுள்ளத்தோடு அனைவருக்கும் நல்லது செய்து பிரபலமாக இருந்தவர் பெரியார். காங்கிரசில் சேர்ந்துதான் பேரும், புகழும் பணமும் சம்பாதிக்க வேண்டுமென்ற நிலை பெரியாருக்கு இல்லை. இலட்சியங்களுக் காகவே அவர் காங்கிரசில் சேர்ந்தார் என்று கூறுவதைவிட காங்கிரசு மகாசபையின் செல்வாக்கிற்காகப் பெரியார் அரசியலுக்கு இழுத்து வரப்பட்டார் என்றே கூறவேண்டும். அதனால்தான் அவர் இலட்சிய அடிப்படையிலே கருத்து வேறுபாடு கொண்டு காங்கிரசை விட்டு வெளியேறி, சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவிக்கும் நிலை 1925-இல் உருவாகியது. பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் செல்வாக்கை முறியடிக்க பார்ப்பனர்களால் தேடிப் பிடிக்கப்பட்டவர் பெரியார்.

சுதேசி இயக்கம் - தேசபத்தர்கள் என்று யார் எதைப் பேசினால் அதனை அப்படியே நம்பும் நிலையில்தான் மக்கள் அந்தக்

காலத்திலே இருந்தனர். 100-க்கு 90 பேர்களாக இருந்த பார்ப்பனரல்லாதார் 100-க்கு 3 பேராக உள்ள பார்ப்பனர்களுக்கு அடிமைப்பட்டுச் சுரண்டப்பட்டு நலிந்து கிடந்த நேரத்தில் காங்கிரசு மகாசபையில் இருந்து தூய தொண்டாற்றிய தியாகராயர் அவர்களும், டாக்டர் டி.எம். நாயர் அவர்களும் திராவிட சமுதாயத்திற்குப் பார்ப்பனர்கள் தந்திரமாகக் கேடு செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு '***தன்னிந்திய நல உரிமைச் சங்கம்***' என்ற '***நீதிக் கட்சி***'யை ஆரம்பித்தார்கள். அப்போது பெரியார் காங்கிரசில் இருந்தார். காங்கிரசின் தவறானப் போக்கினைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் உண்மையாகப் பாடுபட்டார்.

நியாயமானக் கொள்கைகளை பிரச்சாரம் செய்து ஜஸ்டிஸ் கட்சியினர் யோக்கியமாகத் தேர்தலில் வெற்றியைப் பெற்று ஆட்சியில் அமர்ந்து மக்களுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்து வந்தார்கள். அந்தக் காலத்தில் அன்னிபெஸன்ட் அம்மையார்தான் மிகுந்த செல்வாக்குப் பெற்று பார்ப்பனர்களின் மதிப்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார். இருந்தும் அந்த அம்மையாரை அய்யங்கார்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் காந்தியாரைப் பிடித்து ராஜாஜியைத் தலைவராக்கினார்கள். ஜஸ்டிஸ்கட்சி எப்படி தோற்கடிக்கப்பட்டது என்பதை பெரியார் கூறும் உண்மைகளிலிருந்து ஓரளவு தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

> 'ஜஸ்டிஸ்கட்சி மந்திரிசபை வந்தபிறகு காங்கிரஸ்காரர்கள் கலாட்டா இன்னும் அதிகமாகிவிட்டது. ஜஸ்டிஸ் மந்திரிமார்கள் மக்களுக்குச் செய்கின்ற நன்மைகளைப்பற்றி சிறிதும் கவலைப்படாமல் அவர்கள் இவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள். அவர் ரயிலில் முதல் கிளாசில் போகிறார். இந்தமாதிரி குல்லாய் அணிந்திருக்கிறார் என்பன போல மக்களிடம் பேசித் தாங்கள் ஏதோ ஏழைகளைக் கரையேற்றுவதற்காக என்றே வந்து பிறந்தது போலவும் பேசி அந்தப்படியே ஏழைகளைப் போலவும் நடித்து வந்தார்கள். இவ்விதமான பிரச்சாரங்களால் மக்களும் ஏமாந்துப் போனார்கள். தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி தோற்றது'.

'அவர்கள் செய்த பல நன்மைகளில் மிகவும் முக்கியமானது இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்தரவாகும்' என்று பெரியார் பேசியிருப்பதிலிருந்து வகுப்பு உரிமை நீதிக்குக் காங்கிரசு



மகாசபையும் அதன் பார்ப்பனத் தலைவர்களும் எதிரானவர் என்பது புலப்படும்.

பெரியார் காங்கிரசில் இருந்தாலும் வகுப்புவாரி விகிதாசாரத்தில் பலமான கருத்து கொண்டவராக இருந்தார். ஆனால், திரு.வி.க., டாக்டர் வரதராஜுலு ஆகியோர் எப்போதும் வகுப்பு பிரதிநிதித்துவத்திற்கு எதிராகவே இருந்து வந்தனர். ஆனால், பெரியாருக்காக ராஜாஜியும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற பெயர் இல்லாமல், பார்ப்பனரல்லாதாருக்கு இவ்வளவு ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பது என்று பெரியாரின் விருப்பத்தை ஏற்றுக்கொண்டார். பின்னர் 100-க்கு 50 வீதம் ஒதுக்குவது என்று சம்மதித்தனர். ஆனால் கஸ்தூரிரங்க (அய்யங்கார்), சத்தியமூர்த்தி, சீனிவாச (அய்யங்கார்) ஆகியோர் ராஜாஜியை ஒழிக்க வரிந்துக் கட்டிக் கொண்டு அலைந்தார்கள்.

அடுத்து 1921-ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குப் பெரியார் தலைமை வகித்தார். அந்த மாநாட்டில் பார்ப்பனர்கள் சர்.பி. தியாகராயரை மோசமாக அளவுக்கு மீறிப் பேசினார்கள். அந்த மாநாட்டிலேயே பெரியாருக்கு காங்கிரசு மகாசபைமீது மனக்கசப்பு ஏற்பட்டது. அடுத்து காஞ்சிபுரத்தில் திரு.வி.க. தலைமையில் காங்கிரசில் மாநாடு நடைபெற்றது.

அதற்கு முன்னால் பார்ப்பனரல்லாதார் மாநாடு ஒன்று காஞ்சிபுரத்தில் கூட்டப்பட்டது. அதில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அமுல்நடத்திய அமைச்சர் முத்தையா, சர்.ஏ. இராமசாமி, சர்.ஆர்.கே. சண்முகம், வெள்ளியங்கிரி ராமலிங்கம் (செட்டியார்) ஆகியோர் கலந்து கொள்ள பெரியார் முற்பட்டு, வெற்றிக்கண்டார். வகுப்புவாரித் தீர்மானம் நிறைவேற்றி, காங்கிரஸ் மாநாட்டு விஷயாலோசனைக் கமிட்டியில் பெரியார் தீர்மானத்தை வாங்கிக் கொண்டு, அந்த மாதிரியான தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்று பேச ஆரம்பித்தனர். பெரியாரா வாதாடி வெற்றிபெறத் தயங்குவார்?

சட்டசபைக்கு காங்கிரஸ் இதுவரை போகாது இருந்ததினால் இந்தப் பிரச்சனையே எடுக்கப்பட வேண்டி அவசியமில்லாது போயிற்று. இன்றைய தினம் சுயராஜ்ய கட்சியாரின் சட்டசபைப் பிரவேசத்திற்கு அங்கீகாரம் கொடுத்து சுயராஜ்ய கட்சியார் சட்ட

சபைக்கு போவதற்கு உதவி செய்யுமான நிலை இருக்கிறது. ஆகவே, சட்டசபைக்குப் போவதால் அதில் பார்ப்பனரல்லாதாருக்கு 50 சதவிகிதம் பங்கு கொடுக்கத்தான் வேண்டும் என்று வாதாடினார்.

திரு.வி.க. அவர்கள் அடுத்தநாள் நடைபெறும்போது மாநாட்டில் இந்த தீர்மானத்தைக் கொண்டு வரும்படி பெரியாரிடம் கூறினார். உடனே ராஜாஜியும், சீனிவாச (அய்யங்கா)ரும் ஒரு புதிய தந்திரம் கையாண்டனர். 30 பேர்கள் தீர்மானத்தை ஆதரித்து கையெழுத்து வாங்கிக்கொண்டு வந்தால் தான் தீர்மானத்தை பிரரேபிக்கலாம் என்று திட்டம் தீட்டினர். பெருந்தலைவர் பெரியார் 50 பேர்களிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு போய்க் கொடுத்தார். பிறகு தீர்மானத்தை வாங்கிக்கொண்டுத் தமது முடிவுரையில் திரு.வி.க. அவர்கள் இந்த தீர்மானம் காங்கிரசின் அடிப்படைக் கொள்கைக்கு விரோதமாக இருப்பதனால் அனுமதிக்க முடியாது என்று கூறி விட்டார்.

30 பேருக்கு 50 பேராக கையெழுத்து வாங்கி அனுப்பி யிருக்கிறோம். விஷயாலோசனைக் கமிட்டியிலும், பொது மாநாட்டிற் குத் தீர்மானம் கொண்டு வரலாம் என்றீர்கள். அப்படி இருக்கும் போது இன்றைய தீர்மானம் சட்ட விரோதம் என்று சொல்வது என்ன நியாயம் என்று பெரியார் தலைவரைக் கேட்டார். பார்ப்பனர்கள் கூட்டமாகக் காலிப்பயல்களைப் போல உட்கார், உட்கார் என்று சத்தம் போட்டனர். பெரியார் சத்தம் போடுவதால் சாதித்துக் கொள்ளலாம் என்று நீங்கள் கருதுவீர் களானால், நாங்கள் வெளியே போக வேண்டியதுதான் என்று எச்சரித்து விட்டு அன்றே அப்போதே காங்கிரசிலிருந்து வெளியேறினார்.

வகுப்புவாத உரிமைக்காக காங்கிரசு மகாசபையை விட்டு வெளி யேறினார் பெரியார். காங்கிரசு மகாசபைக்கு முகசெலும்பாக, தூணாக விளங்கிய பெரியார் சுயமரியாதை இயக்கத்தினைத் தொடங்கிச் சமுதாயச் சீர்திருத்தத்திற்காக சமுதாய இழிவு நீக்கப் பணியாற்ற முற்பட்டார்.

பதவிக்காக காங்கிரசில் சேர்ந்தவர் அல்லர் பெரியார். பதவி கிடைக் காததால் வெளியேறிய அரசியல்வாதியல்லர். தனிக்கட்சி அமைத்துக் கொண்டு தலைவராகி விட வேண்டிய இழிநிலையில் இருந்த வரல்லர். பதவி இருந்தால் போதும் என்ற இலட்சியத்தை



அடகு வைத்துப் பித்தலாட்ட பேச்சுகள் பேசி இனத்தைக் காட்டிக் கொடுத் தவரும் அல்லர்.

ஒவ்வொரு வகுப்பாருக்கும் உரிய நீதி கிடைக்க வேண்டும் என்பதற் காக வாழ்நாள் முழுவதும் போராடிய உத்தமத்தலைவர் தந்தை பெரியார். எங்கும் எதிலும் பார்ப்பனர்களே ஆக்கிரமித்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்திக் கொண்டு இருந்த நிலையை மாற்றி யமைத்த பெருமை பெரியாருக்கு உண்டு.

எந்தப் பார்ப்பனர் காங்கிரசில் இருந்து பெரியாரை விரட்டக் காரணமாக இருந்தனரோ அதே பார்ப்பனர்களின் ஆதிக்கமும் தலைமையும் காங்கிரசில் இருந்து அடியோடு ஒழிவதற்கும் பெரியாரின் அரும்பெரும் தொண்டே காரணமாக இருந்தது.

பெரிய அறிவாளி, காந்தியின் வாரிசு, இந்த நாட்டின் சாணக்கியர், அரசியல் புலி, உடம்பெல்லாம் மூளையைக் கொண்டவர். ஆட்சிப் புரிய அவரை விட்டால் வேறுகதி இல்லை என்று காந்தியவாதி களால், பஜகோவிந்தம் பாடிப் புகழப்பட்ட ராஜாஜி 1954-ஆம் ஆண்டோடு காங்கிரஸ்காரர்களாலேயே விரட்டியடிக்கப்பட்டார் என்பது நாடறிந்தது.

## தமிழம் வென்றது ஆரியம் தோற்றது

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத நிலையில் கொல்லைப் புற வழியே சட்டமன்றத்தில் காங்கிரஸ் முதல்வராகி மக்கள் பிரதிநிதி களின் கருத்துக்கு விரோதமாக ***குலக்கல்வி திட்டத்தைக்*** கொண்டு வந்து பயங்கர அடக்கு முறையின் மூலம் தமிழர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டதன் விளைவாகக் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து ராஜாஜியின் கதையை முடிக்க முனைந்த போது தாமே கௌரவமாக முதல்வர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதும் வரலாற்று உண்மை.

தந்தை பெரியாரின் ஆதரவுடன் காமராஜ் முதல்வர் பதவியேற்று காங்கிரஸ் வரலாற்றில் ஒரு திருப்பத்தை உண்டாக்கினார். அன்று முதல் இன்று வரை காங்கிரஸ்கூட பார்ப்பனரல்லாதார் அமைப்பாகவே ஆகிவிட்டது. இன்று அமைச்சர் அவையில், சட்டமன்றத்தில் பார்ப்பனர்கள் இடம் பெறுவது இயலாத காரியமாகிவிட்டது. பார்ப்பனரல்லாதார் எத்துறையிலும் ஏற்றம்

பெற்றுப் பெரிய பதவிகளை வசிக்கும் காலம் மலர்ந்து விட்டது. இதனைச் சாதித்து காட்டி யவர் பெரியார்தான். 50 ஆண்டுகளுக்கு மேலாகப் பல தொல்லை களையும், கஷ்ட நஷ்டங்களையும் சகித்து உறுதியாக நின்று கொள்கை முழக்கமிட்டதன் பலனை இந்த நாட்டு மக்கள் பெற்றிடத் தலைப்பட்டு விட்டனர். விலாசம் தெரியாது ஊசலாடிக் கொண்டிருந்த பலர் காங்கிரஸ் கட்சியில் பெரிய பொறுப்புகளை வகிக்கும் காலம் மலர்ந்துவிட்டது. அன்று காஞ்சியில் பெரியாரை எதிர்த்து கூச்சல் போட்ட காலிகள், காங்கிரசில் கொட்டமடிக்கும் நிலை அடியோடு ஒழிந்துவிட்டது.

வகுப்பு உரிமைக்கு ஆபத்து ஏற்பட்டபோது 1950-ஆம் ஆண்டு பெரியார் பேசிய பேச்சில் முக்கிய பகுதியைத் தன்மானத் தமிழ் மகன் இல்லந்தோறும் நினைவில் இருக்கும்படி வைத்திருக்க வேண்டிய வாசகங்கள்.

> ‘தோழர்களே! நான் கூறுகிறேன். ஒவ்வொரு வகுப்பாருக்கும் இத்தனை உத்தியோகம்தான் என்று வரையறுத்து விட வேண்டும். அந்த எண்ணிக்கைக்கு மேற்பட்டு எவராவது எந்த வகுப்பினராவது ஓர் ஆண் அதிகமாக உத்தியோகம் பார்த்தால், அவர்மீது துராக்கிரக ஆக்கிரமிப்புக் குற்றம் சாட்டப்பட வேண்டும். அவனுக்கு வேலை கொடுத்த வனுக்கு நாணயக் குறைவு குற்றம் சாட்டியும் அதற்கு ஆன தண்டனை கொடுக்க வேண்ம். அப்போதுதான் அனைவரும் எல்லா வகுப்பினரும் சமநிலை எய்த முடியும்’.
>
> ‘இல்லையேல் மேலே இருப்பவர்கள் இன்னும் உயர உயரப் போய்க் கொண்டே இருக்கத் தாழ்ந்த நிலையில் சமுதாயத் தின் அடித் தளத்தில் வேதனையுறுவோர், மேலும் மேலும் தாழ்ந்து அழிந்து போக வேண்டிய நிலைமைதான் ஏற்படும்’.

## வித்தும் விளைவும்

விதையைத் தேர்ந்தெடுத்து நட்டுவிட்டால் மட்டும் மரமாகி விடாது. அதிலும் நல்ல விதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். குடம் குடமாக நீர் ஊற்றினால் மட்டும் விதை உடனே மரமாகி விடாது. அதிலும் நல்ல விதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். குடம் குடமாக நீர் ஊற்றினால் மட்டும் விதை உடனே மரமாகி விடாது. பெரிய ஆலமரத்தைத் தோட்டத்தில் காண வேண்டு



மென்றால், அதன் விதையை நட்டு செடியாக்கியவர்களால் காண முடியாது. மரத்தின் வளர்ச்சிக் காலத்தையும், மண்வளத்தையும், வளர்க்கப்பட்ட தன்மையும் பொறுத்ததுதான். அதே போன்றுதான் பெரியாரின் கருத்துக்களும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பிற்போக்கு நிலையிலேயே கிடந்து பழக்கப்பட்டுவிட்ட ஒரு சமுதாயத்தை நினைத்த மாத்திரத்தில் விருப்பப்படி மாற்றி அமைத்து விட இயலாது.

அதனால்தான் தந்தை பெரியார் விரும்பிய சமுதாய மாற்றத்தை அவரது காலத்திலேயே காண முடியவில்லை. ஆனால், அவர் விரும்பிய சமுதாயம் படிப்படியாக முன்னேறி வருவதும், சிறுசிறு மாற்றங்கள் படிப்படியாக ஏற்பட்டு வருவதையும் அவரது காலத்தில் காணமுடிந்தது.

அவர் அனைத்தும் சாதித்து விட்டார் என்று தவறான கணக்குப் போடுவதோ, பெரியார் என்ன செய்துவிட்டார் என்று குறை காண்பதோ சரியன்று! சிறு உளியைக் கொண்டு மலையைச் செதுக்குவதற்கும் டைனமைட் வெடி வைத்துத் தகர்ப்பதற்கும் வித்தியாசமுண்டு. சில நாடுகளில் புரட்சி வெடித்து, சர்வாதிகார முறையில் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு, சாதனைகள் குவிக்கப் பட்டிருக்கின்றன. பெரியார் மனிதனை மதித்து அவனது அறியாமையை நீக்கத் தன் வாதங்களின் மூலம் திருத்தி தவற்றை உணரச் செய்து பகுத்தறிவுவாதியாக வாழச்செய்தார். அதற்காக அவர் பலாத்காரத்தை நாடவில்லை. பகுத்தறிவையே துணைக் கொண்டார். பதவியை நாடவில்லை. புத்தியைப் பயன்படுத்தினார். 1925-ஆம் ஆண்டு ஆணவமாக நடந்துகொண்ட ஆரியர்களை 1954-ஆம் ஆண்டில் அதாவது 30 ஆண்டுகளில் அறிவு வழிக்குக் கொண்டு வந்தார். இந்தச் சாதனை ரத்தம் சிந்தாத சத்தமில்லாத புரட்சிச் சாதனையல்லவா!

பெரியாரின் வெண்தாடியையும் உருவத்தையும் கண்டு குஜராத், மராட்டிய பெண்மணிகள் அவரை ஒரு பெரிய மகான் என்று தப்புக் கணக்கு போட்டு, அவரது தரிசனம் பெற பூ,பழங்களுடன் வந்தனர். தந்தை பெரியார் கோபப்படாமல் அவர்கள் கொண்டு வந்த அன்பளிப்புக் காணிக்கைகளை பெற்றுக்கொண்டு அவர்கள் மனம் புண்படும்படி எதையும் பேசாமல் சிரித்தப்படியே தரிசனம் கொடுத்து வழியனுப்பி வைத்தார்கள். அப்படி ஒரு புரட்சிவாதி

நடந்து கொண்டதாக வரலாறு இல்லை. எதையும் காலம் வரும் போது சாதிக்கலாம் என்ற உறுதியுடன் பாதை தவறாமல் பாடுபட்டு அமோக வெற்றியைக் கண்டவர் பெரியார். எளிய நடையில், எவர் மனமும் புண்படாத வகையில் ஒளிவு மறைவு ஏதும் இல்லாமல், ஆணித்தரமாக மணிக்கணக்கில் பேசி மக்களின் இதயத்தைக் கவர்ந்தவர் பெரியார். எப்படி பேசினால் மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்வார்கள் என்ற அணுகுமுறை அவருடைய மேடைப் பேச்சில் முழுமையாகக் காணப்படும். லெனினுக்கு எப்படி ஒரு ***ஸ்கார்*** ஏடும் காந்திக்கு ***அரிஜன்*** ஏடும் பயன் பட்டதோ, அப்படி தந்தை பெரியாருக்கு ***குடியரசு*** ஏடு பயன் பட்டது. சாமி கைவல்யத்தின் புரட்சிக்கருத்துகளும், ம. சிங்கார வேலரின் கட்டுரைகளும், மூட நம்பிக்கைகளில் மூழ்கி கிடந்த மக்களுக்கு தெளிவு தரும் கருவிகளாக விளங்கின. கடவுளை எதிர்ப்பதோ, பார்ப்பனர்களைக் கண்டிப்பதோ அவ்வளவு எளிதான காரியமில்லை. அதற்கான பக்குவம் பெரியாரிடம் ரொம்ப இருந்தது. வடகோடியில் இருந்தாலும், வைதீகத்தில் பற்று கொண்டவரானாலும், பார்ப்பனர்களின் பெயரைக் கூறாமல் தமிழகத்தில் அரசியல் நடத்தமுடியாது என்கிற நிலை ஏற்பட்டி ருப்பது மறுக்க முடியாத காலகட்டமும் இந்திய அரசியலாரின் உண்மை நிலையுமாகும்.

## பெரியாருக்கு வாய்த்த பேறு

இத்தாலி நாடு ஒரு மாஜினியையும், கரிபால்டியையும் பெற்றதுண்டு, ஜெர்மனி ஒரு மார்க்சையும், பிரான்சு ஒரு ரூசோவையும், ரஷ்யா ஒரு லெனினையும், அமெரிக்க நாடு ஒரு லிங்கனையும் பெற்றதுண்டு. ஆனால் சூழ்நிலையும், சந்தர்ப்பமும் பெரியாருக்கு அமையவில்லை. ஏன் அவர்களே கூட இங்குப் பிறந்திருந்தால் ஆரியம் அவர்களை அழித்து வெற்றி பெற்றிருக்கும். காந்தியாரின் வர்ணாஸ்ர தர்மத்தை எதிர்த்தோ, ஆரிய வஞ்சகச் சூழ்ச்சிகளை எதிர்த்தோ, பார்ப்பனர்களின் நரிதந்திரத்தை எதிர்த்தோ அவர்களால் ஒரு நாள்கூட ஜீவித்திருக்க முடியாது. எதையும் யார் சொன்னாலும் பகுத்தறிதல் பாபம் என்று நினைத்திருந்த மக்களிடையே, அவர்கள் பிறக்கவில்லை. மோட்சம், நரகம், விதி, மடமை, சாதிக்கொடுமை, தீண்டாமை கொண்ட சமுதாயத்தில் அவர்கள் பிறக்கவில்லை. அதனால்தான் அவர்கள்



விரைவில் வெற்றி கண்டார்கள். அவனின்று ஓர் அணுவும் அசையாது என்ற நம்பிக்கையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நம்பிக்கை கொண்ட மக்களிடையே பிறந்தவர் பெரியார். தொட்டால் தீட்டு, பட்டால் பாவம் என்ற மூடநம்பிக்கையில் ஊறிப்போன மக்களிடையில் பிறந்தவர் பெரியார். அதனால்தான் பெரியாரின் தொண்டு முழு வெற்றியைக் காணவில்லை. முழு வெற்றியின் நிச்சயத்தில் நம்பிக்கை கொண்டி ருக்கும் நிலையில் தான் மக்களை இட்டுச் சென்றார் பெரியார்.

ஆரியர் வாழ்வும் வரலாறும் பண்பாடும் வேறு. அவர்கள் நாகரிகமும் திராவிடர்களுக்கும், மனித இனத்திற்கும் முரண் பட்டது என்பதைப் பள்ளிக்குச் செல்லாத பட்டிக்காட்டு மக்கள் கூடப் புரிந்து கொள்ளும் வகையில் பெரியாரின் அயராத உழைப்பு இருந்தது.

கடவுள் என்றால் அதெல்லாம் வெறும் புருடா என்றும், புராணம் வெறும் புளுகுமூட்டை என்றும், சாஸ்திரங்கள் வெறும் ஏமாற்றும் குப்பை என சாதித்துப் பேசியவர் பெரியார்தான். எப்படி ஒரு பெரிய ‘ரோடு ரோலர்’ சறுகல் பொறியால் அனைத்தையும் தன் பளுவினால் சீர்படுத்தி சமன் செய்கிறதோ அதைபோல பெரியார் தம் போர்க்குண அறிவு உருளையினால் அறியாமை, மூட நம் பிக்கை முழுவதையும் அழித்துச் சீர்படுத்தி அறிவொழுக்கம் பெறச் செய்தார். பலருக்குக் கறுப்பைக் கண்டால் கருவிழியும், காரிகை யின் கூந்தலும்தான் நினைவிற்கு வரும். ஆனால், பெரியாருக்குக் கறுப்பு தன் மக்களின் இழிநிலையைத்தான் புலப்படுத்தும். அவரைப் பொருத்தமட்டில் தான் குளிக்கும்போது கூட கருப்புத் துண்டைப் பயன்படுத்தத் தவறியதில்லை. சட்டை, பாவாடை என்று ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தும் சக்தியைப் பெற்றிருந்தார். அப்படை வீரர்கள் எப்போதும் கறுப்பு உடைதான் அணிய வேண்டும் என்று திராவிடர்க் கழகத் தோழர்களுக்குக் கட்டளை இட்டார்.

பெரியாரின் பாதையில் இருந்து பிரிந்து சென்றவர்கள் அவரை எதிர்க்கவும் முடியவில்லை. துணிந்து ஆதரிக்கவும் முடியவில்லை. அப்படிப்பட்டவர்கள் பொதுவாழ்வில் பல வசதிகளைத் தேடிக் கொள்ள முடிந்ததே தவிர, பெரியாரின் முன்னேற்ற முற்போக்கு விரைவுப் பயணத்தில் ஈடுப்படுத்திக் கொண்டு கரடு முரடான

பாதையைச் செப்பனிட்ட பெருமைக்குச் சொந்தக்காரர்களாக ஆகி விட முடியவில்லை.

பெரியார் படைத்த அற்புதங்களை சமயம் பார்த்துப் பயன்படுத்திக் கொள்ளத்தான் முடிந்தது. அது போன்று சிவப்பு நிறத்தை கண்டால் கூந்தலில் மணக்கும் ரோஜா மலர்களையும், கொவ்வை இதழ்களுமே பலருக்கு நினைவிற்கு வரும். ஆனால், தந்தை பெரியாருக்குத் தம் இனமக்களின் இழிவை நீக்க மகத்தான புரட்சி, அதுவும் அறவழியில் அவசியம் செய்கிற எண்ணம்தான் தோன்றும். 1944-ஆம் ஆண்டு முடிவு செய்து மக்களுக்கு பெரியார் அளித்த கொடி கறுப்புச் சதுரத்தில் மையமான சிவப்பு வட்டம். இந்தக் கொடிக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் ஏராளம். அதற்காக எதிரிகளின் தாக்குதலுக்கு ஆளானவர்கள் - ரத்தம் சிந்தியவர்கள், உயிர்த் தியாகம் செய்தவர்கள், கைகால் இழந்தவர்கள் - ஏராளம் ஏராளம்.

வேளை தவறாமல் வெந்த சோற்றைச் சாப்பிடுகிறோம். ஆனால், சேற்றிலும், சகதியிலும், பாடுபட்டு கூழோ, கஞ்சியோ சாப்பிட்டு வயலில் பாடுபட்ட விவசாயியை எத்தனை பேர் நினைக்கிறோம்? பாறையின் வெடிப்புக்கும், மணலின் சரிவிற்கும் அஞ்சாது சுரங்கத்துனுள் சென்று தங்கத்தை வெட்டி எடுத்தவனை எத்தனை பேர் நினைக்கிறார்கள்? ஒவ்வொரு விரலுக்கும் மோதிரம் வேண்டும், கடிகாரத்திற்கு தங்கசெயின் வேண்டும் என விரும்பும் ஆண்களானாலும் சரி கொண்டையில் தங்க பின்னையும் நவரத்தின நெக்லெசுகள், அட்டிகை, வங்கி, ஒட்டியானம் முதலியனவும் விரும்பும் தாய்க்குலத்தினராலும் சரி, ஒருகணம் எண்ணிப் பார்ப்பதில்லை. அதைப் போலவேதான் பெரியாரின் இலட்சியத்திற்காகப் பாடுபட்டவர்களையும் இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்ள ஆவல்படுவதில்லை. ஆனால் பெரியார் உண்மையாக உழைத்த தொண்டர்கள் தன் வாழ்நாளில் மதித்தவர் ஆவார். அஞ்சா நெஞ்சன் அழகிரி மறைந்தபோது,

> ‘அவரைப் போல தளராத உறுதியுடன் தொடர்ந்து தொண்டாற்றியவர்கள் யாராவது உண்டா என்றால், கண்டுப் பிடிப்பது சிரமம் என்று துணிந்து கூறுவேன். 1949-ஆம் ஆண்டு முடிவெய்துகிறவரையில் ஒரே கொள்கை. கொள்கை மாறியதோ, என்னுடன் கருத்து வேறுபாடு கொண்டதோ கிடையாது. அவருக்கு அடிக்கடிப் பணக்கஷ்டங்கள்



> வருவது சகஜம். ஆனால், அழகிரி தனக்கு எவ்விதத் தொல்லைகள் ஏற்பட்ட போதிலும் தம் கருத்தையோ, தொண்டையோ கொஞ்சம்கூட மாற்றிக் கொண்டதில்லை’

என்று எழுதியிருப்பதிலிருந்து தந்தை பெரியாரின் பாராட்டைப் பெறுவதற்கு எப்படிப்பட்டவர்களால் முடியும் என்பதும், எப்படிப் பட்டவர்களின் உழைப்பில் இந்தத் திராவிடர் இயக்கம் ஆல்போல் வளர்ந்திருக்கிறது என்பதும் புத்திக் கூர்மையுடன் கண்டறிய முடியும். அது மட்டுமல்ல, பொதுவாழ்விலிருப்பவர்களுக்குப் பெரியாரின் இலக்கண போதனையாகவும் கொள்ள வேண்டும். ஆனாலும் கொள்கையைக் காற்றில் பறக்க விடுவதும், பதவிக்காக அலைவதும், பணத்திற்காகவே செயல்படுவதும் கேலிக்குரிய அளவுக்குப் பெருகி வந்திருக்கும் இந்திய அரசியல்வாதிகள் சிந்திக்கவே இதனைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

யார் எது நினைத்தாலும், யார் என்ன செய்தாலும், தந்தை பெரியார் இலட்சிய நோக்கை ஒரு வினாடிகூட விட்டு மறந்ததில்லை. வாரத்திற்கு ஏழு நாட்கள்தானா? ஒரு நாளைக்கு 24 மணி நேரம் தானே இருக்கிறது என்று கவலைப்பட்ட ஒரே தலைவர் பெரியாராகத்தான் இருக்க முடியும். அவரது இலட்சியம் நிறைவேற அவர் அல்லும் பகலும் பம்பரம் போலச் சுழன்று சுழன்று இறுதிவரை பாடுபட்ட வர் பெரியார். உடல் எவ்வளவு தளர்ந்திருந்தாலும், அந்தத் தளர்வு அவரது பேச்சில் காணப்பட்டதில்லை. பல நேரங்களில் அவரைக் குணப்படுத்திய பெரிய டாக்டர்கள் நீங்கள் உடல்நலம் கவனித்துக் கொள்ள வேண்டும். முழு ஓய்வு தேவை. பயணமோ, கூட்டங்களில் பேசுவதோ கூடாது என்று கூறியிருந்தும், அவர் மருத்துவமனை யிலிருந்து வெளியே வந்த உடனே எந்த களத்தை நோக்கிச் செல்லலாம். போர் முழக்கம் செய்ய வேண்டும் என்று புறப்பட்டு விடுவார். காலமெல்லாம் அவர் ஒரு போராட்ட வீரராகவே திகழ்ந்தார்.

## உயர் எண்ணங்கள் மலரும் சோலை

உயர் எண்ணங்கள் மலரும் சோலை என்று தந்தை பெரியார் அவர்களைப் பற்றி கருத்து மணக்கப் பாடினார் புரட்சிக்கவி பாரதிதாசன். அவரின் சிந்தனை மனித சமுதாயத்தை ஒரு புத்தம் புதிய உலகைப் படைக்க வேண்டும் என்பதுதான்.

என்ன இல்லை நம் நாட்டில்? ஏன் கையை ஏந்த வேண்டும் வெளி

நாட்டில் என்று கூறுபவர்களும், வேலை கொடு அல்லது சாப்பாடு போடு என்று மயக்கு மொழி பேசுபவர்களும், இதற்கு இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம் உணவும் பஞ்சமே இருக்காது- பசுமைப் புரட்சிக்கும் பாலம் அமைத்து விட்டோம் - எங்களுக்கே ஓட்டுப்போடுங்கள் என்று சுவையான உணவை அருந்தி விட்டு தொந்தி பெருத்த அரசியல்வாதிகள்; உழுபவனுக்கே நிலத்தைப் பட்டா செய்து தந்துவிட்டோம். மாடு வாங்க, கிணறு வெட்ட, விதை வாங்க விவசாயிகளுக்குக் கடனைத் தந்து விட்டோம். இனி எல்லோரும் வயிறாரச் சாப்பிட்டு நிம்மதியுடன் இருக்கலாம் என்று ஆண்ட அரசியல் பரம்பரையினர் கித்தாப்பு பேசுவோரும், தந்தை பெரியார் மனித உணவு பற்றி தெரிவித்திருக்கும் கருத்துகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

> 'பார்ப்பானும், சைவனும் மாமிசம் சாப்பிடுவதில்லை. அதனால், அவர்கள் தங்களுக்குப் பெருமை ஏற்படுத்திக் கொண்டதோடு, மாமிசம் சாப்பிடுவதை வெறுப்பதும், தாழ்வாய்க் கருதுவதுமான முறையில் கீழ்மக்களாகக் கருதுகிறார்கள். இந்தப் பார்ப்பனரின் முன்னோர் ஆடு, மாடு மாத்திரமல்லாமல் பன்றி, கழுதை, குதிரை, எருமை, மனிதன் வரை சாப்பிட்டதாக இவர்களே உண்டாக்கி வைத்திருக்கும் வேத, சாஸ்திர மத ஆதாரங்களை மறந்துவிட்டு வக்கனை பேசுகிறார்கள்'.

காப்பி சாப்பிடுவதும், டீ சாப்பிடுவதும், கெட்ட பழக்கம். இதனால் பாலுக்கும் சர்க்கரைக்கும் பஞ்சம். நெல் விளையும் நிலங்களில் கரும்பு பயிராக்கப்படுகிறது. நாட்டு மக்கள் பெரிதும் தேவாங்கு களாகவே வளர வேண்டியிருக்கிறது. சத்தற்ற சில காய்கறிகள் பயிரிட நிலமும் உழைப்பும் பாழாகிறது. மாட்டு இறைச்சி அதிகமாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும். விவசாயத்துறையில் பெரிய மாற்றம் வேண்டும். உணவுத் துறையில் பெரிய மாற்றம் வேண்டும். பெரும்தீனி தின்பதற்குப் பதிலாக மின்சாரம் போன்று சக்தி வாய்ந்த உணவுகளை விஞ்ஞானிகள் கண்டு பிடித்து மனித எந்திரத்தை இயக்க முன்வர வேண்டும் என்பது பெரியாரின் விருப்பம்.

பெண்கள் மலர்களைக் கொண்டு அலங்கரித்துக் கொள்வதையும், மேடையில் மாலைகள் அணிவித்து மதிப்புத் தேடிக் கொள் வதையும் பெரியார் விரும்பாதவர். இலைகளில்தான் உணவு



சாப்பிட வேண்டும் என்று நினைப்பதையும் அவர் கண்டிப்பவர் ஆவார். இத்தீய பழக்கங்களால் பயனுள்ள பூமி வீணாக்கப்படுகிறது என்பதும் மனித உழைப்பும் பாழாக்கப்படுகிறது என்பதும் அவரது கருத்து.

## ஆடம்பரம் வெறுத்த அறிவர்

மனித சமுதாயத்திற்கு அவசியமில்லாத, தேவைப்படாத பொருள் கள் பயிரிடுதலும், அதற்காக நேரத்தையும் உழைப்பையும் வீணாக் குவது தவிர்க்க வேண்டுமானால் மனிதன் உயிர் வாழவும் தேவை யான சத்தான உணவு முறையையும், விவசாய முறையையும் மாற்றம் செய்ய வேண்டுமென்பது பற்றி சிந்தித்தவர் பெரியார்.

> 'உலக நாடுகளின் உணவு முறையைப் பார்த்தால் நமது நாட்டில் ஏன் இத்தனை விதவிதமான உணவு வகைகள் என்று கேட்கத்தான் தோன்றும்'.
>
> 'பற்பலவகை உணவு வகைகள் ஒரு மனிதனுக்குத் தேவை தானா?'
>
> 'வெறும் ரொட்டி, பிஸ்கட், வெண்ணை, ஜாம், சூப், முட்டை, இறைச்சி என்று குறிப்பிடத்தக்க சில உணவு வகைகளை மட்டுமே அறிந்த மக்கள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் எல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். எப்படி எல்லாம் வாழ்கி றார்கள்? நாம்...?'

அடுத்து உடையைப் பற்றி தந்தை பெரியாரின் கருத்தைக் கவனிப்போம். எல்லோரும் ஒரேவித உடை அணிந்து ஒரு சாயலாகவே இருக்க வேண்டும் என்று துருக்கி நாட்டில் உத்தர விட்டார் கமால்பாட்சா. அவர் அந்த உத்தரவு பிறப்பித்தற்குக் காரணம் வேறு.

உடையில் ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசம் கூடாது என்று கருதியவர் பெரியார். தன்னைப் போலவே தம் மனைவி நாகம்மை யாருக்கு கொஞ்சகாலம் லுங்கி அணியச் செய்தார் பெரியார். ஆண், பெண் இனத்தைக் கண்டறியும்படி பெயர்கள் இடக்கூடாது என்பதும் அவரது கருத்து. பெண்கள் கூந்தலை நீளமாக வளர்த்துக் கொள்வது தேவையற்றது. தொல்லை தருவது என்பதும் அவரது கருத்து. ஒரு சமயம் பெண் ஆணைப் போலவே 'கிராப்' வெட்டிக் கொண்டால் 500 ரூபாய் பரிசு தருவதாக அறிவித்தவர் பெரியார்.

ஆடம்பரம் விரும்பத்தக்கதன்று. அலங்காரம் தேவையற்றது. பெண்களில் முன்னேற்றத்தைத் தடுப்பது. நகை, துணி அலங்கார வேடம் கூடாது என்பது அவரது கருத்து. அதே நேரத்தில் எளிய சுத்தமான சிக்கனமான, வசதியான உடையை இருபாலரும் கையாள வேண்டும் என்பது அவரின் விருப்பம்.

ஆளுக்கு ஆள் சொந்த வீடு தேவை என்றும், வீட்டுக்கு வீடு சமையல் அறைவேண்டும் என்கிற நிலையை ஒழித்துத் தங்கும் உணவு விடுதிகள் பரவலாக ஏற்பட வேண்டும் என்பது பெரியாரின் திட்டம். இதன் மூலம்தான் குடும்பத் தொல்லையைக் குறைத்துக் கொள்ளலாம். எல்லோரும் நிம்மதியாக வாழலாம். சிக்கனமாக வாழலாம். ஆணும் பெண்ணும் சேர்ந்து வேலைக்குச் சென்று குடும்பப் பொருளாதாரத்தைச் செழுமையாக்கிக் கொள்ளலாம் என்பது பெரியாரின் விருப்பமாகும்.

பெரியார் எத்தகையை சமநீதியைக் குறிக்கோளாகக் கொண்டவர்- எப்படிப்பட்ட சோஷலிசம் வரவேண்டும் என்று கருதினார் என்பதும் அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டு மாளிகையிலே பிறந்த மகானுபவர்களாக வாழ்ந்துவரும் கூட்டம் எண்ணிப் பார்க்க வேண்டும். கூட்டு வாழ்க்கை முறைதான் தந்தை பெரியாரின் இலட்சியம். தனிஉடைமையை வெறுத்தார். எல்லோரும் வாழ வேண்டிய இடம்தான் இந்த உலகம் என்பது அவருடைய சித்தாந்தம்.

## கூட்டுத்துவக் கோட்பாடு

மனித உடலில், தனித்தனி தத்துவார்த்தத்தை எடுத்துவிட்டு கூட்டுறவுத் தன்மை என்ற இரத்தத்தைப் பாய்ச்ச வேண்டும்.

மேலும், தனியுடைமை ஒழிகிற ஒரு பொது உடைமை நாட்டில் கடவுளுக்கோ, மதத்திற்கோ, மூட நம்பிக்கைக்கோ இடமில்லை. அங்கு அறிவுதான் முதலிடம் பெறும். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேச்சுக்கே இடமில்லை சமுதாயத்தில் எந்த வேலை செய்தாலும் சமமானவர்கள் என்கிற நிலையையே பெரியார் விரும்பினார் என்பது தெளிவு.

பொதுவுடைமை என்றால் மட்டும் பெரியாருக்குப் போதாது. அங்குப் பொதுவுரிமை மலர வேண்டும்.

தனிவுடமை இருக்கும் வரை தனி உரிமையும் தலை காட்டும்.



அதனால்தான் நாட்டுக்கு ஏற்றது எல்லோருக்கும் பொதுஉரிமை வேண்டும் என்று பாடுபட்டார்கள். 'நமக்காக எல்லோரும் - எல்லோருக்காக நாம்' என்ற அடிப்படைத் தத்துவத்தை ஆயிரத்தில் ஒரு பட்டதாரி படித்து மறந்திருக்கலாம். ஆனால், அதைப் படிக்காத பாமர மக்களுக்குப் புரியும்படியாகப் பேசியும் எழுதியும் வந்த பெரிய அரசியல் பொருளாதாரப் பேராசிரியர் தந்தை பெரியார் என்றால் நிதானபுத்தியும் நல்லறிவும் பெற்றவர்கள் ஏற்கத் தயங்க மாட்டார்கள்.

## ஓருலகத் திட்டங்கள்

இயற்கை இன்பத்திற்காக ஒரு பெண்ணுடன் வாழ்வது போய், தனக்கு ஒரு வாரிசு வேண்டும். அந்த வாரிசு கொள்ளிச் சட்டியை ஏந்திச் செத்த பிணத்திற்கு தீ மூட்ட வேண்டும் என்கிற நிலையுள்ள நாடு இது ஒன்றுதான். இறந்த பிறகும் தன் பெயரைச் சொல்லி, குலத்தைச் சொல்லி கோத்திரத்தைச் சொல்லி, புரோகிதனுக்குக் கொட்டி அழுதால்தான் தனக்கு மோட்சம் கிடைக்கும் என்று நம்பிய ஆண்களைக் காணக்கூடிய நாடும் இதுதான். அதனால்தான் பெரியார் சொத்தெல்லாம் சர்க்காருடையது என்று அறிவு பூர்வமாக வழிகண்டார்.

பிறக்கின்ற குழந்தைகளை அரசே ஏற்றுக் கொண்டு பேணிக்காக்க வேண்டும் என்பது பெரியாரின் கருத்துகளில் முக்கியமானதாகும். அதனால், இந்த நாட்டைப்பிடித்த சாதிச் சனியனும் தீண்டாமைச் சனியனும் அறவே ஒழிக்கப்பட்டு சமதர்மக் குடியரசு மலரும் என்பது அவரது திட்டம்.

பிள்ளைகளைக் காக்கவேண்டுமே, அவர்களைப் படிக்க வைக்க வேண்டுமே, வேலை தேடித்தர வேண்டுமே, மணவாழ்க்கையில் ஈடுபடுத்த வேண்டுமே, அவர்களுக்கு சொத்து வேண்டுமே என்கிற கவலை பெற்றோர்களுக்கு அறவே இருக்கக் கூடாது என்பது பெரியாரின் கருத்து. அவற்றை அரசாங்கமே பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது அவரின் விருப்பம்.

## குடும்பக் கொள்கைகள்

வியாபாரம் நடத்துவது போன்றுதான் வாழ்க்கையும் என்கிறார் பெரியார். மேலை நாடுகளில் திருமணம் என்ற ஓர் அமைப்பு முறை ஒரு சில நாடுகளில் இருப்பினும், பிரிந்து போகும் நிலை மிகவும்

எளிதாகவே அந்த நாடுகளில் உள்ளன. கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற வைதிக மூடநம்பிக்கை அங்கெல்லாம் இல்லை. மனம் ஒத்த உண்மைக் காதல்தான் அவர்கள் கையாண்டு வருவது. விருப்பமில்லாது வாழ்க்கை நடத்துவதை மானக்குறைவாக அங்கு ஆண்களும் பெண்களும் கருதுகின்றார்கள். அங்குப் பெண் அடிமை இல்லை, ஆண் ஆதிக்கம் இல்லை.

ஒத்தகாதல் - ஒத்த இன்பம் - உடல் நலம் அங்குப் பிரதானம்; அதனால் விபச்சாரம் என்பதற்கு அங்கெல்லாம் இடமே இல்லை.

திருமணத்தைப் பற்றி பெரியார் கூறும் கருத்து பலருக்கு வியப்பாக இருக்கும்.

> ‘திருமணம் காட்டுமிராண்டிக் காலத்தில், அதாவது 5000 ஆண்டு களுக்கு முன்பு ஏற்பட்டதாகும். அதை இன்றைக்கும் எதற்காகக் கடைபிடிக்க வேண்டும். ஒரு ஆணுக்குப் பெண்ணை அடிமைப்படுத்தவே திருமணம் நடைபெறுகிறது. கோயிலுக்கு எப்படி மிருகங்களை பலி கொடுக்கிறோமோ அதைப் போலவே பெண்ணைப் பலி கொடுக்கிற விழாதான் திருமணம்’.

> ‘உலகம் வளர்ச்சியடைய வேண்டுமானால், உலகம் தொல்லை களிலிருந்து சுபீட்சம் அடைய வேண்டுமானால் திருமணம் என்பதைக் கிரிமினல் குற்றமாக்க வேண்டும்’

என்கிறார் பெரியார். அதனால் அதை அடையும் இலட்சியப் பயணத்திற்கும் இன்னும் காலம் இங்கு வந்து விடவில்லை என்பதை உணர்ந்து இந்நாட்டு பெற்றோர்களுக்கு பெரியார் கூறுகிறார், ‘பெற்றோர்கள் பெண்களை 21 வயது வரைக்கும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டும்; பிறகு ஒரு தொழில் கிடைக்கச் செய்ய வேண்டும்; அதன்பிறகு வாழ்க்கைத் துணையைப் பற்றி நினைக்க வேண்டும். அதுவும் அந்தப் பெண்ணாகப் பார்த்து ஒரு ஆணைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமே ஒழிய, பெற்றோர்கள் குறுக்கிடக் கூடாது’ என்று நிலைக்கேற்ப நினைப்பை வழி செலுத்தி நல்ல அறிவுரை புகன்றார் பெரியார்.

## பெரியார் கூறும் பெருநெறிகள்

பெரியாரின் தீவிரமான கருத்துகள் அனைத்தும் மேல்நாடுகளில் தீவிரமாகச் செயல்பட்டுவிட்டன. அவர்களும் சில செயல்படுத்தும்



கட்டத்திற்கு வந்த பாடில்லை. இப்படி இருக்கும்போது பல துறைகளில் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கும் நமது மக்கள் பெரியாரின் வழியில் கண்ணைமூடி கண்ணைத் திறப்ப தற்குள் திடீர் மாற்றம் கொண்டு முன்னேற முடியும் என்பதை எதிர்பார்ப்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாக முடியும்.

பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்புதான் பல வடிவம் பெற்றிட இயலும்; இன்று நம்மில் பலர் மண்ணில் மறைந்திருக்கும் இரும்புக் கனிவளமாக, வலுவில்லாத வார்ப்பட இரும்பாக; வெறும் இரும்பாக, விஞ்ஞான ரீதியில் மேலும் பலம் பெற்ற இரும்பாகவும் காட்சி தருகிறோம்.

பெரியாரின் முயற்சியினால் ஒரு சிலரே காய்ச்சப்பட்டு, வெகுசிலர் பழுக்க காய்ச்சப்பட்டனர். குறிப்பிடத் தக்கவர்களே, அவரால் பல உருவங்களைப் பெற்றிருக்கிறோம். இன்னும் வெளிப்படையாகக் கூறவேண்டுமானால் கல்லாத கைநாட்டுகள் நிறைந்த நாட்டில் தீவிரமான கருத்துகள் வேகமாகப் பரவிட இயலாது என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

ஏதோ வேலை வேண்டும்; பிழைப்புக்கு வழி வேண்டும் என்ற நிலையில் தான் பெருவாரியான படித்த பட்டதாரிகளே நம் நாட்டில் உள்ளனர். வேலை கிடைத்துவிட்ட பின்னர் எதையும் படிக்க நேரமில்லை என்று நொண்டிச் சமாதானம் கூறுபவர்களையும், குடும்பப்பாரத்தை ஏற்ற பின்னர் படிக்க எனக்கேது நேரம் என்று பெருமை பேசிக்கொள்ளும் டாம்பீக இளைஞர் களையும் கொண்ட நாட்டை ஒழுங்குபடுத்தி வழி நடத்திச் செல்வதே கடினமான காரியம்.

இருப்பினும் ஓட்டப்பந்தயத்தில் கடைசி அணியில் ஓடி வருபவரை யும் பார்த்து உற்சாக மூட்டுவதைப் போல தந்தை பெரியார் நமக்குச் சமயத்தில் கை கொடுத்துக் கரையேற்றி விட்டார்.

அதனால்தான், அவரே இக்காலத்திற்கு எதை எந்த அளவிற்குச் சாதிக்க முடியும் என்பதையும் பட்டியலிட்டுக் காட்டிச் சென்றிருக்கிறார்.

## நாடு நலம்பெற நல்கிய திட்டங்கள்

முதலாவதாகப் பிறவியால் கீழ் - மேல், உயர்வு - தாழ்வு கற்பிக்கும் ஜாதிமுறை என்பதை அடியோடு போக்கடிக்க வேண்டும்.

கோயில் முறை எடுக்கப்பட்டு, பிரார்த்தனை இடங்களாக - உருவ சம்பந்தமே இல்லாத பொது மண்டபங்கள் இருக்கலாம் என்றும் இப்போதைக்குக் கூறுகிறார்.

மடம், மடாதிபதி, குரு - கோயில் சொத்து, மட சொத்து ஆகியவைகள் எடுக்கப்பட வேண்டும்.

கோயில் உற்சவங்களை நிறுத்தி, சமூகவியல், அறிவியல், பொருளியல் கண்காட்சிகள் நடத்த வேண்டும்.

எல்லோருக்கும் ஒரே மாதிரி உடை சாயல் ஏற்படுத்த வேண்டும்.

அகராதியில் மக்களுக்கு, சமூகத்திற்கும் தேவையற்ற சொற்களை நீக்க வேண்டும்.

அவசியமில்லாத வசதிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

லாபம் வரையறுக்கப் படவேண்டும்.

அதிக மதிப்புள்ள நகைகள் அணிவதை அனுமதிக்கக் கூடாது.

உத்தியோகங்களில் சரிபாதி பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

இப்படிப் பலப்பல யோசனைகளைப் பெரியார் கூறியிருக்கிறார். ஆனால், இதையெல்லாம் யார் செயல்படுத்துவது. மக்களைப் பக்கு வப்படுத்தும் பிரச்சாரப் பணி மட்டுமே அவர் வழிவந்தவர்களால் செய்திட முடியும்.

அவர் வழி வந்தவர்கள் தேர்தலில் நிற்பதோ, பதவியைப் பெற்று அதிகாரம் செலுத்துவதோ நடைமுறைக்கு ஒத்துவராது.

இருப்பினும் தமிழகத்தில் அவரிடம் தேவைப்படும்போது, ஒட்டிக் கொண்டும், தேவையற்ற போது ஒதுங்கி நிற்பதும் பல அரசியல் கட்சிகளின் போக்காக அமைந்துவிட்டது. அப்படிப்பட்டவர்கள் ஆட்சியைப் பிடித்த பின்னரும் அவர் எதிர்பார்த்த குறைந்தபட்ச திட்டங்களாவது நிறைவேற்ற முடிந்ததா என்றால் ஏதோ ஒன்றி ரண்டு சாதனைகள்தான் குறிப்பிட இயலுமே தவிர, மிகவும் அவசியமான சீர்திருத்த முற்போக்குத் திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டன என்று கூறிக்கொள்ளவோ, பெருமைப்படவோ இடமில்லை.

பெரியார் அரசியல் பிரவேசத்தின் மூலம் பல அரசியல் கட்சி களுக்கு, ஒரு சில தலைவர்களும்தான் பயன் பெற்றிருக்கின்றனர்.



அவர் கடமையைச் செய்து முடித்து விட்டார். ஆனால், அரசியல் வாதிகள் அவருக்கு என்ன செய்துவிட்டார்கள்?

## பொய் புனைசுருட்டின் கைவண்ணம்

கடவுளைக் கற்பித்தவன் அறிவிலி, அதற்குக் குணம் கற்பித்தவன் அயோக்கியன்; கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி, கடவுள் இல்லை-இல்லவே இல்லை என்றார் பெரியார்.

மதமும், கடவுளும் மனிதனை முட்டாளாக்கும் கருவிகள்.

நமக்கு உள்ள அறிவு நூல், பக்திநூல் என்பவை எல்லாம் மனிதனை மடையனாகவும் காட்டுமிராண்டியாகவும் ஆக்கும் தன்மை யுடையதாகவே பெரிதும் இருக்கின்றன.

உண்மையைக் கூறவேண்டுமானால், புத்தக ஆசிரியர்கள் எனப்படு வோர், அநேகமாக எல்லோரும் மக்கள் அறிவு உணர்ச்சி பெறுவதை வேண்டுமென்றே மறைத்தே எழுதி இருக்கிறார்கள். கடவுள் மதத்தைப் பற்றியும், மனிதனுக்கு மூட நம்பிக்கை வளர வேண்டும் என்பது பற்றியும் அக்கறையோடு புராணம், இதிகாசம், காவியம், இலக்கியம் முதலியவற்றை அட்டைகள் போல ஏராளமாக உற்பத்திச் செய்து விட்டார்கள். எழுத்தாளர் எனப்படுவோர் பலர், வாசகர்களின் கீழ் உணர்ச்சிக்கு ஏற்ப எழுதிப் பணம் சம்பாதிப் பதையே இலட்சியமாகக் கொண்டே எழுதுகிறார்கள். பார்ப்பன எழுத்தாளர்கள்தாம் இலாபம் தரக்கூடிய முறையில் ஏடுகளை நடத்தக் கூடியவர்கள் என்கிற எண்ணம் கூட நம்மவர்களால் ஏற்படுத்தப்பட்டு விட்டது என்பதையும் வெட்கி ஒப்புக்கொள்ள வேண்டி இருக்கிறது.

மதச்சார்பற்ற அரசும் பாட புத்தகங்களில் கூட பகுத்தறிவுக்கு இடம் தரவில்லை. வானொலியும் தொலைக்காட்சியும் கைக்கூலிகளின் புகலிடமாயின. கலைத்துறையும் விதி விலக்கில்லை! ‘இராவண லீலா’ என்ற கேலிக்கூத்தில் அரசியல் தலைவர்கள் தப்பாது பங்கு கொண்டு களிப்பெய்தி வருவதிலிருந்து மானமுள்ள கொள்கை மக்கள் பெற வேண்டிய படிப்பினை எத்தனை, எத்தனையோ! புராண நாடகம் நடத்தினால் பணம் குவியும் - புராணப் படம் எடுத்தால் நன்றாக ஓடும் - புராணங்கள் காலட்சேபம் செய்தால் உண்டு கொழுக்கலாம் என்கிற சுரண்டல் எண்ணம் இன்னும் குறைந்த பாடில்லை.

பக்திமானாகக் காட்டிக் கொண்டால் சமுதாயத்தின் மாபாதகத்தைச் செய்து கொண்டே இருக்கலாம் என்று நினைப்பவர்கள் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். பதவிப்பேய் பிடித்தாடும் அரசியல்வாதிகள் இப்படிப்பட்டவர்களின் பிச்சைக்காகப் புகழ் மொழிக்காக அட்சயப் பாத்திரமேந்தி நிற்கும் அவமானத்தையும் இழிநிலையையும் இந்த மக்கள் சகித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

1441-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட அச்சுத் தொழில் மேல்நாடுகளில் மூடநம்பிக்கைகளை ஒழிக்கப் பயன்பட்டு விட்டது. அறிவு மணம் பரப்ப அங்கு அந்த அச்சு தொழில் பயன்படுகிறது. இங்கு ஆபாசத்தை அச்சிட, ஜோதிடத்தை வளர்க்க, பித்தலாட்ட அரசியலுக்கு ஆதரவு திரட்ட, சூதாட்டத்தை வளர்க்க, கோயில் திருவிழா, மூடநம்பிக்கைகளை ஊக்குவிக்க அச்சுத் தொழில் பயன்பட்டு வருகிறது.

ஆபாசக் கதைகள் எத்தனை அச்சாகி விற்கப்படுகின்றன. ராசி பலன்களை நம்பச்செய்ய எத்தனை ஏடுகள்! ரேஸ் செய்திகள் எத்தனை! ஏன், எத்தனை அறிவாளிகள் மண்டையை உடைத்துக் கொண்டு எழுதினாலும் இந்த நாட்டில் அதிகமாக அச்சடிக்கப் பட்டு வரும் நூல் பஞ்சாங்கம் தானே!

அச்சிட்டதை படிக்கும்போது வாசகர்களுக்கு ஆராய்ச்சி எண்ணம் ஏற்பட வேண்டுமே, அதன் பயனாகச் சமுதாயம் முன்னேற வேண்டுமே என்று நினைத்துத் தம் தள்ளாத வயதிலும் எழுதி அச்சிட்டுக் கொண்டே இருந்தவர் பெரியார். இங்கே அறிவுக்கு அச்சு இயந்திரம் பயன்படும் காலத்தை உருவாக்க வேண்டும்.

விஞ்ஞானப் படைப்புகள் வளர, வளர குருட்டு நம்பிக்கை படிப்படி யாகக் குறையும். அதில் நம் பங்கு என்ன? திருப்பதி லட்டு, பழனி பஞ்சாமிர்தம் கண்டு பிடித்துவிட்டால் மட்டும் போதுமா? இந்தக் கண்டுப் பிடிப்புகள் அறிவைத்தான் வளர்க்குமா?

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்காதே என்று கூறியவர்கள் அறிவாலயம் இல்லாத ஊரில் அடிஎடுத்து வைக்காதே என்று கூறியிருந்தால் நாட்டில் இத்தனைக் கோயில்கள் ஏற்பட்டிருக்குமா? கோயில்கள் எதற்கு பயன்பட்டது? சுரண்டலைத் தானே வளர்த்தது, ஒரு கூட்டம் வளர எல்லோரும் சுரண்டப்பட்டது தானே மிச்சம்! இப்படிப்பட்ட நாட்டில் எந்தக் காலத்தில் சோசலிச சமுதாயம் உருவாக போகிறது! இந்தத் தலைமுறையினரை நடத்திச் செல்பவர் களை அடுத்தத் தலைமுறையினர் எப்படி வாழ்த்தப் போகிறார்களோ?



மோட்சம் - நரகம், பாவம் - புண்ணியம், பேய் - பூதம், பிசாசு, விதி என்று இந்த காலத்திலும் நம்பிவரும் மக்களுக்கு மூளையைக் குழப்புவது. பயம், தைரியத்தில் பிறப்பது முற்போக்கு, பயம் நம்புகிறது, தைரியம் சந்தேகிக்கிறது? ஊக்கம் முன்னேறிச் செல்கிறது என்று கூறிய இங்கர்சாலுக்கு ஈடாக இந்த நாட்டு மக்களுக்கு, ‘எதை எவர் சொன்னாலும் நம்பிவிடாதே. சிந்தனை செய். சரி என்று தோன்றுவதை ஏற்றுச் செயல்படு. தயங்காதே!’ என்று பேசிய பகுத்தறிவுப் பகலவன் ஒருவர் நம் நாட்டில் பிறந்தார் என்றால் அது பெரியார் ஒருவர்தான்.

நரகம் எங்கேயும் இல்லை, அது இங்கேதான் உருவாக்கப் பட்டிருக்கிறது. அறிவையும் ஒழுக்கத்தையும் விருத்தி செய்யும் கல்வியின் மூலம், எல்லோரும் உண்மையாக உழைப்பதன் மூலம் எங்கேயோ இருப்பதாகக் கூறப்படும் சொர்க்கத்தை நாம் இங்கேயே படைத்துவிடலாம். அறிவினால் நரகத்தை உலகத்தி லிருந்து ஓட்டி சொர்க்கத்தை ஸ்தாபிக்கலாம் என்று தள்ளாத வயதிலும் காடு மேடுகளை எல்லாம் சுற்றித் தீவிரப் பிரச்சாரம் செய்தவர் பெரியார்.

## பகுத்தறிவே பண்பாடு

அனைத்திலும் பகுத்தறிவைப் பயன்படுத்தும் துணிவும், சுதந்திரமும் உண்டாக்கும் கல்வியை இங்கு நாத்தீகமாக, மதவிரோதமாக தேசத்திற்கு விரோதமாக மதிக்கப்படும் வரை மூடநம்பிக்கைகளைக் கொட்ட மடிப்பதை எளிதில் போக்கிவிட முடியாது! இந்த நாட்டில் படித்தும் பட்டம் பெற்றும் நெற்றியில் பட்டையாக நாமமும், திருநீறும் தோளில் பூணூலும் போட்டுத்திரிய அனுமதிக்கப்படும் காலம் இருக்கும் வரை உண்மையான அறிவுப்புரட்சி மூலமே ஏற்பட முடியும்?

இன்று மாணவர் உலகில் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படாததற்கு முக்கிய காரணம் நமது கல்விமுறை வெறும் வேலைக்குப் பயன்படும் கருவியாக இருப்பதுதான். மாணவர்களின் கடமை படிப்பதுதான் என்பதை இந்த தேசத்தலைவர்கள் திலகர், பெசண்ட் அம்மையார் காலத்தில் இருந்து, காந்தியார் காலம் வரை கற்பித்தது இல்லையே! ‘அரசியலில் வெடிக்குண்டு போடுதல்’, ‘எதிரிகளைத்

தாக்குதல்', திராவகம் வீசி கொல்லுதல், காலித்தனம் செய்தல், நாச வேலையில் ஈடுபடுதல்' போன்ற காரியங்களை ஊக்குவித்தவர்கள் யார்? மாணவர்களுக்குக் கடமை உணர்த்தத் தவறியவர்கள் யார்?

1943-ஆம் ஆண்டில் தந்தை பெரியார் இளைஞர்களிடையே பேசிய பேச்சில்,

> 'நாச வேலையால் ஏற்படும் பயன் என்ன என்று பார்த்தால் அது மிகவும் பொறுப்பற்றதும் முட்டாள்தனமான வேலை என்றுதான் சொல்ல வேண்டும். உயிர் துறப்பவர்கள், தொல்லை அனுபவிப்பவர்கள் நமது மக்கள் தான். இப்படிப் பட்ட காங்கிரஸ் கொள்கையில் சுயராஜ்யம் கிடைத்தால் மக்கள் நிலை என்ன ஆகும் என்று பாருங்கள்'.

வெள்ளையன் ஆண்ட காலத்திலேயே பெரியார் கூறியது. இப்போது சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகள் ஆகியும் எவ்வளவு தீர்க்க தரிசனக் கருத்தாவும், உண்மையை வெளிப்படுத்தும் கருத்தாகவும் அமைந்திருக்கிறது என்பது புலப்படும், பள்ளிக் கூடத்தில் இருந்து கொண்டே தேசாபிமானம் பேசுவது, மிகவும் இழிவும் குற்றமுமான காரியமாகும் இவற்றை நான் பெரிதும் பார்ப்பனரல்லாத பிள்ளைகட்கே சொல்லுகிறேன் என்று பெரியார் விடுத்துள்ள எச்சரிக்கை நன்றாகச் சிந்திக்க வேண்டிய இன்றைய இளைஞர் களின் கடமையாகும்.

## எதிர்காலமே மனித வாழ்வு

வருங்காலத்தைப் பற்றிய தெளிவான எண்ணம் பகுதறிவாதி களுக்கே உண்டாகும்.

எதிர்காலம் எப்படியிருக்க வேண்டும், புதியதோர் உலகை உருவாக்குவோம் என்ற விருப்பமும் பழையவற்றிலும் மூடநம் பிக்கையிலும் பற்று கொண்டவர்களாலே முடியவே முடியாது. அவர்களின் செக்குமாட்டுப்போக்கு மாறும்வரை புதியவற்றில் முயற்சியும், ஆராய்வதில் ஆர்வமும் அவர்களுக்கு ஏற்படாது. உலகின் மற்ற பாகங்களில் நிகழும் அற்புதங்கள் அதிசயக் கண்டு பிடிப்புகள் அறிவாளிகளை வியக்கும் வைக்கும் அளவிற்கு, இந்த வைதீகர்களுக்கு எந்தவித உணர்வும் அளிப்பதில்லை.

விஞ்ஞானிகள் பாடுபட்டு 'டெஸ்ட் டியூப் பேபி' என்ற குழந்தை களைப் பிறக்கச் செய்து விட்டனர் என்பது அறிவு உலகச் செய்தி.



ஆனால் மூடநம்பிக்கையில் ஊறிப்போனவர்கள் 'இதென்ன அநியாயம் காலம் கெட்டுப் போச்சு' என்றுதான் இங்கே இன்னமும் பேசுவார்கள். ஆனால், தந்தை பெரியார் ஒருவர்தான் பல ஆண்டு களுக்கு முன்னரே இதனை அறிவித்தவர் ஆவார்.

> 'பிள்ளைப்பேற்றுக்கு ஆண் பெண் சேர்க்கை என்பது கூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், மதிநுட்பமும், அழகும், திடகாத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும் படியாக, பொலிகாளைகள் போல் தேர்ந்தெடுத்த மணி போன்ற பொலி மக்கள் வளர்க்கப்பட்டு, அவர்களது வீரியத்தை இன்ஜெக்ஷன் மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி, நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண் பெண் சேர்க்கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்'.

இப்படிப் பெரியார் அவர்கள் 'இனி வரும் உலக'த்தைப் பற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிவிட்டார்கள். இன்று ஆண் பெண் சேர்க்கையின்றி 'டெஸ்ட் டியூப்' குழந்தைகள் பிறந்து நன்றாக வளர்ந்து வருகின்றன.

இப்படி ஒரு ஜெகத்குருவாலோ, ஜீயர்களாலோ, மடத்தலைவர் களாலோ கூறமுடிந்ததா? எழுதத்தான் முடிந்ததா? எண்ணிப்பார்க்க முடிந்ததா?

'இனி வரும் உலக'த்தில் பெரியார் கூறியிருக்கும் மற்றவைகளும் நிச்சயம் ஒருநாள் நடந்தே தீரும்.

> 'இனிவரும் உலக'த்தில் வேலையில்லாமற் போகாது. சோம்பேறிகள் இருக்கமாட்டார்கள் - எந்தத் தொழிலுக்கும் இழிவான பட்டம் இருக்காது. மகளிர் விலைமாதர்களாக வாழ வேண்டிய அவல நிலை இருக்காது. போக்குவரத்து எங்கும் அதிவேக சாதனமாகவே இருக்கும். கம்பியில்லாத தந்தி சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும். வானொலி ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும். ஆளுக்கு ஆள் உருவம் காட்டிப் பேசிக் கொள்ளத்தக்க சாதனம் இருக்கும். ஒரு சிறு குப்பியில் சத்தான உணவு கிடைக்கும். மனிதனின் ஆயுள் 200 ஆண்டுகள் ஆகலாம். பெட்ரோலுக்குப் பதில் மின்சாரம் பயன்படுத்தலாம். அனைத்தும் கிடைத்து விடுவதாலே கடவுளைப் பற்றி எந்தக்

காரியத்திற்கும் நினைக்க வேண்டி இருக்காது. நம்மால் என்ன ஆகும்? அவனின்றி ஓரணுவும் அசையாது என்று எவருமே பேசமாட்டார்கள்'

என்று இப்படிப் பல மாற்றங்கள் நிச்சயம் நிகழும் என்று பெரியார் கூறுகிறார். அப்படிப்பட்ட புதிய உலகைப் படைப்பதில் பகுத்தறிவாளர்கள் தங்களின் பங்கைச் செலுத்த வேண்டும் என்றார் பெரியார்.

கால மாறுதலாலும், விஞ்ஞான வளர்ச்சியாலும் இவை மட்டுமல்ல, இன்னும் வியக்கத்தகும் மாற்றங்கள் ஏற்படும். அதில் நமது பங்கு இருக்குமா என்பது ஐயத்திற்கு உரியதே.



## அறிவார்ந்த ஆராய்ச்சியாளர்!

திராவிடர்கள் தங்கள் மீது படையெடுத்து வந்த ஆரியர்களோடு கடும்போர் புரிய வேண்டியிருந்தது. இந்த விஷயம் ரிக்வேத காலத்திலேயே அநேக சுலோகங்களாக இருக்கின்றன என்று ரோமேஷ் சந்திர மஜூம்தார், ***பூர்வீக இந்தியச் சரித்திரமும் நாகரிகமும்*** என்ற நூலில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, இன்றுள்ள பார்ப்பனர் அல்லாதார் பிரச்சனை இன்று நேற்று தோன்றியதில்லை.

தென் இந்தியாவில் இருந்த மக்களேதாம் இராமாயணத்தில் குரங்குகள் என்றும் அரக்கர்கள் என்றும் அழைக்கப்பட்டிருக் கின்றனர் என்று சுவாமி விவேகானந்தரே தெளிவாகக் கூறியிருக் கிறார். அதுமட்டுமன்று இராமாயண கதையின் உட்பொருள் என்னவென்றால், ஆரிய நாகரிகத்திற்கும், ஆரியரல்லாதார் நாகரிகத்திற்கும் நடத்தப்பட்ட போராட்டமாகும் என்று இந்து நாகரிகம் பற்றி ஆராய்ந்த ராதா குமுதமுகர்ஜி தெளிவாக எழுதி யிருக்கிறார். இதைப் போன்று 'இந்து இந்தியா' என்னும் தலைப்பில் இரண்டு பட்டதாரிப் பார்ப்பன ஆராய்ச்சியாளர்களான சி.எஸ். சீனிவாச ஆச்சாரி எம்.எஸ். ராமசாமி (அய்யங்கார்) ஆகியோர் ஆரியக் கவிஞன் திராவிடர்கள் மீது கொண்டிருந்த, வெறுப்பை இது (இராமாயணம்) காட்டுகிறது. ஏனெனில் ஆரியர்கள் திராவிட நாட்டில் சிறுக சிறுக நுழைந்து ஆதிக்கம் பெறுவதில் அடைந்த கஷ்டத்தினால் இப்படி எழுதினார்கள் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள்.

இவற்றிலிருந்து ஆரியர்கள் வேறு, திராவிடர்கள் வேறு என்பதையும் இருசாராருக்குமிடையே மூட்டப் பட்ட பகைக்குத் திராவிடர்கள் காரணமில்லை என்பதும், அதனால்தான் இன்னும் ஆரியர்கள் நியாயத்திற்கோ, நீதிக்கோ கட்டுப்பட்டு வாழவில்லை என்பதும் புலப்படும்.

ஆரியத்தின் குணாதிசயங்கள் அன்றுமுதல் இன்று வரை விரும்பத் தக்க மாற்றம் பெற்றிடவில்லை. சமூக சமதர்ம நீதிக்கும், அவர்கள் எதிராகவே வளர்க்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆராய்ச் சியாளரின் கண்டுபிடிப்புகள் பயன்படுகின்றன.

பாரத, இராமாயணங்கள் முதலிய இதிகாசங்களில் காட்டு மிராண்டிகளும், அசுரர்களும், ராட்சதர்களும், தாஸ்யூகளும் வசிக்கும் நெருக்கமான காடுகள் கொண்ட நாடு என்று குறிப்பிட்டி ருப்பதெல்லாம், தென்னிந்தியாவை-திராவிட நாட்டைப் பற்றியே யாகும் என்று ***இந்தியா*** என்னும் புத்தகத்தை எழுதிய சி.எச். ராபின் சன் கூறுகிறார். மற்றொரு நூலாசிரியர் ***வேதகால இந்தியா*** என்ற புத்தகத்தில் ஆரியர்களின் ஒழுக்க ஈனமான காரியங்களில் எல்லாம் சிறந்த காரியங்கள் மதுவருந்துவதும், சூதாடுவதுமாகும். ரிக் வேதத்தில் இதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன என்று ராசோசின் கூறுகிறார். அடுத்து, ***இந்தியப் புதிய வரலாறு*** (டிஸ் கவரி ஆப் இந்தியா) என்னும் நூலில் பண்டித ஜவகர்லால் நேரு என்ன எழுதியிருக்கிறார் என்பதையாவது உண்மையில் பற்றுள்ள தேசியவாதிகள் கண்டறிய வேண்டும்.

> ‘ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்ததனால் புதிய பிரச்னை கள் கிளம்பின. இனத்தாலும், அரசியலாலும் மாறுபட்ட திராவிடர்கள் நீண்ட கால நாகரிகத்துடன் வாழ்ந்தபடியால், இவர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்ட ஆரியர்களுக்கும் இவர்களுக்குமிடையே விரிந்த பெரிய பிளவு ஏற்பட்டது’

என்கிறார்.

இந்த நிலையில் பெரியார் திராவிடரின் இனத்திற்காக அரசியலுக்காக, நாகரிகத்திற்காக வாதாடிப் போராடியதில் வியப்பேதும் இல்லையல்லவா? அண்ணனைக் காட்டிக் கொடுத்துப் பட்டம் பெற்ற தம்பியைப் பரம பக்தன் என்று ராமாயண தாசர்கள் ஒப்புக் கொள்வார்களேயானால், நாட்டுக்கும் அண்ணன்மார்களுக்கும் என்ன பாதுகாப்பும் மரியாதையும் இந்த நாட்டில் இருக்க முடியும். விபீஷணனின் அடாத துரோகச் செயலைப் பக்தியாக மதிக்கப் படும் இந்த நாட்டில், தேசத் துரோகிகள் எங்கும் அதிகமாகி வந்திருப்பதற்கு எப்படி வருத்தப்பட நியாயம் இருக்கிறது.

திராவிடர்கள் இழந்த பெருமையை மீண்டும் பெற்று வாழ்வதில் என்ன தப்பு? ஆரிய மாயையை அகற்றிட திராவிடர் இயக்கம் முன்னணியில் நின்று எவ்வித தியாகமும் செய்ய ஆயத்தமாக இருப்பதில் யார் குறை சொல்ல முடியும்? அன்று தொடங்கிய ஆரிய- திராவிடப் போர், மீண்டும் திராவிடர்களுக்குப் பெருமைப்



படத்தக்க நிலை ஏற்படும் வரை தொடர்ந்தே தீரும். அதுதான் நியாயமும் கூட. இன்று நடப்பதும் ஒரு தொடர் போராட்டமே. அந்தப் போரின் உச்சக்கட்டமே தந்தை பெரியாரின் வாழ்க்கை யாகும்.

தேசப்பற்று என்பது வெறும் கதர் அணிந்து கொள்வதால் வந்து விடாது. குல்லாய் அணிந்து கொள்வதால் மட்டும் வந்துவிடாது. பாதிக்கப்பட்டுள்ள மக்களின் குறைகளைக் கண்டறிந்து அவர் களுக்கு நீதி வழங்குவதன் மூலமே ஏற்பட முடியும். ஏமாற்றப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட மக்களுக்கு சம உரிமை, சம அஸ்தஸ்து, சமநீதி பெற்றிடச் செய்வதன் மூலமே அது சாத்தியமாகும். விட்டுக் கொடுத்த எல்லோரையும் வாழ வைக்க முன்வரும் மனப்பான்மை இன்றைய தலை முறைக்கு அவசியம் ஏற்பட வேண்டும். உள்ளதை இழப்பது பெரிதும் கஷ்டமான காரியம்.

ஆனால், அந்தத் தியாகத்தின் மூலமே ஆரியர்களும் திராவிடர் களும் கூடிவாழும் தேசமும், தேசபக்தியும் காண முடியும். இந்த நற்காரியத்தை வன்முறையற்ற முறையில் விவேகத்துடன் செய்யத் தூண்டியவரே பெரியார். அதற்குரிய பலனை அவர் பெற்று விட்டார் என்பதை எவரும் நிச்சயமாகக் கூற மாட்டார்கள். ஆனால், அவர் ***தமிழ்நாடு தமிழருக்கே*** என்று போர்ப்பிரகடனம் செய்ததும், ***திராவிட நாடு திராவிடருக்கே*** என்று முழக்கம் கிளப்பியதும் உண்மையில் இந்தியாவைத் துண்டாக்க வேண்டு மென்பதற்காக இருக்கவும் முடியாது. அதன் மூலம் திராவிடப் பெருங்குடி மக்கள் பெரும் பயன்களை, விரைவாக உறுதியாகப் பெற்று உலக அரங்கில் எல்லோரும் தலைநிமிர்ந்து, ஒன்றுபட்டு உயர்ந்த வாழ்வு வாழ வழிகாண வேண்டும் என்று அவருக்கு இருந்த பெரிய ஆர்வமே காரணமாகும்.

இந்தியத் தேசப்படத்தின் நகல்களைத் ‘தமிழ்நாடு நீங்கலாக’ எரித்ததாலும், அரசியல் சட்டத்திற்குத் தீ வைத்தாலும் என்ன மிஞ்சும் என்பது ஒரு பெரிய பகுத்தறிவுத் தலைவருக்குத் தெரியாத தன்று. வீணாக வெறும் சாம்பலைக் காண வேண்டும் என்கிற நோக்கம் பெரியாருக்கு நிச்சயம் இருந்திருக்க முடியாது. இந்தியா விடுதலை பெற்றுப் பல ஆண்டுகள் கடந்தும் திராவிடர்களின் மீது ஆரியர்கள் செலுத்திவரும் ஆதிக்கமும் சுரண்டலும் குறைந்த பாடில்லையே என்கிற சரியான கணிப்பே பிரிவினை எண்ணத்திற்கு

மூலகாரணமாகும். அந்த அளவிற்கு அவரது போர்முறைகள் மிக்க நுணுக்கமான முறையில் அவர் அமைத்துக்கொண்டார்.

அதனால்தான் அவரது உண்மையான கணக்கு என்ன என்பதை வெகு சிலரால் மட்டுமே புரிந்து கொள்ள முடிந்தது. அதைப் பச்சையாக எல்லோரும் அறிய வேண்டும் என்பதால்தான் அவர், திராவிட நாடாவது, வெங்காய நாடாவது என்று அவரே கூற வேண்டிய தாயிற்று. தோல்வி மனப்பான்மையோ, எதிரிகளை மதிப்பிடுவதில் குறைபாடோ, அச்சமோ அவரை அப்படிப் பேசச் செய்யவில்லை. அவர் நினைத்திருந்தால், ஜாடை காட்டியிருந்தால் கூட பலாத்காரப் புரட்சியின் மூலம் எத்தனை முறை வேண்டுமானால் தம் தொண்டர் களை ஏவி நாசம் விளைவித்திருக்க முடியும்? அவருடைய கணிப்பு வேறானது. எதிலும் எங்கும் அவாள் என்ற நிலை அடியோடு மாற்றப்பட்டு வரும் நிலையை உணரமுடியாத அளவிற்கு அவரது சிந்தனை மழுங்கி விடவில்லை. ஆரியர்களே ஆதிக்கம் செலுத்திக் கொண்டுவந்த பல துறைகள், சந்தடி இல்லாமல் திராவிடர்கள் கைக்கு மாறி விட்டன. புதிய திராவிடத்தைப் படைத்த பெரியாருக்கு இது புரிந்த காரணத்தினால்தான் புதிய அணுகுமுறையைப் பெரியார் கண்டார். திராவிடர்களின் முன்னேற்றப் பாதையில் பல தடைகள் அகற்றப்பட்டன.

திராவிட மக்களிடையே விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் பல மடங்கு அதிகமாகி விட்டது. காந்தியாரின் காலத்திலிருந்தே அரசியல் அதிகாரத்தைத் தங்கள் கையில் இறுக்கிப் பிடித்துக் கொண்டு வந்த ஆரியர்கள், இன்று தென்நாட்டில் திராவிடர்களி டம் கையேந்தும் கால கட்டத்தைப் படைத்து, பூரித்து மறைந்தவர் பெரியார். எந்தச் சரித்திரப் பேராசிரியரும் இதனை வருங்காலத் தில் சுட்டிக் காட்டத் தவறமாட்டார்.

பெரியார் வெறும் சீர்திருத்தவாதி மட்டுமல்லர். அப்படி இருந்திருந்தால் புத்தர், திருவள்ளுவர், கபிலர், இராமானுஜர் போன்றவர் களால் சாதிக்க முடியாதனவற்றைத் தந்தை பெரியாரால் சாதித்துவிட முடிந்திருக்கும் என நம்புவதற்கு இடமில்லை.

இருப்பதைச் சீர் செய்வதே சீர்திருத்தத்தின் அடிப்படை. உள்ளதைத் தகர்த்து வேறு ஒன்றை அதனிடத்தில் மாற்றி அமைப்பது சீர்திருத்த மாகாது. அதற்குப் 'புனருத்தாரணம்' என்று பொருள். தம்முடைய



புனருத்தாரணப் பணிக்குத் தனிமுறையை வகுத்துக் கொண்டு, அந்த முறையில் அவர் தீவிரமாக ஈடுப்பட்டார். புனருத்தாரணம் ஒரு மாஜிக் வேலையில்லை - நினைத்த உடன் முடிக்க. அது ஒரு தொடர் முறை. பெரியார் வாழ்ந்த காலத்தில் அவர் கண்ட சமுதாயக் குறைகளைப் போக்க, அவர் கையாண்ட முறைகளை மதிப்பிடுவது அவ்வளவு எளிதான காரியமில்லை.

முதலில் அவர் ஒரு தேசியவாதியாக காந்தியச் சீடராகப் பொது வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பின்னர் அவரே அத்தனைக்கும் கொள்ளியாக மாறினார். அடுத்து சுயமரியாதை இயக்கம் கண்டார். அதிலும் அவரது இலட்சியம் ஈடேறவில்லை. பின்னர், தான் வகுத்த திட்டத்தை அரசியல் கட்சிகளுக்குத் தந்தார். அதனை நீதிக்கட்சியே ஏற்றது. அதற்குக் காரணம் நீதிக்கட்சி அரசியல் சீர்திருத்தத்திற்கு அடிப்படை சமுதாயச் சீர்திருத்தம் என்பதை உணர்ந்து செயல்பட்டதேயாகும். அடுத்து நீதிக்கட்சியின் மிதவாதக் கொள்கைகளுக்குப் புதிய மெருகூட்டி திராவிடர் கழகத்தை நிறுவினார். அதற்கு தாமே சட்ட திட்டங்களையும் வேலைத் திட்டத்தையும் வகுத்து இயங்கினார். அதனால்தான் **1944**-இக்குப் பிறகு திராவிடர்க் கழகத்தின் பிரதான இலட்சியத்தை விளக்கும் போது, 'இது ஓர் அரசியல் ஸ்தாபனம் இல்லை, சீர்திருத்த பிரச்சார ஸ்தாபனம்' என்று தெளிவாகக் கூறினார். தீவிர பிரச்சாரத்தின் மூலம் மக்களைப் பக்குவப்படுத்த பல ஆண்டுகள் வெறும் பிரச்சாரமே கருவி என்பதை உணர்ந்து இந்த நாட்டு மக்களைத் தட்டி எழுப்பியவர் பெரியார். தேடிப் பிடித்துப் போராட்டங்களை நடத்திப் பதவியைப் பெற்று விட்டால் ஒரு பயனும் நாட்டு மக்களுக்கு விளையாது என்பதை அவர் நன்கு உணர்ந்தார். அது முற்றிலும் உண்மை.

வெள்ளையன் ஆண்ட காலத்திலேயே பெரியாருக்கு அமைச்சரவை அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதனை வெறுத்துப் பிறரையும் வெறுத்தொதுக்கச் செய்து தம் பயணத்தைத் தொடர்ந்தவர் தந்தை பெரியார். மீண்டும் சுதந்திர இந்தியாவில் ராஜாஜி விரும்பி அழைத்துப் பதவியைத் தந்த போது அதன் உட்பொருளை உணர்ந்து உதறித்தள்ளியவரே பெரியார். பெரியாரின் இலட்சியப் பயணமே அலாதியானது. எதிலும் மயங்கிடவோ, சபலம் கொள்ளவோ, இயக்க வளர்ச்சிக்குக் கேடு நேரவோ அவரது வாழ்க்கை அமைய வில்லை.

இத்தனைக்கும் அடிப்படைக் காரணம் அவர் பகுத்தறிவுவாதியாக அரசியலை அணுகியதுதான். தன்னலம் விரும்பாது, எப்போதும் இயக்கத்தின் நலனையே கருத்தில் கொண்டு செயல்பட்டவர் பெரியார்.

ஒரு சீர்திருத்த மாநாட்டில் பேசும்போது தந்தை பெரியார்,

> ‘சீர்திருத்தங்களைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதன் மூலம் மக்களுக்கு எடுத்துச் சொல்லி முழுவதையும் சரிப்படுத்தி விடலாம் என்று எண்ணுவதும் மிகுதியும் பைத்தியக்காரத் தனமாகும். அன்றியும், ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகளைப் பெற்று அதன் மூலம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அவர்களால் சட்டங்கள் செய்து முழு சீர்திருத்தங்களையும் செய்துவிடலாம் என்று எண்ணுவதும் அறியாமையே ஆகும்’.
>
> ‘குருட்டு நம்பிக்கையை அழிவு வேலைகள் மூலம்தான் ஒழிக்க முடியும். அதற்கு மகத்தான உறுதியும், சிறிதும் சந்தேகமற்ற தெளிவும், பழிப்பிற்கும் சாவிற்கும் கவலையற்ற துணிவும் உள்ளவர்களால்தான் அது முடியும்’

என்று பேசியிருக்கிறார்.

பெரியார் கற்பித்த இந்த இலட்சணங்களை நம்மில் எத்தனைப் பேரிடம் இன்று காணமுடியும்? வெறும் பேச்சைவிட்டுக் காரியத்தில் இறங்க எத்தனைப் பேர் உள்ளனர்.

## பெண்ணடிமை தீர்த்த பெரியார்

‘பாவம் செய்தால்தான் பெண் பிறவி!’

‘என்ன செய்வது? கடவுள் எனக்கு ஓர் ஆண் குழந்தையைத் தரவில்லையே!’

‘என்னதான் இருக்கட்டும் அவள் பெண்தானே ஆணுக்கு அடங்கித் தான் போகவேண்டும்’.

‘ஆண் மீசையுள்ளவன்-எதையும் செய்யலாம் பொட்டக் கழுதைக்கு எவ்வளவு கொழுப்பு இருந்தால் இப்படி நடப்பாள்’.

‘கணவன் கிழித்த கோட்டைத் தாண்டாதவள்தான் உத்தமப் பெண்மணி’.



‘சனி - மூதேவி - அபசகுணம்; அவள் காலெடுத்து வைத்ததிலிருந்து ஒரு சுகமும் இங்கு இல்லை. நிம்மதியும் இல்லை. கடன், கஷ்டம், தொல்லைகள் மிச்சம்’.

‘பெண்கள் வெறும் போகப் பொருள் -அலங்கார பதுமைகள் - சமையற்கூடமே அவர்களின் சொர்க்கம் - அடுப்பு ஊதும் பெண் களுக்கு படிப்பு எதற்கு - அவள் பிறந்த நேரமே சரியில்லை - அவள் விதி - அவள் கருமத்தை அனுபவிக்கிறாள் - அவள் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்’.

இப்படி விதவிதமான உரையாடல்களை நாம் தினம் தினம் கேட்டு வருகிறோம்.

இத்தனைக்கும் அடிப்படைக் காரணம் எது என்பதை நினைத்தவர்கள் சிலர் இருக்கலாம். ஆனால், பிறரை நினைக்க வைத்தவர் பெரியார் ஒருவர்தான்.

‘பெண்களைச் சூத்திரர்களான நாலாம் சாதியினரைவிடக் கீழாக, மதிக்க வேண்டியவர்கள்’ என்கிறது மனுதர்மம். இந்து மதம், ஆரியமதம், பெண்களை வெறும் உயிர்அற்ற பொருளாகத்தான் நினைக்க வைக்கிறது என்பதைப் பலமாகக் கண்டித்துப் பெண்களுக்குள்ள இழிவைப் பெருமளவு போக்கப் பாடுபட்டு வெற்றி கண்டவர் பெரியார். ‘பெண் ஏன் அடிமையானாள்’ என்பதை ஆராய்ந்து, ஆண்களுக்கும் பெண்களுக்கும் அறிவுப் பாதையைக் காட்டியவர் பெரியார்.

பெரியார் கர்நாடக பலிஜ நாயுடு வகுப்பில் பிறந்தவர். அந்த வகுப்புப் பெண்மக்கள், முக்காடுடன் கோஷாவாக இருந்தவர்கள். பெரிய வைணவ சம்பிரதாயத்தையும், ஆசாரத்தையும் கடுமை யாகக் கடைபிடித்த குடும்பம். ஒருவர் தொட்டதைத் தீண்டுவதோ சாப்பிடுவதோ கூடாது என்ற கடுமையான விதிமுறைகள் இருந்து வந்தன.

## விதவைக்கு வாழ்வளித்த வேந்தர்

ஆனால், பெரியார் ஏழு வயது சிறுவனாக இருந்தபோதே சமுதாயத் தில் உயர்வு தாழ்வு நிலவுவதை விரும்பாதவர். அவர் பல மூடக் கொள்கைகளைப் பரிகாசம் செய்தும் உள்ளார். அவருக்கு 16 வயது வந்த போதே பெண்களுக்குத் தனித்த முறையில் திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை வெறுத்து வந்தார்.

பெரியாரின் தங்கை தமது இளம் வயதிலேயே ஒரு பெண் குழந்தை யையும், ஓர் ஆண் குழந்தையையும் விடுத்து இறந்துவிட்டார். அந்தப்பெண் குழந்தைதான் அம்மாயி என்று அழைக்கப்பட்டுச் சீராக வளர்க்கப்பட்டதாகும். அம்மாயிக்கு 10-வது வயதில் செல்லக் கல்யாணம் செய்யப்பட்டது. கணவன் 13 வயது சிறுவன் மணமான 60-ம் நாள் விஷபேதியில் இறந்துவிட்டான். இந்தச் செய்தி கேட்டதும் அம்மாயி பெரியாரிடம் வந்து, 'மாமா எனக்கு கல்யாணம் செய்துவை என்று கேட்டேனா?' என்று கோவென அழுது கீழே விழுந்து விட்டாள். தலையிலும் காயம் பட்டுவிட்டது. அங்குக் கூடிய பெண்கள் கண்ணீர் வடித்தனர்.

அப்போதே பெரியார் அம்மாயிக்கு மறுமணம் செய்து வைக்க முடிவு செய்தார். பிறகு அம்மாயி பருவம் அடைந்தாள். தந்தை பெரியாரின் பெற்றோர்கள் நிலைமையை உணர்ந்து மறுமணத்தைத் தடுத்து வந்தனர். பின்னர் பெரியார் திட்டத்தை ரகசியமாக நிறைவேற்றினார். தான் ஈரோட்டில் இருந்துகொண்டே தன் மைத்துனரின் இரண்டாவது மனைவியின் சகோதரரைத் திருமணம் செய்துக் கொள்ள ஏற்பாடு செய்தார். திருமணம் சிதம்பரத்தில் நடைபெற்றது. பெற்றோர்கள் ஏமாற்றமடைந்தனர்.

இது பெரியாரின் குடும்பத்தில் நிகழ்ந்த உண்மைச் சம்பவமாகும். பெரியார் அரசியலில் காலெடுத்து வைப்பதற்கு முன்னரே பெரிய தீவிரவாதியாக, சீர்திருத்தவாதியாக, புரட்சிவாதியாக விளங்கினார். என்பதற்கே இதனைக் கூறுகிறேன். அவர் பெண்கள் விடுதலைக் காகப் பட்டபாடின் பயனாக ***பெரியார்*** பட்டத்தையும் 1940-ஆம் ஆண்டில் பெண்களிடமே பெற்றார்.

ஆண், பெண் இருவரும் சரிசமமாக வாழ வேண்டுமானால் கற்பு என்பது இருசாராருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்பது அவரின் கருத்து.

## தாய்க்குலம் தழைக்க

திருமணமும், விடுதலையும் மணமக்களின் வாழ்க்கை வளத்தையும், பயனையும் கொண்டது. மணம் செய்து கொண்டவர்களுக்குப் பிரிந்து போகும் உரிமை எளிதாகக் கிடைக்க வேண்டுமென்பதும் விபசாரக் குற்றம் என்பதும் இரு சாராருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்பது அவரது கருத்து. விதவைத் தன்மையால் ஏற்படும் கொடுமைகளுக்கு பெண்களை மட்டும் ஆட்படுத்துவது



அக்ரமம். ஆண்களைப் போல அவர்களும் மறுமணம் செய்து கொள்ள தாராளமாக அனுமதிக்க வேண்டும் என்பது அவரது கருத்து.

பெண்களுக்குச் சொத்துரிமை, சிவில் சட்ட உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் - பெண்களுக்குப் படிப்பு, தொழிலும் கற்பிக்கப்பட்டு அவர்களுக்கு உத்தியோகங்கள் விகிதா சாரப்படி வழங்கவேண்டும் எனவும் மதுவிலக்குப் பிரசாரத்தை விடத் தொத்து வியாதிகளை ஒழிக்கும் பிரச்சாரத்தைவிட, இந்த கர்ப்பத்தடை பிரச்சாரம் மிகவும் முக்கியமானது என்பதும் பெரியாரின் கோட்பாடாகும்.

பெண்கள் போதிய அளவுக்குச் சுதந்திரம் பெறாதிருப்பதற்கு யார் காரணம்? பெண்களா? சமுதாயமா? அரசா? சட்டத்தில் இல்லா விட்டாலும், பெண்கள் பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கான உரிமை கள் கூட்டத்தில் அளிக்கப்பட்டிருப்பினும், இன்று நடை முறையில் அரசியல் ஆண்களிடமே உள்ளது.

சீர்திருத்தம் பேசும் பல தலைவர்களின் தாய்மார்கள் வீட்டைவிட்டு வெளியேறுவது, ஒன்று சினிமா பார்க்க, இரண்டு கோயிலுக்குப் போக. அரசியல் கட்சிகளின் குடும்பப் பெண்கள் பொது வாழ்க்கை யில் தாராளமாக ஈடுபடவோ, பதவிகளுக்குப் போட்டியிடவோ முடிவதில்லை. அதே நிலையில், கல்வி அறிவற்ற ஆண்கள் பல கட்சிகளின் தலைவர்களாகவும், பெரிய பதவிகளில் அமரவும் முடிந்திருக்கிறது. ஏதோ ஒருவர் அமைச்சராகவோ, சட்டமன்ற உறுப்பினராகவோ, மாநில ஆளுநராகவோ, பதவி வகித்தாலும் அதனால் பெண்கள் சமுதாயத்திற்கு உருப்படியான பலன் ஏதும் ஏற்பட வில்லை. அதனால்தான் பெண்கள் உலகம் ஆமை வேகத்தில் நகர்ந்து வருகிறது. மேலும் பதவியில் இருக்கும் ஆண்கள் வெறும் சட்டத்தின் மூலம் பெரிய சீர்திருத்தம் உண்டாகாது என்று மாய்மாலப் பேச்சு பேசி வருகிறார்கள். எனவே, இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் அரசு மூலம் தாய்க்குலம் விரும்பத்தக்க ஏற்றம் பெறுவது இயலாத காரியம்.

சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் குறிப்பாக இந்து மதத்தை வழிபடும் சமுதாயத்திற்குக் கடவுள், மதம், இதிகாசங்கள், சாஸ்திரங்கள், வைதீகம் வெறும் தடைகளாக உள்ளன. சமுதாயத்தை திருத்தப் பாடுபடுவதில் பல சிரமங்கள் உள்ளன.

அத்தனைக்கும் ஈடு கொடுப்பதென்பது ஒரு சில தியாகிகளால்தான் முடியும். ஒரு சிலரின் சுய விளம்பரத்திற்காக வேண்டுமானால் பிரச்சாரம் நடைபெறலாம். ஆனால், அதனால் ஏற்பட்ட பலனை மதிப்பிடும்போது, பெரியார் சாதித்திருக்கும் அளவிற்கு ஏன் நூற்றில் ஒரு பங்கு கூட இன்றுள்ள தன்னலவாதிகளால் முடியுமா என்பது ஐயத்திற்குரியதே.

## மகளிர்க்குத் தடை மகளிரே

அதனால்தான் பெரியார் பெண்களின் இன்றைய சீரழிவுக்குப் பெண்களையே குற்றம் சாட்டுகிறார்.

> 'பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களை விடப் பெண்களையே பெரிதும் தடையாக இருக்கிறார்கள். ஏனென்றால், இன்னமும் பெண்களுக்கு தாங்கள் ஆண்களைப் போல முழு விடுதலைக்கு உரியவர்கள் என்கின்ற எண்ணமே தோன்றவில்லை'

என்று பெரியார் கூறுகிறார்.

பெண் நீதிபதி, பெண் அமைச்சர், பெண் பிரதமர், பெண் கலெக்டர் என்ற செய்திகள் இங்குப் பெரிய அதிசயங்களாக இருக்கின்றன. நியாயப்படி, நீதிப்படி எதிலும் பெண்கள் சமவிகிதம் பெற வேண்டியவர்கள். ஆனால், அந்த உண்மையை மறைத்துத் திசை திருப்ப அதிசயச் செய்திகளாக வெளியிடுவது பெண் குலத்தைக் கேவலப்படுத்துவதாகும்.

சுதந்திரத்தின் சிறப்பைப் பற்றியும், வாய்கிழியப் பந்தல் போடு பவர்கள் இன்றி கற்பு - விபச்சாரம் என்ற இரண்டு வார்த்தைகள் இந்த நாட்டில் இருக்கலாமா என்று எங்கே யோசிக்கிறார்கள்.

ஒழுக்கமும், கட்டுப்பாடுகளும் ஒரு சாராருக்கு மட்டும்தான் என்றால் அப்படிப்பட்டச் சமுதாயத்தை மனித சமுதாயம் என்பதா மிருக சமுதாயம் என்பதா?

கணவன் இறந்துவிட்டால் மனைவியும் உடன் கட்டை ஏறும் கொடு மையை யார் ஒழித்தது? அந்நிய அரசல்லவா? எந்தப் பதவியிலும் இல்லாத ஒரு சாதாரண மனிதாபிமானி இராஜாராம் மோகன்ராய் அவர்களால் எவ்வளவு பெரிய சீர்திருத்தத்தை அன்று செய்ய முடிந்தது. இன்று எத்தனை தலைவர்கள் எத்தனைக் கட்சிகள்?



பெற்று வளர்த்து சீரும் சிறப்புடனும் கன்னியாதானம் செய்யும் திருமணங்கள் இன்னும் நடப்பது எவ்வளவு கேவலம்.

விவாக சுபமுகூர்த்தம் என்ற வடமொழிக்குப் பதிலாக வாழ்க்கை ஒப்பந்த விழா என்னும் தமிழ் மலர்ந்து விட்டது என்று பெருமை பேசிக் கொண்டால் மட்டும் போதுமா? பழமை ஒழிக்கப்பட்டதா? முரண்பாடான சட்டங்கள் ஒழிந்ததா? மூடச்சடங்குகள் மறைந்தனவா? படித்துப் பெரிய பதவியில் இருப்பவர்கள் கூட புரோகி தத்தை சடங்குகளை ஏற்று அடிமைகளாக மான மற்றவர்களாக உலாவிவருவது எதற்குப் பெருமை?

சாஸ்திரம் பார்ப்பது, சகுனம் பார்ப்பது, பூ வைத்து கேட்பது எவ்வளவு மூடத்தனம்? நமக்குச் சொந்த புத்தி இருந்தால் ஜோதிடம் பார்ப்பது, பஞ்சாங்கம் புரட்டி நாள், நட்சத்திரம், திதி, யோகம் என்று எதையாவது தேடுவோமா? நம்மைக் காட்டு மிராண்டிகள் என்று பெரியார் கோபமாகப் பேசியிருப்பது எப்படித் தவறுதலாகும்.

மேல்நாடுகளில் பெண்களுக்கு ஆண்கள் எவ்வளவு மதிப்பு கொடுக்கி றார்கள்; அதனால்தான், அவர்களை நாகரிகச் சமுதாயமாக உலகம் ஏற்கிறது.

தந்தை பெரியார் ஒருவர் மட்டும் நம் நாட்டில் பிறந்திருக்கா விட்டால்? நினைக்கவே நெஞ்சம் நடுங்குகிறது. பெண் அடிமை படிப்படியாகத் தீர்ந்திருக்குமா? காதல்மணம் பெருகி இருக்குமா? கலப்பு மணம் பெருகி இருக்குமா? விதவை மணம் அனுமதிக்கப் பட்டிருக்குமா? சுயமரியாதைத் திருமணங்கள் செல்லும் என்ற சட்டத்தை அறிஞர் அண்ணாவின் அரசு முடித்திருக்குமா?

பெரியார் காங்கிரஸ் மகாசபையை விட்டு வெளியேறாதிருந்தால் அவரும் ஈ.வே.இராமசாமியாக, இந்தியராக எத்தனையோ ஜனாதிபதிகளில் ஒருவராகப் பதவி வகித்திருக்கலாம். ஆனால், நமது சமுதாயம் இன்று இருக்கும் அளவிற்காவது முன்னேறி இருக்குமா?

அவர் தன்னை வெறும் காங்கிரசு எதிர்ப்பாளராக மட்டும் ஆக்கிக் கொண்டிருந்தால், அண்ணாவுக்கு முன்னரே அவர் முதல்வராகி மறைந்திருக்கக் கூடும். அவருக்குப் பதவிவெறி இல்லாதிருந்தது. இந்த நாட்டு மக்களுக்கு அவர் முடிந்த அளவு மிகப்பெரிய சமுதாயப் புரட்சியைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தார்.

## மொழிப்புரட்சிப் பேராசிரியர்

'மொழி மனிதனுக்கு அவ்வளவு முக்கியமான சாதனம் அன்று. அது இயற்கையானதும் அன்று. அதற்கு ஒரு கட்டாயமும் தேவையில்லை'.

'மொழி மனிதனுக்குக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு - விஷயங்களைப் புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கும் தேவையானதே ஒழிய, பற்று கொள்வதற்கு அவசியமானதல்ல' என்று தந்தை பெரியார் கூறியிருப்பதிலிருந்து அவர் எதையும் பகுத்தறிவு கண்கொண்டு அணுகுபவர் என்பது புலப்படும்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் அனைத்தும் தமிழ்தான். அவை ஆரியக் கலப்பால் நான்கு இடங்களில் நான்கு விதமாகப் பேசப்பட்டு வருகின்றன என்பதற்குத் தான் ஆராய்ச்சி மூலம் பெரியார் பல கருத்துகளைக் கூறியிருக்கிறார்.

பிறகு பெரியார் இந்தியை ஏன் எதிர்த்தார்? 'தமிழ், தமிழ் நாட்டுச் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றது. மக்களின் நல்வாழ்விற்கும், பண்புக்கும் ஏற்றமுள்ள மொழி தமிழ் தான். தமிழ் நாகரிகம் பெற்ற மொழி, மூட நம்பிக்கையைப் புறக்கணிக்கும் மொழி தமிழ், வேறு மொழி புகுத்தப்படுவதால் மக்களின் நலம் கெட்டு கேடு உண்டாகும். தமிழை விட மேலான மொழியில்லை இந்தி'.

ஏற்கெனவே, தமிழ் மொழி - வடமொழித் தொடர்பால் எப்படிச் சிதைந்துவிட்டது என்பதற்குப் பெரியார் சான்றுகளை அடுக்கடுக்காகக் கூறுகிறார்.

'சாதி என்ற சொல்லைத் தமிழில் இருந்து எடுத்து விட்டால் அதற்கு வேறு தமிழ்ச் சொல் உண்டா?' என்று தமிழ்ப் பண்டிதர்களையே கேட்டவர் பெரியார்.

திவசம், திதி, கல்யாணம், வைகுந்தம், சொர்க்கம், நரகம் இப்படிப் பல வார்த்தைகள் தமிழ்ச் சொற்களாகிவிட்டிருக்கின்றன. அவை புகுத்தப்பட்ட பிறகுதான் சச்சரவுகளும், சீரழிவுகளும் புதிது புதிதாக உண்டாக்கி விட்டன என்பது உண்மை.

பிற மொழித் தொடர்பால் ஒரு மொழி வளர்ச்சி பெறுமானால் அதனை வரவேற்கவேண்டும் என்கிற முற்போக்கு எண்ணம் படைத்தவர் பெரியார். தமிழுக்கு ஆங்கிலமொழித் தொடர்பால் ஏற்பட்ட நன்மைகளைச் சுட்டிக்காட்டி, இந்தியைத் தமிழர்கள் ஏன்



வெறுக்க வேண்டும் என்பதை அறிவுபூர்வமாக விளக்கியவரும் பெரியாரே.

மதச்சார்புடையவர்களிடம் தமிழ்மொழி சிக்க கொண்டதன் விளைவாக இங்கு மதம் வேரூன்றியது என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழிலிருந்து ஆரியத்தைப் போக்கிவிட்டால், எளிதில் பழந்தமிழ் கிடைத்துவிடும் என்பதை அழகாக ஆராய்ந்து கூறியவர் பெரியார் ஒருவரே.

தமிழ் மொழியை எல்லோரும் எளிதில் கற்கப் பெரியார் ஒருவர்தான் வழிகண்டார். மொழி வல்லுநர்கள், புலவர் பெருமக்கள், பண்டிதர்கள் தங்களுக்குள்ள பாண்டித்தியத்தைக் காட்டிக் கொள்ளவே பாடுபட்டனர். பேரும் புகழுந் தேடிக் கொண்டனர். ஆனால், பெரியார் அதிகம் படித்தவருமல்லர் - பண்டிதருமில்லை. இருந்தும், எல்லோரும் எளிதில் தமிழ் மொழியைக் கற்க அவர்தான் வழி கண்டார்.

ஆங்கில மொழியில் குறைந்த அளவு எழுத்துகள் இருப்பதால் அம்மொழி பேசுவோர் அடைந்த நன்மைகளைச் சுட்டிக்காட்டி, தமிழ் மொழியில் பல எழுத்துகள் இருப்பதைக் குறைத்தால் என்ன, குடியா மூழ்கிவிடும் என்று வாதாடிய வல்லுநர் பெரியார்.

அச்சுக் கோக்கவும் தட்டச்சடிக்கவும் சுலபம், நேரம் மிச்சப்படும். உழைப்பும் குறையும் என்பதை விளக்கித் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்துகாட்டி, அதனைத் தாமே நடைமுறைப்படுத்தி எழுதியும், தம் முடைய ஏடுகளை நடத்திக் காட்டியவரும் பெரியாரே.

தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தினால் மொழிக்கோ, பொருளுக்கோ, இயக்கத்திற்கோ எந்தவித கேடும் ஏற்பட்டுவிடவில்லை.

'மொழிவளர்ச்சிக்கு நல்லதொரு தொண்டு செய்தவர்' என்று டாக்டர் மு.வ. பெரியாரைப் பாராட்டினார். 'வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் செய்தால்தான் அது சீர்திருத்தமாகும் என்பதில்லை. நம் நாட்டிலுள்ளவர் செய்வதும் சீர்திருத்தமாகலாம்' என்று தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை, தமிழக அரசு தமிழ் வளர்ச்சி இயக்குநர் பேராசிரியர் கொண்டல் மகாதேவன் கூறியுள்ளார். உலகம் போகிற வேகத்தைக் கவனித்து கிணற்றுக்குள் இருந்து கொண்டே பெருமைபட்டுக்கொண்ட தமிழ் மக்களை இந்த

மொழிச் சீர்திருத்தத்தின் மூலம் முன்னேற வழிகண்டவர் பெரியார். இப்படிப்பட்ட நல்ல சீர்திருத்தத்தைக் கூட நாடு உடன் ஏற்க வில்லையே ஏன்?

தமிழ் மக்கள் தங்களின் மொழி தமிழ் என்றுதான் பெருமைப்படக் கற்றுக்கொண்டனரே தவிர, தமிழகம் முழுவதும் தமிழ் ஒரே மாதிரி இருக்கிறதா என்று கவனிக்கத் தயங்கும் நிலையிலேயே இருந்து வருகின்றனர். ஒரு சிலர் பெரியாரை எதிர்ப்பதற்கு மூல காரணம் உண்டு.

அதிகம் படிக்காத, பட்டம் ஏதும் பெறாத பெரியார் சொல்ல நாம் கேட்பதா என்கிற எண்ணம் ஒரு சாராருக்கு.

பழைமை முழுவதும் அழிக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் வேறு சிலருக்கு. இப்படிப்பட்ட அச்சம் ஏற்படுவது அவர்களைப் பொருத்த மட்டில் நியாயம் தான். ஆனால், அவர்களைப் போன்ற வர்கள் போடும் தடை, உடைக்கப்பட்டதாகத்தான் உலக வரலாறு கூறுகிறது. இன்றில்லை என்றால் நாளை, நாளையும் இல்லை என்று சொன்னவர்களுக்குமுன் விரைவில் தந்தை பெரியாரின் எழுத்து சீர்திருத்தம் ஓரளவு வெற்றி கண்டது.

எத்தனையோ முக்கியமான சீர்திருத்தங்களுக்காக வாழ்ந்து காட்டிய பெரியார், இன்றுள்ளவர்களுக்கு ஒரு முக்கிய பாடமாக விளங்குகிறார்.

## இந்தியை ஒழித்த இடியேறு

எந்த மொழியிலும் பண்டிதர்களுக்கு வெறி இருப்பது எதிர்பார்க்கக் கூடியதே. இந்தி மொழிப் பண்டிதர் சேத்கோவிந்ததாஸ், மக்கள் மன்றத்திலேயே பகிரங்கமாகப் ‘பண்டித நேருவுக்கே சரியான இந்தி தெரியாது’ என்று குற்றம் சாட்டியது மறக்க முடியுமா என்ன? பண்டித நேருவுக்கே அந்தக் கதி என்றால், பதவியை நாடாத பெரியாருக்குப் பண்டிதர்கள் மதிப்பளிக்காததில் வியப்பு ஏதும் இல்லை. எளிதாகக் கடைபிடிக்கக் கூடிய சிறு, ஒரு சில சிறு சீர்திருத்த முறைகளைக் கூட நம்மவர்களால் கடைப்பிடிக்க முடியாதநிலை இருக்கும்போது தமிழ்ச் சமுதாயம் எப்படி வேகமாக முன்னேற முடியும்.

தந்தை பெரியாருக்கும் இந்தி மொழிப் பற்றிய சரியான மதிப்பீடு **1926**-ஆம் ஆண்டே ஏற்பட்டதாகும். **1938**-ஆம் ஆண்டுதான் இந்தி கட்டாயப் பாடமாகப் புகுத்தப்பட்டது என்பதை அறிவாளிகள் அறிவர். ஆனால் **12** ஆண்டுகளுக்கு முன்னரே, காங்கிரசிலிருந்து



வெளியேறிய உடனே தந்தை பெரியார் தமது குடியரசு இதழில் ***இந்தியின் இரகசியம்*** என்ற தலைப்பில் ஒரு முக்கிய கட்டுரை எழுதினார்.

> ‘நமது நாட்டின் சேமத்திற்காக என்று எந்தக் காரியம் ஆரம்பிக்கப்பட்டாலும் அவற்றை நம் நாட்டுப் பிராமணர்கள் கைப்பற்றிக் கொண்டு அதனால்தான் தங்கள் பிழைக்கும் படியாகவும், நமக்குப் பெரிய விபத்து விளையும் படியாகச் செய்து விடுகிறார்கள். அதுபோலவே நமது நாட்டில் இந்திப் பிரச்சாரம் பெரும்பாலும் பிராமணர்களின் அநுகூலத்திற் காகவே செய்யப்பட்டிருக்கிறது ’

இப்படி **1926**-ம் ஆண்டிலேயே பெரியார் எழுதியிருப்பது குறித்து நினைக்கும்போது பல உண்மைகள் புலப்படுகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றில் பார்ப்பனர்கள் கையாண்ட முறைகள் பெரியாரின் கருத்துக்கு வலிவைத் தருகின்றன. எங்கே இருந்து இங்கே குடியேறியவர்கள் எப்படித் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள முடிந்தது என்பதை ஆராய்பவர்களுக்குப் பல வரலாற்று உண்மைகள் நினைவுக்கு வரும்.

நாட்டு மக்களின் நலம்பேணத் தொடங்கப்பட்ட காங்கிரசு மகா சபையை ஆட்டிப்படைக்கும் ஆதிக்க நிலை பார்ப்பனர்களிடம் இருந்து வந்தது என்பதும் மறுக்க முடியாது உண்மை. ஆனால், பார்ப்பனர் நலம் பேண மட்டும் தொடங்கப்பட்ட தன்று காங்கிரசு மகாசபை.

நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்பது குடிமக்கள் அனைவரின் நல் வாழ்விற்காகத்தான். ஆனால், அதிலும் பார்ப்பனர்களே இன்றுவரை ஆதிக்கம் செலுத்தி வருவது மறுக்க முடியாத உண்மை.

ஏதோ, ராஜாஜி இந்தியைப் புகுத்தியதால் பெரியார் எதிர்த்தார் என்பது தவறான மதிப்பீடாகும்.

அரசைக் கவிழ்க்க இந்தியை ஒரு கருவியாகக் கொண்டார் என்பதும் உப்புசப்பற்றதாகும். அதே கட்டுரையில்,

> ‘மகாத்மாகாந்தி அவர்கள், ராஜிய நோக்கத்தோடு இந்தியா முழுவதும் ஒரே பாஷையாக இருக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டு, இந்தி பாஷைக்காகப் பொது ஜனங் களும் மகாத்மா சொல்லுகின்றாரே என்கிற பக்தியின் பேரில்

நம்பி, அதை அமுலுக்குக் கொண்டு வந்ததன் பலன், அதுவும் ஒரு வினையாய் முடிந்து வருகிறது'.

'இந்த நாட்டாரைத் தாங்களால் ஏய்க்க முடியாது என்று தெரிகிற சமயத்தில், வெளி மகாணத்தில் இருந்து ஒருவரைக் கூட்டி வந்து ஏமாற்றித் தங்கள் காரியத்தையும் சாதித்துக் கொள்வது வழக்கமாக இருந்து வருகிறது'.

'பள்ளிக்கூடம் முதலிய இடங்களில் கட்டாயப் பாடமாக்கப் பிரயத்தனப்படுவதும் யார் நன்மைக்கு? பிராமணரல்லாதா ருக்கு ஏற் பட்ட பல ஆபத்துகளில் இந்தியும் ஒன்றாய் முடியும் போலிருக்கிறது'.

1926-ஆம் ஆண்டிலேயே பெரியார் இந்தியின் குட்டை வெளிப் படுத்தினார் என்பதைக் கூர்ந்து கவனிக்கும்போதும், அவர் கூறிய படியே அடுத்து 50 ஆண்டுகளின் சம்பவங்கள் அமைந்து விட்டன என்பதையும் உணர்த்தினார் பெரியார்.

## வரலாற்றை மாற்றிய திறனாளர்

இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட மாறுதல்களின் காரணமாகவும், இறுதியாகக் கொள்ளைக்கார ஏகாதிபத்தியத்தின் முயற்சியின் காரணமாகவும் ஒருநாடு என்ற பெயரில் 'பிரிட்டிஷ் இந்தியா'வாகத் திகழ்ந்தது.

அந்த இந்தியாவிலும் பிரஞ்சுப் பகுதிகள், போர்ச்சுகீஸ் பகுதிகள், சமஸ்தானங்கள் இருந்து வந்திருக்கின்றன. அன்றைய இந்தியாவில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேசம் இல்லை. வெள்ளையர் வெளியேறும் போது ஆட்சியைக் காப்பாற்றும் அரசியல் ஆதிக்கத்தை இந்திமொழி வெறிப்பிடித்தவர்களின் தலைமையில் சிக்கியது. அவர்களின் ஆதிக்கத்தை நிலைநாட்ட இந்தியைத் திணித்தது இயற்கையே. முதலில் இந்திதான் தேசிய மொழி என்றனர். மற்ற மொழியினர், குறிப்பாக தமிழ் மொழி பேசுவோர் எந்த தேசத்தவர் என்று தட்டி கேட்டவுடன், இந்தி பொதுமொழி என்றனர். எங்களுக்கு உள்ள மொழி போதும், புதுமொழி ஒன்று புதிதாகப் பொது மொழியாக வேண்டிய அவசியம் என்ன என்று கேட்ட பிறகு அதையும் விட்டு ஆட்சி மொழியாக இந்தி இருக்கட்டுமே என்றவர். யாரை யார் ஆள்வது? உங்கள் மொழி ஆட்சி மொழியானால், எங்கள் மொழிகளும் ஆட்சி மொழிகளாக



வேண்டும் என்றதும் உடன்பாட்டிற்கு வந்து இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும் என்ற வாக்குறுதி கொடுத்து விட்டனர். இதுதான் இந்தியின் கதை. இத்தனைக் குழப்பத்திற்கும் காரணம் என்ன?

வடவர், ஆங்கிலேயர்களின் இடத்தைப் பிடித்து கொண்டார்களே தவிர, அவர்களின் ஆங்கில மொழியின் இடத்தைப் பிடிக்க முடியவில்லை என்பதுதான் உண்மை.

இந்தி மொழி பேசுவோருக்கும், மற்ற மொழி பேசுபவர்களுக்கும் இடையே நடைபெற்று வரும் ஆதிக்க உரிமைப் போராட்டம்தான் இந்தியாவின் மொழிப் போராட்டம்.

இந்திமொழி பேசுவோர் தங்களுக்கு உள்ள மொழி வெறியின் காரணமாகப் பல உண்மைகளை மறந்து விடுகின்றனர்.

குறிப்பிட்ட சிலரால் தொடர் மாநிலங்களில் மட்டுமே பேசப்படுவ தாகும் இந்தி.

இந்திமொழி ஒரு குறிப்பிட்ட தெளிவான மொழியுமன்று; பல இடங்களில் பலவிதமாக பேசப்படுகிறது.

இந்தியாவில் மொத்தம் 782 மொழிகள் பேசப்படுகின்றன. இந்தி என்ற தலைப்பிற்குள் 81 வகையான மொழிகளை ஆட்சியாளர் சேர்த்துக் கொண்டு, இந்தி பெருவாரியான மக்களால் பேசப்படும் மொழி என்கின்றனர்.

பஞ்சாபி - காஷ்மீர், மராத்தி, வங்காள மொழிகள் அடியோடு இந்திக்கு மாறுபட்டதாகும்.

உலகத் தொடர்புக்கு லாயக்கற்ற மொழி இந்தி.

இந்த உண்மைகளை மூடி மறைத்து ஆதிக்க அரசியல் நடத்த இந்தி மொழியர்களுக்கு வெறி உணர்வு இருப்பதில் நியாயமுமில்லை. மத்திய அரசில் அதிகாரம் குவிக்கப்பட்டு, அந்த அதிகாரத்தை நிர்வகிக்கும் பொறுப்பில் அவர்கள் இருப்பதும் அதற்கேற்றபடி அரசி யல் சட்டம் அமைந்திருப்பதும் பெரிய கேடாகும். இதை இன்று மற்ற தேசிய மொழிகள் பேசுவோர் பெருமளவு உணர்ந்து இருப்பதால்தான் நேரடியாக மத்திய அரசு ஏதும் செய்யமுடியாது திண்டாடுகிறது. ஆனால் இதனை எல்லாம் முழுமையாக உணரா விட்டாலும், இந்தி, இங்கு பார்ப்பனர்களுக்கு வளர்ச்சிதரும் என்று

எச்சரித்த பெருமை பெரியாருக்குத்தான் சேரும். இதனை 1926-ஆம் ஆண்டிலேயே எச்சரித்தார்.

அன்று நிலவிய அரசியலையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மிகுந்த அறிவும், ஆற்றலும் படைத்த நீதிக் கட்சியின் தலைவர்கள் நீதி, நேர்மை, நாணயத்துடன் செயல்பட்டு திராவிடர் இயக்கத்தை வளர்த்து மறைந்து விட்டகாலம் அது.

காந்தியாரின் தலைமைக்குக் காங்கிரசு மகாசபைக்கு நாடு முழுவதும் படிப்படியாக செல்வாக்குப் பெருகி வந்த காலம். இங்கு தேசியத்தின் பெயரால் பார்ப்பனர் அரசியலை ஆட்டிப் படைத்த காலம்.

தென்னாட்டில் திராவிடர்கள் இயக்கம் வலுப்பெற்றிருந்தும், நல்ல தலைமை இல்லாத காலம்.

இப்படிப்பட்ட சூழலில்தான் தென்னாட்டின் அரசியல் தலைவராக ராஜாஜி ஆக்கப்பட்டதில் வியப்பேதும் இல்லை. அவர் முதல்வராக வந்தபோது 1938-இல் தென்னவர் இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

1925-ஆம் ஆண்டில் காங்கிரசை விட்டு வெளியேறிய பெரியார் சுயமரியாதை இயக்கத்தின் பெயரால் தீவிரமாகச் சமுதாயச் சீர்திருத் தத்திற்காகவே பாடுபட்டு வந்தார். குடியரசு ஏட்டில் அப்படிப்பட்ட எழுத்துகளே முதலிடம் பெற்றன. நாடு முழுவதும் சுயமரியாதை மாநாடுகளை நடத்தி வந்தார். பெரியாரை ராஜாஜிக்கு எதிராகவும், காங்கிரசுக்கு எதிராகவும் அரசியல் போர்ப் பிரகடனம் செய்யக் காரணமாக இருந்தது இந்த இந்திதான். இல்லை என்றால் பெரியார் அரசியல் நடப்புகளில் அவரது கூற்றுப்படி தலையிட்டிருக்க மாட்டார் என்றே கருத வேண்டியிருக்கிறது.

மொத்தத்தில் 16 ஆண்டுக்காலம் அரசியலில் ஆதிக்கம் பெற்றுச் சீரான ஆட்சி நடத்தி அனைவருக்கும் சமூக நீதி கிடைக்கச் செய்து, தென்னக மக்களின் எதிர்கால நல்வாழ்விற்கான நல்ல பாதையை அமைத்து விட்ட நீதிக்கட்சி காங்கிரசு மகாசபைக்கு அந்தக் காலத்தில் ஈடு கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை என்பதற்கு மற்றும் ஒரு காரணம் உண்டு.

## திராவிடத்தின் எரிமலை

இந்திய அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கு விதவிதமான



காரணங்கள் உண்டு. ஆனால், நீதிக்கட்சி ஒன்றுதான் தெளிவாகத் தனது முதல் அறிக்கையில் தெளிவாக்கிய குறிக்கோள்களை அடைய முடிந்தது. அதற்குப் பிறகு அக்கட்சிக்கு வேலை இல்லை என்றே கூற வேண்டும். மேலும், அது ஒரு மாநிலக் கட்சி அளவிலேயே வளர்க்கப்பட்டதாகும். மொத்தத்தில் காங்கிரசு தென்னாட்டில் தடையின்றி வளரும் வாய்ப்பு ஏற்பட்டது. அதுவரைச் சமுதாயச் சீர்திருத்தப் பணியிலே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பெரியார், மீண்டும் 1940-இல் ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராக வர வேண்டியதாயிற்று. மேலும் அப்போது இரண்டாவது உலக யுத்தம் மூண்ட நேரம். அதனால்தான் நான்கு ஆண்டுக் காலத்தில் 1944-இல் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தை உருவாக்கினர். மீண்டும் மக்களை விழிப்புறச் செய்து திராவிடர் இயக்கத்திற்கு மூலாதாரக் கொள்கைகளை அளித்தார். 1949-ஆம் ஆண்டு அண்ணா தலைமையில் தி.மு.க.என்ற பிரிவு ஏற்படாதிருந்தால் இன்று இந்த இயக்கத்தின் மீது வீசப்படும் புழுதிக்கு இடம் இருந்திருக்காது. பெரியாரும் சமுதாயப் புரட்சியைத் தீவிரப்படுத்த வழி பிறந்திருக்கும் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

இதில் குறிப்பாகக் கவனிக்க வேண்டியது வலிவிழந்த நிலையில் இருந்த திராவிடர் இயக்கத்திற்கு பெரியார் வருகையால் புத்துயிர் ஏற்பட்டதாகும்.

ராஜாஜி கட்டாய இந்தியை ஏன் கொண்டு வந்தாரோ தெரிய வில்லை. கூடாத இந்த ஒரு சாதாரண உத்தரவின் மூலமே அது காங்கிரசுக்குக் கொள்ளியாகி விட்டது. மேலும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை ஒடுக்க ராஜாஜி கூடாத கடுமையான முறைகளைக் கையாண்டதும் காங்கிரசு கூரைக்கு வைக்கப்பட்ட பெரும் தீயாகி விட்டது.

1000-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். சிறையில் கொடுமைப்படுத்தப்பட்டனர். தாளமுத்துவும், நடராஜனும் பிணமாகத் தரப்பட்டனர். பெரியார் கார் பறிமுதல் செய்யப் பட்டது. அச்சகம் அச்சுறுத்தப்பட்டது. அறவழியில் உண்ணாவிரதம் இருந்தவர்களும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். தாய்க்குலம் இழிமொழிகளுக்கு ஆளாக்கப்பட்டது. பெரியார் தண்டிக்கப்பட்டு பெல்லாரி சிறைக்கு மாற்றப்பட்டார். ஏன் அப்படி என்று கேட்ட தற்கு அதுதான் அவர் உடல்நலத்திற்கு ஏற்றது என்று ஆணவமாகப் பதில் கூறப்பட்டது.

உண்மையைக் கூறவேண்டுமானால், மங்கிப் போன தமிழகத்தில், தமிழ்த் தேசிய உணர்ச்சி உண்டாக்கக் கூடிய வாய்ப்பளித்து எல்லா தமிழர்களையும் ஒன்றுப்படுத்தி 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற பிரிவினை முழக்கத்திற்கு வலிவூட்டிய இமாலயத் தவற்றைச் செய்தவர் ராஜாஜிதான்.

நல்ல சமயமடா, இதனை நழுவவிடலாமோ என்று தக்க தருணத்தில் திராவிடர் இயக்கத்திற்கு மீண்டும் திடீர் வலிவைத் தேடித் தந்தார் பெரியார். 1938-இல் போராட்டத்தின் போதே தந்தை பெரியார் பேசிய பேச்சுகளை ஆராய்ந்தால் இந்த உண்மை புலப்படும்.

> 'நமது மொழிப் போராட்டம் நமது நாட்டை, நம்மை அதாவது தமிழராக-தமிழ் மொழி பேசுபவராக ஒன்றுபட்டு வாழ்ந்த கன்னடியர், தெலுங்கர், மலையாளத் தோழர் களையும் விழிப்புறச் செய்து மீண்டும் நாம் ஒன்று சேர்ந்து வடநாட்டார் ஆதிக்கத்தை அறவே ஒழித்துத் தனிச் சுதந்திரக் குடியரசு ஆட்சியாக மாறும்வரை நீடித்து நடந்தே தீரும்'.

இந்தி எதிர்ப்பை எப்படிப் புத்திசாலித்தனமாகப் பெரியார் பயன் படுத்தினார் என்பது அப்போதுதான் பொதுவாக எல்லோராலும் காண முடியும். மிகப்பெரிய பலம் வாய்ந்த கட்சியாக, காங்கிரசு அந்தக் காலத்தில் இருந்தும், இன்று எது காங்கிரசு, எங்கே இருக்கிறது என்று தேட வேண்டிய நிலைக்குச் சுக்குநூறாகிக் கிடக்கிறது. திராவிடர் இயக்கத்தின் தயவை நாடும் பதவி மோகம் பிடித்த காங்கிரசுகாரர்களைத்தான் இன்று காண முடிகிறது என்பதுதான் உண்மை.

அதே இந்திதான் இன்று மத்திய அரசுக்கும் தலைவலியாக மாறி இருக்கிறது. பண்டித நேரு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினால் மத்திய அரசோ, இந்தியாவோ இருக்குமா என்று சந்தேகப்பட வேண்டி இருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ராஜாஜி 1938-இல் கொண்டுவந்த கட்டாய இந்தி 1940-ஆம் ஆண்டில் அன்றைய வெள்ளையர் ஆட்சியினர் மூலம் அகற்றப்பட்டது. இருப்பினும் இந்தியா 1947-இல் விடுதலை பெற்றவுடனே, மீண்டும் 1948-ஆம் ஆண்டில் இந்தித் திணிப்பு மீண்டும் பள்ளிகளில் தலை தூக்கியது. மீண்டும் இந்தியை எதிர்த்துப் போர் மூண்டது. முதலில் கட்டாயப் பாடமாக்கப்பட்ட இந்தி பிறகு விருப்பப்பாடமாக ஆக்கப்பட்டது. 1953-ஆம் ஆண்டு



புகைவண்டி நிலையங்களில் புகுத்தப்பட்ட இந்திப் பெயர்களை அகற்றும் போராட்டத்தைத் தி.க.வும் தி.மு.க.வும் ஒற்றுமையாக இருந்து அழித்து வெற்றிக்கண்டது.

ஏதோ திராவிடர் இயக்கம் பிளவுபட்டு விட்டதாகவும், இரு சாரா ருக்கும் கடும்பகை மூண்டுவிட்டதாகவும் தவறான கணக்குப் போட்ட தில்லி எசமானர்களுக்குப் பெரியாரும் அண்ணாவும் புத்தி புகட்டினர்.

1958-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவராக இருந்த ராஜேந்திர பிரசாத் அவர்கள் இந்தி திணிப்புக்கு ஆதரவாகப் பேசிய காரணத்தினால் அவருக்கு எதிராக, தி.மு.கழகம் கறுப்புக்கொடி முனைந்தது. 1963 ஆம் ஆண்டில் இந்தித் திணிப்பை எதிர்த்து மாவட்டாட்சி மன்றங்கள் முன் மறியல் போராட்டம் நடைபெற்றது. 1965 இல் மாணவர்களை இந்தி திணிப்புக்கு எதிராக தீவிரமாகப் போராட்டம் நடத்தினர். இதில் ஒன்பது தமிழ் வீரர்கள் தமிழுக்காகத் தங்கள் உடலையும், உயிரையும் கொடுத்துத் தீக்குளித்துச் செத்தார்கள்.

இவையனைத்தும் நோக்கும்போது திராவிட இயக்கத்திற்கு எத்தனை வலிவான ஆயுதத்தைக் காங்கிரஸ் தென்னாட்டு மக்களுக்கு அளித்து விட்டது என்பது அறியலாம்.

இந்தியா விடுதலை பெற்ற 1947-ஆம் ஆண்டிலேயே காங்கிரஸ் தென்னாட்டில் வலுவிழந்து விட்ட காரணத்தினால்தான் 1952-இல் நடைபெற்ற முதல் பொதுத்தேர்தலில் கூட காங்கிரஸ் பெருவாரி யான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை அமைக்க முடியாது போயிற்று. காங்கிரசை எதிர்த்து வெற்றி பெற்ற உழைப்பாளர் கட்சி-காமன் வீல்கட்சி உறுப்பினர்களுக்கு கூட கதராடை போட்டு, தேசியவாதிகளாக்கி காந்திவாதிகள் என்று கேவல நாடகம் நடத்தி ஆட்சியைக் கைப்பற்றவும், இம் மாநில மக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்ட ராஜாஜியை வேறு நாதியற்ற நிலையில் மாநில முதலமைச்சர் பதவிக்குக் கொண்டு வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. 1952-இக்கு பிறகு நடைபெற்ற காங்கிரசின் கேலிக் கூடத்தைக் கண்டு, தி.மு.க. அடுத்து 1957-இல் நடைபெற்ற தேர்தலில் நேரடியாக போட்டியிட்டு 15 இடங் களையும் 1962-ஆம் ஆண்டில் 50 இடங்களையும் பெற்று 1967-ஆம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றி காங்கிரசு வரலாற்றில் இறுதி அத்தியாயத்தை எழுதி முடிக்க நேர்ந்ததும் - அதனைத் தொடர்ந்தும்

மேலும் காங்கிரசு சிதறிச் சின்னாபின்னமாகி வரும் நிலையும் வரலாற்று உண்மைகள் ஆகும்.

**1967**-ஆம் ஆண்டு அண்ணா முதல்வராக வந்தபோது பள்ளிகளில் இந்தி படிக்க வேண்டிய மும்மொழித் திட்டத்தைச் சட்டத்தின் மூலம் அகற்றினார். கல்வி நிலையங்களில் இந்தியின் ஆதிக்கம் ஒழித்தவர் அண்ணா. இந்தியாவில் இரு மொழித் திட்டம் நடைமுறையில் உள்ள ஒரே ஒரு மாநிலம் தமிழகம்தான்.

எது எப்படி இருப்பினும், பெரியாரும் அண்ணாவும் இன்று மறைந்து விட்ட பின்னரும் - இந்தித்திணிப்பு வெற்றி பெற முடியாத அளவிற்கு இந்திய அரசியல் மாறி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மறைமுகமாக இந்தியைத் திணிக்கும் முயற்சிகளும் - பண்டித நேருவின் வாக்குறுதியை மீறி நடக்கும் செயல்களும் இனியும் தொடருமானால் பெரியாரின் வாரிசுகள் வாளாயிருக்க வரலாறு இடம் தராது. அதனைப் பெரியார் சுட்டிக்காட்டி பேசியிருக்கிறார்.

> ‘இந்தி ஒழிய வேண்டும். இல்லையென்றால் என்னையும் அண்ணாத்துரையையும், எங்களைப் பின்பற்றும் முக்கியத் தோழர்களையும் அடியோடு ஒழித்துவிட வேண்டும். இன்றேல், இந்த மந்திரிகள் ஆட்சி ஒழிய வேண்டும். இவற்றில் ஏதாவது ஒன்று நடைபெற்றால்தான் மந்திரிகள் கூறுவது போன்று நமது போராட்டம் புஸ் என்று போகும். இல்லாத வரை ஆண்டுகள் எத்தனை ஆனாலும் நமது போராட்டம் நீடிக்கும். வெற்றி பெற்றே தீரும்’.

பெரியார் சொன்ன அந்த மந்திரிகள் ஆட்சி ஒழிந்துவிட்டது. இந்தியை எதிர்ப்பவர்களுக்குதான் இனிப்பதவி என்ற நிலை ஏற்பட்டு விட்டது. பெரியாரின் போர்ப்படையும் பெருகிவந்து கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் இந்தித் திணிப்பு எப்படி வெற்றி பெறும்?

அது மட்டுமல்ல. பெரியார் கையாண்ட மொழிப் போராட்டத்தின் விளைவாக மற்ற மாநிலத்தவர்களும், பிற தேசிய மொழியினரும்கூட விழிப்புணர்வு பெற்றுள்ள காலமிது. தென்னாட்டில் அனைத்துக் கட்சிகளும் இந்தியைத் திணிப்பதிலுள்ள கேடுகளை உணர்ந்து விட்ட காலம் இது.

மத்திய அரசில் பகுத்தறிவாளர் ஆதிக்கம் பெறும் காலம் மலருமே



யானால், இந்தியின், பெயரால் பாழடிக்கப்படும் கோடிக் கணக்கான பணம் மக்களின் நல்வாழ்விற்காகச் செலவிட்டு உண்மை யான சமத்துவக் குடியரசு மலர வாய்ப்பு ஏற்படும். அப்படி ஒரு காலம் விரைவில் ஏற்பட்டாலும், ஆச்சர்யப்படுவதற்கில்லை.

## மூடத்தனத்தின் காடழிப்பு

அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது. விதியை வெல்ல எவராலும் முடியாது; பூர்வ ஜென்மத்தின் கர்மம்தான் அவனை ஆட்டிப் படைக்கிறது; எல்லாம் அவன் செயல்; இப்படி அடிக்கடி பலர் பேசிடும் நிலையில் நமது சமுதாயம் இன்றும் இருக்கிறது.

அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பது உண்மையானால் இரயிலை இழுக்க ஓர் இன்ஜின் ஏன்? ஒரு விமானத்தை ஓட்ட ஒரு விமானி ஏன்? வண்டியை ஓட்ட ஒரு மனிதன் ஏன்?

எல்லாம் அவன் செயல் என்பது உண்மையானால், மனிதனுக்குப் படிப்பு ஏன்? வேலை ஏன்? சொத்து ஏன்? எல்லாம் அவன் எழுதியபடி தான் நடக்கும் என்பது உண்மையானால் எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகிறது என்பதைத் தெரிந்து கொள்ளத் துடிப்பது எதற்காக? நடப்பது நடக்கட்டுமே. நடக்கப் போவது நல்லதானால் அதை யாரும் கெட்டதாக்க முடியாதல்லவா? அவன் எழுதியிருப்பது எதுவோ அதுதானே நிச்சயம் நடைபெறவேண்டும்?

நடக்கப்போவது கெட்டது என்று கூறிய உடனே மனம் வேதனைப் பட்டு அதற்கும் பரிகாரம் தேடுவதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா?

பிறந்த நேரம், நாள், கோள் கொடுத்த உடனே பிறந்தது முதல் இறக்கும்வரை ஆண்டுக்கு ஆண்டு இன்னென்ன நடக்கும் என்று கண்டறிய ஜாதகம் பார்க்க அலைவதில் ஏதாகிலும் அர்த்த மிருக்கிறதா? கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் மூன்றையும் தெரிந்து கொண்டு ஆகப்போவது என்னவோ?

இதற்கு மிகவும் அடிப்படையாக அமைந்திருப்பது மதம். முன் ஜென்மம், ஆத்மா, கர்மம், பாவம், புண்ணியம், விதி என்கிற இல்லாத விஷயங்களில் மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்வது மதமும், புராண ஏடுகளுமேயாகும்.

மாதங்களிலே இன்னின்னவை பீடை; நாட்களிலேயே இன்னின்ன கெட்டவை; 24 மணி நேரத்தில் இத்தனை மணி நேரம் பொல் லாதவை; இப்படி இந்த நாட்டு மக்களுக்குப் பீதியை உண்டாக்கு வதற்கு அடிப்படைக் காரணம் என்ன?

மனிதனின் ஆயுட் காலத்தில் ஏறத்தாழ சரிபாதி பாழகிறதே என்பன



போன்ற கவலைகள் பெரியாருக்கு ஏற்பட்டதன் காரணமாகவே, அவருக்கு ஜோதிடத்தின் மீதும் மூடநம்பிக்கையின் மீதும் வெறுப்பு ஏற்பட்டதாகும்.

ஜோதிடர் பீடை ஒழிய வேண்டுமானால் மதம் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று கூறியவர் பெரியார். அறிவியலுக்கு ஒத்து வராதது ஜோதிடம் என்றார். உலக விஞ்ஞானிகள் யாரும் ஜோதிடத்தை உண்மை என்று ஏற்றதில்லை என்பதை விளக்கினார்.

ஆனால், சுதந்திரம் பெற்ற இந்தியா உடும்புப் பிடியுடன் இன்னமும் மூடநம்பிக்கைகளை ஒழிக்கா திருப்பதற்கு முக்கிய காரணம், ஆட்சி பிற்போக்குவாதிகளிடமும், மத வெறியர்களிடமும், பெருவாரியான மக்களுக்கு விரோதமான தத்துவங்களில் பற்றுள்ளவர்களிடமும் சிக்கி இருப்பதுதான்.

முற்போக்குவாதியாக கருதப்பட்ட ஆசியாவின் ஜோதி பண்டித நேருவும் கூட, நள்ளிரவு நேரத்தில்தான் (மிகவும் சிறந்ததென்று) வெள்ளையனிடமிருந்து நாட்டு உரிமை அதிகாரத்தைப் பெற்றார்.

அசிங்கமான சாமியார்கள் - உழைக்காமல் உண்டு கொழுத்த சோம்பேறிகள் நடத்தும் கும்பமேளாக்களில் கலந்துக் கொண்டார். அவரே இப்படி என்றால் மற்றவர்களைப் பற்றி கேட்கவும் வேண்டுமா?

திருப்பதியிலே மொட்டையடித்துக் கொண்டவர்கள் கோயில் கோயிலாகச் சென்று கடவுள்களைத் தரிசித்து வணங்கியவர்கள், ஜெகத்குருக்களின் காலில் விழுந்தவர்கள், கண்ட கண்ட ஊதாரிப் பயல்களிடம் வரம் கேட்டவர்கள், ஜோதிடம் பார்த்தே எதையும் செய்பவர்கள் கோணிப் புளுகர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு பெயரை மாற்றிக் கொண்டவர்கள், எண்களை மாற்றிக் கொண்டவர் கள், வீட்டை மாற்றிக் கொண்டவர்கள், இப்படி எத்தனையோ பெரிய மனிதர்கள் இன்றும் நடமாடி வருகிறார்கள்.

மக்களிடம் எழுகிற பேராசைகளின் காரணமாக பிழைப்பு நடத்த சதி புரிபவர்கள் மூவர். ஒன்று ஜோதிடன், இரண்டு மாந்திரிகன், மூன்று கோயில் புரோகிதன். இம்மூவரும் தங்களுடைய சுயநலத்திற்காக தங்களின் துறைகளில் கூட்டுச்சதி புரிந்து, மனித சமுதாயத்தை ஏய்த்துப் பிழைத்து வருகின்றனர்.

ஜாதகம் பார்ப்பதாகப் பிழைப்பு நடத்துபவன், உங்களுக்கு ஏற்படக்

கூடிய கெட்டதை எல்லாம் பூஜை செய்வதன் மூலமும் அர்ச்சனை அபிஷேகம் செய்து வைப்பதன் மூலமும் தவிர்த்துக் கொள்ளலாம் என்றுதான் புரோகிதனுடைய பிழைப்புக்குத் துணையாக இருக்கிறான்.

அத்துடன் மனிதன் நிம்மதி பெறுவதில்லை. ஆக வேண்டிய காரியங்களில் ஈடுபடுவதில்லை. பெரிய கவலைக்கு ஆளாகி என்ன செய்வது என்ற ஏக்கத்துடன் தவிக்கிற போதுதான் 48 நாள் சாந்தி பூஜை செய்து, மந்திரங்கள் ஓதி கிரகங்களின் கெட்ட பலன்களை நேரவிடாமல் தடுத்து விடுகிறேன் என்று கூறி ஏமாளிகளைச் சுரண்டிப் பிழைக்கிறான். இப்படி வெறும் ஏமாற்றுப் பேர் வழி களால் தான் கூட்டுச் சதியால்தான் மூடநம்பிக்கை நாட்டில் வளர்கிறது என்பதைப் பாமர மக்களுக்கு விளக்கி அறிவைத் தூண்டியவர் பெரியார். நடப்பது நடந்தே தீரும் என்பது உண்மை யானால் அதனை எப்படி ஒரு ஜோதிடனோ, புரோகிதனோ, மாந்திரிகனோ தடுத்து விடமுடியும் என்று துணிந்து பிரச்சாரம் செய்தார் பெரியார்.

நல்ல நேரம், நாள் நட்சத்திரம் பார்த்து திருமணம் செய்த பெண்கள் எத்தனையோ பேர் கணவனைப் பறிகொடுத்து கைம்பெண்களாக இருக்கிறார்களே ஏன்? இராகு காலம், எமகண்டம், வாரசூலை, எதையும் பார்க்காதவன் உழைப்பின் மூலம் நினைத்ததை முடிக்கிறானே... அது எப்படி?

ஜாதகம் பார்த்து, பொருத்தம் பார்த்து நடத்தி வைக்கப்படும் திருமணத் தம்பதிகள் எத்தனைபேர் நிம்மதியாக வாழ்கிறார்கள், நேர்மையாக நடக் கிறார்களா? இதையெல்லாம் பார்க்காதவர்கள் எத்தனையோ பேர் சந்தோஷமாகக் குடும்பம் நடத்துகிறார்களே ஜாதகம் உண்மை என்றால் இப்படி நடக்கலாமா?

தந்தை பெரியாருடைய வாழ்க்கையிலே இந்த மடமை ஒழிப்புக்குச் சான்றுகள் பல காணலாமே. அவருக்கு வைதீக முறையில்தான் திருமணம் நடைபெற்றது. இருந்தும் அவருக்கு ஒரு குழந்தைக் கூட பிறக்கவில்லையே.

பழமையில் நம்பிக்கை கொண்ட பெற்றோர்கள் பெரியாரையும், நாகம்மையாரையும் இராமேஸ்வரத்திற்கு அழைத்துச் சென்றார்கள். முன்காலத்தில் செய்த பாவம் தொலையும் பிள்ளை பிறக்கும் என்பது பெற்றோர்களுடைய நம்பிக்கை. பெற்றோர்களும் பழுத்த



வைதீகர்கள் ஊரார் போற்றும் அளவுக்குப் பக்தி உடையவர்களால் என்ன பலன்? பக்தர்களின் பிரார்த்தனை நிறைவேறவில்லையே, பெரியாருக்குக் குழந்தை பிறக்கவில்லையே. இப்படிப்பட்ட மூடத்தனத்தையெல்லாம் பெரியார் எதிர்த்தார் என்றால் அதில் என்ன தவறு? இராமேஸ்வரம் சென்று வந்தபின்னர் பெரியாருக்குக் குழந்தை பிறந்திருந்தால் பெரியார் பக்தியைக் குறை கூறி யிருப்பாரா? கடவுளை எதிர்த்திருக்க முடியுமா? மூடநம்பிக்கை களைச் சாடியிருக்க முடியுமா? பகுத்தறிவுவாதியாக இருக்க முடியுமா?

அதனால்தான் அவர் இப்படிப்பட்டவைகளை எல்லாம் வெறும் புருடா என்றும் பித்தலாட்டம் என்றும், ஆரியச் சூழ்ச்சி என்றும், மோசடி என்றும் பேச நேரிட்டது.

தொடர்ந்து தம் வாழ்க்கையில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு ஜாதகம் பார்க்காமல், சடங்குகள் இல்லாமல், புரோகிதம் இல்லாமல், இராகு காலத்திலேயே பல திருமணங்களைத் தம் முடைய தலைமையில் நடத்திக் காட்ட முற்பட்டார். அந்தத் தம்பதிகளும் மாற்றார் போற்றும்படி வாழந்து, பிள்ளைக் குட்டி களைப் பெற்று, சந்தோஷமாக நிம்மதியாகக் குடும்பத்தை நடத்திக் காட்டினர். இப்படியே பல விதவைத் திருமணங்களையும் நடத்திக் காட்டி மக்களுக்குப் புத்திவரச் செய்தார்.

எதற்கெடுத்தாலும் மனத்தில் ஒருவித அச்சத்திற்கு இடமளித்து எத்தனைபேர் தலையில் கைவைத்துக் கொண்டு இன்னமும் கவலைப்படுகிறவர்கள். நான் தேடாத ஜோதிடன் இல்லை. பார்க்காத ஜாதகம் இல்லை, இருந்தும் இப்படி நடந்துவிட்டதே என்று எத்தனை பேர் இன்னமும் ஏக்கமடைகிறார்கள்.

போகட்டும் இப்படி ஜோதிடம் பார்ப்பதே தொழிலாகக் கொண்ட வர்களின் குடும்பங்களாவது நன்றாக இருக்கின்றனவா?

கஷ்டத்தையும், கவலையையும் தாங்கிக் கொண்டு அவதியுறும் மக்களைச் சுரண்டிப் பிழைப்பவர்கள் எந்த நியாயத்தின் அடிப் படையில் நிம்மதியாக இருக்க முடியும்.

எத்தனை ஜோதிடர்கள் இன்று உனக்கு நல்ல நாள் என்று காசைப் பறித்துக்கொண்டு அதே நாள் தங்களுக்கு கெட்டது என்பதை அறியாமல் சூதாடித் தோற்றார்கள்.

குதிரைப் பந்தயம் ஆடுபவர்களுக்கு அதிஷ்ட எண்களையும், கலர்களையும் தெரிவித்துவிட்டு எத்தனை ஜோதிடர்கள் ஜெயிக்காத குதிரைகளின் நம்பர்களின் பணம் கட்டி ஏமாறுகிறார்கள்?

அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று எத்தனை மந்திர வாதிகள், பெண்களிடம் தவறாக நடந்து கொண்டு சிறைத் தண்டனை அனுபவிக்கிறார்கள்.

எத்தனைப் புரோகிதர்கள் சாந்தி பூஜை செய்து வைத்து, ஏமாளி களிடம் பறித்த பணத்தைக் கொண்டு வாழ முடியாமல் திண்டாடு கிறார்கள்?

வெறும் ஊகத்தால் மட்டும் எப்படி ஒருவன் உழைக்காமல் உல்லாசமாக எல்லோரையும் ஏமாற்றிக் கொண்டு எக்காலத்திற்கும் வாழ்ந்து விடமுடியும்?

மையிட்டுக் கொண்டால் மட்டும் என்ன மாங்காய் பழுத்து வந்து விழுந்துவிடுமா என்ன?

தாயத்து அணிந்து கொண்டால் மட்டும் தரித்திரம் தீர்ந்துவிடும் என்றால் அரசாங்கமோ- தேர்தலோ - 5 ஆண்டு திட்டங்களோ - ஜனநாயகமோ தேவையில்லையே நாட்டில் இருப்பவர்களுக் கெல்லாம் ஒரு தாயத்தோ, வளையமோ கொடுத்துவிட்டுத் திடீர்ப் பணக்காரர்களாக்கி விடலாமே?

குழந்தை பிறந்தவுடன் அதன் கழுத்தில் ஒரு தாயத்தோ, கையில் ஒரு கங்கணமோ கட்டிவிட்டால் போதாதா?

களவுபோன பொருள்களைக் கண்டுபிடிக்க ஜோதிடனாலேயோ, மாந்திரிகனாலேயோ, புரோகிதனாலேயோ முடியுமென்றால் - நாட்டில் எத்தனைக் கடவுள்கள் களவாடப்படுகின்றன. இப்படி இருக்கலாமா? அப்படிப்பட்ட சக்தி இந்தக் கொள்ளைக் கூட்டத்திற்கு இருக்குமானால் நாட்டில் போலீஸ் எதற்கு?

இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் மிக மிகத் தெளிவாக எடுத்துக் கூறி மக்களிடம் ஜோதிடம் ஒரு புரட்டு, மாந்திரீகம் ஒரு பித்தலாட்டம், புரோகிதம் ஒரு மோசடி என்று எடுத்துச் சொல்லப் பலர் துணியாத நேரத்தில், துணிந்து சொல்லிக் கொண்டே வந்தவர் பெரியார்.

பல திராவிடத் தலைவர்கள் இன்றும் இதைப் பற்றி எல்லாம் பேசத்



தயங்குகிறார்கள். சிலரது நடத்தையும் அவர்கள் குடும்பத்தில் நடைபெறும் காரியங்களும் அதற்கெல்லாம் தங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று பேசுவதையும் நினைக்கும்போது அவர்களை அடையாளம் கண்டுக்கொள்ள முடிகிறது.

பெரியாரின் வாரிசுகளாக இருப்பவை அவரது கொள்கைகள்தாம். இதனை அவரே உயிரோடு இருக்கும் போது தெளிவாகவே குறிப் பிட்டிருக்கிறார்.

இன்றும் அவரது கொள்கைகளைத் தீவிரமான பற்றுதல் உள்ள மிக மிகச் சாதாரணமான தொண்டர்களால்தான் இந்தக் கொள்கைகள் வலிவு பெற்று வருகின்றன.

மூடநம்பிக்கைகள் ஒழிப்பதில் அவரது சீடர்கள் பாராட்டத்தக்க தொண்டினைச் செய்து வருகிறார்கள்.

தீச்சட்டி எல்லோராலும் ஏந்திச் செல்ல முடியாது. அது பக்திமான் களுக்கே உரிய ஒரு பெருமை என்று பாமர மக்கள் நம்பி வந்த காலம் மலையேறி விட்டது. இன்று பலர் கறுப்புச் சட்டை அணிந்து பெரியார் வாழ்க என்று முழக்கமிட்டுக் கொண்டு, கையில் தீச்சட்டி ஏந்தி மிகச் சாதாரணமாக நடந்து வருவதை மக்கள் காண முடிகிறது.

தெய்வ பக்தியோடு, விரதம் இருப்பவர்களால்தான் அலகு, வேல் குத்திக் கொள்ள முடியும் என்று இப்போது நம்புவதற்கில்லை. பெரியாரின் சீடர்கள் சர்வசாதாரணமாக அலகு குத்திக் கொண்டு, பெரிய அம்பாசிடர் காரையே இழுத்து வருவதை எல்லோரும் பார்க்க முடிகிறது. இதே போன்று மக்கள் கண்டு களிக்கும் வகையில் கூர்மையான கத்தி மீது நடக்கவும் நெருப்பு மீது நடக்கவும் செய்கிறார்கள்.

இப்படிப்பட்ட காட்சிகளைப் பெரியாரின் தொண்டர்கள் ஏன் செய்கிறார்கள் - பணத்திற்காக, பதவிக்காக அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மக்கள் மனதில் ஊறிப்போன மூடநம்பிக்கைகளை ஒழிக்கவே அப்படி எல்லாம் செய்து காட்டுகிறார்கள்.

கடவுள் இல்லை - இல்லவே இல்லை என்று கோசம் எழுப்பி இப்படிப்பட்ட காட்சிகளைச் செய்து காட்டுகிறார்கள்.

பக்தி விரதம் - ஆசாரம் - கடவுள் என்பதெல்லாம் வெறும் கற்பனை,

பொய், புரட்டு என்பதை நிரூபித்தல் அவர்களின் அடிப்படை நோக்கம்.

சீர்திருத்தத் திருமணம், தாலிக்கட்டாத திருமணம் சடங்குகள் நீக்கப்பட்ட திருமணம், விதவை திருமணம், இராகு காலத்தில் திருமணம், கலப்பு திருமணம். இப்படிப்பட்ட நடப்புகள் இன்று மிகச் சாதாரணமாக நடைபெற்று வருகின்றன. ஆனால், அதே நேரத்தில் வைதீக திருமணங்களும் நடந்துகொண்டுதான் வருகின்றன. அது அவர்கள் விருப்பம். அதனை வலுக்கட்டாயமாகத் தடுப்பதற்கு இயலாது. பெரியார் அந்த வழியையும் நாடியதில்லை.

சாதி ஒழிய வேண்டும் என்று பேசாத கட்சி இல்லை. சட்டத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் உண்மையிலேயே சாதிகளை ஒழிக்க வேண்டும் என்று விரும்பி இருந்தால் பதவிக்கு வந்த உடனே எவனும் தம் ஜாதிக்குள் திருமணம் செய்து கொள்வது குற்றமாகும் என்று சட்டம் செய்திருக்கலாம்.

சுதந்திரம் பெற்று 32 ஆண்டுகள் கடந்தும் அதை செய்தவர்கள் யார்? ஏதோ அரசு அளிக்கும் பரிசுப் பொருள்களுக்காகப் பெரியார் பாதையில் செல்பவர்கள் செய்திடும் காரியங்களுக்கு மதிப்புத் தேடிக்கொள்ள முனைகிறார்கள். ஆனால், அதற்காக அவர்களைப் பாராட்டிவிட முடியாது. ஏன் என்றால் சாதி ஒழிப்புக்கும், மூட நம்பிக்கை ஒழிப்புக்கும் அவர்கள் செய்தது என்ன?

மக்களை ஏமாற்றிப்பிழைக்கும் எத்தனை ஜோதிடர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது?

பொய்யும் புரட்டும் எழுதிக் காசைப்பறிக்கும் ஜோதிட பத்திரிகைகள் வெளிவர அரசு அனுமதி தரலாமா? மக்களை ஏமாற்றுவதே வேலையாக இருக்கும் ஜோதிட ஆசிரியர்கள் மீது யாராவது நடவடிக்கை எடுத்ததுண்டா? ஏழைகளைச் சுரண்டும் புரோகிதத்திற்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

காசு செலவில்லாமல் கவலையோடு வரும் காரிகைகளின் கற்பைச் சூறையாடும் மாந்திரீகர்களின் தொழிலைத் தடுக்கச் சட்டம் ஏதாவது கொண்டு வரப்பட்டதா?

நில ஆக்கிரமிப்பு செய்து கொள்ள புதுப்புதுக் கோயில்கள் தோன்று வதைப் பதவியில் இருப்பவர்கள் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறார்கள்?



பொதுமக்கள் நடமாட்டத்திற்கு இடஞ்சலாக உள்ள நடைபாதை யில் குட்டிச்சாமிகளையாவது அகற்றினார்களா?

மதச் சடங்குகள் பொது இடங்களில் நடப்பதைத் தடுத்தார்களா? ஊக்குவிக்காமல் இருந்தார்களா?

ஜாதிக்குறிகளை, பூணூலை அணிவது அரசின் சமதர்ம கொள்கைக்குப் புறம்பானது என்று சட்டம் செய்யாவிட்டாலும் எச்சரிக்கையாவது செய்தார்களா?

கோயில் உண்டிகளில் யார் பணம் போடுகிறார்கள், எவ்வளவு போடுகிறார்கள். அந்தப் பணம் அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது என்பதைத் தெரிந்துக் கொள்ளவாவது அரசு அக்கறைக் காட்டிய துண்டா?

கடவுளுக்கு நடத்தப்படும் திருப்பணிகளுக்குப் பெரிய பூஜை களுக்கு யார் யார் எவ்வளவு பணம் தருகிறார்கள். எங்கிருந்து அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைத்தது என்பதையாவது அரசு தெரிந்து கொள்ள ஆசைப்பட்டதுண்டா?

சாதியின் பெயரால் சங்கங்கள் - கட்சிகள் - அமைப்புகள் - நிறுவனங்கள் ஏற்படுவதைத் தடை செய்யச் சட்டம் கொண்டு வந்தார்களா?

இப்படிப் பல கண்டனங்களுக்கு ஆளாக வேண்டிய ஆரிய தாசர் களின் ஆட்சியில், பதவிக்காகத் தரப்படும் சலுகைகளும், பேசப் படும் பேச்சுக்களும், உண்மையில் கூற வேண்டுமானால் மிகப் பெரிய பித்தலாட்டம் என்றே கூற வேண்டும்.

இந்த நிலையில் பெரியார் ஆதரவாளர்களாகச் சிலர் வேடமிட்டு நாடகம் நடத்துவது வெறும் கேலிக் கூத்தாகும்.

சோஷலிச சமுதாயத்தைப் படைப்போம் என்று பேசுவதால் மக்களுக்கு ஒரு நன்மையும் ஏற்படப் போவதில்லை, பகுத்தறிவாளர் களுக்கு அது புரியாமலும் இல்லை.

அரசு அலுவலகங்களில் எப்படி இந்துமதக் கடவுள் படங்கள் மட்டும் அனுமதிக்கப்படுகிறது. நடப்பது என்ன இந்து ராஜ்ஜியமா? மதச்சார்பற்ற ராஜ்யமா?

திராவிடப் பெருங்குடி மக்களுக்கு எதிராகச் சிருஷ்டிக்கப்பட்ட ஆரியக் கடவுள்கள் விழாவிற்காக மட்டும் விடுமுறை விடுவது என்ன

நியாயம்? இதை யார் தடுத்தார்கள்?

பேருந்துகளில் குறள் இடம் பெறச் செய்தோம். ஆனால், அதே பேருந்துகளில் எத்தகைய கடவுள்களின் படங்கள் இடம் பெற்றுள்ளன என்பதைப் பார்க்கவோ தடுக்கவோ என்ன செய்து விட்டோம்?

உழைக்கும் மக்கள் வேலைக்குச் செல்லப் போதிய போக்குவரத்து வசதி இல்லை. பள்ளி செல்லும் மாணவ மாணவிகளுக்கு வசதி யில்லை. மருத்துவமனைக்குச் செல்லும் வியாதியஸ்தர்களுக்கு வசதி இல்லை. ஆனால், கோயில் திருவிழாக்களுக்கு மட்டும் எப்படியோ தனி பஸ்வசதி செய்யப்படுகிறதே நடப்பது என்ன?

அய்யப்பன் கோயிலுக்குச் செல்லும் அரசு ஊழியர்கள் சீருடை அணியாது அலுவலுக்குவர அனுமதிப்பவர்கள் மதச்சார்பற்று அரசை நடத்துகிறோம் என்று கூறுவது விந்தையாக இல்லையா?

இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் கையிலே வைத்துக் கொண்டு கண்டும் காணாதவர்களை போல நடக்கும் அரசியல் வாதிகள் பெரியாருக்கு நன்றி கடன் செலுத்தியவர்களாக எப்படிக் கணக்கிட முடியும்? அவர்கள் சுயவிளம்பரத்திற்காகப் பெரியாரைப் பாராட்டிப் பேசி விடுவதாலேயே ஆக்கப்பூர்வமான காரியங்கள் முறையாக நடந்துவிட்டதாகவோ, எல்லோரும் அவரவர்கள் கடமையைச் செய்துவிட்டதாகவோ அறிவாளிகள் பாராட்ட மாட்டார்கள்.

தந்தை பெரியார் அரசியல்வாதிகளைப் படுமோசமாக விமர்சித் திருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

எப்போதும் நீங்கள் பதவிகளைப் பற்றி கவலைப்பட மாட்டீர்களா? என்று கேட்டதற்கு இனி நாட்டில் பிராமணர்கள் இல்லை என்று உத்தரவு பிறப்பிக்கக்கூடிய அளவுக்கு நமக்கு ஆதிக்கம் கிட்டும் என்று தெரியும். காலத்தில் கவலைப்படுவோம். அதுவரை நாம் பதவிகளைத் திரும்பக் கூட பார்க்கமாட்டோம். பதவிகள் எல்லாம் நாங்கள் துப்பிய தாம்பூலங்கள் பதவி மோகம் எவ்வளவு பேர்களை அயோக்கியர்களாக, நாணயமற்றவர்களாக ஆக்கிவருகிறது என்பது எங்களுக்குத் தெரியும் என்று பெரியார் பதில் கூறியதை மனத்தில் கொண்டு சிந்திக்க வேண்டிய ஒன்று.

'இன்றுள்ள நிலையில் எந்தப் பொது ஜனத் தொண்டனும்,



எந்தப் பொதுநலவாதியும், எந்தச் சமூகவாதியும் சட்டசபைப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்க மாட்டான். வெறும் அரசியல் வாதிகள், சமூகத்தைப் பற்றியோ, நாட்டைப் பற்றியோ ஒரு சிறிதும் கவலை இல்லாத சுத்த சுயநலவாதிகள் இவர்கள்தான், சட்டசபைப் பதவிகளைச் சூழ்ந்து திரிவார்கள். பதவியில் இருப்பவர்களுக்குப் பின்பாட்டு பாடுபவர்கள். உண்மைச் சீர்திருத்தவாதி வெறும் இன்றைய அரசியல் அரங்கை ஆதரிக்க மாட்டார்கள்'

என்று பெரியார் எவருக்கும் புரியும்படியாக மிகத் தெளிவாகக் காட்டினார் என்பது நினைவில் கொள்ள வேண்டும்.

மதச்சார்ப்பற்ற சர்க்கார் என வெளி உலகம் மதிக்கக் கூறிக் கொண்டிருந்தாலும், மதச் சம்பிரதாயப்படி ஹோமம் பூசை, தீபாராதனை செய்துதான் கப்பல் விடப்படுகிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மக்களிடையே ஏமாறும் குணமும், பதவிக்கு வருபவர்களிடம் ஏமாற்றும் குணமும் இருப்பதுதான்.

ஒரு சிலர் பதவிக்கு வருவதற்கு முன்னர் உள்ளது உள்ளப்படியே பேசுவதில் வல்லவர்களாக காட்சியளிக்கிறார்கள். ஆனால், பதவிக்கு வந்த பின்னர் உண்மைகளைப் பேசினால் பதவி பறி போகுமோ, எதிர்ப்பு ஏற்படுமோ என்று அஞ்சி அஞ்சி நிலை தடுமாறி நாசமாய்ப் போகிறார்கள். அதனால்தான் அரசியல் வாதிகளைப் பெரியார் நன்றாக அடையாளம் கண்டுக் கொண்டு பொதுவாக அனைவரையும் பொறுக்கித் தின்பவர்கள் - சமூகத்தின் டி.பி. நோய்க்கு ஒப்பானவர்கள் என்றார்.

தம்மைப் பின்பற்றுகிறவர்கள் சிறு கூட்டமாக இருந்தாலும் உண்மையும், உழைப்பும் இருந்தால், பெருங்கூட்டத்தையும் செல்வாக்கையும் உடைய அரசியல் கட்சியை விட அதிகமான நன்மைகளைச் செய்ய முடியும் என்று கூறியவர் பெரியார்.

இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களுக்கும் முன்னேற்றத் திற்கும் பெரியாரின் உண்மையான ஒரு கூட்டமே காரணம் என்றால் மிகையாகாது.

சுயமரியாதைக்காரனுக்குக் கடமையைத் தவிர வேறு ஒன்றையும் பற்றிய லட்சியமும், கவலையும் கிடையாது என்று பெரியார் கூறியதை நினைவில் கொண்டு அவரது தோழர்கள் செயல்

படுவதின் மூலமே நல்லதோர் எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

பெரியாரின் கொள்கைகள் இனி ஒவ்வொன்றாக நடைபெற்றாக வேண்டிய காலநிலையை, நாட்டு மக்களும் அடைந்துவிட்டனர். காலமாறுதலும், மனப்புரட்சி என்னும் வேகத்தில் பழமையெனும், பித்தலாட்டங்கள் இனி எதிர்த்து நிற்க முடியாது.



## இருபதாம் நூற்றாண்டுப் புத்தர்

2500 ஆண்டுகளுக்கு முன்னரே மக்களின் அறிவு வளர்ச்சிக்காக நல்ல நெறிமுறைகளை பரப்பியவர்களில் குறிப்பிடத்தக்கவர். அந்தக் காலத்திற்கும் இன்றைக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. வானத்தை வெறும் கண் கொண்டே பார்க்க வேண்டிய நிலைதான் அன்று. இன்றோ டெலஸ் கோப் என்கிற கருவி மூலம் பல அதிசயங்களைக் காண முடிகிறது; வானத்தில் பறக்கிறான் மனிதன்.

வான மண்டலத்தை கடந்து வேறு மண்டலத்திற்குச் சென்றும் திரும்பி விட்டான் மனிதன். அந்தக் காலம் விஞ்ஞான வளர்ச்சி இல்லாத காலம். அதுதான் அறிவாளி புத்தன் வாழ்ந்த காலம். நம்முடைய காலம் பெரியாரின் காலம். புத்தர்தான் அக்காலப் பெரியார். பெரியார் தான் இக்காலப் புத்தன். புத்தன் என்ற சொல்லுக்குப் புத்தியுள்ளவன் - அறிவாளி என்று தான் அகராதியில் பொருள் கூறப்பட்டிருக்கிறது.

புத்தன் ஒரு பெரிய மகரிஷி என்றோ, ஒரு பெரிய மகான் என்றோ கூறிட இயலாது. அதே போன்று அவர் நெறியை புத்தமதம் என்று அழைப்பதும் தவறாகும். மதம் என்றால் அதற்கு ஒரு கடவுள் இருக்க வேண்டும். மேலும் மோட்சம், நரகம், ஆத்மா, பரமாத்மா, பாவம், புண்ணியம் என்பதும் இருக்க வேண்டும். பெரிய மதம் என்றால் அதற்குப் பல பெரிய கடவுள்கள், அந்தக் கடவுள்களுக்கு மனைவி, வைப்பாட்டி லீலா வினோதங்கள் கற்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

புத்தர் அப்படிப்பட்ட காரியங்களை ஏதும் செய்திடவில்லை. மனிதனுக்குக் கடவுளைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றே கூறி இருக்கிறார் புத்தர். மனிதன் மற்ற மனிதர்களைப் பற்றி நினைத்தால் மட்டுமே போதுமானது என்கிறார். அதனைதான் தந்தை பெரியாரும், 'கடவுளை மற மனிதனை நினை' என்று கூறி வந்தார். புத்தர் மோட்சத்தைப் பற்றியோ, நரகத்தைப் பற்றியோ ஏதும் கூறவில்லை.

மனிதன் யோக்கியமாகவும், நாணயமுள்ளவனாக வாழ வேண்டும். பகுத்தறிவுடன் செயல்பட வேண்டும் என்று கூறியவர் புத்தர். அவர்

அந்தக் காலத்தில் மதவாதிகளின் எதிர்ப்பை சந்திக்க வேண்டி இருந்தது. அவருடைய பகுத்தறிவு பிரச்சாரம் அந்தக் காலத்தில் மட்டம் தட்டி விடப்பட்டது. ஆரியத்தின் ஆதிக்கத்தை அவரால் அசைக்க முடிந்ததே தவிர அடித்து நொறுக்க முடியவில்லை. அதனால் தான் அவருடைய நெறி பிறந்த நாட்டில் பரவ முடியாது போயிற்று. இன்று உலகில் பல நாடுகள் அவர் காட்டிய வழியில் பீடு நடைபோட்டு முன்னேறி வருகிறது. இந்துமத வெறியர்களின் பிடி தான் ஓரளவிற்குத் தளர்ந்தது.

அவருக்குப் பிறகு எழுதப்பட்ட இராமாயணமும், வைணவர்களின் நாலாயிரப் பிரபந்தமும், சைவர்களின் தேவாரமும் புத்தரை மிகக் கடுமையாகத் தாக்கி எழுதப்பட்டிருக்கிறது.

புத்தகர்களை-நாஸ்திகர்கள் என்றும், திருடர்கள் என்றும் கொலைக் காரர்கள் என்றும் கேவலமாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

புத்திமான்களாக - அறிவாளிகளாக விளங்குபவர்கள் எல்லாம் நாத்திகர்கள் என்றால், புத்தர்களும் நாத்திகர்களே.

எதையும் கண்ணை மூடிக்கொண்டு நம்பிவிடக் கூடாது என்றார் புத்தர்.

எதையும் பகுத்தறிய வேண்டும் என்றார் பெரியார்.

ஆரியர்கள் தங்களின் ஆதிக்கம் வலுப்பெறச் சாஸ்திரங்களின், புராணங்களையும் உருவாக்கித் தேடிப் பிடித்துக் கொண்டு மக்களைக் காட்டுமிராண்டிகளாக, எதையும் நம்பும் முட்டாள்களாக ஆக்கி வைத்தனர். மதம் என்பதே ஒரு மௌடீகம் என்ற நிலைக்கு மக்களை ஆளாக்கிவிட்டனர் ஆரியர்கள்.

பெரும்பாலான புராணங்கள் புத்தரைச் செல்லா காசாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதப்பட்டனவாகும். புத்தரின் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை முறியடிக்கத் தோன்றிய நூல்களே பாரதமும் பகவத் கீதையுமாகும். கிருஷ்ணனின் லீலைகளை மக்களிடம் பரப்பிப் பக்தியைப் பெருக்க ஆரியர்கள் முனைந்தனர். கண்ட பெண்க ளிடம் கூடிக் குலவி ஆட்டம் போட்டவனைப் பகவான் என்று மக்கள் நம்பும் நிலையை உருவாக்கினர். இருந்தும் இன்றும் கிருஷ் ணனுக்கு பூஜை, விழா, கொண்டாட்டம் என்ற பெயரால் ஏதேதோ நடந்து கொண்டுதான் இருக்கிறது.



ஆட வருவாய் கண்ணா என்று நடனமாடும் கன்னிப்பெண்களை யும் நாம் காணமுடிகிறது.

கிருஷ்ணன் வெண்ணெயைத் திருடினான், பெண்கள் குளிக்கும் இடத்திற்குச் சென்று அவர்களின் சேலைகளைத் திருடிக் கொண் டான். மணமாகாத மங்கையரை வழிமறித்தான் என்றெல்லாம் சொல்லப்படுவதைக் கேட்டு, மகிழும் மனிதர்களாக, மக்கள் ஆக்கப் பட்டு விட்டனர்.

மனிதன் செய்யக்கூடாத, தகாத காரியங்களைச் செய்தவன் எப்படி மனிதனுக்குக் கடவுளாக முடியும்? இப்படியே ஒவ்வொரு அவதாரத்தின் இலட்சிணமும், கடவுளின் யோக்கியதையும் அமைந் திருக்கிறது. இந்த நிலையில் இருப்பார்களென்று கற்பனை செய்து பார்க்கக் காலத்தைச் செலவிடுவதைக் காட்டிலும், புத்தர் தோன்றி யதால், ஏற்பட்ட விபரீத விளைவுகளை மட்டம் தட்டி மனிதனைச் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவனாக மாற்றிட புத்தர் வழியில் தோன்றிய பெரிய புத்தர்தான் பெரியார்.

புத்தரையும் ஒரு கடவுளாக்கி, புத்த மதத்தையும் உண்டாக்கிப் பகுத் தறிவு மலர்வதைத் தடைசெய்த ஆரியத்தை எதிர்த்துப் போராடி மீண்டும் பகுத்தறிவு மணம் கமழச் செய்தவர் பெரியார்.

*23.1.1954*-ஆம் ஆண்டில் ஈரோட்டில் புத்தர் மாநாடு நடத்திப் புத்தரின் உண்மையான கொள்கைகளுக்குரிய கருத்துகளுக்கும் புதிய மெருகூட்டியவர் பெரியார்.

சாதி வெறி, தீண்டாமை போன்ற பல்வேறு தீமைகளை எதிர்த்து போராடி வந்த பெரியார் மதமாற்றம் கொள்வதை ஊக்குவித்த வரல்லர். அப்படிப்பட்ட கருத்தை வலியுறுத்திப் பேசி வந்ததன் நோக்கமே ஆரியர்களுக்கு வீண் பீதியை உண்டாக்குவதற்காகத் தான் என்று நிச்சயமாகக் கூறலாம்.

## விஷத்தை முறிக்க வேண்டும்! விலகக்கூடாது!

டாக்டர் அம்பேத்கார் தம்முடைய தொண்டர்களைப் புத்த மதத்தில் சேர்ந்துவிடுமாறு கட்டளையிட்டு தாமும் புத்தரைப் பின்பற்றினார். அதனால் சாதிகள் ஒழிந்துவிட்டது என்று கூறவோ- இழிவு நீங்கி விட்டது என்று கணக்கிடவோ - ஆரியம் அதிகப் பட்டுவிட்டதென்று முடிவு செய்திடவோ இயலாது.

ஒரு விஷப்பிராணியைக் கண்டு ஒதுங்கிப் போய் விடுவது பொது நலமாகாது. உயிருக்கு அஞ்சாது அதனை எதிர்த்துச் சாகடிப்பதே வீரமும், உயரிய தொண்டுமாகும். அந்தப் பணியில் ஈடுபட்டவர் பெரியார். வேறு பாதையில் சென்று தோல்வி கண்டவர் அம்பேத்கார்.

சில சரித்திரக் காரணங்களுக்காகப் புத்தரை இந்துக்கள் ஏற்க வேண்டிய காலமிருந்தது. அதனால் தான், ஒரு சிலர் இன்று புத்தரை யும் ஓர் அவதார புருஷனாக ஒரு பகவானாக வணங்குகிறார்கள். ஆனால், உண்மையான வரலாறு புத்தர்கள் எப்படி எல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். எப்படி எல்லாம் புத்தரின் இருப் பிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. புத்த மதம் எப்படி எல்லாம் நசுக்கப்பட்டுவிட்டது என்பது பற்றி தெளிவான ஆதாரங்கள் உள்ளன. இந்து மத வெறியர்களின் கொடிய கரத்தில் சிக்கிச் சீரழிந்ததே புத்த நெறி. என்ன செய்தும் எவர் முயன்றும் புத்தரின் உண்மையான மதிப்பை எவராலும் அழித்து விட முடியவில்லை.

சுதந்திரம் பெற்ற இந்தியாவின் தேசியக் கொடியில் அவரது நீதிச் சக்கரம் இடம் பெற்றுள்ளது. இன்றைய ஆட்சியாளர்களாலும் புத்தரை மறைத்துவிட முடியவில்லை என்பதற்குச் சான்றாகும். தேசியக் கொடியில் ஒரு நாமமோ, விபூதிப்பட்டையோ சின்னமாக இடம் பெற முடியாமைக்கு காரணம், புத்தமதம் ஒன்றே இந்திய மக்கள் அனைவராலும் நியாயமானது என்று ஒப்புக்கொள்ள கூடிய அந்தஸ்தை பெற்றிருப்பதேயாகும்.

வேறு கோணத்தில் கூறவேண்டுமானால் ஆரியர்கள் உருவாக்கிய இந்து மதச் சின்னங்கள் எதுவும் தேசிய மட்டத்திற்கு ஏற்றம் காணத் தகுதியற்றவை என்றே கூற வேண்டும். இத்துணைக் கண்டத்தின் வரலாற்றில், தேசியக் கொடியில் புத்தரின் நீதிச் சக்கரம் இடம் பெற்றிருப்பதே ஒரு பெரிய புரட்சிக்கரமான மாற்றத்தைக் குறிப்ப தாகும்.

## இரு பெரும் புரட்சியாளர்கள்

அந்தச் சின்னத்தின் உரிமையாளர்களாக வாரிசுகளாக விளங்கு பவர்கள் பெரியார் பாசறையில் பயின்ற பகுத்தறிவுவாதிகள். அறிவு இயக்கம் - பகுத்தறிவு இயக்கம் என்பது புத்தரின் நெறி வழியில் நிற்கும் இன்றையக் கூறுகள் ஆகும்.



அறிவுக்கு முதலிடம் கொடுத்தவர் புத்தர். எதையும் சிந்தித்துச் செயல்படு என்று கூறியவர் பெரியார்.

‘உண்மையை நாடுங்கள்’ என்றார் புத்தர்.

‘எது சரி என்று தோன்றுகிறதோ அதனைச் செய்க’ என்றார் பெரியார்.

சிலை வணக்கம், சடங்குகள், மூடநம்பிக்கைகளை இருவருமே தகர்த்தெறிய பாடுபட்டனர். இருவரும் ஆரியம் எதனையெல்லாம் புனிதமானது. விசேஷமானது என்று கூறி வந்ததோ அதனை யெல்லாம் ஒழித்துக் கட்டியவர்களே பெரியாரும் புத்தரும்.

3.12.54-இல் தந்தை பெரியார் கடல் கடந்து சென்று மலேயாவில் நடைபெற்ற புத்தர் மாநாடுகளில் பங்குகொண்டு தாயகம் திரும்பி, புத்தரின் உண்மையான கருத்துகளைப் பாமர மக்களிடம் பரப்பி அறிவுலகம் படைக்கும் ஆக்கப்பணியில் தந்தை பெரியார் 20-ஆம் நூற்றாண்டின் புத்தராகவே திகழ்ந்தார்கள்.

> கடவுள் என்று சொல்லப்படுவது உயர்குணப் பண்பே ஒழிய, அது ஓர் உருவமன்று, பொருளில்லை. சர்வ சக்தியுள்ள கடவுள் என்பதைச் சாணி உருண்டையாக ஆக்கி வைத்தி ருப்பது மகா மகா அயோக்கியத்தனம். குழவிக் கல்லாக ஆக்கி வைத்திருப்பது அதைவிட அயோக்கியத்தனம்.
>
> கடவுளை வணங்குதல் என்றால் என்ன? தேங்காய் உடைத்து திருவிழா செய்து, பார்ப்பானுக்குத் தட்சணை கொடுத்து அவன் காலில் விழுவதில்லை. கோயில் கட்டுவதன்று. ஒழுக்கமாய் நடப்பதும், உயர்ந்த பண்புகள் கொள்வதுமே அன்பும், அறிவுமான கடவுளை வணங்குதல் என்பதற்கு ஏற்றதாகும்.
>
> மனிதனை மனிதனாக மதிக்கக் கூடிய மதத்தையோ, பிறவியினால் உயர்வு தாழ்வு கற்பிக்காத மதத்தையோ, காசு பணம், செலவு செய்து தான் தன்னை வணங்க வேண்டும் என்று கூறாத கடவுளையோ நாம் வேண்டாம் என்று கூறவில்லை. மனிதனுக்கு அறிவும், பிரத்யட்ச அனுபவமும், பஞ்சேந்திரிய உணர்ச்சியின் பலாபலனும் இருக்கும் போது, இவற்றை இலட்சியம் செய்யாமல் மாறுபட்டதான மதம் என்பது உலகிற்குத் தேவையில்லை.

அறிவு வழியில் ஆழ்ந்து சிந்தித்து உண்மைகளை உள்ளபடியே வெளியிடுவதில் பெரியார் அவர்கள் புத்தரின் வாரிசாக இருபதாம் நூற்றாண்டில் விளங்குகிறார் என்பது மேலே தரப்பட்டிருக்கும் தந்தை பெரியாரின் கருத்துகளே எடுத்துக்காட்டும்.

## தேவையானதும் தேவையற்றதும்

மனிதனுக்கு தேவைபடாத கடவுள் மனிதனுக்கு இழிவைத் தேடி தரும் மதம், மனிதனைக் கெடுக்கும் புராணங்கள் ஏதும் தேவை இல்லை என்பதை விளக்கி மனிதனுக்கு எப்படிப்பட்ட கடவுளும், மதமும் வேண்டும் என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டிய தாகும். இந்து கடவுள்களுக்கும் ஏகபோக உரிமை கொண்டாடும் ஆரியர்கள் சிந்தித்து மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் தேவையான மாற்றத்தைச் செய்திட வேண்டும் என்றே இதனைச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு சிறு கூட்டத்தினரின் நன்மைக்காகவே பலரைப் பல காலம் அடிமைப்படுத்தி ஆட்டிப் படைத்தது போதும். இனி யாவது எல்லோரையும் வாழவிடுங்கள் என்று சொல்லாமல் சொல்லி இருக்கிறார் பெரியார்.

## மதத்தின் கிளைகளே சாதிகள்

எல்லோரும் சமமாக வாழவேண்டுமானால் நாட்டில், ஜாதிகள் இருக்கக்கூடாது. ஜாதிகள் ஒழிய வேண்டும் என்று கூறுபவர்கள் அதற்கான காரணத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் ஏதோ பொழுது போக்கிற்காகவே அனைவரும் பேசி வந்தனர். இப்படிக் கூறினால் பலருக்குக் கோபம் வரலாம். ஆனால், உண்மை சில நேரங்களில் அப்படித்தான் இருக்கும்.

எதனால் ஜாதிகள் ஏற்பட்டன? ஜாதிகளின் மூலமும் ஆணிவேரும் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அதனைப் போக்க வேண்டும் என்று பாடுபடுவதற்கு யார் முனைந்தார்கள்.

தலையில் வலி இருந்தால் காலில் தைலம் போட்டு என்ன பயன்? ஜாதிகள் ஒழிய வேண்டுமானால் அதற்கு முதுகெலும்பாக இருக்கும் மதம் ஒழிக்கப்பட்டால் தானே முடியும். அதனால்தான், ஆத்திகர் களால் ஜாதியை ஒழிக்க முடியாது என்று அடித்துக் கூற வேண்டி யிருக்கிறது. கடவுள், மதம், சாஸ்திரம் இருக்கும் வரை ஜாதி இருந்தே தீரும், ஜாதிகளை ஒழித்துச் சமதர்ம சமுதாயத்தைக் காண நாத்திகம்



வளர்ந்தால்தான் முடியும். சாதிகளை ஒழிக்கப் பகுத்தறிவாளர் களால்தான் முடியும். வைதீகர்களால் முடியாது அரசியல்வாதி களால் முடியவே முடியாது.

சாதியை விட்டொழித்தவன் ஓர் இந்துவாகத் தொடர்ந்திருக்க முடியாது. அதனால்தான் ஓர் இந்து மதவாதியால் சாதியை ஒழிக்க முடியாது என்று கூற வேண்டியிருக்கிறது. எவன் தன்னை இந்து என்று கூறிக் கொள்கிறானோ அவனால் சாதியைக் காப்பாற்றத்தான் முடியுமே தவிர ஒழிக்க முடியாது. சாதி இல்லை என்றால் இந்து மதம் இல்லை. இந்து மதம் இல்லை என்றால் சாதிகள் இல்லை. இதுதான் உண்மை. அதனால்தான் சாதியை ஒழிக்க முனைந்த பெரியார், இந்து மதத்தையே ஒழிக்கப்பாடுபட வேண்டிய தாயிற்று. மனித சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகளைக் கற்பித்து செய்யப்பட்ட பிரித்தாளும் ஆரியச் சூழ்ச்சியே சாதிகளுக்கு அடிப்படைக் காரணமாகும். இந்து மதம் தோன்றியிருக்காவிட்டால், சாதிகள் முளைத்திருக்காது. வேற்றுமைகள் வந்திருக்காது.

கிறிஸ்துவ மதமும், இஸ்லாம் மதமும் ஆண்டவன் முதலில் ஓர் ஆண் மகனையும் ஒரு பெண்ணையும் தான் படைத்தான் என்று கூறுகிறதே தவிர இந்து மதத்தில் கூறப்படும் முறையில் உயர்ந்த மனிதர்களைப் பிரம்மா நாக்கில் படைத்தான் தாழ்ந்தவர்களை காலில் படைத்தான் என்று வரலாறு இல்லை. சாதிகளைத் தோற்று வித்ததே இந்துமதம் தான்.

எல்லோரும் சமம் என்பதை இஸ்லாமும் கிருஸ்தவமும் போற்று வதைப் போன்று இந்து மதம் செய்யவில்லை. அதனால்தான் பெரியார் மனுதர்மத்தை முதலில் ஒழிக்க வேண்டும் என்று தீவிரம் காட்டினார்.

பழைய இரயில்வே அட்டவணையைப் பார்த்துப் பிரயாணத்தைத் தொடங்கினால் காரியம் கெட்டு விடுமல்லவா? ஆனால் இன்று நாட்டில் நடப்பதென்ன? ஏதோ ஒரு காலத்தில் எவனோ ஒருவன், எதற்காகவோ உருவாக்கியதை அப்படியே கடைப்பிடிக்கவேண்டும் என்றும், இன்றும் கட்டாயப்படுத்துவது எந்த வகையில் நியாயமாகும்.

உலகில் எவ்வளவோ முன்னேற்றங்கள் மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. அதை வைதீகர்கள் எண்ணிப்பார்க்க வேண்டாமா? திரேதா யுகத்தில் ஏற்படுத்தப்பட்டவை கலியுகத்தில் இருப்பவர் களுக்கு எப்படி பொருத்தமாக இருக்கும்? மனிதர்களை மனிதர்

களாக வாழவிட வேண்டாமா? அதனால்தான் பெரியார், 'கடவுளை மற, மனிதனை நினை' என்கிறார்.

இதனைத்தான், அந்தக் காலத்தில் புத்தரும் கூறினார்.

## பெரியார் ஆளவந்திருந்தால்...

புத்தர் அரசனாகப் பிறந்தார். பெரியார் மிகச் சாதாரணமான குடி மகனாகப் பிறந்தார். பெரியார் மட்டும் அரசராகப் பிறந்திருந்தால், உலக நாடுகளிலேயே நம்முடைய நாடுதான் எவராலும் தீர்வு காண முடியாத பிரச்சனைகளைத் தம்முடைய அதிகாரத்தைப் பயன் படுத்தித் தீர்த்து வைத்திருப்பார். இன்று இந்தியா சுதந்திரம் பெற்று 32 ஆண்டுகள் கடந்துவிட்டன. சாதிகளை வெறுப்பவர்கள்தான் ஆட்சிக்கு வந்தனர். ஆனால், சாதிகள் ஒழிக்கப்படவுமில்லை சமதர்ம அடையாளத்திற்கு கூட மலரவில்லை. இந்த 32 ஆண்டுகளில் பெரியாரிடம் மட்டும் மூன்று ஆண்டுகள் ஆட்சியை ஒப்படைத் திருந்தால் சாதிகள் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து ஓடி ஒளிந்து கொண்டிருக்கும். நல்லதோர் சமதர்மத்தின் அடித்தளத்தின் மீது நாட்டின் அரசியல் மாளிகை எழுப்பப்பட்டிருக்கும்.

நிலைமையை உணர்ந்து மனிதனுக்கு வெட்கத்தையும் ரோஷத்தை யும் உண்டாக்கச் சுய மரியாதை இயக்கத்தை ஏற்படுத்தினார். இந்த இயக்கம் தனிச்சிறப்புடையது. சுயமரியாதை இயக்கம் மனித சமுதாயத்தையே மாற்றி அமைக்க ஏற்பட்டதாகும். ஏன் பல நாடுகள் ஏற்கனவே அந்தந்த நாட்டில் பிரச்சனைகளின் தன்மைக்கு ஏற்ப விரைவாகத் தீர்வு கண்டு முன்னேறி உள்ளன. அங்கெல்லாம் பலவிதமான சாதக நிலைமைகள் இருந்தன. மலிந்து கிடந்த கேடுகளை அவர்களால் எளிதில் அகற்றிட முடிந்தது.

இன்று பெரியார் காலத்தில் நாம் கண்ட சமுதாயத்தின் தன்மை முற்றிலும் மாறுபட்டவை. அதனால்தான் சமுதாயச் சீர்திருத்தப் பணிக்கு முதலிடம் கொடுத்துச் சுயமரியாதை இயக்கத்தைப் பேணிக் காத்தார் பெரியார்.

சுயமரியாதை இயக்கம் சாதி, மதம், மொழி, நாடு, அத்தனையும் கடந்ததாகும், நமது நாட்டில் உள்ள சமுதாய நிலையைப் போன்று தான் எல்லா நாடுகளிலும் இருக்கும் என்று கணக்கிடுவது கபோதி யின் செயல் ஆகும்.



## நாடு நலம்பெறத் தேடிய திட்டம்

பெரியார் சமுதாயச் சீர்திருத்தப் பணியை இரண்டு கூறுகளாகப் பகுத்தறிந்து செயல்பட்டார்.

சமூகத்தின் கேடுகளை ஏன், எப்படி வந்தன என்று கண்டறிந்து அதற்கு காரணமாக இருப்பவைகளைஅடியோடு அழித்து நல்ல சமுதாயத்தைப் படைப்பது இரண்டாவது அடிப்பை அம்சமாகும்.

இந்த இரண்டு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு சுயமரியாதை இயக்கத்தைப் பெரியார் தோற்றுவித்த காரணத்தி னால்தான் அந்த இயக்கம் ஒரு சாராரின் ஆதரவையும், ஒரு சாராரின் வெறுப்பையும் பெற்றிட நேர்ந்தது. வெறும் தன்மான இயக்கத்தைப் பெரியார் நிறுவியிருந்தால் அதில் வேறு பலரும் தயக்கமில்லாது சேர்ந்து கொண்டு பெரியாரின் இலட்சியத்திற்கே தீங்கிழைத்திருக்கக் கூடும்.

பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கம். தன்மானத்தை பறித்துக் கொண்டவர்களுக்குச் சாதகமாக மீண்டும் அவர்களை மானத்தோடு, மரியாதையோடு, வாழத் தொடங்கப்பட்டதாகும்.

## சுயமரியாதை இயக்கம்

'தென் இந்திய நல உரிமைச் சங்கம்' என்ற பெயருடன் தொடங்கப் பட்ட பார்ப்பனரல்லாதர் இயக்கம் 1916-ஆம் ஆண்டில் 'ஜஸ்டிஸ் கட்சி' என்ற சிறப்பு பெயருடன் செல்வாக்குப் பெற்று வருவதைக் கண்டு காங்கிரஸ் மகாசபையின் தலைவர்களாக இருந்த பார்ப்பனர்கள் பொறாமை கொண்டு, இந்த இயக்கம் வளர விடாமல் தடுக்கும் உள்நோக்கத்துடன் செயல்பட்டனர். அதற்கு நல்ல செல்வாக்குள்ள பார்ப்பனரல்லாத தலைவரின் தொண்டு தேவை என்பதை உணர்ந்து ஈரோட்டில் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கிய பெரியாரைத் தேடிப்பிடித்துக் காங்கிரஸில் சேருமாறு வற்புறுத்தினர். அப்போது காங்கிரஸ் தேர்தலில் கலந்து கொள்ளாது பதவியை நாடாது அனைத்து சமூகத்திற்கும் சமநீதி வழங்கும் என்று பெரியாரிடம் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதனை நம்பியே பெரியார் தீவிரமாகக் கங்கிரஸில் சேர்ந்து பாடுபட்டார். பின்னர் 1925-இல் காஞ்சிபுரம் மாநாட்டில் வகுப்பு நீதி கோருவது காங்கிரஸ் மகாசபையின் இலட்சியத்திற்கு புறம்பானது - சட்ட விரோதமானது என்று கூறி தலைவர்

தீர்ப்பளித்த உடனே, பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார்.

மேலும், பார்ப்பனர்கள், 'வர்ணாஸ்ரமப் பாதுகாப்புச் சங்கம், சனாதனா சங்கம்' என்ற அமைப்புகளை நிறுவிக் கொண்டு அட்ட காசம் புரிந்து வந்தனர். இதெல்லாம் பெரியாருக்குப் பிடிக்க வில்லை.

உடனே, காங்கிரசை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே பெரியாருக்குக் காங்கிரஸ் மீது அதிருப்தி இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், குருகுலத்தில் நடைபெற்ற தீண்டாமை கொள்கை செயல்களும், அதற்கெல்லாம் பார்ப்பனத் தலைவர்கள் உடந்தையாக இருந்ததும் அவர்களைக் கண்டிக்க காந்தியார் முன் வராததும் நிலைமையை மோசமாக்கியது. பெரியார் காங்கிரசை நம்பியும் பார்ப்பனர்கள் அளித்த வாக்குறுதிகளை நம்பியும் மோசம் போனார். அதனால் அவருக்கு ஒன்றும் நட்டமில்லை. இதனால் தான், சுயமரியாதை இயக்கத்தைப் பெரியார் தொடங்கவும், இந்த நாட்டு மக்களுக்குப் பாடுபடவும் அரிய வாய்ப்பு ஏற்பட்டது. நம்முடைய கருத்துகளை பிரச்சாரம் செய்யக் **குடிஅரசு** என்னும் ஏட்டினை **2.5.1925** முதல் வெளியிட்டார். இதுவே சுயமரியாதை இயக்கத்தின் தோற்ற நாளாகவும் கொள்ளலாம்.

'குடிஅரசு' இதழில் பாரதமாதா காந்தி-நெசவாளி போன்ற படங்களை அட்டையில் ஆரம்ப காலத்தில் வெளியிட்டார். இங்கு காங்கிரசு மகாசபை பார்ப்பனர் பிடியில் இருந்தாலும், தாம் காங்கிரசை விட்டு வெளியேறிய பின்னரும் தேசியவாதியாகவே. சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்பினார் என்பதற்கு இது போதிய சான்றாகும். அப்படியே **1927**-ஆம் ஆண்டு வரையிலும் இருந்தார். ஆனால் அவரைப் பார்ப்பனத் தலைவர்களோ காந்தியோ புரிந்து கொள்ளவில்லை. போனால் போகட்டும் போடா - என்றே ஆணவமாக இருந்துவிட்டனர். மேலும், காந்தியார் எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல காந்தியார் தன்னுடைய ***யங் இந்தியா*** பத்திரிகைகளில் சாதிகளை ஆதரித்தும் வருணதர்மத்தைப் போற்றியும் எழுதினார். வைக்கம் போராட்டம் பற்றி காந்தியார் எழுதிய **48** பக்கக் கட்டுரையில் பெரியாரின் பெயர் ஓர் இடத்தில் கூடக் குறிப்பிடப்படவில்லை.

இதனை எல்லாம் நடுநிலையாளர் சிந்தித்தால் அந்தக் காலத்தில் காங்கிரஸ் ஒரு பார்ப்பன பாதுகாப்பு அமைப்பாகவும், காந்தியார்



பார்ப்பனர்களுக்கு மட்டுமே தலைவராகவும் செயல்பட்டார் என்பது எளிதில் புலப்படும்.

இறுதியாக, பெரியாரைக் காந்தியார் **1922**-ஆம் ஆண்டு பெங்களூரில் சந்தித்துப் பேசினார்.

பெரியாரின் நியாயமான வாதங்களையும் காந்தியார் ஏற்க மறுத்தார். அந்த சந்திப்பிற்கு பிறகு பெரியாருக்குத் தேசியத்திலும் நம்பிக்கை போயிற்று. முழுக்க, முழுக்கச் சுயமரியாதை இயக்கத் திற்காக தம்மை ஒப்படைத்துக் கொண்டு தீவிரமாகச் சுயமரியாதைப் பிரசாரத்தை மேற்கொண்டார்.

தம் இறுதிக் காலம்வரை இந்தியா ஒரு நாடில்லை - இந்தியர்கள் ஒரு இனத்தவரல்லர்-தேசியம் என்பது புரட்டு என்றே கூறி வந்தார்.

## ஊட்டப்பட்ட உணர்வு

'எங்கள் இயக்கம் ஓர் அற்புத இயக்கம், அதாவது பதவியில்லாமல் பண்புகளைச் செய்வது, அதிகாரம் இல்லாமல் ஆக வேண்டியதை ஆக்கிக் கொள்வது' என்று பெரியார் ஆரம்ப காலத்தில் குறிப்பிட்ட படியே இறுதிவரை கடைப்பிடித்து செயல்பட்டார்.

'மக்களுக்கு மானமும், அறிவும் ஏற்படும்படி செய்ய வேண்டும். மூடநம்பிக்கைகளிலிருந்து விலக்க வேண்டும். இதுவே நமக்கு இலட்சியம்' என்று கூறிய பெரியார் இறுதிவரை அந்த இலட்சி யத்தைக் கடைப்பிடித்தார்.

> 'அறிவுவழிப்படி நின்று, அமைதி வழிப்படி நின்று செயல் படுவோம். அமைதி நம்மை தாமதமாக - ஆனால் நிச்சயமாக வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்லும் அமைதி குலையுமானால் அழியக் கூடியவர்கள் நம் இனத்தவர்தாம், பார்ப்பனர்கள் அல்லர் என்ற உண்மையை நன்றாக உணருங்கள்'

என்று கூறிய பெரியார் அறவழியில் - வன்முறையற்ற வழியில் இயக்கத்தை வளர்த்தார்.

அறியாமைப் படுகுழியில் தள்ளப்பட்ட மக்கள் மடமையில் இருந்து மீட்க நல்ல அமைப்பு முறைகள் - பிரச்சார சாதனங்களை உருவாக்கினர். கூட்டங்கள், மாநாடுகள் கூட்டப்பட்டன.

புரட்சி
பகுத்தறிவு
ரிவோல்ட்
விடுதலை

என்ற பெயர்களுடன் பல ஏடுகளை தாமே தொடங்கி தாமே எழுதி வெளியிட்டு மக்களிடம் சுயமரியாதைக் கருத்துகளைப் பரப்பினார். சிறு சிறு நூல்களாகப் பல நூல்கள் மக்களிடம் அறிவு பிரச்சாரம் செய்யப்பட்டன. மிகவும் குறைந்த விலையில் மிக உயரிய கருத்துகளை நூல்களாக வெளியிட்ட பெருமை பெரியாரையே சேரும். அவர் நடத்திய ஏடுகளின் பழைய தொகுதிகளைக் காணும் எவரும் அவர் பிழைப்புக்காக லாபம் தேடி எழுத்துத் துறையைப் பயன்படுத்தினார் என்று கூற முடியாது.

பளபளப்பான அட்டை கண்கவர் வண்ணப் படம், பக்கத்திற்கு பக்கம் மகளிர் படங்கள், விளம்பரங்கள் ஏதும் காணமுடியாது. எளிய முறையில் மிகக்குறைந்த விலையுடன் வெளியீடுகளைக் கொண்டு வந்தார். ஆரம்ப காலத்தில் அவருடைய எழுத்துகளைப் படிப்பது பாபம், படிப்போர் தறுதலைகள் என்ற எதிரிகளின் ஏசலுக்கு ஆளாகியே, பலர் சுயமரியாதை இயக்கத்தின் கருத்து களை வரவேற்றுப் படிக்க வேண்டியிருந்தது. அவரது ஏடுகளை விற்கக்கூட கடைக்காரர்கள் பயப்படும் நிலையை எதிரிகளால் ஏவி விடப்பட்டது. பெரியார் எந்த அளவிற்கு நாட்டின் பொருளா தாரத்தை யும், மக்களின் வறுமையையும் உணர்ந்து செயல்பட்டார் என்பது அவர் கூறிய இந்த அறிவுரை புலப்படுத்தும்.

> ‘‘பாது மக்களுக்கு ஒரு வார்த்தை; அறிவியக்க நூல்கள்; சீர்திருத்த நூல்கள் என்றால் ஒவ்வொன்றையும் வாங்கி வீட்டில் நிரப்பிக் கொள்ள வேண்டும் என்பது அர்த்தமல்ல. வாங்கிப் படித்துவிட்டு, படித்து முடித்தவுடன், முக்கால் விலைக்கு அரை விலைக்கு விற்றுவிட வேண்டும். புத்தக வியாபாரியும் தாம் விற்ற புத்தகத்தை அரை விலைக்குக் கொண்டு வந்து கொடுத்தால் நலுங்காமல் இருந்தால் வாங்கிக் கொள்ள வேண்டும்’.

இப்படி அரை அணா, ஓர் அணா, இரண்டு அணா என்ற விலைக்கு விற்கப்பட்ட நூல்களையே மனத்தில் கொண்டு பெரியார் கூறினார் என்றால், அதற்கு அடிப்படைக் காரணம் அவரது கருத்தை ஒருவர்,



இருவர், படித்தால் மட்டும் போதாது, எல்லோரும் படிக்க வேண்டும் என்று எவ்வளவு ஆசைப்பட்டார் என்பது தெரியவரும்.

பெரியார் பதவிகளைக் காட்டியோ, பணத்தை கொடுத்தோ வேறு பல கூடாத தவறான செயல்களைப் புரிந்தோ எவரையும் தம் இயக்கத்திற்கு அழைக்கவில்லை.

> ‘நமக்கு எதிர்ப்பு அதிகம், கூடவே இருந்து காரியத்தைக் கெடுக்கும் தந்திரக் கூலிகள் அதிகம். ஏனெனில், மிக்க செல்வாக்கும், பலமான அஸ்திவாரமும் ஏராளமான எதிர்ப்பு அக்கறை உள்ள மக்களையும் கொண்டதொரு ஸ்தாபனத் திற்கு அதன் கருத்துக்கு - நடத்தைக்கு எதிர்ப்பாக இருக்கிறோம். எதிர்நீச்சலும் செங்குத்தான குன்றின் மேல்பாரமான குண்டை மேலே கொண்டு போய் உருட்டும் வேலையினைப் போன்ற அபாயகரமான காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறோம். வாழ்வு அல்லது சாவு என்று அறுதியிடும்படியான கஷ்டத்தில் இருக்கிறோம். நம் பாதையில், பிரயாணத்தில், முழத்துக்கு முழம்; அங்குலத்திற்கு அங்குலம், தட்டு தடுமாறி விழும்படியான கரடு முரடான பாதையில் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்’

என்று பெரியார் பலமுறை எச்சரித்து அதை நன்றாகப புரிந்துக் கொண்டு, நாட்டுக்கு நாம் இதைச் செய்ய வேண்டும். நமக்காக எதையும் இயக்கம் செய்யாது என்பதைப் புரிந்துகொண்டுதான் அவரை இலட்சக்கணக்கில் மக்கள் பின்பற்றினர்.

அதனால்தான் பொதுவாழ்வில் இன்று பல பெயர்களில் பல அமைப்புகள் இருந்தாலும், பெரியாருடைய இயக்கத்தில் இருப் பவர்கள் மீது லஞ்சம் வாங்கினார். வீடு கட்டிக் கொண்டார். சொத்து சேர்த்தார். மனைவி மக்களுக்கு ஆஸ்தி சேர்த்தார். உழைக்காமல் உல்லாசமாக வாழ்கின்றார். ஏமாற்றினார். மோசடி செய்தார் என்கிற பேச்சுக்கே இடமில்லாது போயிற்று.

எவனும், தான் மேற்கொண்ட இலட்சியத்தில் வெற்றி பெற வேண்டுமானால் எதற்கும் அவன் தயாராக இருக்க வேண்டும் என்பதைப் பெரியார் 1931-ஆம் ஆண்டிலேயே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

> ‘உண்மையிலேயே ஒரு மனிதனுடைய இலட்சியத்திற்கு

வெற்றி ஏற்பட வேண்டும் என்று கருதுகின்ற மனிதனுக்கு அவன் ஆசை நிறைவேற வேண்டுமானால் அந்த இலட்சியத் திற்கு அவனது உயிரைக் கொடுத்தாவது அதாவது, அந்த இலட்சியத்தின் பயனாய் அவனது உயிர் இழக்கப்பட்டதாய் ஏற்பட்டால் அது உண்மையில் பயனளிக்கக் கூடியதாகும்'

என்று தியாக சீலர்களுக்கு, தன்னலமற்ற தொண்டர்களுக்கு இலட்சிய புருஷர்களுக்கு அழைப்பு விடுத்து எச்சரிக்கையோடு இயக்கத்தை வளர்த்தார்.

இப்படிப்பட்ட இயக்கமோ, தலைவரோ, இந்தியத் துணைக் கண்டத்தில் இதுவரை எவரும் கண்டதில்லை என்றே கூற வேண்டி யிருக்கிறது.

அதனால்தான் தோன்றிய பல தன்னல இயக்கங்கள் கேலிக்குரிய நிலையையடைவதை நாம் கண்டோம். எம்.எல்.ஏ.வாகலாம், எம்.பி. ஆகலாம். மந்திரி ஆகலாம். நியமனப் பதவிகளைப் பெறலாம். பணத்திலேயே புரளலாம் என்று ஆசைக்காட்டிச் சுய நலக்கூட்டத்திற்கு தலைவர்களாக பலர் தோன்றி மறைந்தார்கள். பெரியார் புகழோடு மறைந்தார். இல்லையில்லை புகழோடு லட்சக்கணக்கான இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்த ஒரே தலைவராக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரது இயக்கம் பகுத்தறிவுப் பகலவனுக்கு ஒத்ததாகும். உலகம் உயிரோடு இருக்க வேண்டுமானால் சூரியன் இருக்க வேண்டும். அதைப் போலவே உலக மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டுமானால் பகுத்தறிவு இயக்கம் இருந்தே தீரவேண்டும். அழிவில்லாதது அறிவியக்கம்.

## அன்புவழி அறிவுவழி

பெரியாரின் வழி அன்பு வழி - அறிவு வழி அவருடைய இயக்கமும் அன்பை அடிப்படையாகக் கொண்டது. அவர் யாரிடம் அன்பு செலுத்தினாலும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அவர் மீது கோபம் கொண்டனர். அது இயற்கை தானே. இருந்தும் பெரியார் எவருக்கும் எதிராகச் செயல்பட்டதில்லை. எவரையும் தனிப்பட்ட முறையில் பகைத்துக் கொண்டதும் இல்லை. அவர் பார்ப்பனத் துவேஷி என்பது அவரைப் புரிந்து கொள்ளாதவர்கள் கூறும் பழி. அவரது இயக்கம் பார்ப்பனீயத்தைத்தான் கண்டித்தது.

பார்ப்பனீயத்தின் கடைசி மூச்சு ஒழியும் வரை திராவிடர்



இயக்கம் மட்டும் இருந்தே தீரும். அதுவரை எப்பேர்ப்பட்ட கொடுமை அடக்குமுறை சூழ்ச்சி - வஞ்சகம் அதன் எதிரிகளோ, அரசியலாரோ கையாண்டாலும் சரி, இறுதியில் இயக்கக் கொள்கை வெற்றியுற்றே தீரும் என்று அவர் தெளிவாகச் சுட்டிகாட்டியிருப்பதிலிருந்து எல்லோரும் பார்ப்பனர்கள் உள்பட மனிதர்களாக, ஒன்றுபட்டு மனிதர் களாகச் சமஉரிமையோடு, சமநீதியோடு வாழும் காலம் வந்தே தீரும்'

என்பதனைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

பெரியார் எந்த அளவுக்குப் பார்ப்பனர் நலம் பற்றி அக்கறை கொண்டார் என்பதற்கு அவரது பேச்சுகள் பல கண்ணாடியாக விளங்குகின்றன.

'என்னைப் பார்ப்பனத் துவேஷியென்று பார்ப்பனப் பத்திரிகைகள் பிரச்சாரம் செய்து வருகின்றன. நான் எந்தப் பார்ப்பானுக்கும் விரோதியில்லை - பார்ப்பனீயத்திற்குதான் விரோதி. பார்ப்பான் ஒழிய வேண்டும் என்று கூறுபவனல்லேன். பார்ப்பனீயம் ஒழிய வேண்டும் என்றுதான் கூறி வருபவன். ஒரு பார்ப்பானும் இந்த உண்மையை உணர்ந்து கொள்ள முயலவில்லையே'

என்று வேதனையோடு கூறியவர் பெரியார். மற்றோரிடத்தில் பார்ப்பனர்களை நோக்கி,

'நீங்கள் எங்களோடு ஒன்றுபடாவிட்டாலும், நாசமாய் போங்கள் எங்களுக்குள்ளாவது ஒற்றுமை ஏற்பட்டு வருவதைத் தடை செய்யாதீர்கள், என்றுதான் பார்ப்பனர்களைப் பார்த்து வேண்டிக் கொள்கிறேன்'.

என்று ஒருமுறை பெரியார் பேசி இருப்பது உண்மையில் அவர் பார்ப்பனர் திருந்தவில்லையே என்று எவ்வளவு வேதனையுடன் குறிப்பிட்டார் என்பதை அறியலாம்.

இந்த நாட்டிற்குப் பார்ப்பனர்கள் குடியேறிய காலத்தில் இருந்து ஒருவர், இருவர்தான் 'பார்ப்பனன் ஏன் - சூத்திரன் ஏன்' என்று கேட்டிருப்பார்கள். அவர்களும் மறைக்கப்பட்டுப் போனார்கள். எதிர்த்துப் பேச ஆளின்றியே 20-ஆம் நூற்றாண்டுக் காலம்வரை ஆரியம் தழைத்தோங்கி மக்களை மலத்திலும் கேவலமான

மானிடப் பிண்டங்களாகப் பார்ப்பனர்களால் மதிக்கும்படியான நிலை ஏற்பட்டது. ஆரியத்தில் அழியாச் சின்னங்களாகக் குழவிக்கல் சாமிகள், மடமையை வளர்க்கும் வேதங்கள், உபநிஷத்துகள், மனுநீதி நூல்கள், புராணங்கள் இருந்து வரலாயின. பெரியாரின் இயக்கமே நிலைத்துவிட்ட கேடுகளைக் களையப் பாடுபட்டுப் பலன்கூட உண்டாக்கியது.

## பொதுவுடமை ஞாயிறு

13.2.1932-இல் பெரியார் சோவியத் நாடு சென்று பொதுவுடமைக் காவலர் தோழர் ஸ்டாலின் அவர்களால் 'இந்தியாவின் நாத்திகர்' என்று அறிமுகப்படுத்தப்பட்டு, திரும்பி வரும்போது பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று 19.5.1932-இல் தாயகம் திரும்பினார்.

பெரியாரை மிகவும் கவர்ந்த சோவியத்து நாட்டின் பொது வுடமைக் கருத்துகளைத் தீவிரமாகப் பரப்பினார். இந்தக் கால கட்டமே இந்தியத் துணைக் கண்டத்தில் தீவிர சமதர்மக் கொள்கைகள் புகுத்தப்பட்ட காலமாகும். தீவிரமாகப் பெரியார் பேசியும், எழுதியும் வந்ததைக் காங்கிரஸ் மகாசபை திரித்து தவறான பிரச்சாரம் செய்தது. அதனால் பெரியார் அரசுக்கு எதிரானவர் என்று வெள்ளையர் ஆட்சியில் 30.12.1933-இல் கைது செய்யப் பட்டுச் சிறைத் தண்டனை பெற்றார்.

இன்று கம்யூனிஸ்டுகள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் அந்தக் காலத்தில் காங்கிரஸ் மகாசபையில் இருந்துகொண்டு, பெரியார் வகுப்புவாதி என்று பழிகளைச் சுமத்தியவர்கள்தாம்.

11.5.1933-ஆம் ஆண்டில் பெரியாரின் மனைவி நாகம்மையார் இயற்கை எய்தினார். அதற்காகப் பெரியார் வருத்தப்படவில்லை. தமக்குப் பொது வாழ்வில் முழுக்க ஈடுபடும் வாய்ப்பு அதனால் கிட்டியதாக அவர் மகிழ்ச்சி கொண்டார். 'புரட்சி' என்ற ஏட்டினை 1933-ஆம் ஆண்டிலும், 'பகுத்தறிவு' என்ற ஏட்டினை 1934-ஆம் ஆண்டிலும் தொடங்கினார். இன்று கூட இப்பெயர்களை உச்சரிக்கவே நடுங்கும் பொதுவுடமைவாதிகள் உள்ளனர்! ஆனால், பெரியார் அந்தக்காலத்திலேயே பகுத்தறிவுப் பிரசாரத்திற்கே ஒரு நாளேடு நடத்த முற்பட்டு, அந்த ஏட்டிற்கு **பகுத்தறிவு** என்ற பெயரையே சூட்டினார். இப்படி ஒரு ஏடு அதிலும் நாளேடு வேறு



எவராலும் வேறு எந்த இடத்திலும் துணிந்து நடத்தப்பட்டதில்லை என்பது வரலாறு புகட்டும் உண்மை மற்றோருண்மை. பெரியார் அவர்களால்தான் முதன் முதலில் பொதுவுடமை விதைகள் நமது மண்ணில் விதைக்கப்பட்டன என்பதாகும்.

பெரியார் தாம் முதன் முதலில் சுயமரியாதை மாநாடு, தொழிலாளர் மாநாடு, மேதின விழா, விவசாயிகள் மாநாடு, நாத்திகர் மாநாடு, மேதின சோஷலிஸ்டுகள் மாநாடு, மாணவர் மாநாடு, இளைஞர் மாநாடு, பார்ப்பனரல்லாதார் மாநாடு, சமுகநீதி பாதுகாப்பு மாநாடு, இந்தி எதிப்பு மாநாடு, புத்தர் மாநாடு, குறள் மாநாடு, கருப்புச் சட்டை மாநாடு என்று பல மாநாடுகளை நடத்தி மிகவும் தீவிரமான தீர்மானங்களை அந்தக் காலத்திலேயே நிறைவேற்றி, அந்தத் தீர்மானங்களுக்குத் தக்க பிரச்சாரத்தின் மூலம் ஆதரவு திரட்டி மக்களிடம் முற்போக்கான கருத்துகளுக்கு மதிப்பைத் தேடியவர்.

1933-இல் நாத்தீகர்கள் மாநாடு, 1934-இல் சோஷலிஸ்ட் மாநாடு நடத்திய பெரியார் தம் வாழ்நாள் முழுவதும் நாத்தீகத் தலைவர் என்றே தம்மைப் பெருமையோடு கூறிக்கொண்டு தீவிர நாத்திகப் பிரச்சாரம் செய்து பலரை அந்தப் பாதைக்கு அழைத்துச் சென்றவர் பெரியார்.

## செங்கொடியினர் சிந்தனைக்கு

நாத்திகத்திற்கும் கம்யூனிஸ்ட்டுக்கும் தொடர்பு இருப்பதாகவே கூட பலர் இன்று காட்டிக் கொள்வதில்லை. நாத்திகம் பேசுவது 'பார்ப்பன துவேஷம்' என்பது அவர்களின் கருத்து. பார்ப்பனர்களை அப்படியே தட்டிக் கேட்காது, நாட்டில் எப்படி சோஷலிசம் மலரும் என்பதை அவர்கள் சிந்திக்க மறுப்பதும், சிந்திப்பவர்கள் சிந்தித்து உண்மையைக் கூறினால், அவர்கள் மீது வீண்பழிகளைச் சுமத்தி ஆரியத்தை மறைமுகமாகக் காப்பதும் அவர்களின் வேலை யாக இருந்து வருகிறது.

முதலாளிக்கு எதிராகத் தொழிலாளர்களைத் தூண்டிவிடுவதன் மூலமே சமதர்மம் பெற்றுவிட முடியும் என்று பசப்பு மொழி பேசி வருகின்றனர். மனித முதலாளிகள்தாம் அவர்கள் கண்ணுக்குத் தெரிகிறதே தவிர கல் முதலாளிகளைப் பற்றி அவர்கள் நினைத்துப் பார்ப்பது சங்கடமாகக் கருதுகிறார்கள். தந்தை பெரியார் மக்களின் ஓட்டுக்காக வாழ்ந்தவரல்லர். அதனால்தான் கல் முதலாளி

களையும், மத ஆதிக்கத்தையும், ஆரியச் சுரண்டலையும் துணிந்து தாக்க முடிந்தது.

பெரியார் தமது இயக்கத்தைப் பதவி வேட்டைக்காகப் பலியிட்ட தில்லை. கூடாத நட்பை நாடியதில்லை. கொள்கையை அடகு வைத்ததில்லை. அவர் தென்றலைத் தீண்டியதில்லை தீயைத்தான் தாண்டித் தாண்டி இயக்கத்தை வளர்த்தார்.

அவர் தொடங்கிய இயக்கம் எல்லோருக்கும் நற்பயனைத் தந்தது. எதிரிகள் கூட அதனால் பெற வேண்டிய பங்கைப் பெற்றனர். பெரியாரின் உழைப்பு எதிரிகளுக்கும் ஏற்றம் தந்தது என்பது வெளிப்படையான உண்மை. ஆனால், அதற்கு எவ்விதக் கைமாறும் எதிர்பார்க்கவில்லை. அவருடைய ஆதரவை தேடிப் பெற்றுக் கொண்டவர்கள் பலர், பல பெரிய பதவிகளைப் பெற்றிடும் நிலையைத் தமிழக அரசியல் கண்டது. அதுமட்டுமல்ல. தீட்டிய மரத்தையே கூர் பார்ப்பதுபோல அவரால் பதவிக்கு வந்தவர்களே கூட அவரைப் பலமுறை கைது செய்து சிறையில் அடைத்துத் தண்டனையையும் அனுபவிக்க செய்துள்ளனர்.

‘தேர்தல்’ என்று அறிவிப்பு வந்த உடனே பெரியாரின் தயவை நாடாத அரசியல் கட்சியே தமிழகத்தில் இல்லை என்று கூறலாம். அப்படிப்பட்ட பெரியார் தாமே பதவிக்கு வர விரும்பியிருந்தால் முடியாத காரியமல்ல. ஆனால் உண்மைச் சீர்திருத்தவாதி எவனும், இன்றைய அரசியல் அரங்கை ஆதரிக்க நியாயம் இல்லை என்பது அவருடைய கருத்து. அரசியல் சட்டம் இயற்றப்பட்டதே பார்ப்பன சூழ்ச்சி. அந்தச் சட்டத்தை ‘யாரோ ஒரு சிலர் நிறைவேற்றி அனைவர் மீதும் திணித்ததுப் பெரிய மோசடி’ என்பதே பெரியாரின் கருத்து. அதனால், அவர் அரசியல் சட்டத்தைக் கொளுத்தினார். ‘சுதந்திரம் நமக்கன்று, அது துக்க நாள்’ என்றார். ஆரியக் கடவுள் இராமன் படத்தை எரித்தார். பிள்ளையார் சிலையை உடைத்தார். மூட நம்பிக்கைகளை ஒழிப்பதிலும், சாதி ஒழிப்பிலும், ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதிலும் அவர் காட்டிய தீவிரத்திற்கு ஈடாக வேறு ஒரு இயக்கத்தையோ, தலைவரையோ, இந்த 20-ஆம் நூற்றாண்டு கண்டதில்லை. பயங்கர மிருகங்கள் வாழும் காட்டில் ஒரு புள்ளிமான் நீண்டகாலம் வாழ்ந்து மறைவதென்பது இயலாத காரியம். ஆனால், நமது பெரியாரின் எதிர்ப்புச் சக்திகள் பயங்கர மிருகங்களைவிட மிகக் கொடியன. அத்தனையும் சமாளித்து, அவர் 24.12.1973-இல் இயற்கை எய்தியது மிகவும் வியப்புக்குரியது.



தம்முடைய 17-வது வயதிலிருந்து கடவுளர்களையும், பார்ப்பனப் பித்தலாட்டங்களையும் எதிர்த்து தொடர்ந்து தம்முடைய 95 வயது வரை அவர் போர்க்களத்திலேயே நின்று இயக்கத்தின் வெற்றிக் கொடியை நாட்டினார். அவர் தாக்கிப் பேசாத பொருள் இல்லை. அவரது கடுமையான விமர்சனத்திற்கு ஆளாகாத விஷயமும் ஏதும் இல்லை. துணிவோடு எதையும் சொல்லக் கூடியவராகப் பெரியார் பணியாற்றினார்.

அதனால் அவருக்கு எவ்வித இழப்பும் ஏற்பட வில்லை. எவராலும் அவரைச் சபித்துவிட முடியவில்லை. அவர் அழிந்தும் போக வில்லை. 95 வயதுவரை உடல் நலத்தோடு வாழ்ந்து, உலகைத் திருத்திய உத்தமர்களின் பட்டியலில் முதலிடம் பெற்று மறைந்தார்.

இத்தனைச் சிறப்புக்கும், சுயமரியாதை இயக்கம் பீடு நடையுடன் வெற்றிப் பயணம் புரிந்திட அடிப்படைக் காரணம் என்ன?

பார்ப்பனரல்லாதார் இயக்கம் 1912-ஆம் ஆண்டில் தோன்றி 1916-ஆம் ஆண்டில் அமைப்பாக இயங்கி 1920, 1923-ஆம் ஆண்டு களில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி புரிந்தது ஒரு காரணம். நீதிக்கட்சியின் தலைவர்கள் அரசியலில் பார்ப்பனர் களால் வெறுக்கப்பட்டனர். இந்த சூழ்நிலையில் 1925-ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைப் பெரியார் தொடங்கியது தக்க தருணமாக அமைந்தது.

பெரியாருக்கு நல்லாதரவளித்து சுயமரியாதை இயக்கம் பார்ப்பனர் களின் செல்வாக்குக் குறைக்க அச்சகவசதி, நிதி உதவி அனைத்தும் அளித்து ஊக்கு வித்தனர். நீதிக்கட்சித் தலைவர்கள். பின்னர், 1938-இல் பெரியாரே நீதிக்கட்சியின் தலைவரானார். 1944-ஆம் ஆண்டு வரை அதன் தலைவராக இருந்தார்.

பெரியாரின் இலட்சியமும் நீதிகட்சியின் இலட்சியமும் ஒன்றாக இருந்தது நினைவில் கொள்ளத் தக்கது. ஆனால் அணுகு முறையில் தான் பெரியார் சமூக மேன்மையையும், நீதிக்கட்சி அரசியல் மேன்மையையும் மையமாகக் கொண்டது.

## நெஞ்சின் ஆழமும் அறிவின் பரப்பும்

100-க்கு 3 பேர்களாக உள்ள பார்ப்பனர்கள் எங்கும் எதிலும் ஆதிக்கம் பெற்று 100-க்கு 97 பேர்களாக உள்ள பார்ப்பனரல் லாதாரைச் சுரண்டியும், அடிமைகளாக்கியும், இழிவுப்படுத்தியும், கொடுமைகளுக்கு ஆளாக்கியும் வந்த கேடான நிலையை மாற்றி அமைத்து எல்லோருக்கும் சம உரிமை, சம அஸ்தஸ்து, சமநிலை உண்டாக்குவதே இலட்சியமாகக் கொண்டு டாக்டர் நடேசனார், சர். தியாகராயர், டாக்டர் நாயர் ஆகிய மூவரும் சரியான நேரத்தில் இந்த நாட்டு மக்களின் தலையெழுத்தை மாற்றியமைக்க தோற்றுவிக்கப்பட்டதே 'தென் இந்திய நலஉரிமை சங்கம்' எனும் பார்ப்பனரல்லாதார் இயக்கமும், நீதிகட்சியுமாகும். மிகக் குறுகிய காலத்தில் மக்களின் பேராதரவோடு ஆட்சியைக் கைப்பற்றி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் திற்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் அளித்துவிட்டு, திராவிட மக்கள் படிப்படியாக பல துறைகளில் இழந்த செல்வாக்கைப் பெற்று வருவதைக் கண்ணாரக் கண்டு மறைந்தனர். நீதிக்கட்சித் தலைவர்கள், அவர்களுக்கு பிறகு 1940-ஆம் ஆண்டு அக்கட்சியின் தலைவராகப் பெரியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். 5.1.40-இல் தந்தை பெரியார், 'சண்டே அப்சர்வர்' பி. பாலசுப்பிரமணியம், டி.எ.வி. நாதன், கே.எம். பாலசுப்பிரமணியம் ஆகியோர் வடநாட்டுக்குச் சென்று சுற்று பயனம் செய்தனர்.

முஸ்லீம்களின் தலைவர் ஜின்னாவையும், தாழ்த்தப்பட்ட சமூகத்தின் தலைவர் அம்பேத்கார் அவர்களையும் சந்தித்துப் பேசினர். அந்தப் பேச்சுகள் எதிர்பார்த்த பலன் தரவில்லை. திராவிடர்களின் தனி இனமாக ஏற்கவும், திராவிடநாடு பிரிவினைக்கும் வலுவைத் தேடவே, வடநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், அது இரண்டாவது உலகப்போர் மூண்ட நேரம்.

இதற்குப் பின்னரே தந்தை பெரியார் அரசியலில் அதிக ஈடுபாடு கொள்ள வேண்டியதாயிற்று. 1925-முதல் 1944-வரை பகுத்தறிவுப் பிரச்சாரமே முதல் கவனம் பெற்று வந்தது. 16-ஆண்டுகள் பதவியில் இருந்துவிட்ட காரணத்தினாலும், காங்கிரஸின் தவறான பிரச் சாரத்தின் காரணமாகவும் மீண்டும் நீதிக்கட்சி புதிய 27.8.1944-இல் திராவிடர்க்கழகத்தை நிறுவினார் பெரியார். திராவிடர்க்கழகம் ஒரு பிரச்சார ஸ்தாபனமாகவே பிறந்தது. சமுதாயச் சீர்திருத்தமே அதன் இலட்சியமாக விளங்கியது.



இந்தியா முழுவதும் நல்ல செல்வாக்குள்ள அமைப்பாக காங்கிரசும், பலம் பொருந்திய தலைவராகக் காந்தியும் இருந்த கால கட்டத்தில் தென்னகத்தில் மட்டுமே செயல்பட்ட நீதிக்கட்சி நேர்மையுடன் செயல்பட முடியாத நிலையில் பெரியார் அதற்குத் தலைமை ஏற்று என்ன செய்வது? மேலும், 'நீதிக்கட்சி வெள்ளையனுக்கு வால் பிடித்த கட்சி, தேசத்துரோகிகள் கட்சி, அன்னியர்களின் காலணியைப் பளபளக்கச் செய்தவர்களின் கூடாரம்' என்று துணிந்து பொய்யும் புரட்டும் பேசியே ஆதாயம் தேடும் நிலையில் காங்கிரஸின் அக்காலப் போக்கு இருந்தது. நாஜிகளுக்கு எதிராக அன்னியர்களை ஆதரிக்க நீதிக்கட்சி முடிவு செய்ததைக் கல்வி அறிவில்லாத மக்களிடம் சுலபமாகத் தவறாப் பேசவும் துணிந்து விட்டனர் காந்தீயவாதிகள். சத்தியத்தின் பேரால் புனைந்த புளுகு களையும், அகிம்சையின் பெயரில் நாசவேலைகளில் துணிந்து செயல்படுவதும் காங்கிரசின் வேலையாகிவிட்டது. இரண்டாவது உலகப்போரில் ஜெர்மன் நாஜிகள் மட்டும் வெற்றி பெற்றிருந்தால் இன்றைய இந்தியா சுதந்திரம் பெற்றிருக்குமா, ஜனநாயகம் பிழைத்திருக்குமா என்பதை வரலாற்று ஆசிரியர்கள் தான் கணித்துக் கூறவேண்டும்.

1944 முதல் 1946 வரை நீதிக்கட்சியின் 'தராசு' திராவிடர்க் கழகத்தின் கொடியாகத் தொடர்ந்து நீடித்தது. அதன் பின்னர் தி.க.வின் கொடி கறுப்பும், சிவப்பு வட்டமும் என்று மாற்றி அமைக்கப்பட்டது. மக்களின் இழிவைக் குறிப்பது கறுப்பு. புரட்சியைக் குறிப்பது சிவப்பு.

பெரியார் நீதிக்கட்சியின் தலைவராக இருந்த போது உலகப்போர் மூண்டது. அப்போது பெரியாரிடம் சென்னை ராஜதானியை ஆளுகின்ற பொறுப்பை ஆங்கிலேயர்கள் அளிக்க முன் வந்தனர். ஆனால், அதனை அவர் ஏற்க மறுத்துவிட்டார். உண்மை இப்படி யிருக்கக் காங்கிரஸ்காரர்கள், நீதிக்கட்சியினர் பதவி மோகம் கொண்டவர்கள் என்று பொய்ப் பிரச்சாரம் செய்தனர்.

நீதிக்கட்சியினர் மிகவும் மிதவாதிகளாகவே இருந்தனர். பெரியாரின் தீவிரவாதங்கள் ஒரு சிலருக்குப் பிடிக்காதிருந்தது.

அதனால்தான் நீதிக்கட்சியை மாற்றி அமைக்கப் பெரியார் முற்பட்டார். 1939-ஆம் ஆண்டு கிரிப்ஸ் பிரபுவைச் சந்தித்து, திராவிடர்களின் நிலையை விளக்கினார். ஆனால், வெள்ளையர்கள் இந்துக்கள், முஸ்லீம்கள் என்ற இரண்டு இன அடிப்படையிலேயே செயல்பட்டனர். அதனை வேவல் பிரபு வானொலியில் தெளிவாகவே கூறிவிட்டார். அதனால்தான் முஸ்லீம்களுக்கு மட்டும் பாகிஸ்தான் தரப்பட்டது. திராவிடர்களை இந்துக்களாகவே கருதினர்.

1936 முதல் நீதிக்கட்சி நல்ல எண்ணத்துடன் யோக்கியர்களாகவும், நேர்மையுடனும், முழு நம்பிக்கையுடனும் செயல்பட்டது தவறு என்றே இப்போது நினைக்க வேண்டியிருக்கிறது. காங்கிரஸ் போன்று நாசவேலைகளில் ஈடுபட்டிருந்தால் முஸ்லீம்களுக்கு தனிநாடு கிடைத்தது போல் நமக்கு கிடைத்திருக்கக்கூடும். நாலரைக் கோடி திராவிட மக்களில் ஒருசிலர் நினைத்திருந்தால் கூட எத்தனையோ இடங்களில் தண்டவாளங்களைப் பெயர்த் திருக்கக் கூடும், தபாலாபீசுகளைக் கொளுத்தி இருக்க முடியும், தந்திக் கம்பிகளை அறுத்திருக்கக் கூடும், திராவகம் வீசி வெள்ளையர் உயிரைப் போக்கி இருக்கக் கூடும்.

நீதிக்கட்சி நியாயங்களை நம்பியது; நாச வேலையை நம்பவில்லை. அமைதியை விரும்பியது; அழிவை விரும்பவில்லை. அரசியல் நேர்மையை விரும்பியது; அரசாங்கத்தை நம்பிவிடவில்லை. அதனால்தான், வெள்ளையர்களுக்குத் திராவிடநாடு தனிநாடு என்பதை தந்தாக வேண்டிய நிர்பந்தம் ஏற்படவில்லை.

எது எப்படி இருந்தாலும் இந்தியத் துணைக் கண்டத்தில் தோன்றிய அரசியல் கட்சிகள் எதுவுமே நீதிக்கட்சிக்குச் சமமாகச் சிறப்புப் பெற்றுச் செயல்பட்டதாகக் கருத இடமில்லை என்பதனை ஆராய்ச்சியாளர்கள் இன்றும் கூறி வருகின்றனர். 16 ஆண்டுகள் ஆட்சிபுரிந்து எந்தவிதக் குற்றச்சாட்டையும், எதிரிகளால் கூற முடியாத அளவுக்கு நல்லமுறை ஆட்சி செய்து நற்பெயர் எடுப்பது எளிதான காரியமல்ல.

## திராவிடர் கழகம்

27.8.1944-இல் திராவிடர்க்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தேர்தல்- பதவி அரசியல் எதற்கும் இடம் தராது சமுதாய இழிவைப் போக்கவே தி.க. நிறுவப்பட்டது. கழகத்தின் காவலர்கள் கறுப்புச் சட்டை அணிவதும் கட்டாயப்படுத்தப்பட்டது. பெரியார் தம் விருப்பப்படி செயல்படக்கூடிய நிலையில் தலைவரானார்.



அண்ணா பொதுச் செயலாளர் பதவி வகித்து ஏராளமான இளைஞர் களை இயக்கத்தின் பக்கம் ஈர்த்து மிகக் குறுகிய காலத்தில் கழகத்தை வளரச் செய்தார்.

சமுதாயச் சீர்திருத்தம் மட்டுமே அடிப்படை இலட்சியமாகக் கொண்டு தி.க. செயல்படுவது கூட காங்கிரஸ்காரர்களுக்குப் பிடிக்கவில்லை. தி.க.வை ஒழிக்கத் தீவிரம் காட்டினர். அதற்குக் காரணம் காங்கிரஸ் பார்ப்பனர்களின் பாதுகாப்பு ஸ்தாபனமாக இருந்ததேயாகும்.

11.5.1946-இல் மதுரையில் கூட்டப்பட்ட ‘கறுஞ்சட்டை மாநாடு’ தி.க.வின் வளர்ச்சியைக் குறிக்கும் ஓர் அளவுகோலாக அமைந்து விட்டது. பிரபல காங்கிரஸ் பிரமுகர் மதுரை வைத்தியநாதன் (அய்யர்) தூண்டுதலின் மூலம் பெரிய சதித்திட்டம் உருவாக்கப் பட்டது. மதுரையில் கூடிய கறுஞ்சட்டை மாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைக்கப்பட்டது. காலிகளை ஏவி கறுப்பு உடை அணிந்து வந்தவர்கள் பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் உள்பட அனைவரும் தாக்கப் பட்டனர். அவ்வளவும் நடந்துவிட்ட பின்னர் கூட பெரியார் எல்லோரையும் அமைதியாக இருக்கும்படிக் கட்டளையிட்டு, பாதுகாப்பாகக் கலைந்து செல்லும்படி செய்தது வியப்புக்குரியதாகும். அந்த நேரம் பெரியார், ‘உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்’ என்று கூறியிருந்தால் பெரிய உள்நாட்டுப் போர் மூண்டிருக்கக் கூடும். 100-க்கு 3 பேராக உள்ள பார்ப்பனர் களில் எத்தனைப் பேர் பிழைத்திருக்க முடியும்? ஆனால், பெரியார் அப்படிச் செய்யவில்லை. என்ன காரணம்? பெரியாரே அதனைத் தெளிவுபடுத்தத் தவறவில்லை.

> ‘எந்தப் பிரச்சார இயக்கமும் அன்புவழிச் சென்றால்தான் வெற்றி பெற முடியுமே தவிர, பலாத்கார வழிச் சென்றால் ஒருபோதும் வெற்றி பெற முடியாது’.

> ‘எங்குக் கலகம் நேர்ந்தாலும் பார்ப்பனன் ஒருவன்கூட கைக்குச் சிக்க மாட்டான் என்று தெரிந்து தான் பலாத் காரத்தைக் கைவிட்டு இருக்கிறோமே தவிர, பலாத்காரமின்றி

வாழ்ந்தால் கடவுள் நமக்கு மோட்ச லோகத்தில் இடம் கொடுப்பார் என்ற ஆசையாலோ, அல்லது கடவுளிடம் சரியான கூலி கிடைக்கும் என்பதாலோ அல்ல'

என்று பார்ப்பனர்களின் குணாதிசயத்தைப் பெரியார் சுட்டிக் காட்டுகிறார்.

அறிவைப் பிரதானமாக வைத்து வாழ்ந்தவர் பெரியார். அமைதி குலையுமானால் அதனால் அழியக் கூடியவர்கள் நாம்தான் பார்ப்பனர் அல்லர் என்ற உண்மையை நன்றாக உணர்த்தியவர் பெரியார். அவருடைய நோக்கம் உழைப்பு முத்திரை பெற வேண்டுமே தவிர ஜெயில் முத்திரை பெற வேண்டும் என்பதல்ல. ஜெயில் முத்திரை யாருக்குப் பயன்படும்? தனிப்பட்டவருக்கே அதனால் லாபம். உழைப்பு அப்படியல்ல. உழைப்பின் மூலம் ஒரு சமூகமே முன்னேற்றமடையும்.

தி.க.வின் நோக்கத்தைப் பெரியார் விளங்கும் போது:

'நாங்கள் ரகசியத்தில் சதி செய்பவர்களல்லவே, எங்கள் கழகம் சட்டவிரோதமான கழகம் அல்லவே. பலாத்காரத்தில் நம்பிக்கை உடையவர்களும் அல்லவே. நாங்கள் எங்கள் ரத்தம் சிந்தச் சிந்தத்தான் மற்றவர்களுக்கு இன உணர்ச்சியும், மான உணர்ச்சியும் ஏற்படும்'.

'நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்பதில் அரசுக்கு உள்ள கவலையைவிட எங்களுக்கு உள்ள கவலை அதிகம்'.

என்று பெரியார் கையாண்ட அறிவுரையை விளக்கிறார். இன்னா செய்யாமை, வன்முறை தவிர்த்தல் என்பதில் பெரியாரைப் போன்று காந்தியார் நம்பிக்கை கொண்டிருந்தார் என்று சிலர் நினைக்கலாம். காந்தியார் அகிம்சையைப் பேசினார். நாசவேலைகளை வெறுத்தார். அவ்வளவுதான். ஆனால் காங்கிரசை அப்படி இயக்க முடிய வில்லை. ஒத்துழையாமை இயக்கத்தின்போது நடைபெற்ற அசம்பாவிதங்களுக்குக் காந்தியார் சிறையில் வருத்தம் தெரிவித்து 'பெரிய இமாலயத்தவறு செய்துவிட்டேன்' என்றுதான் காந்தியார் வேதனைப்பட வேண்டியிருந்தது.

பெரியாரின் தொண்டர்களின் ஒரு சமயம் கூட அவருடைய கட்டளையைப் புறக்கணித்து அமைதிக்கு ஊறு தேடி எதிரிகளைச் சங்கடத்தில் ஆழ்த்தி இயக்கத்திற்குக் கெட்ட பெயரைத் தேடித்



தந்ததாக வரலாறு இல்லை. அவர் சொல்படியே தொண்டர்கள் இருந்தனர். குருவுக்கு மிஞ்சிய சீடர்கள் தி.க.வில் இருக்கவில்லை.

**துவளாத வாழ்வின் தோற்றம்**

எந்தப் போராட்டமானாலும் அதனை அரசு பெரியார் மீது திணித்த தாகவே அமைந்துள்ளன. அவர் போராட்டத்தைத்தேடி அலைய வில்லை. போராட்டம் தொடங்குவதற்கு முன்னர் நியாயங் கள் எடுத்து கூறவும் அவர் பின்வாங்கியதில்லை. வேறு வழியின்றிப் போராட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டாலும் ஜாக்கிரதை யாகப் போராட்ட வீரர்களின் பட்டியலைத் தயாரித்து அவர் களுக்குத் தக்க பயிற்சியையும் தந்து, போராட்டக் களத்திற்கு அனுப்பி வைப்பார்.

தடியடி பட நேர்ந்தாலும், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப் பட்டாலும் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டாலும், துப்பாக்கிக் குண்டை ஏற்க நேர்ந்தாலும் பெரியாரின் தொண்டர்கள் இனத்தின் மேன்மைக்காகப் பயங்கர அடக்குமுறைகளைச் சந்தித்து கொண்டு தான் இயக்கத்திற்குப் பணியாற்றினர். அவர்கள் வீரர்கள் என்பதற்காக எவர் மீதும் கல் வீசியதில்லை. சோடா புட்டி வீசியதில்லை. சைக்கிள் செயின்களைக் கொண்டு தாக்கியதில்லை. எதிரி ஒரு சொட்டு ரத்தம் கூடச் சிந்தாத அளவிற்குத் தங்கள் ரத்தத்தைச் சிந்தி, உயிரைக் கொடுத்த பெரியாரின் கொள்கையைப் பரப்பினர். அந்த நல்லபாதையை வேறு எந்த இயக்கமும் பாராட்டிப் பின்பற்றியதில்லை. 2-3-48-இல் கறுப்பு சட்டை அணிபவர்கள் நாட்டில் இப்போது பெருகி விட்டார்கள். இருந்தும் ஒரு பூணூலுக்குக் கூட ஆபத்து நேர்ந்து விடவில்லை. இதுதான் பெரியாரின் தனிச் சிறப்பு.

1947-ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த போது ஆகஸ்ட் 15-ஆம் நாள் சுதந்திரநாள் என்று எல்லோரும் கொண்டாட முற்பட்டனர். திராவிடர்களுக்கு இருந்த பிரிட்டிஷ் - பனியா - பிராமணன் என்ற என்ற மூன்று எதிரிகளில் ஒருவன் தொலைந்தான் என்ற முறையிலாவது அந்தச் சுதந்திர நாள் மகிழ்ச்சியோடு கொண்டாடப்பட வேண்டிய நன்னாள் என்றும் சிலர் விளக்கங்களைத் தந்தனர்.

1945 ஆம் ஆண்டிலேயே பெரியார் ஒரு கருத்தை ஊகித்துக் கூறினார். பிரிட்டிஷ் ஆதிக்கம் தொலைந்தால் அதற்குப் பதிலாக

பார்ப்பனர் ராஜ்யம் தான் வரும் என்று திட்டவட்டமாகக் கூறியவர் பெரியார். அதனால் சுதந்திர தினம் தி.க.வினருக்குத் துக்கநாள் என்று அறிக்கை வெளியிட்டார். 1945-இல் பெரியார் கூறியதுதான் 1947-இல் நடைபெற்றது.

'சுதந்திர இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ஒரு பார்ப்பனன்.
இந்தியாவின் பிரதம மந்திரி ஒரு பார்ப்பனன்.
மாகாண முதல் மந்திரி ஒரு பார்ப்பனன்'.

'இப்படி வெள்ளையன் வெளியேறியதும் பார்ப்பன ராஜ்யம் ஏற்பட்டது'.

'இம் மாகாணத்து மக்களால் வெறுத்து ஒதுக்கபட்ட ஒருவனுக்கு சுயராஜ்யம் வந்ததும் கவர்னர் வேலை கொடுக்கப் பட்டது என்றால் இம்மாகாண மக்களின் ஜனநாயக உணர்ச்சிக்கு சாவு மணி அடிக்கும் வேலைதான் இது'.

என்று துணிந்து மக்களாட்சியின் அடிப்படைத் தத்துவத்தை எதிரொலித்த ஒரே தலைவர் பெரியார்தான்.

## புரட்சி ஞானி

'மனிதன் ஒரு நாளைக்கு இரண்டு தடவை மலத்தைத் தொடுகிறான். அதற்காக உடனே குளிப்பதில்லை. சதா ரோட்டில் மலம், எச்சில், மூத்திரம் ஆகியவைகளை மிதித்துக் கொண்டு நடக்கிறான். அதற்காகவும் உடனே குளிப்ப தில்லை. நதிக்கும் குளத்துக்கும் போய் குளித்து விட்டுத் தண்ணீர் கொண்டு வரும் ஸ்திரீகள் ரோட்டில் மலம், எச்சில், மூத்திரம் முதலியவைகளை மிதித்து கொண்டு வருகிறார்கள். அதற்காகவும் குளிப்பதில்லை. ஆனால், ஒரு பறையனையோ, ஒரு சூத்திரனையோ தொட்டுவிட்டால் அவன் வேஷ்டி மேலே பட்டுவிட்டால் அவன் தண்ணீர் பிடித்த ஈரத்தை மிதித்து விட்டால் உடனே குளிக்க வேண்டுமென்கிறான். இவனுக்குச் சுயராஜ்யம் வேண்டுமா?'

என்று பெற்ற சுதந்திரத்தைப் படம் பிடித்துக் காட்டியவர் பெரியார்.

'பல சாதி, மத பேதங் கொண்ட சமூகத்திற்கு அதிகாரம் ஒரு சிலர் கையில் குவிக்கும் கொடுமை ஜனநாயகமன்று' என்று கூறியவரும் பெரியார்தான்.



'மனிதனை மனிதன் தொடக்கூடாது. பார்க்கக் கூடாது தெருவில் நடக்கக் கூடாது என்று கூறிக் கொண்டு ஒரு சிலருக்கு மட்டும்தான் சாமியைத் தொடவும், பூஜை செய்யவும் உரிமை உண்டு என்று கூறிக்கொண்டு, எல்லோருக்கும் சுதந்திரம் வந்து விட்டது என்று சொல்வது பெரிய மோசடி' என்று கூறியவர் பெரியார்.

'பார்ப்பனியமும், மத ஆதிக்கமும் ஒழிந்தாலொழிய இந்தியாவில் சுதந்திர ஆட்சி நல்லபடி நடக்க முடியாது' என்று சுதந்திரத்தின் அரும்பொருளை உணர்த்தியவரும் பெரியாரே.

'இந்தியா ஒரு நாடாக இல்லை. இப்போது சாதிகளின் காட்சிச் சாலையாக, மதக் காட்சிச் சாலையாக, மொழிக் காட்சிச் சாலையாக, சாமிகள் காட்சிச் சாலையாக இருக்கிறது. இந்த நிலையில் இந்தியா விடுதலையோ, முன்னேற்றமோ அடைவது சாத்தியமா?' என்று துணிந்து கேட்ட ஒரே தலைவர் பெரியார்.

அன்று அவரது கருத்துகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன. அதனால் தான் சுதந்திரம் பெற்ற 6-வது மாதமே இந்தியச் சுதந்திரத்திற்கு பாடுபட்ட காந்தியார், மதவெறியும், சாதிவெறியும் கொண்ட ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட நேர்ந்தது. சுதந்திரம் வந்து விட்டதாகக் கும்மாளம் அடித்தவர்கள் இப்படி வேறு எந்த நாட்டிலாவது நடக்குமா என்று யோசிக்க வேண்டும்.

## என்ன விடுதலை? யாருக்கு உரிமை?

காந்தியார் மிகப் பெரியவர். உலகம் அறிந்தவர். அரசியலில் அற்புதங்கள் புரிந்தவர். காந்தியாருக்கு ஈடாக ஒருவனும் உலகில் தோன்றவில்லை என்று பெருமை பேசிய தலைவர்கள் வெட்கித் தலைகுனிய நேரிட்டது.

ஒரு பெரிய கூட்டத்தைச் சூத்திரர்கள் - அடிமைகள் தாசிக்குப் பிறந்தவர்கள் என்று இருக்கும் நிலையில் அவர்களின் சமூக அஸ்தஸ்தை மற்றவர்களுக்கு ஈடாக உயர்த்த முடியாத சுயராஜ்யம் யாருக்கு வேண்டும்?

காந்தியார் கொல்லப்பட்டவுடன் கொதித்தெழுந்து இந்த நாட்டைக் 'காந்தி நாடு' என்று பெயரிட வேண்டும். அவருடைய கொள்கையைப் பின்பற்றுவது உண்மையானால் அதனைப் பின்பற்ற வேண்டும் என்று நல்லதோர் யோசனையைக் கூறினார்.

எப்படியோ மக்கள் ஒன்றுபட்டு, சமநிலையில் வாழட்டுமே என்றுதான் இந்த யோசனையை பெரியார் கூறினார். அவருடைய யோசனையை சாதிவெறிப் பிடித்த அதிகார வர்க்கம் நிச்சயம் ஏற்காது என்று தெரிந்தே அந்த யோசனையைக் கூறினார்.

நாடு விடுதலை பெற்ற பின்னர் திராவிடர் நிலை, ஒரு புறம் வட நாட்டு ஆதிக்கத்திற்கும், மற்றொருபுறம் பார்ப்பனர் சுரண்டலுக்கு ஆளாகிறது என்பதை வெளிப்படுத்த, வடவர் நடத்தும் தொழில் நிறுவனங்கள் முன் தி.க.வினரை மறியல் செய்ய வைத்தவர் பெரியார்.

2.3.1948-இல் புகைவண்டி நிலையங்களில் திணிக்கப்பட்ட இந்தி எழுத்துக்களை அழிக்கத் தி.க. வினருக்குக் கட்டளையிட்டார். வடவரின் மொழியை ஏற்றால், அவர்களின் ஆதிக்கத்தையும் ஏற்க வேண்டி வரும் என்பதை உணர்ந்து அதனை எதிர்த்தார்.

பல்வேறு மதங்கள், ஜாதிகள், மொழிகள், நிறைந்த இந்தியாவின் குத்தகைக்காரர்களாக இந்தி மொழி பேசுவோர் ஆணவத்துடன் செயல்பட்டதை முதலில் கண்டறிந்து, இந்தி பேசாத மக்களின் சார்பாக எதிர்ப்புக் குரல் கொடுத்து நாட்டை இந்தி ஆதிக்கத்தி லிருந்து காப்பாற்றியவர் தந்தை பெரியார் என்பது கருத்தில் கொள்ள வேண்டியது. இதற்குப் பிறகுதான் மற்ற மொழியினரும் விழிப்புணர்ச்சி பெற்றனர். 1938-இல் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்திய ராஜாஜியேக் கூட தீவிர இந்தி மொழி வெறுப்பாளராக மாறி மத்திய அரசின் போக்கைக் கண்டித்துத் தீவிரமாக இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தார். அரசியல் சட்டத்தில் சுலபமாக இடம் பெற்ற இந்தி மொழி இன்றுவரை எதிர்ப்பிலிருந்து மீண்டும் சட்டத்தில் இடம் பெற்றிட முடியாது திண்டாடும் நிலையில் உள்ளது. இதற்கு, இந்த தலைமுறையினர் தந்தை பெரியாருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். இன்று தந்தை பெரியார் உயிருடன் இல்லை. இருப்பினும், அவரை உண்மையாக மதிப்பவர்களுக்கு இந்திக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி அடுத்த தலைமுறையினரின் நன்றியைப் பெறவேண்டியது முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

## வித்தும் - விளைவும்

1949-ஆம் ஆண்டில் தந்தை பெரியார் தி.க. வின் அமைப்புக்கு நிரந்தரமான வடிவம் தரும் நோக்கத்துடன் திருமண ஏற்பாடு



என்கிற பெயரில் சொத்துப் பாதுகாப்பிற்கான வழிமுறையைச் சட்டத்தின் மூலம் கைக்கொண்டு 9-7-1949-இல் மணியம்மையைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டார். 72 வயது கிழவன் 26 வயது குமரியை மணப்பதா? என்று சிலர் பெரியாரின் உள் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் எதிர்ப்பு தெரிவித்து, இயக்கத்தின் ஒற்றுமையையும் வளர்ச்சியையும் தடை செய்து தனியாகப் பிரிந்து சென்று தி.மு.க. என்ற பெயருடன், புதிய அமைப்பை உருவாக்கிக் கொண்டனர்.

பெண்களின் சுதந்திரத்திற்காக எவருமே கூறாத யோசனைகளைக் கூறி பெண்களின் உரிமைக்காக வாதாடிய பெரியார், மணி யம்மையை மணம் செய்து கொண்டது சாதாரண மானிட இன்பத்திற்காகவோ, மன மகிழ்ச்சிக்காகவோ இல்லை என்பது இப்போதுதான் பலருக்குத் தெரிகிறது. பெரியாரைப் பாராட்ட நான், நீ என்று போட்டிப் போட்டுக்கொண்டு வருகிறார்கள்; ஆனால் அவர்கள் மட்டும் 1949-இல் பிரிந்து போகும் தவற்றைச் செய்யாதிருந்தால், இன்று இயக்கம் பல நல்ல சாதனைகளைப் புரிந்திட வழி ஏற்பட்டிருக்கும். திராவிட சமுதாயம் எவ்வளவோ முன்னேறி தலைநிமிர்ந்து, உலக மக்கள் பாராட்டும் அந்தஸ்தைப் பெற்றிருக்கக்கூடும். அறிஞர் அண்ணா போன்ற பல ஆற்றல் மிக்கவர்களின் கவனம் வேறு திசையில் செலுத்த பட வேண்டிய தாயிற்று. பின்னர் பெரியார் 23-9-52-இல் சட்ட நிபுணர்களின் ஆலோசனைப்படி பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தை முறையாகப் பதிவு செய்து இயக்கத்திற்குப் போதிய அளவிற்குச் சொத்தை உருவாக்கி விட்டார்.

திராவிடர்க்கழகத்திற்கு இனி எந்தக் குறையும் இல்லை. அவர் விட்டுச் சென்ற கொள்கை வளத்தையும் செல்வ வளத்தையும் முறையாகத் திட்டமிட்டுப் பணியாற்றி வந்தால் படிப்படியாக பெரியாரின் இலட்சியங்கள் நிறைவேறிடக்கூடும்.

எண்ணிக்கைப் பலத்தை நம்பியிருந்தால் பெரியார் 1949-ஆம் ஆண்டோடு தம் கதையை முடித்துக் கொள்ள நேரிட்டிருக்கும். ஆனால், அவர் கொள்கைப் பலத்தை நம்பியே செயல்பட்ட காரணத்தினால், பிரிந்து சென்றவர்கள் கூட, அவரின் வாரிசுகளாக மாறிட நேர்ந்தது. தி.மு.க. ஆட்சியைப் பெரியாரிடம் காணிக்கை யாக அண்ணா அளித்தார். சூத்திரர்களின் ஆட்சி தமிழகத்தில்

நடைபெறுவதை அறிவு உலகம் கண்டு கொண்டு வியப்படைய நேர்ந்தது.

சுதந்திர இந்தியாவின் அரசியல் சட்டத்தில் வகுப்பு நீதியை இடம் பெறச் செய்வதற்காக முதல் திருத்தத்திற்கே தந்தை பெரியார் தாம் காரணமாக இருந்தார் என்பது வரலாற்று உண்மை. அந்த திருத்தத்தில் பயனை இந்திய மக்கள் அனைவருமே அனுபவிக்கும் நிலையை ஏற்படுத்தி தந்தவர் பெரியாரே.

## போராட்டப் பேரலைகள்

முதல் பொதுத்தேர்தல் 1952-இல் வந்தபோது காங்கிரசுக்கு எதிராக ஐக்கிய முன்னணியை அமைத்து 375 இடங்களில் 152 இடங்களில் மட்டுமே காங்கிரஸ் தலைகாட்ட முடிந்தது. இந்தியா முழுவதும் ஓ,ஓ என்று வெற்றிகளை குவித்த காங்கிரஸ் இங்கு மெஜாரிட்டி பலம் பெற முடியாது திண்டாட நேர்ந்தது என்றால் அதற்குக் காரணம் தந்தை பெரியார்தான். முதல் தேர்தல் முடிந்த உடனே, காங்கிரஸ் தனது பதவி வெறியை வெளிப்படையாகக் காட்ட நேர்ந்தது. உழைப்பாளர் கட்சி, காமன்வீல் கட்சி சார்பாக காங்கிரஸ் வேட்பாளர்களை எதிர்த்து வெற்றி பெற்றவர்களுக்கு வலைவீச காங்கிரஸ் அமைச்சர் அவை அமைத்து, கவர்னர் ஜெனரல் பதவி வகித்த ராஜாஜி கொல்லைப்புற வழியாகச் சட்டமன்றத்தில் நுழைந்து முதல் அமைச்சரானார். 6000 பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டன. குலக்கல்வி திட்டம் புகுத்தப்பட்டது. காங்கிரஸ் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது பார்ப்பனர்களின் ஆதிக்கமும், பார்ப்பனர் நலம் பெறும் குணமும் கொண்டது என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியவர் பெரியார்.

பதவியை ராஜிநாமா செய்து ராஜாஜியை மூலையில் ஓய்வு பெறச் செய்தவர் பெரியார். கட்சிக் கண்ணோட்டமின்றி, இனத்தின் நலனைப் பாதுகாக்க காமராசருக்குக் கைகொடுத்து முதலமைச்சர் பதவி ஏற்க செய்து, சுதந்திர இந்தியாவில் முதன் முதலில் பார்ப்பன ரல்லாதார் ஆட்சி திராவிடர் ஆட்சியை ஏற்படுத்தியவர் பெரியார்.

ராஜாஜி ஆட்சியில் இருந்தபோது துணிந்து இயக்கத்தைத் தீவிரமாக நடத்தியவர் தந்தை பெரியார். 1953-ஆம் ஆண்டில் பிள்ளையார் உடைப்புப் போராட்டம் நடத்தினர் திராவிடக் கழகத்தினர். சட்டத்தை கையில் வைத்துக் கொண்டு அடக்குமுறை



ஆயுதங்களை எவ்வளவு கடுமையாகப் பயன்படுத்தி, திராவிடர்க் கழக தோழர்களைத் துன்புறுத்தி, சிறைப்படுத்தியும், கொடுமைப் படுத்தியும் கூட பெரியாரின் தொண்டர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்துக் கடமையைச் செய்து, இயக்கத்தை வளர்த்தனர். திராவிடர் அனாதைகளாக விளங்கவில்லை. எதையும் தாங்கும் இதயம் படைத்த தியாகிகளாக விளங்கினர். ராஜாஜியை எதிர்த்துப் பெரியார் நிகழ்த்தியது ஆரியர் திராவிட போரின் ஒரு கட்டமாகும். 1-8-54-இல் புகைவண்டி நிலையங்களில் புகுத்தப்பட்ட இந்தி எழுத்துக்களை அழிக்கச் செய்தார் பெரியார்.

23-1-54-இல் புத்தர் மாநாடு கூட்டி, சாதிகள் ஒழிக்கப்படா விட்டால் திராவிடர்கள் இந்துமதத்தை விட்டு வெளியேறி புத்த மதத்தில் சேர வேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரித்தார். 3-12-54-இல் பர்மாவில் நடைபெற்ற புத்த மாநாட்டில் பங்கு கொண்டு இந்து மதத்தின் கொடுமைகளைச் சாடினார். 1956-இல் இராமன் படத்தை எரித்து, ஆரியர்களின் ஆணவத்தை அடக்கினார். 26-11-57-இல் அரசியல் சட்டத்தைத் தீயிட்டுப் போராட்டம் நடத்தினார். 2,884 பேர் கைது செய்யப்பட்டனர். சிறையில் 20 பேர் உயிர் இழந்தனர். 1960-ஆம் ஆண்டு தமிழ்நாடு நீங்கலாக இந்தியத் தேசப்படத்தை எரித்து, தமிழர்களின் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தினார்.

1961-ஆம் ஆண்டிக்குப் பிறகு தீவிரமாகச் சோசலிசக் கொள்கை களைப் பரப்பினார். தமிழக அரசு நிறைவேற்றிய நில உச்சவரம்புச் சட்டம் அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த உடன் 29-3-64-இல் கண்டன நாள் நடத்தி மத்திய அரசை எச்சரித்தவர் பெரியார்.

## பச்சைத் தமிழர்க்குப் பச்சைக் கொடி

1954- இல் ராஜாஜியை விரட்டிய பின்னர், பச்சைத் தமிழர் காமராஜருக்குப் பெரியார் ஆதரவளித்ததன் நோக்கமும் பயன் களும் ஆராய்ச்சியாளர்களின் கவனத்திற்கு உரியதாகும். தென்னாட்டில் காங்கிரசின் பெயரால் பார்ப்பனர் பெற்று வந்த பாதுகாப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்குக் காங்கிரஸ் தடையாக இருந்த நிலை மாறியது. காமராஜர் ஆட்சிதான் தென்னாட்டு

மக்களின் பேராதரவு பெற்ற உண்மையான மக்களாட்சி என்றும் கூறலாம். தென்னக குடிமக்களுக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டித் தென்னக மக்களை வாழ வைத்தது அரசு காமராஜர் அரசு. இலவசக் கல்வி, இலவச மதிய உணவு அளித்து மக்களின் கல்விக் கண்களைத் திறக்கச் செய்தது காமராஜர் அரசு. கிராமங்களில் வாழும் சூத்திர மக்களுக்கு அடுக்கடுக்காக சலுகைகளை வழங்கி விவசாயம், சிறு தொழில், வாணிபம் செழிக்க வகை செய்யப் பட்டது. அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனர்கள் அனுபவித்து வந்த ஏகபோக உரிமைகள் படிப்படியாக மாற்றம் பெற்றது. பெரிய பதவிகளை வகித்துத் திறமையை வெளிப்படுத்தும் நிலையைத் திராவிடர்கள் பெற்றனர். அதனால்தான் காமராஜரைக் கறுப்புச் சட்டை அணியாத பெரியாரின் தொண்டர் என்று எதிரிகள் வருணித்தனர்.

1954 முதல் 1962 வரை திராவிடர்க்கழகம் காமராஜரின் மூலம் பல சாதனையைச் செய்து மக்கள் பயன்பெறும் நிலையை ஏற்படுத்தினர். தந்தை பெரியாரின் ஆதரவுடன் காமராஜர் எட்டு ஆண்டு காலம் நல்லாட்சி நடத்தினார். இந்தியா முழுவதும் காங்கிரஸ் பலவீன மடைந்த அக்கால கட்டத்தில் தமிழகக் காங்கிரஸ் எவ்விதக் குறையும் இல்லாமல் நன்றாகவே செயல்பட்டு வந்தது. ஆனாலும், நாடு முழுவதும் காங்கிரசுக்குப் புதியபலம் உண்டாக்கக் காமராஜர் ஒரு திட்டத்தை அளித்து அதனைப் பண்டித நேரு ஏற்று அமுலாக்கினார்.

அந்தத் திட்டப்படி முதியவர்கள் பதவியைவிட்டு விலக வேண்டிய நிலை ஏற்பட்டது. காமராஜரும் பதவியைத் துறந்தார். இதனை விரும்பாத பெரியார், காமராஜர் தொடர்ந்து பதவியில் இருந்து மக்களுக்குத் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்று தந்திக் கொடுத்தார். காமராஜர் காங்கிரஸ் மேலிட உத்தரவுக்கு மதிப் பளித்துப் பெரியாரின் வேண்டுகோளை நிராகரித்தார். காமராஜ ருக்கு ஆட்சி புரிய இருந்த ஒரே தகுதி அவர் இந்த மாநில திராவிட இனத்தைச் சேர்ந்தவர் என்பதுதான். அவருக்கிருந்த இன உணர்ச்சி யின் காரணமாகவே, பெரியார் அவரைப் பதவியில் இருந்த காலம் வரை தொடர்ந்து ஆதரித்து காங்கிரசை ஒரு பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனமாகச் செயல்பட உதவிப் புரிந்தார்.

காமராஜர் பதவியைத் துறந்தால், மீண்டும் காங்கிரசு பழையபடி



பார்ப்பனர் பாதுகாப்பு அமைப்பாகி விடும் என்பதைப் பெரியார் நன்று உணர்ந்தார். அப்படிப்பட்ட காங்கிரஸ் தொடர்ந்து செல் வாக்குடன் பதவியில் இருக்க முடியாது என்பதை 1962-ஆம் ஆண்டே ஊகித்து வெளிப்படுத்தினார். அரசியல் சம்பவங்களும் அதனை உறுதிப்படுத்தின. எம்.பக்தவச்சலம் முதல்வராக வந்ததும் பார்ப்பனர்கள் பெருமூச்சு விட்டு நிம்மதி பெற்றனர்.

காமராஜர் விலகிக் கொண்டதும் இயக்கத்தை மீண்டும் சுறுசுறுப் பாக இயக்கி காமராஜர் காலத்தில் தி.மு.க. வினரை எதிர்ப் பதில் காட்டிய தீவிரத்தைக் குறைத்துக் கொண்டார்.

## பிரிந்தவர் கூடினர்

எப்படியும் தி.க.வின். ஆதரவைத் தி.மு.க. நாடியே தீரும் என்பதைக் கண்டறிந்து, காமராஜர் இல்லாத காங்கிரஸ் மந்திரிசபை செல்வாக்கு இழந்து சீரழியும் என்பதைக் கண்டறிந்து, பார்ப்பனரல் லாதார் எதிர்காலத்தில் நலம் பெற வேண்டுமானால் தி.மு.க.விற்குக் கைகொடுத்து உதவ வேண்டும் என்பதைப் பெரியார் உணர்ந்து,

> ‘இனிக் கண்ணீர்த் துளிக் கட்சி தேர்தலுக்குப் பிறகு இந்த நாட்டில் உலவ வேண்டுமானால், பார்ப்பன வெறுப்பு சாதனத்தைத் தம் கைத்தடியாக பிடித்துக் கொள்ள வேண்டி யவர்கள் ஆவார்கள். இந்தக் காரியத்திற்கு அவர்கள் என்னை அனுகலாம், நானும் அவர்களுக்கு ஆதரவளிக்கலாம்’

என்று பெரியார் 1962-இல் பேசினார்.

தி.க.வும் திமு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று 1949- இல் வருணிக்கப்பட்டது. ஆனால் தி.க. செய்த காரியங்கள் அனைத்தை யும் தி.மு.க. பின்பற்றிச் செய்யவில்லை. இரட்டைக் குழலில் ஒரு குழல் தான் இயங்கிற்று. குறிப்பாகக் காங்கிரசை எதிர்ப்பதில் தி.மு.க. வும், காங்கிரசை ஆதரிப்பதில் தி.க.வும் தீவிரமாக இருந்தன. ஆனாலும், தி.மு.க.வைப் பொருத்த மட்டில் அறிஞர் அண்ணா, பெரியாரை நன்கு உணர்ந்தவர். அதனால்தான் காமராஜரை ஆதரிப்பதில் அண்ணாவும் பெரியாரைப்போல வெளிப்படை யாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும், மறைமுகமாகக் காமராஜ ருக்குச் சாதகமாகவே தி.மு.க அரசியலை நடத்தி வந்தார் என்பது அண்ணாவின் உள்ளக்கிடக்கையை அறியும் வாய்ப்புப் பெற்றவர் களுக்குத் தெரியும்.

பெரியாரை எதிர்த்து அண்ணா அவர்கள் எழுதியதும் இல்லை, பேசியதும் இல்லை. கேலிச்சித்திரம் வரைந்ததும் இல்லை. தந்தை பெரியாரும், தி.க.வினரும் காஞ்சியில் முகாமிட்டு, காங்கிரசுக்கு ஆதரவாகக் கூட்டங்கள் நடத்திய போது ஏதாவது அசம்பாவிதம் நடந்ததாக ஆதாரமுமில்லை. அண்ணாவின் வீட்டிற்கு அருகாமை யில் மேடை அமைத்து அண்ணாவை வாய்க்கு வந்தபடி யார் யாரோ ஏசிப் பேசினர். இறுதியில் பெரியாரும் மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். அப்போதும்கூட எதையும் தாங்கும் இதயம் படைத்த அண்ணா,

> ‘அவர் என் தலைவர், என்னை வளர்த்தவர், என்னை ஆளாக்கியவர். என்னைப் பற்றி அவர் எது வேண்டு மானாலும் பேச உரிமை உண்டு. உங்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்றால் அந்தக் கூட்டத்திற்குப் போகாதீர்கள்’

என்றுதான் தொண்டர்களுக்கு அண்ணா அறிவுரை கூறினார்.

யானை தான் ஈன்ற குட்டிக்குப் பயிற்சித்தரக் குட்டிகளைக் கடுமை யாகத் தாக்கி உருட்டிப் புரட்டும் என்பதை மேற்கோள் காட்டிப் பெரியாரின் எதிர்ப்பு, தனக்கு நல்லதைச் செய்திடும் நோக்கத்துடன் தான் என்றும் வேடிக்கையாகக் கூறுவார்.

## செயலாற்றும் தத்துவம்

***1949***-இல் பிரிந்து வந்தாரே தவிர, ‘பெரியார்தான் தன் தலைவர் தி.மு.க.வின் தலைவராக இருக்க அவருக்குத்தான் தகுதி உண்டு’ என்று கூறியவர் அண்ணா.

பெரியாரையும் அண்ணாவையும் பிரிக்க முயன்ற சக்திகள் ஒன்று இரண்டு அல்ல. அண்ணா, தி.க.வின் பொதுச் செயலாளராக இருந்தபோதே தி.க.வினர் பலர் அந்த காரியத்தில் ஈடுபட்டனர். பலன் ஏற்படவில்லை. தி.மு.க. தோன்றி, உடன் பெரியாரிடம் வம்புக்கு போக வேண்டும், வழக்கு தொடர வேண்டும், சொத்துக்களைப் பறிக்க வேண்டும் என்று யோசனை கூறியவர் களும் உண்டு. ஆனால் அந்த யோசனைகளை ஏற்க மறுத்து ஒதுங்கி, காஞ்சிக்குச் சென்று விட்டவர் அண்ணா. பிறகு அண்ணா வழியில் தி.மு.க. அமைப்பதற்கு இணங்கிய பின்னரே அண்ணா சென்னைக்கு வந்து தி.மு.க.வின் பொதுச் செயலாளர் பதவியை



ஏற்றார். தி.மு.க.விற்கு என்றைக்கும் தலைவர் பதவி இருக்கக் கூடாது என்று சட்ட திட்டம் தீட்டியவர் அண்ணா. தி.மு.க.விற்குப் பெரியார் ஒருவர்தான் தலைவராக இருக்க அருகதை உள்ளவர் என்ற திடமான கொள் கையை வகுத்தவர் அண்ணா. அவரது கருத்துக்கு மாறுபட்டவர் கள் தி.மு.க.வில் முனுமுனுத்த போதிலும் அவர் மாறவில்லை.

காங்கிரஸ் அரசும் பெரியாரிடமிருந்து அண்ணாவைப் பிரித்து இரண்டு அணிகளிடையே விரோதத்தை வளர்த்து ஆதாயம் தேட பல முயற்சிகள் செய்து தோல்வி கண்டது. ஒரே சமயத்தில் இரண்டு தலைவர்களையும் சிறையில் அடைத்து ஆரிய மாயை, பொன் மொழிகள் ஆகிய இரண்டு நூல்களையும் தடை செய்தனர். ‘கூண்டுக்குள் சிங்கம்’ என்று தலைப்பிட்டு பெரியாரின் படத்தைத் ‘திராவிட நாடு’ இதழில் அண்ணா வெளியிட ஆணையிட்டார். பெரியார் மீது சட்டபடி நடவடிக்கை எடுத்துச் சிறையில் அடைக்க காங்கிரஸ் முயன்றது. அதை அண்ணா வரவேற்கவில்லை. காங்கிரஸ் நன்றி மறந்து விட்டது என்று ஆவேசமாகக் கண்டித்துப் பேசினார். கடுமையாக எதிர்த்து எழுதினார். அண்ணாவைப் பொறுத்த மட்டில் அவர் என்றும் பெரியாரின் அன்பராகவே இருந்தார்.

காமராசருக்கு ஆதரவளிப்பதிலும் அண்ணா மிக தெளிவான பாதையைக் கடைப்பிடித்தார். காங்கிரசும் தி.மு.க.வும் அரசியல் அரங்கில் எதிர் எதிராக இருந்த போதிலும் காமராசருக்கு ஆதரவளிப்பதில் பெரியாரும் அண்ணாவும் இரு கோணங்களில் செயல்பட்டனர் என்பதுதான் உண்மை. காமராசருக்குத் தனிப் பட்ட முறையில் அண்ணா தொல்லை கொடுத்ததில்லை. ஒருமுறை காமராசரை எதிர்த்து தி.மு.க. வேட்பாளர் போட்டியிட வேண்டிய சூழல் ஏற்பட்டும் கூட, அந்தத்தொகுதியிலே அண்ணா நேரடியாகச் சென்று பிரச்சாரம் செய்ய மறுத்துவிட்டார் என்பது மறுக்க முடியாத உண்மை. திராவிடர் இயக்கத்தை எப்படி எல்லாம் போற்றிப் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்பதை அறிந்தவர்கள் பெரியாரும் அண்ணாவும்.

யார் தலைவராக இருக்கிறார், யார் பதவியில் இருக்கிறார் என்பது அவர்களுக்கு முக்கியமல்ல. யார் பதவியில் இருந்தாலும், யார் தலைவராக இருந்தாலும், சமுதாயத்திற்கு என்ன நன்மை ஏற்படு

கிறது என்பதுதான் அவர்கள் இருவருக்குமே கண்ணோட்டமாக இருந்தது. 'இரட்டைக் குழல் துப்பாக்கி' என்பதற்குப் பெரியார், அண்ணா ஆகிய இருவரும் இரண்டு குழல்களாகவே விளங்கினர்.

திராவிட இயக்கத்தில் 1949-இல் பிளவு ஏற்பட்டதால் இயக்கத்தின் பலம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்து விடவில்லை. இரு சாரரிடமே ஒற்றுமை இல்லாதிருந்தும் கூட பார்ப்பனர்களுக்குப் பழையபடி ஆதிக்க நிலை ஏற்பட்டு விடவில்லை. அதற்குக் காரணம் பெரியார் கையாண்ட முறையே ஆகும். 1925-இல் காங்கிரசை ஆட்டி படைக்கும் நிலையில் இருந்த பார்ப்பனர் 1954-இல் அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் நிலைக்கு ஆளாக்கப்பட்டனர் என்றால், அது பெரியாரின் முக்கிய சாதனையல்லவா? ராஜாஜிக்குப் பிறகு வேறு ஒரு பார்ப்பனர் காங்கிரசு தலைவராகவோ, அரசியல் தலைவராகவோ வரமுடியவில்லை என்றால் அதற்குப் பெரியாரின் தொண்டும், காமராசரின் ஒத்துழைப்பும், அண்ணாவின் அரசியல் இராஜ தந்திரமும் முக்கிய காரணமல்லவா?

ஆரியர் திராவிடர் போராட்டத்தில் பெரியாருக்குப் பக்கத் துணையாக காமராசர் இருந்தது ஆரியத்தின் கொட்டம் அடங்க வழி ஏற்பட்டது என்றால் தவறாகாது. தொடர்ந்து அரசியலில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் போது, திராவிடர்களின் நிலை படிப்படியாக உயரவும், இந்த உரிமைகளைப் பெறவும் நல்வாய்ப்புகள் ஏற்பட்டு வந்திருப்பதை எவரும் மறுக்க இயலாது. 1967-ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றி அண்ணா முதல்வர் பதவி ஏற்கப்பட்டவுடன், சென்னையில் இல்லாத பெரியாரைத் திருச்சியில் சந்தித்து, பெற்ற மகத்தான வெற்றியைப் பெரியாருக்குக் காணிக்கை யாக்கியது அரசியலில் ஒரு முக்கியத் திருப்பம் என்றே கருத வேண்டும்.

1968-ஆம் ஆண்டில் தமிழகம் சுதந்திர ஸ்தாபனமாக இயங்க வேண்டும் என்று பெரியார் மீண்டும் பிரிவினைக் குரல் எழுப்பினார். 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ஆம் நாள் அண்ணா உடல் நலமிழந்து இயற்கை எய்தினார். திராவிட இயக்கத்திற்கு ஈடுசெய்ய முடியாத பெரிய நட்டம் ஏற்பட்டது. அண்ணாவின் மறைவுக்குப் பிறகு மேலும் தி.மு.கழகம் இரண்டாகப் பிரிந்தது மட்டுமில்லாமல், இருசாரருக்குமிடையே கசப்புணர்ச்சி அதிக மாகி, இனநலன் பாதிக்கப்பட்டுவிட்டது.



அண்ணா மறையும் போது தி.மு.க.வின் நண்பர்களாகவே அனைத்துக் கட்சிகளும் இருந்தன. பார்ப்பனர் நடத்தும் ஏடுகள் கூட ஆதரித்துத் தீர வேண்டிய நிலையில் இருந்தன. சட்ட மன்றத்திலும் எல்லா கட்சிகளும் ஆதரவாக இருந்தன. அண்ணாவுக்கு ஈடாகக் குறிப்பிடத்தக்க தலைவர் யாரும் இருக்கவில்லை. ராஜாஜி, இஸ்மாயில், ம.பொ.சி., ஆதித்தனார் போன்ற தலைவர்கள் கூட அண்ணாவிடம் பெருமதிப்பு வைத்திருந்தனர்.

அப்படிப்பட்ட நிலையில், அண்ணாவிற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞர் கருணாநிதி அதனைக் காப்பாற்றிக் கொண்டு, திராவிட இயக்கத்திற்கு மேலும் சாதகமான பல தொண்டுகள் செய்திருக்க முடியும். ஆனால் எதிர்பார்த்தது நடக்க வில்லை. மீண்டும் பிளவு ஏற்பட்டு தி.மு.க. ஆட்சி கவிழ்ந்து, அ.தி.மு.க. ஆட்சி ஏற்படவும், தொடர்ந்து தி.மு.க., அ.தி.மு.க. தகராறுகள் முற்றிக் காலமும் உழைப்பும் வீணாகவும், இனநலன் தேங்கிக் கிடக்கவுமான நிலையே இன்றும் உள்ளது.

பெரியார், அண்ணாவிற்குப் பிறகு இயக்கம் சீரழிந்து செல்வாக்கும் இழந்து ஏக்கத்திற்கும் கேள்விக்குறிக்கும் இடமளித்து கிடக்கிறது என்றால் தவறாகாது.

தி.மு.க.ஆட்சிக்கு வந்த பிறகு பெரியார் நிலையை உணர்ந்து அதன் காவலராகவே இறக்கும் வரை இருந்தார்.

தி.மு.க. நடவடிக்கைகள் எதுவும் அரசுக்கு எதிராக அமைய வில்லை. 26.1.70-இல் தீண்டாமை ஒழிப்புக்காக கர்ப்பகிரகப் பிரவேசத்திற்குப் பெரியார் வித்திட்டார். 14.6.70-இல் **பிராமணாள்** என்று உணவு விடுதிகளின் பெயர்ப்பலகையில் உள்ள எழுத்துகளை அழித்தார். 22.1.71-இல் **மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு** நடத்தினார். தமிழக அரசு நிறைவேற்றிய அர்ச்சகர் சட்டம் உயர்நீதி மன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டவுடன் 14.3.72-இல் கண்டனக் குரல் கொடுத்தவர் பெரியார். 30.9.73-இல் **கறுப்புச் சட்டை** மாநாடு நடத்தினார். 4.11.73-இல் சிந்தனையாளர் கழகத்தை நிறுவினார். 18.11.73 முதல் 28.11.73 வரை நாடு முழுவதும் சுற்று பயணம் செய்து சாதி ஒழிப்புக்கான தீவிரப் பிரச்சாரத்தில் ஈடு பட்டார். 9.12.73-இல் மிகப் பெரிய மாநாடு கூட்டினார்.

அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கி

19.12.73 இல் சர். தியாகராய நகரில் பொதுக் கூட்டம் கூட்டி நீண்ட நேரம் பேசினார். இதுவே அவர் கடைசியாக நிகழ்த்திய உரை. அடுத்த நாள் உடல்நலம் குன்றி வேலூர் கிருத்துவ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 24.12.73-இல் உயிரிழந்தார் பெரியார்.

ஆரியத்தை எதிர்த்துப் போராடுவதே இலட்சியமாகக் கொண்ட பெரியார் போராட்ட வீரராகவே இறந்தார். 17 வயது முதல் 95 வயதுவரை அவர் உறுதியாக நின்று, கொள்கையை விட்டுக் கொடுக்காமல், எதிர்ப்புகளுக்கு அஞ்சாது, ஏளனங்களை உதாசீனப் படுத்தி அடக்குமுறைகளைத் தாங்கிக் கொண்டு அஞ்சா நெஞ்சுடன் திராவிடத்தின் தளபதியாகக் கடமையைச் செய்த காவலனாக ஒப்பற்ற தலைவனாக மறைந்து விட்டார். திராவிடர்கள் அனாதை யாக்கப்பட்டுவிட்டனர். அவர் விட்டுச் சென்ற கொள்கைகளே அவரது வாரிசுகள். ஒவ்வொரு திராவிடக் குடிமகனும் அந்தக் கொள்கைகளை உடும்புப் பிடியுடன் பிடித்துக் கொண்டு பெரியார் பாதையில் தயங்காது துணிவுடன் செல்ல உறுதி பூண்டு பயணத்தைத் தொடருவதன் மூலமே வீழ்ந்த மக்கள் மீண்டும் வாழ்வு பெற்று வளமுடன் முன்னேற்றத்தைக் காணமுடியும். பெரியார் தம் கடமையைச் செய்து விட்டார். பேரறிஞர் அண்ணா தன் பங்கைச் செலுத்திவிட்டார். இனி நாம்...?

## பொதுவுடமையர் சிந்தனைக்கு

இந்த நாட்டில் பொதுவுடமை பெயரிலும் சோஷலிசம் பெயரிலும் பலர் பிழைப்பை நடத்தி பல அமைப்புகளை வைத்துக் கொண்டு காலம் கடத்தி வருகின்றனர். சொந்த பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றுவதுதான் தங்களின் பொதுவுடமை இலட்சியம் என்று கருதிக்கொண்டு இருக்கிறார்கள். சோஷலிசம் என்றால் அவர் களுக்கு உழைக்காது வாழும் பணக்கார முதலாளிகள் மட்டும்தான் கண்களுக்குத் தெரிகிறது. உழைப்பதற்கென்றே பிறந்தவர்கள் சூத்திரர்கள், உழைக்காது உல்லாசமாக வாழ்பவர் ஆரியர் என்பது அவர்களுக்குப் புலப்படுவதில்லை. நாட்டின் பொருளாதாரம் உயர்ந்து எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமானால் வேலையை அனைவரும் பகிர்ந்து கொண்டு செய்ய வேண்டும் என்பதனை அவர்கள் உணர்ந்து செயல்படுவதாகத் தோன்றிடவில்லை. நாட்டில் சமதர்மம் மலர வேண்டும். அதற்காகவே நாங்கள் பாடு படுகிறோம் என்று கூப்பாடு போடுவதில் மட்டும் என்ன பயன்? எவர் சுரண்டினாலும் அதைக் கண்டிக்கும் தைரியம் அவர்களுக்கு



ஏற்படவில்லை. தொழிலாளி சுரண்டப்படுகிறான் என்று மட்டும் போராட முன் வருகிறார்கள்.

மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் மதவாதிகளை எதிர்த்துப் போராட முன் வருவதில்லை. தொழிலாளிக்குக் கூலி உயர்வோ, போனசோ பெற்று தந்து விட்டால் எல்லாம் முடிந்து விட்டது என்று கூத்தாடுகிறவர்கள், தொழிலாளி அந்தப் பணத்தை ஆண்டவன் தந்தது என்று கருதி யாத்திரை, பூஜை முதலியவற்றுக்குச் செலவிட்டு ஒரு சாரர் மட்டுமே பிழைக்கக் கருவியாக மடமையில் ஆழ்ந்து கிடக்கிறான் என்பதை உணர மறுக்கிறார்கள்.

யார் பணத்தில் கோயில் கட்டப்படுகிறது? யார் பணத்தில் குளம் வெட்டப்படுகிறது? யார் பணத்தில் கோபுரங்கள் எழுப்பப்படுகின்றன? யார் பணத்தில் வாகனங்கள் செய்யப்படுகின்றன? யார் பணத்தில் தேர், திருவிழாக்கள் உத்சவங்கள் செய்யப்படுகின்றன? ஆறுகால பூஜை யாருக்காகச் செய்யப்படுகிறது? அபிஷேக ஆராதனைகளால் நன்மை பெறுவார் யார்? ஆண்டு முழுவதும் எத்தனைப் பண்டிகைகள்? அதற்கான செலவுகள் எவ்வளவு?

ஒரே ஓர் ஆண்டில் ஓர் இந்து எத்தனை மத சம்பந்தமான செலவு களைச் செய்ய வேண்டியிருக்கிறது. 12 கிருத்திகை, 12 அமாவாசை, கிருஷ்ண ஜெயந்தி, ராமநவமி, வினாயக சதுர்த்தி, ஏகாதசி, சிவராத்திரி, சஷ்டி, நவராத்திரி, தைபூசம், மாசி மகம், பங்குனி உத்திரம், சித்ரா பவுர்ணமி, வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், ஆடி அம்மாவாசை, வரலட்சுமி நோன்பு, ஆவணி அவிட்டம், மாளய அமாவாசை, சரஸ்வதி பூஜை, விஜயதசமி, தீபாவளி, கார்த்திகை தீபம், பொங்கல், போகி, வெள்ளிக்கிழமை விரதம், சனிக்கிழமை படையல், இப்படி எத்தனையோ கொண் டாட்டங்களுக்குப் பாடுபட்டுத் தேடிய பணத்தைச் செலவிடு கிறார்களே? அதனால் யார் பயன் அடைகிறார்கள்? எத்தனை இடங்களில் கோயில்களில் தெப்பம், தேர்? கருட உற்சவம்? எவ்வளவு பணச் செலவு?

மற்ற மதத்தினருக்கு இத்தனை கடவுள்கள் இத்தனைப் பண்டிகை கள் இல்லையே. முஸ்லீம்களுக்குப் பக்ரீத், ரம்சான் முக்கியம். கிருத்துவர்களுக்குப் புத்தாண்டு, கிருஸ்துமஸ், குட்பிரைடே இவ்வளவுதானே? அவர்கள் எல்லாம் நிம்மதியோடு வாழ வில்லையா?

இந்துக்கள் இத்தனை கொண்டாடிக் கடன்பட்டு கவலைப் படுவானேன்? இலட்சுமியைப் பூஜை செய்யாதவர்கள் கடன் இல்லாமல் நிம்மதியோடு வாழ்கிறார்கள். வேள்வியினால் செய்த லட்சுமி படத்தைப் பூஜிப்பவர்கள் எத்தனையோ பேர் இன்சால் வெண்ட் ஆகி இருக்கிறார்கள். ஏன்? இந்து குடும்பம் ஆண்டுக்கு மத சம்பந்தமாக செலவிடும் பணத்தைக் கணக்கு எழுதி கூட்டிப் பார்த்தால் தலை சுற்றும். அவ்வளவு பணம் யாருக்குப் பயன் படுகிறது? இந்தப் பொருளாதாரச் சீர்கேட்டைச் சீர்ப்படுத்தாமல் இந்தியப் பொருளாதாரம் எப்படிச் சீர்படும்?

## பொதுவுடமையின் உள்ளொளி

முதலாளிகளிடம் நாலு காசு கூலி உயர்வு பெற்றுவிட்டால் தொழிலாளியின் வாழ்வு வளம்பெற்று விடுமா? இதைப்பற்றி கவலைப்படாது மக்களின் அறியாமையைப் போக்கவும், மூட நம்பிக்கைகளை ஒழிக்கவும் பாடுபடுவதே உண்மையான சோசலிச வாதியின் கடமையாகும். இதனைத் தெளிவாகச் சுட்டிக் காட்டி, தன்னந் தனியாக போராடிய மிகப்பெரிய சோசலிசத் தலைவர் பெரியார் ஒருவர்தான் எதையும் சிந்தித்துச் செய்ய வேண்டும் எதையும் கண்ணை மூடிக்கொண்டு செய்யக்கூடாது என்று மக்களின் கண்களைத் திறந்தவர் பெரியார்.

சமதர்மம் என்பது சமுதாய பேதத்தை அழிக்கக் கூடியது. செல்வ பேதத்தைப் படிப்படியாக ஒழித்து எல்லோர்க்கும் எல்லாம் என்ற கடமை கொண்ட சமதர்மமாகும் என்பதை வலியுறுத்தியவர் பெரியார். சமதர்மமெல்லாம் பாடுபடாத சோம்பேறிகளுக்கும், பார்ப்பனர் களுக்கும் கொட்டி தொலைப்பதல்ல என்பதை விளக்கியவர் பெரியார்.

நம் நாட்டின் சமூகப் பொருளாதார நிலையை நன்றாக அறிந்த பின்னும், பணக்காரனை மட்டும் குறை கூறும் சமதர்மம் வெறும் பொறாமைச் சமதர்மமே ஆகும். ஏன் என்றால் இந்த நாட்டின் சமுதாய அமைப்பானது, பிறவியின் காரணமாகவே ஏழையையும் பணக்காரனையும் உண்டாக்கி இருக்கிறது என்று மறுக்க முடியாத உண்மையை எடுத்துக் கூறியவர் பெரியார். உள்ளதை அனைவரும் பங்கிட்டுக் கொள்ளும் உரிமையும் உழைப்பை அனைவரும் பங்கு போட்டுக் கொண்டு செல்வதே சமதர்ம நாட்டிற்கு இலட்சண மாகும் என்று தெளிவு படுத்தியவர் பெரியார்.



> ‘நமது நாடு முன்னேற வேண்டுமானால் என்றைக்காவது அறிவுள்ள நாடாகவும், செல்வமுள்ள நாடாகவும் சுயமரி யாதை உள்ள நாடாகவும் இருக்க வேண்டுமானால் முதலில் உற்சவம், பண்டிகை, சடங்கு, கோயில், பூசை ஆகியவைகள் ஒழிந்தாக வேண்டும். இவைகளை வைத்துக் கொண்டு மலை களை எல்லாம் தங்கமாகவும், சமுத்திரமெல்லாம் தேனும் பாலுமாகவும் ஆக்கினாலும் மேற்கண்ட உற்சவம் சடங்கு, கோயில், பூசை, பண்டிகை ஆகியவைகள் சாப்பிட்டுவிடும்’

என்று **1929**-ஆம் ஆண்டிலேயே அறிவுரை கூறியவர் பெரியார்.

> ‘குளிர் நாட்டு உடை எப்படி உஷ்ண நாட்டிற்குப் பயன் படாதோ அதே போல மேல்நாட்டுப் பொருளாதாரக் கொள்கை இந்த நாட்டிற்கு இன்றைய நிலையில் முற்றும் பயன்படாது. நாமும் மேல்நாட்டினரைப் போல பகுத்தறி வுள்ள மக்களாக ஆகிவிடுவோமானால், அப்புறம் நமக்குக் கம்யூனிசப் பொருளாதாரம் நமக்குப் பயன்படும்’

என்று இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்குச் சரியான பாதையைச் சுட்டிக் காட்டியவர் பெரியார். இன்று தொழிலாளர்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொண்டு தாங்கள் பிழைப்பதற்கு அரசியல் நடத்துபவர்கள், தொழிலாளிக்கு நாத்திகம் தேவையில்லை என்று கருதுகிறார்கள். தொழிலாளி சாமி கும்பிடுவதையோ, கோயில் குளங்களுக்குத் திருவிழாக்களுக்குப் போவதையோ தடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறார்கள். தொழிலாளி வீண் செலவுகளைச் செய்து, முட்டாள்களாக மாற்றி வைப்பவர்கள் இந்த முற்போக்காளர்கள்தாம். தொழிலாளி வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ள இவர்கள் வழிகாட்டிகளாக மாட்டார்கள். யாரோ உழைக்காமல் உல்லாசமாக வாழத் தொழிலாளியை மடமை யில் தள்ள வைப்பவர்களே இவர்கள். இவர்கள் தந்தை பெரியாரு டன் தாங்களாகவே முன் வந்து கைகோத்துப் பணியாற்றி இருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் சோசலிசப் பாதையில் இந்தியா முன்னேறாவிட்டாலும் தென்னாடு நிச்சயம் பீடுநடை யுடன் வேகமாக முன்னேறி இருக்கும்.

பெரியாரே இது குறித்துத் தெளிவாகக் கூறி இருப்பதைக் கவனித்தல் பயன் தரும்.

> ‘நான் ஒன்றும் கம்யூனிசத்திற்கோ, சோசலிசத்திற்கோ

விரோதியல்லன்; மற்றவர்களை விட கம்யூனிசத்திலும், சோசலிசத்திலும் எனக்கு மிகுந்த பற்றும் ஆர்வமும் உண்டு; ஆனால், கம்யூனிசமும், சோஷசலிசமும் இந்த நாட்டில் ஏற்ற முறையில் அமைக்கப்பட வேண்டும்; கம்யூனிசத்திற்கும் சோசலித்திற்கும், நேர் எதிரியாக, அதாவது, அபேதவாதத்திற்கு நேர் எதிரியாக பேதம் வளர்க்கும் பெரும் ஆட்களாய் இருக்கிற பார்ப்பனர்கள் பார்ப்பனத் தன்மைகள் ஒழிக்கின்ற வரையில் இந்த நாட்டில் கம்யூனிசமோ, சோசலிசமோ ஏற்பட முடியாது. அதற்குப் பதிலாக பார்ப்பனீயம் தான் வலுவாக ஏற்படும்’

என்று கூறி இருப்பதில் இருந்து உண்மையை ஆராய்ந்தால் இன்று நாங்கள்தான் உண்மையான கம்யூனிஸ்டுகள் எனப்படுவோர் எல்லாம் பார்ப்பனீயத்திற்காகத்தான் பாடுபடுகிறார்கள் என்று கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல இந்த நாட்டில் சோஷசலிசம் வளர வேண்டுமானால் எதை எல்லாம் ஒழிக்க வேண்டுமோ அதை எல்லாம் தெரிந்தே ஒழிக்க முன் வராமலும் அவைகளை எல்லாம் ஏதோ சொந்தக் காரணங்களுக்காகப் பாதுகாத்து வருகின்றனர் என்றே குற்றம் சாட்ட வேண்டியிருக்கிறது.

சாமியின் பெயரால் அதிகபட்சமான நிலங்கள், வீடுகள், நகைகள், ரொக்கப் பணம் குவிந்து கிடப்பது மக்கள் அனைவருக்கும் பயன்படாது ஒருசிலர் மட்டுமே அனுபவிக்கும் நிலை இருப்பது பொது உடமை தத்துவத்திற்கு ஏற்றதாகாது.

பிறப்பின் காரணமாகவே ஒருசிலர் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு, பிறவியினாலேயே ஒருசிலர் தாழ்ந்தவர், தீண்டத் தகாதவர் என்று தனிமைப்படுத்தித் துன்புறுத்துவது சோஷலிச தத்துவத்திற்கு எதிரானது என்பதை அறிந்தும் அதற்காக ஊசிமுனை அளவுகூட பாடுபடாதிருப்பது வேதனைக்குரியது.

மேலும், அந்தக் காரியங்களில் ஈடுபட்டு சமுதாயம் முன்னேற அறிவுப் பிரச்சாரம் செய்திடும் பகுத்தறிவுவாதிகளையே வகுப்பு வாதிகள், பார்ப்பன துவேஷிகள் என்று பழிப்பது மிகவும் துரோக மான காரியமாகும்.

பட்டி தொட்டிகளில் பிறந்த மக்கள் கூழோ, கஞ்சியோ குடித்து விட்டு, கிழிந்த பாயும், கந்தல் உடையும் உடுத்துவதுதான் ஆண்டவன் செயல் என்றால் இந்த நாட்டில் கோடானுகோடி



மக்களை அப்படி ஆண்டவன் படைத்தது ஓர வஞ்சனையல்லவா? கடவுள் எல்லோரையும் சமமாகப் படைத்திருக்க வேண்டாமா? பாடுபடும் பாட்டாளி பரிதவிப்பதுதான் அவன் தலைவிதி என்றால் அதை மாற்றி அமைப்பது பொதுவுடைமைவாதிகளின் கடமை யல்லவா?

எப்படி ஒரு சமூகத்தில் மேல் ஜாதி, கீழ்சாதி என்று இருக்கக்கூடாது என்று விரும்புகிறோமோ, அதைப் போலவே ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அந்த நாட்டில் கிராமங்கள், பட்டி தொட்டிகள், குப்பங்கள், சேரிகள் இருக்கக் கூடாது அல்லவா?

இந்த நாட்டில் பிறந்த மக்களை அடிமைகளாக, வைப்பாட்டிக்குப் பிறந்தவர்களாக, தீண்டத்தகாதவர்களாக, பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்காதவர்களாக, செருப்பு, சட்டை அணியக் கூடா தவர்களாக, கல்வி கற்கக்கூடாதவர்களாக, கோயிலுக்குள் நுழையக் கூடாதவர்களாக ஆக்கிவைத்தவர்களைத் தோழர்களாகப் பொது வுடமைவாதிகள் எப்படிக் கருத முடியும்?

எல்லோரும் சமம் என்று சமரச சுத்த சன்மார்க்க வழி செய்பவர் களைப் பொதுவுடமைவாதிகள் பகைத்துப் பேசுவதும் ஜாதி வெறியவர்கள் என்று குற்றம் சாற்றுவதும் நியாயமா?

மனிதனை மனிதன் இழிவுப்படுத்தும் கேவல நிலை இன்னும் இருப்பது உலகில் வாழும் நாகரிக மக்கள் எல்லோருக்குமே அவமான காரியம் என்றுதான் கூற வேண்டும்.

ஏசு ஏன் சிலுவையில் அறையப்பட்டார்? சாக்ரடீஸ் ஏன் விஷம் குடித்து சாகடிக்கப்பட்டார்? நபிநாயகம் ஏன் மலைக் குகைக்குள் ஒளிய நேர்ந்தது? இதையெல்லாம் கவனித்தால் ஆரம்ப காலத் திலிருந்தே மதப்பிரச்சாரத்தின் கதி வன்முறைகளுக்கும், கொடுமை களுக்கும்தான் இலக்காகி இருந்தன என்பது புலப்படும். இந்துக் களும், முஸ்லீம்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று தம்முடைய ஆதரவாளர்களுக்கு அறிவுரை கூறிய காந்தியைச் சுட்டுக் கொன்ற மத வெறியர் நாட்டின் தந்தை பெரியார் 95 வயது வரை பகுத்தறிவுச் செயலால் முடிந்தது மிக வியப்புக்குரிய காரிய மல்லவா? படித்து பட்டம் பெற்ற அறிவாளிகள் எல்லாம் ஏதோ தேவைக்காகவே சம்பாதித்து பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்று வதற்காகவே எதையோ மனப்பாடம் செய்து பரீட்சையில் தேறியதுதான் மிச்சம் என்ற நிலையில் படித்தும் படிக்காதவர்களாக,

படிப்புக்கும் அறிவுக்கும் தொடர்பற்றவர்களாய் வாழ்ந்து கொண்டிருந்த நிலையில் தந்தை பெரியார் எவருடைய ஆதரவும் பெறாமல் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து மக்களின் அறிவை வளர்த்து, பகுத்தறிவுவாதிகளாக்கினார் என்றால் அது சாதாரண காரியமா?

சரீர பிரயாசையில்லாமல், எவ்விதத்திலும், நஷ்டமோ கவலையோ அடைய வேண்டிய அவசிய மில்லாமலும் சுகபோகிகளாக வாழ்ந்து கொண்டு, தங்கள் சமூகத்தின் மேன்மைக்காக மற்ற எல்லா மக்களுடைய உழைப்பையும் உறிஞ்சிடும் கூட்டத்தை எதிர்த்து வலுவான கண்டனக் குரல் எழுப்பிய ஒரே தலைவர் பெரியார்தான். பாடுபட்டுப் பிழைக்கும் பாட்டாளி மக்களை கீழானவர்கள், ஈனமானவர்கள் என்று சோம்பேறிகள் கூறிவந்ததைக் கண்டித்து அந்த ஏமாளிகளை மனிதர்களாக மதிக்கச் செய்து போராடியவர் பெரியார்.

இந்தியாவில் உள்ள பொதுநலவாதிகளைப் பற்றிப் பெரியார் படம் பிடித்து காட்டியிருப்பதை நன்றாகப் படித்துச் சிந்தித்தால் அவர் எவ்வளவு பெரிய காரியத்தை எவர் தயவின்றியும் சாதித்துள்ளார் என்பது புலப்படும்.

> ‘சாதாரணமாக மற்ற பல நாடுகளில் பொது நலச் சேவை என்பதில் ஈடுபடுகிறவர்கள் பலர் கஷ்டத்திற்கும் கவலைக்கும் உள்ளாகி அனேக விதத் தொல்லையும் அனுபவிக்கிறார்கள். ஆனால் இந்த நாட்டிலோ சிறிதும் கஷ்டமும், நஷ்டமும், தொல்லையும் கவலையும் இல்லாமல் நேருக்கு நேராகவே உடனுக்குடன் பதவி, உத்தியோகம், பணம் கீர்த்தி அதிகாரம் முதலியவைகளை மாற்றுப்பண்டமாக அடையப்பட்டு வருகின்றன. இவற்றிற்குக் காரணம் பொதுமக்களை மூட நம்பிக்கைக்கு ஆளாக்கி வைத்திருப்பதால்தான்’

என்று பெரியார் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிட்டிருப்பதில் இருந்து தந்தை பெரியாரின் உண்மையான, பொதுநலச் சேவைக்கு ஈடாக வேறு எவரும் அவருக்குத் துணை நிற்கவில்லை என்பது தெளிவு.